# ஈழமணி

1622

GOVERNMENT ORIENTAL MSS. LIBRARY
8 MAR 195



விபுலாநந்தர் நினைவு மலர்

Registered at the G. P. O. as a Newspaper.

# " ஈ ழ ம ணி "

## தமிழர் ஆக்கங் கருதிய திங்கள் வெளியீடு.

ஆசிரியர் :
தென்புலோலியூர், திரு. க. சு. முருகேசபிள்ளை.

★

இலக்கியம், கலை, கவிதை, இசை, ஆராய்ச்சி, வரலாறு, சரித்திரம்,
அறிவியல், பொருளாதாரம், அரசியல் முதலிய விஷயங்களும்
பிறவும் சேர்ந்து, குழந்தைகளுக்கும் பெண்களுக்கும்
தனித் தனியான பகுதிகள் கொண்டதாய், அழகான
படங்களுடன் வெளிவருவது.

**ஆண்டுச் சந்தா ரூ. 10-00. — தனிப் பிரதி ரூ. 1-00.**

" ஏஜென்சி " நிபந்தனைகளுக்கும், விபரங்களுக்கும் எழுதவும்.

★

## விளம்பர விகிதம்.

| | | | |
|---|---|---|---|
| வெளிப் பக்க அட்டை | ... | ரூபா | **150-00** |
| உட்பக்க அட்டை | ... | ,, | **100-00** |
| முழுப் பக்கம் (உட்பகுதி) | ... | ,, | **30-00** |
| அரைப்பக்கம் ( ,, ) | ... | ,, | **20-00** |

தொடர்ச்சியாக விளம்பரம் செய்வோருக்கு விசேஷ சலுகை உண்டு.

விபரங்களுக்கு எழுதும் விலாசம் :—

**அதிபர், " ஈழமணி ",**
97, நோறிஸ் வீதி, கொழும்பு, (இலங்கை)

உ

# ஈ ழ ம ணி

## தமிழர் ஆக்கங் கருதிய திங்கள் வெளியீடு.

மலர் : 1 ] [ இதழ் : 2

ஆசிரியர்:

தென்புலோலியூர், திரு. க. க. முருகேசபிள்ளை

பொன்னின் மணிபோற் பொருந்தும் பொருளுரையான்
மன்னு மகத்திருளை மாற்றியே—இன்னொளிசெய்
தாழி யுலகினிடை யாண்டுபல வாழியவே
ஈழமணி யென்னு மிதழ்.

தை, மாசி

1948

கொழும்பு விலாசம் :
97, நொறிஸ் வீதி,
கொழும்பு.

யாழ்ப்பாண விலாசம் :
தென் புலோலியூர்,
பருத்தித்துறை

# பொருளடக்கம்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | "தமிழர் நெஞ்சில் முரசடிக்கும்"! | ஆசிரியர் | 3 |
| 2. | செய்திகள் | இந்தியநாட்டு அறிஞர்கள் | 4 |
| 3. | விபுலாநந்த நாவலர் | யோகி சுத்தானந்த பாரதியார் | 5 |
| 4. | ஈழமணி விபுலாநந்த ஸ்வாமிகள் | ராஜா. சேர். அண்ணாமலைச் செட்டியார் | 7 |
| ,, | ஓர் செய்தி | டாக்டர். இயன் சான்டிமன் | 8 |
| 5. | விபுலாநந்தர் மறைவுக்கு விலாபம் | நாவலர், ச. சோமசுந்தர பாரதியார் | 9 |
| 6. | தென்முனைக் கதிரொளியின் மறைவு | தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் | 11 |
| 7. | நீரர மகளிர் | சீ எம். இராமச்சந்திரன் செட்டியார் | 12 |
| 8. | திரு. விபுலானந்த அடிகள் இரங்கற் பாக்கள் | வித்துவான், சி. கணேசையர் | 13 |
| 9. | யாழ் நூலாசிரியர் | பெ. ராம. ராம. சிதம்பரஞ் செட்டியார் | 14 |
| 10. | தவத்தின் செல்வன் | பண்டிதர், இ. நமசிவாய தேசிகர் | 17 |
| 11. | முப்பது வருஷங்களுக்குமுன் | பெ. நா. அப்புஸ்வாமி | 18 |
| 12. | தீக்காலனாக விளங்குகின்றார்! | பண்டிதர், சே. சோமசுந்தரம் பிள்ளை | 19 |
| 13. | தமிழ்ப் பேராசிரியர் விபுலாநந்தர் | பூ. ஆலாலசுந்தரஞ் செட்டியார் | 20 |
| 14. | ஓர் பழைய தமிழன்பர் | சே. வெ. ஜம்புலிங்கம் பிள்ளை | 23 |
| 15. | விபுலாநந்த அடிகளின் பிரிவு | க. சோமசுந்தரப் புலவர் | 24 |
| 16. | உயர் திரு. விபுலாநந்த அடிகளார் | பண்டிதை, இ. பத்மாசனி அம்மையார் | 25 |
| 17. | ......மீண்டும் தமிழகத்தே பிறக்கவேண்டும் | வித்துவான், மா. இராசமாணிக்கம் | 28 |
| 18. | வீரசந்நியாசி விபுலாநந்த அடிகளார் | அ. பழநியப்ப செட்டியார் | 29 |
| 19. | ஈழநாட்டின் தமிழர் பெருந்தகை | தென்புலோலியூர், மு. கணபதிப்பிள்ளை | 30 |
| 20. | ஸ்வாமி சொன்னார்! | "லேகினி" | 35 |
| 21. | சாமி மயில்வாகனனாரும்.........யானும் | பண்டிதமணி, க. சு. ந. கி. பாரதியார் | 37 |
| 22. | சுவாமீ! அடிகாள்!! | அ. வி. மயில்வாகனன் | 40 |
| 23. | விபுலாநந்த அடிகளார் எழுதிய கட்டுரைகள் | மயிலை, சீனி. வேங்கடசாமி | 41 |
| 24. | அடிகளார் நினைவு | முதலியார், குல. சபாநாதன் | 43 |
| 25. | பழைய நினைவு | சோம. சரவணபவன் | 45 |
| 26. | விபுலாநந்தர் நினைவு | சோ. நடராஜன் | 48 |
| 27. | சுவாமி அவர்கள் சொன்னவற்றுட் சில | கி. இலக்குமண ஐயர் | 49 |
| 28. | சிவானந்த வித்தியாலயம் | பண்டிதர், வி. சீ. கந்தையா | 50 |
| 29. | விபுலாநந்த வள்ளல் | வித்துவான், க. இராமலிங்கம் | 54 |
| 30. | விபுலாநந்த அடிகளின் வாழ்க்கைச் சித்திரம் | த. இராமநாத பிள்ளை | 57 |
| 31. | விபுலாநந்த அடிகளின் மேன்மையுரை | ச. சோமசுந்தர ஐயர் | 59 |
| 32. | விபுலாநந்த அடிகள் வரலாற்றுக் குறிப்பு | சீனி. வேங்கடசாமி | 61 |
| 33. | தமிழ் நாட்டுத் தவப் புதல்வர் | வ. சுப்பிரமணியம் | 64 |
| 34. | விபுலாநந்த மணி | அருள். தியாகராஜா | 65 |
| 35. | யான் அறிந்த விபுலாநந்த அடிகள் | ஏ. எம். ஏ. அஸீஸ் | 70 |
| 36. | விபுலாநந்தர் விறலினிலொருபால் | பொன். சின்னத்துரை | 73 |
| 37. | திரும்பிவந்த இளங்கோவடிகள் | "ஆனந்தன்" | 74 |
| 38. | அறிவாளி | அ. செ. முருகானந்தன் | 77 |
| 39. | ஞாபக மலர் மணி மூன்று | ந. நமசிவாயம் | 80 |
| 40. | அடிகளாரும் பாரதமும் | "இறைமணி" | 81 |
| 41. | விபுலாநந்தவடிகள் நினைவுக் கவிகள் | புலோலி, வித்துவான், க. முருகேசபிள்ளை | 85 |
| 42. | அடிகளாரும் தமிழ்ப் புலவர்களும் | பண்டிதர், கா. பொ. இரத்தினம் | 87 |
| 43. | அடிகளைப்பற்றிய நினைவுகள் | செ. வேலாயுத பிள்ளை | 89 |
| 44. | SWAMI VIPULANANDA | K. KANAGARATNAM Esq., M.P. | 90 |
| 45. | SWAMI VIPULANANDA | A. M. K. CUMARASWAMY Esq, | 91 |

# "தமிழர் நெஞ்சில் முரசடிக்கும்"!



இன்றைய தமிழகத்திலே தமிழ் வளர்ப்போர் முன்னணி வரிசையில் முதலிடம் வகிக்கும் தமிழ்த் துறவி யோகி சுத்தானந்த பாரதியார்தான், மேலே தலையங்கமாக இருக்கின்ற வார்த்தைகளை உள்ளமைந்த கட்டுரையில் கூறியிருக்கிறார். நமது விபுலாநந்த அடிகளுக்கு அக்காலத்திலே தமிழ்த் துடிப்பு வலுவாய் இருந்ததென்பதும் அத்துடிப்பு இன்று பல்லாயிரம் தமிழர் நெஞ்சில் முரசடிக்கும் என்பதும் அவர்கள் கருத்தாகும். அப்படியே யாமும் கருதுகின்றோம். அதனை, இன்று கண்ணாரவும் காண்கின்றோம். அதன் காரணமாகத்தான் இந்த மலரும் வெளிவருகின்றது.

விபுலாநந்த அடிகள் சமாதியடைந்த போது, எம்முடைய மூத்த மகன் 'வித்தியா கந்தோர்ப் பாடநூல் மொழிபெயர்ப்பாளர்' கணபதிப்பிள்ளை, அடிகள்பாற் கொண்டிருந்த அன்பினால் ஒரு "மலர்" வெளியிட வேண்டுமென்று முயற்சிகள் செய்தார். அவருடைய முயற்சியினாலே பெறப்பட்டவையே இம்மலரிலுள்ள கட்டுரைகளிற் பல. சுவாமிகளுடன் தொடர்பு பூண்டிருந்தவர்கள் அவர் பிரிவின்போது அனுப்பிய செய்திகளும் இங்கே இடம் பெற்றுள்ளன. இம்மலரின் சிறப்புக்குக் காரணமாயிருந்த பெருமக்கள் பலர். கோனூர் ஜமீந்தார், திரு. பெ. ராம. ராம. சிதம்பரஞ் செட்டியாரவர்கள் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தாரிடமிருந்து யாழ்நூல் அரங்கேற்ற விழாக்காட்சிப் படவச்சுக்களைப் பெற்றுத் தந்தார்கள். திரு. சீனி. வேங்கடசாமி அவர்களும், திரு. கி. வா. ஜகந்நாதன் அவர்களும் இப் பக்கத்திலிருக்கும் படத்தினை எடுத்தனுப்பினார்கள். திரு. **M. S.** கந்தையா அவர்கள் "நீரர மகளிர்" படத்தினை எழுதியுதவினார்கள். சித்திர வல்லுநர், நண்பர் திரு. **K. T.** செல்வத்துரையவர்கள் சுவாமிகளின் படத்தினை ஆக்குவதிற் புரிந்த உதவிகள் பல. இம் மலர் இவ்வளவு செம்மையாக வெளிவருவதற்குத் துணைபுரிந்துநின்ற அன்பர்கள் எல்லோர்க்கும் எமது மனமார்ந்த நன்றியினைச் செலுத்துகின்றோம். இரண்டாம் மூன்றாம் இதழ்கள் மலர் ரூபத்தில் ஒன்றாக வெளிவருவதால் சிறிது தாமதம் ஏற்படுவதாயிற்று. "ஈழமணி" போற்றும் அன்பர்கள் மன்னித்துக்கொள்வார்களென நம்புகின்றோம்.

"நீரர மகளிர்" பற்றிச் சங்க நூல்களின் சான்றுடன் முதன் முதலாகக் கட்டுரை எழுதியவர் நமது அடிகளாவர். அதனால், "நீரர மகளிர்" படமே மலரின் முகப்புச் சித்திரமாக அமைக்கப்படுவதாயிற்று.

தென் புலோலியூர், திரு. மு. கணபதிப்பிள்ளை அவர்களுக்கு
விபுலாநந்த அடிகளார் பிரிவைக் குறித்துக் கிடைத்த செய்திகளுட் சில.



திரு. மு. கணபதிப்பிள்ளை அவர்கள்.

New Delhi,
29th July, 1947.

Dear Sir,

This is to convey my feelings of deep regret at the passing away of Swami Vipulananda. I hope you will kindly convey this to all friends.

Yours sincerely,
(Sgd.) C. RAJAGOPALACHARI.

---

Sir Shanmukham Chetty, K.C.I.E.

Hawarden,
Coimbatore,
30th July, 1947.

Dear Friend,

It is with deep regret that I heard about the passing away of Swami Vipulananda. It is a great loss to the Tamil World. His scholarship will be long remembered. May his soul rest in peace.

Yours sincerely,
(Sgd.) SHANMUKHAM CHETTY.

Fort St. George,
30th July, 1947.

Dear Mr. K.,

Let me thank you for your letter dated 22nd instant intimating to me the Mahasamathi of Swami Vipulanandaji. He was both a saint and scholar. It is a great loss to Ceylon and Tamilnad.

Yours sincerely,
(Sgd.) T. S. AVINASHILINGAM.

---

Annamalainagar, 30-7-47.

It is with deep regret that I express that in the sad demise of our revered and beloved Swami Vipulananda, Tamilians of both India and Ceylon have lost the most eminent Professor of Tamil. Our beloved Tamil language has lost its most illustrious son who immortalised his name by the discovery of the greatness of the ancient Tamil music and the instruments of Tamil music employed centuries ago, and we in particular are severed once for all from our Swamiji's parental care towards us.

We have nothing now but to pray earnestly to Lord Nataraja to bless our Swamiji's soul with That Everlasting Bliss under His Most Gracious Feet.

AVVAI S. DORAISWAMY.

---

Madras,
4th August, 1947.

Dear Sir,

It is with deep regret I hear the sad news of Srimath Swami Vipulananda's demise. We all pray for the emancipation of his soul and should show our respects and gratitude for him, by continuing the works inaugurated by him and by bringing to the knowledge of the public his saintly life and activities.

Yours faithfully,
N. KANDASWAMY.

# விபுலானந்த நாவலர்

[ யோகி சுத்தானந்த பாரதியார் ]

1922-ம் ஆண்டில் நான் ஸ்ரீ விபுலானந்த அடிகளாரைச் சந்தித்தேன். அப்போது அவர்கள் சங்கப் படிப்பை முடித்து மயில்வாகனனாராக இருந்தார்கள். ஐந்தாறு சொற்பொழிவுகள் கேட்டேன். அவரது தூய தமிழும், தூய நேயமும், தூய புன்னகையும் என்னைக் கவர்ந்தன. அன்று முதல் இருவரும் நேர்ந்தபோதெல்லாம் அளவளாவுவதுண்டு. சென்னை இராமகிருஷ்ண மடத்தில் பலதடவை அவரைக் கண்டு பேசியிருக்கிறேன். அக்காலம் அவர் அமெரிக்காவுக்குப் புறப்பட விரும்பினார். சுவாமி "விவேகானந்தர் உபநிஷத்தைக்கொண்டு உலகெல்லாம் வேதாந்த முழக்கம் செய்தது போலவே தாங்கள் திருவாசகத்தைக்கொண்டு,மேற்கும் கிழக்கும் சித்தாந்தச் சங்குமுழக்குங்கள்" என்றேன். தமிழிலும் ஆங்கிலத்திலும் நிகரற்ற புலமையுடைய அடிகளார், தமிழ்க் கலையையும் அருட் பெருமைகளையும் கடல்கடந்து முழக்க மிகவும் தகுதியானவர்கள். அடிகள் "பலருக்கு அழைப்புண்டு; சிலரே தேரப்படுவர் (Many are called; few are chosen) சிலரே எண்ணியதியற்றும் திண்மை யுடையார்" என்றார்கள். எனினும் தமிழின் பெருமையை அவர்கள் வடநாட்டிலிருந்தே 'மாடேன் ரிவ்யூ' (Modern Review)வில் விரிவாக எழுதினார்கள். தமிழுக்கே தவக் கோலம் பூண்ட பெரியாருள் மிகப் பெரியார் விபுலானந்த சுவாமிகள். அவரிடம் நான் எனது கவிகளைக் காட்டுவதுண்டு. அவர் அந்தக் காலம் கவியிலக்கணத்தை எனக்குச் சொல்லி எனது வாக்கு எப்படி நயம் பெற்றது, என்னவகையில் இன்னும் நயம் பெறவேண்டும் என்பதைக்காட்டுவார்கள். எனது விருத்தப் பாடல்களையே அவர்கள் பெரிதும் மெச்சுவார்கள். ஸ்ரீ நவநீதகிருஷ்ண பாரதியார் சங்க நடையில் எழுதியுள்ள செந்தமிழ்க் கவிதைகளை அவர்கள் மொழி பெயர்த்து எனக்குப் படித்துக் காட்டி, "இவையே நான் போற்றும் இக்காலக் கவிதைகள். சங்க நடையே நடை. மதுரைத் தமிழே தமிழ்" என்பார்கள். நானும் மதுரையானதலால் பெருமை கொள்வேன். சிலப்பதிகாரம் அரங்கேற்று காதையில் எனக்கிருந்த சில ஐயங்களை நான் அவர்களிடமிருந்து கேட்டுத் தெளிந்தேன். அந்தக் காலத்திலேயே அவர்களுக்கு யாழ் ஆராய்ச்சியுண்டு. "மருதயாழை மறுபடிசெய்து பழம் பண்களை அதில் மீட்டவேண்டும்" என்பார்கள். விபுலானந்தரை நான் ஆறுமுக நாவலரின் மறுபிறவியாகவே மதிப்பதுண்டு. அவரை விபுலானந்த நாவலர் என்றே அழைப்பது வழக்கம்.

ஒருகால், இராம கிருஷ்ண மடத்தில் காலைத் தியானத்திற்காகச் சென்றிருந்தேன். சென்னையில் எனக்கு அமைதி வேண்டும் போதெல்லாம் அங்கே செல்வது வழக்கம். சுவாமி யதீச்வரானந்தரைப் பார்த்த பிறகு "இங்கே விபுலானந்த நாவலர் இருக்கிறாரோ?" என்று வினவினேன். "இருக்கிறார் வருக!" என்றொரு குரல் கேட்டது. நமது நாவலரே வந்து விட்டார். அவர் "வருக" என்று அழைத்துச் சென்று, "கொஞ்சம் தேயிலைப் பானம் அருந்துங்கள்" என்று தந்தார். "நான் பருகும்பானம் நீர், இளநீர், பால் இம்மூன்றே" என்றேன். அவர் என் மறுப்பைக் கண்டு வியந்து, "தேயிலை வேண்டாத துறவி" என்று எதிரேயிருந்த வங்காளிக்குச் சொன்னார். நான்,

"தேயிலை வேண்டேன் சிறந்த தமிழமுத
வாயினி லூறும் மணிமொழியா—தாயிலை
மேனிலையி லேற்ற வெறியூறும் ஆனந்தப்
பானமே தாராய் பரிந்து."

தேய் – இலை = உடல் நலத்தைத் தேய்க்கும் இலை; தாயிலை—தாய் இல்லை = தாய் நாட்டை.

என்றேன்; அவர் தேயிலை பருகிக் கொண்டே,

"தேயிலை தேயிலை தேயிலை வேட்கை!" என்றார்.

அன்று அடிகள் புறநானூற்றுச் செய்யுட்களை வைத்துக் கொண்டு பழந்தமிழ் மாண்பை அழகாக விளக்கினார்கள். நான் தேயிலையைத் தொட்டதில்லை. அது உடம்பைத் தேய் இலை, டாக்ஸின் (Toxin) நஞ்சால் உடல் நலத்தைக் கெடுக்கும் இலை; காப்பியும் அவ்வாறே. ஆதலால் விபுலானந்தநாவலர் அளித்த தமிழமுதத்தையே அள்ளிப் பருகி மகிழ்ந்தேன்.

"சிறப்புடை மரபிற் பொருளும் இன்பமும்
அறத்து வழிப்படுந் தோற்றம் போல,
இருகுடை பின்பட ஓங்கிய ஒருகுடை
உருகெழு மதியின் இவந்து சேண் விளங்க,
நல்லிசை வேட்டம் வேண்டி வெல்போர்ப்
பாசறை யல்லது நீயொல் லாயே.
நுதிமுக மழுங்க மண்டி, ஒன்னார்
கடிமதில் பாயுநின் களிறுஅடங் கலவே.
போரெனிற் புகழும் புனைகழல் மறவர்
காடிடைக் கிடந்த நாடுநனி சேய
செல்வேம் அல்லேம் என்னார்; கல்லென்
விழவுடை யாங்கண் வேற்றுப்புலத் [திறுத்துக்
குணகடல் பின்ன தாகக் குடகடல்
வெண்டலைப் புணரிநின் மான்குளம் பலைப்ப
வலமுறை வருதலும் உண்டென்று. அலமந்து
நெஞ்சு நடுங் கவலம் பாயத்
துஞ்சாக் கண்ண வடபுலத் தரசே."

கோவூர்க் கிழார் பாடிய வாகைத் துறை இது. இதில் தமிழ் வீரர் போர்த் திறனும் மன்னர் மாண்பும் விளங்கும். இப்பாடலை விபுலானந்தர் அன்று ஆழ்ந்த கருத்துக்களுடன் விளக்கிய பண்பு அவரது பெரும் புலமையைக் காட்டியது. சங்கத் தமிழ் கேட்கவேண்டுமானால் இருவரிடம் கேட்கவேண்டும்: ஒருவர் பெரும் பேராசிரியர் சாமிநாதர்; மற்றொருவர் விபுலானந்த நாவலர். நான் அவர்களைப் பார்த்து இருபத்திரண்டு ஆண்டுகள் ஆயின. ஆனால், அக்காலத்தில் அவர் உடல் மெலிந்தே வந்தது; தமிழ்த் துடிப்பு வலுவாய் இருந்தது. அந்தத் துடிப்பு இன்று பல்லாயிரம் தமிழர் நெஞ்சில் முரசடிக்கும். அடிகளார் பலருக்குத் தமிழ் வெறியேற்றினார்கள். தமிழ் உள்ளமட்டும் தமிழர் அவரை மறக்க முடியாது. உரிமை பெற்ற இந்தியாவில் உரிமைபெற்ற தனித் தமிழகம் தோன்றப் போகிறது. இச் சமயம் அடிகளின் தொண்டு நமக்கு இன்றியமையாதது. ஆனால், ஊழிற் பெருவலி யாவுள? ஊழ் வினையால் இத் தகைய தமிழ் மணியை நாம் இழந்தோம். எனினும் இந்த 'ஈழமணி'யின் அடிச் சுவடுகள் நமது நெஞ்சில் அப்படியேயிருக்கின்றன. அவர் காட்டிய வழியே தனித் தமிழோம்பித் தமிழகத்தைத் தனிப்பெரும் வல்லரசாக்குவோமாக.

சங்க மணங் கமழு கின்ற
    தனித்தமிழின் மணிமொழியும்,
சிங்கமெனத் தமிழர்குலம்
    திண்மையுறத் தலைநிமிர,
துங்கமிகு பொருநலமும்
    துறவறத்தின் ஒளிநலமும்,
தங்குவிபு லானந்தர்
    தமிழிசைபோல் வாழியவே.

# "ஈழமணி" ஸ்ரீ விபுலாநந்த ஸ்வாமிகள்.

[ ராஜா சேர். மு. அண்ணாமலைச் செட்டியார் ]

கொழும்புப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியராகப் புகழ்பெற்று விளங்கிய ஸ்ரீ. விபுலாநந்த ஸ்வாமி அவர்கள் சென்ற 19-7-47 ல் காலகதி அடைந்தார்கள். அவர்கள் மறைவு தமிழுலகுக்கே ஒரு பெரிய நஷ்டமாகும். துறவும் தொண்டும் அவர்களுடைய வாழ்வைச் சிறக்கச் செய்தன. கல்வியறிவும், கலையார்வமும் அவர்களிடம் நிறைந்து விளங்கின. ஸ்வாமிகளுடைய பேச்சும் எழுத்தும் வசீகரம் வாய்ந்தவை.

ஆறுமுக நாவலர், ஸர். பொன்னம்பலம் ராமநாதர் போன்ற அறிஞர்கள் தோன்றிய இலங்கையில் ஸ்ரீ. விபுலாநந்தர் அவர்கள் பிறந்தார்கள். ஆங்கிலத்திலும் தமிழிலும் நல்ல புலமை வாய்ந்து பட்டமும் பெற்றார்கள். கல்வித்துறையில் தொண்டாற்ற வேண்டுமென்ற ஆர்வத்துடன் கல்லூரி ஆசிரியராக அமர்ந்தார்கள். இளமையிலேயே துறவு பூண்டார்கள். இராமகிருஷ்ண மிஷனைச் சேர்ந்தார்கள். ஆல்மோரா முதலிய பல இடங்களுக்கெல்லாம் போய்ச் சுற்றுப்பிரயாணம் செய்தார்கள். மக்கள் வாழ்வையும் கலைப் பண்பையும் பெருமை பெறச்செய்ய ஆவல் கொண்டார்கள். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் ஏறக்குறைய மூன்று ஆண்டுகள் (1930-1933) தமிழ்ப் பேராசிரியராக அமர்ந்து மாணவர்களுக்குத் தமிழில் அறிவையும் ஆர்வத்தையும் அதிகரிக்கச் செய்தார்கள். அவரடியில் அமர்ந்து கல்வி பயில்வதைப் பெரும் பாக்கியமாக மாணவர்கள் கருதினார்கள். அவர்களுடன் பழகியும், அவர்களுடைய அருமையான சொற்பொழிவைக்கேட்டும் மாணவர் பலர் தங்கள் அறிவை வளர்த்து வந்தார்கள். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தை விட்டுச் சென்ற பிறகு ஸ்வாமிகள் இலங்கையில் கொழும்புப் பல்கலைக் கழகத்தில் சில வருஷங்களுக்குப் பேராசிரியராக அமர்ந்து, தமது இறுதிக்காலம்வரையில் தமிழ்த் தொண்டாற்றி வந்தார்கள்.

இயல், இசை, நாடகம் என்ற மூன்று பகுதிகளில் ஸ்வாமிகளுடைய அறிவும், ஆராய்ச்சியும் இசைப் பகுதிக்கே உரியவையாயின. சென்ற பதினைந்து வருஷங்களுக்கு மேலாக அவர்கள் இசைத்துறையில் கருத்தூன்றி ஆராய்ச்சி செய்தார்கள். இடைவிடாத அவ் வாராய்ச்சியின் பயனே 'யாழ் நூல்' என்ற அருமையான நூல் ஆகும். சென்ற ஜூன் மாசம் 5, 6-ந் தேதிகளில் திருக்கொள்ளம்பூதூர்ச் சிவ க்ஷேத்திரத்தில் அந்த இசை நூல் மிகச் சிறப்பாக அரங்கேற்றப்பெற்றது. தமிழ்நாட்டில் பல பாகங்களிலிருந்து, அறிவும் அனுபவமும் வாய்ந்த தமிழன்பர்கள் பலர் வந்து அரங்கேற்று விழாவிற் கலந்துகொண்டார்கள். சென்னை மாகாணக் கல்வி மந்திரி, கரந்தைத் தமிழ்ச் சங்கத்துப் புலவர்கள் முதலிய பெரியோர்கள் விழாவை இனிது நடத்தி ஸ்வாமிகளிடம் தமிழர்களுக்கிருக்கும் அன்பையும், மரியாதையையும் மிக நன்றாகத் தெரிவித்தார்கள். தமது வாழ் நாட்கள் அனைத்தையும் தமிழ்த்தாயின் பணிக்கே அர்ப்பணம் செய்த ஸ்வாமிகளும் அவ்விழாவிற்கு வந்திருந்தது குறிப்பிடத் தக்கதாகும்.

[ டக்டர். இயன் சான்டிமன், இப்போது இலங்கைக் கல்விப்பகுதியின் தலைவராக (வித்தியாதிபதியாக) விளங்குபவர்; மேலைத் தேயத்தவர். தமிழும், சிங்களமும் கற்றுள்ளார். விபுலாநந்த அடிகளைப்பற்றித் தம்முடைய தமிழ்க் கையெழுத்தில் எழுதி எமக்கு அனுப்பிய செய்தியே பின் வருவதாகும்—ஆசிரியர். ]

# "ஈழமணி மலர்" ஆசிரியர் அவர்களுக்கு:—

காலஞ்சென்ற அருள்மிகு. விபுலாநந்த அடிகளுடன் கல்வி சம்பந்தப்பட்ட எத்தனையோ சபைகளிலே தொடர்பு பூண்டிருக்கும் பேறு எனக்குக் கிடைப்பதாயிற்று. அந்தச் சபைகளிலே தொண்டு ஆற்றியபொழுது அவர்களுடன் யான் நெருங்கிப் பழகி மதிப்புக்காட்டி நடந்துகொள்ள நேர்ந்தது.

கல்விப் பகுதியின் ஆராய்ச்சிக் குழுவிலும் பாட நூற் சபையிலும், உடல் நலம் குறைந்து நோயாற் பீடிக்கப்படுமளவும், தவறாமல் வந்து எப்பொழுதும் ஓயாமல் உழைத்து வந்தார்கள். அவர்களுடைய அறிவு மிக ஆழ்ந்து அகன்றது. அவர்கள் காட்டும் தயையும் பணிவும் என்றுமே அவர்களுடன் வாதாட முடியாமற் செய்துவிடும்.

அவர்களுடைய பிரிவானது கொழும்புமா நகரின் பொதுவாழ்க்கையிலே ஈடு செய்ய முடியாத பெரும் நஷ்டமாகும்.

வித்தியா கந்தோர்,
கொழும்பு,
1—8—1947.

இயன் சான்டிமன்,
வித்தியாதிபதி.

---

அரங்கேற்றுவிழா நடைபெற்று இரண்டு மாதங்கள்கூட ஆகவில்லை. ஸ்வாமிகள் மறைந்துவிட்டார்களென்ற செய்தி தமிழர்களைத் திடுக்கிடச் செய்தது. தமது 55-வது ஆண்டில் அவர்கள் பூத உடலை உதறிவிட்டுப் புகழுடலைப் பெற்றுவிட்டார்கள். ஸ்வாமிகளுடைய அகால மறைவு தமிழர்களுடைய துரதிர்ஷ்டமேயாகும். அவர்கள் திருமேனி மறைந்தாலும், தமிழ் மொழிக்கும் தமிழர் கலைக்கும் அவர்கள் செய்துள்ள தொண்டு எக்காலத்திலும் அழியாது. அவர்களுடைய குண நலத்தையும், கலைத் தொண்டையும் தமிழர்கள் மறவாமல் என்றும் போற்றிப் பாராட்டுவார்கள்.

ஸ்வாமிகள் பெருமைகளையெல்லாம் தமிழ் மக்கள் எல்லாரும் நன்றாக அறிந்து பாராட்டுவதற்கு ஏற்ற முறையில் ஒரு நினைவு மலர் விரைவில் பிரசுரமாகும் என்று கேட்டு மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். ஸ்வாமிகளுடைய வாழ்க்கையும் தமிழ்ப் பணியும் தமிழ் மக்களுக்குச் சிறந்த வழிகாட்டியாக நெடுங்காலம் விளங்கி ஊக்கமளித்து வருமென்று நம்புகிறேன்,

# விபுலானந்தர் மறைவுக்கு விலாபம்.

[நாவலர், ச. சோமசுந்தர பாரதியார்]

அறிஞர் விபுலானந்த அடிகள் இயல்பால் அறவர்; உணர்வால் உண்மைத் தமிழ்த் துறவி; அவர் மறைவு தமிழ்க்கிழவு. அப் பெரியாரோடு பழகி நட்புரிமை உற்றேன். அதனால் அவர் பண்புணர்ந்து பாராட்டும் பரிசும் பெற்றேன். பல்காலும் அவர் அரிய நல்லியல்பென் இல்லத்தில் எல்லார்க்கும் சொல்லி மகிழ்வேன். அதன் பயனாய் அவர் பிரிவே எமரின்று தமர் இழவாய் எண்ணி மிக இரங்குகின்றார். இவ் வித்தகர் மறைவை ஒரு பத்திரிகையில் பார்த்து, சென்னை மருத்துவக் கல்லூரி மாணவி—என் மகள்—தன் பரிவுணர்த்தி எனக்கெழுதிய குறிப்பு, எம்மவர் இவர்பால் கொண்டுள பெரு மதிப்பை விளக்க உதவும். அதுவன்றி, இங்கு நான் எழுதுவது முகமன் அன்று, அடிகளிடம் நான் வியந்து நயந்த பல மெய்ப்பெருமைச் சால்புணர்வே என்பதற்கும் அக் குறிப்புச் சான்றாகும். ஆதலினால், அதை இதன்கீழ்த் தனிக் குறிப்பாய்த் தருகின்றேன்.

அடிகள் மயில்வாகனராய், மதுரைத் தமிழ்ச் சங்கப் பண்டிதராய்த் தேறிய நாள் முதல் அவரைத் தெரியலானேன். சங்க விழாத்தோறும் அவர் புலவர் மாநாடுகளில் பங்கெடுத்து வரலானார். ஆங்கிலப் பேரரசின் தலைநகரக் கலைக் கழகச் சோதனையில் விஞ்ஞான பண்டிதராய்ப் பட்டம்பெற்று விளங்குமவர், பழைய தமிழ் நூல்களையும் விரும்பி ஆராய்ந்து துருவிவரும் பரிசறிந்து வியப்புற்றேன். நெருங்கி அவரியல்பறிய நட்புறவை நயந்து பெற்றேன். அவர் அரிய நுண்மதியும், அகன்றாழ்ந்த நூலறிவும், தண்ணளியும், தருக்கறியா நல்லியல்பும் என் உளத்தில் முன் எழுந்த நன் மதிப்பை வளர்க்கலான.

இகலறியா இன்ப உறவிவர் இயல்பு. எல்லார்க்கும் இன்சொல்லர். எப்போதும் நகை அரும்பும் அருள் முகத்தர். யார்மாட்டும் பகைமை இலர். சினம் விளையா மனப்பாங்கும் வினைத்திறமும் ஒருங்குடையார். நடுநிலையில் தன் அறிவால் எப்பொருளும் யாரியல்பும் தானளந்து காணும் இயல் பேணுபவர். நன்றன்றித் தீதறியாப் பெருமையொடு, நெஞ்சறிந்த உண்மைகளை அஞ்சாமல் ஓம்பும் உள உரனுடையார். கண்ணோட்டம் மிக்குடையார்; என்றாலும், யார் சொலினும் நேர்மை தவிராத மனத்திண்மையினர்.

கலைக் கடல் நீர் குடைவதிலே களிப்புடையார். ஆங்கிலத்தும் தமிழினிலும் அகன்றாழ்ந்த புலமையொடு, ஆரியமும் பயின்றான்ற சான்றோராவர். முத்தமிழில் வித்தகர். இயற்றமிழில் மயக்கறுக்கும் ஆய்வுரைகள் பல எழுதி வழங்கியவர். நாடக நல் இயல் விளக்கி “மதங்க சூளாமணி” என்னும் நூல் தொகுத்துத் தமிழ்க்குத் தந்தார். இழந்த தமிழ் இசைச் செல்வம் கண்டெடுத்துத் திரட்டி நமக்கீந்த பெரும் வள்ளலாவார்.

இன்னும் இவர் சில சொல்லிப் பல தேரச்செய்யும் அரும் திறலமைந்த நாவலர்; உளம் குளிர உணர்வொளிர வளம் பொலி தீஞ்சுவை மலியும் கவிகள் தரும் பாவலர். அருளேபோல் தெருளறிவுச் சிறப்பு மிகு சிந்தைச் செல்வர். அறவாழி அந்தணன்தாள் மறவாத வாழ்க்கையினர். அனவரதம் தனை மறந்து பிறர்க்கருளும் பெருமிதத்தில் திளைத்துவப்பர். பர்சம் அறுத்தறன் ஆற்றும் ஆசையினால் பிறர்க்குழைக்கத் துறவு பூண்டோர்.

அடுத்து மிகச் சுடும் சுடரும், இரவல் ஒளி மறு மதியும் தொழும் மாந்தர், நெடு விசும்பில் தூரத்துப் பேரொளியார் நாண்மீனின் பெருமையினை அறிய ஒல்லார். அதுபோல, தற்காலத் தமிழ்வானில் தன்னொளிகால் தனிச்சுடராய் இலங்கி

மறைந்தவர் அருமை தமிழர் பலர் அறியகில்லார். பரவெளியில் அளவறியாத் தூரத்து வளர் சுடரைச் சேய்மை தெளி பளிங்கினால் தேர்பவர்போல், சால்பாயும் சிந்தையினால் நாளடைவில் இவர் பெருமை நயந்தாய்வோர் தெளிந்து தேர்வார்.

அடிகளுயிர் கடவுளடி நிழலில் இனிதமர்ந்து அமைதி உறுவதாக. அவர் புரிந்த அரும் செயலின் பயன் பெருகத் தமிழும் வாழ்க.

(அடிகள் பிரிவாற்றாமல் என் மகள் எழுதும் கடிதப் பகுதி)

சென்னை,

2-8-47.

அன்புள்ள அப்பா அவர்களுக்கு, வணக்கம்.

இங்கு நலம்; தங்கள் நலமறிய ஆவல்.

விபுலானந்தர் இறந்தார் என்ற விஷயம் இன்றுதான் ஒரு Magazine-ல் வாசித்தேன். ஆனால்கூட என்று இறந்தார் என்பது இன்னும் தெரியவில்லை. எனக்கு என்னமோ யாரோ சொந்தக்காரர் இறந்துவிட்டார்போல வருத்தமாய் இருக்கிறது. அழுகை அழுகையாய் வருகிறது. ஏனென்று தெரியவில்லை. நான் விபுலானந்தரோடு பழகாவிட்டாலும், உங்களிடம் பேசிக்கொள்வதிலிருந்து அவரிடம் அபாரமான மதிப்பு வைத்திருந்தேன். இப்போது என்னவோ போலிருக்கிறது. அவர் நூல் முடிவதற்காகவே கடவுள் அவரை இதுவரை உயிரோடு வைத்திருந்தார் போலிருக்கிறது. மாளவியா இறந்த அன்றே நீங்கள் அவருக்காக வீட்டில் துக்கம் கொண்டாடவில்லை என்று வருத்தப்பட்டீர்கள். அதனால் நீங்கள் கட்டாயமாக இவர் இறந்ததற்கு வீட்டில் என்னவாவது செய்திருப்பீர்களென்று நினைக்கிறேன். தயவு செய்து என்றிறந்தார் என்ற செய்தி முழுவதும் எழுதி அனுப்புங்கள்.

.......................................................

நம் மக்களுக்கு ஒன்றிலுமே கவனம் இருப்பதில்லை. நாடு மொழி எது எக்கேடு கெட்டாலும் பரவாயில்லைப்போலிருக்கிறது. இங்கேயிருப்பவர்களில், முக்கால்வாசிப் பேர்களுக்கு, விபுலானந்தரென்றால் யாரென்றுகூடத் தெரியவில்லை.

நல்ல வேளை நான் உங்கள் மகளாகப் பிறந்தேனேயென்று மகிழ்ச்சியடைகிறேன். இல்லாவிட்டால் இவர்களைப் போல் நானும் மக்காகத் தானே இருப்பேன். யாரோ ஒரு பர்மா Leader இறந்து விட்டார் என்று எங்களுக்குக் காலேஜில் எல்லோருக்கும் (Black Flag) கறுப்புக் கொடி கொண்டு வந்து கொடுத்தார்கள். விபுலானந்தர் இறந்து விட்டார் என்று இரண்டு பேர் பேசிக்கொள்வதைக்கூட நான் இதுவரை கேட்கவில்லை. தமிழ் என்றால் ஒருத்திக்கு என்ன என்று கூடத் தெரியாது. ஆனால் அவளுக்குத் தான் தமிழ்ப் பெண்ணாக இருப்பதால் தமிழுக்காக ஏதாவது செய்ய வேண்டும் என்ற ஆர்வம் மட்டும் சிறிதுண்டு. அவள் மட்டும், "A great Tamil Scholar is dead" என்று நான் சொன்ன உடன், "So sad" என்றாள். வேறே ஒருத்தருக்கும் அது கூடச் சொல்லத் தெரியவில்லை.......... தமிழுக்கு ஆக்க வேலை ஒருவரும் செய்ய முயற்சிப்பது கூட இல்லை. நான் திருக்குறள் வாசிப்பதைப் பார்த்து விட்டு ஒருத்தி, "Is it a prayer Book like Bagavatgita?") கீதைபோல பிரார்த்தனைப் புத்தகமா இது? என்று கேட்கிறாள். இங்கே தமிழ்ப் பெண்கள் திருக்குறளை இப்படிக் கேட்கும் நிலையிலிருக்கிறார்கள்.................

உங்கள் அன்புள்ள மகள்,

(ஒப்பம்) லலிதா.

# தென்முனைக் கதிரொளியின் மறைவு.

( தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் )

தமிழ் நாடு அவ்வப்போது தமிழுணர்வினை மறப்பது உண்டு. தமிழிலேயே பேசித் தமிழராக வாழ்வாருக்குத் தமிழின் நினைவு எதிர்ப்பட்டுத் தோன்றுவது சிலபோது அருமையே. இதனை நினைவூட்டத் தென் கோடியிலிருந்து சில தோற்றம் எழுவது உண்டு. ஆறுமுக நாவலர் இலங்கையிலிருந்து தமிழ் பரப்பிய வரலாறு சென்ற நூற்றாண்டில் யாவரும் அறிந்தது. திரு. தாமோதரம் பிள்ளை கலித்தொகையும் தொல்காப்பியமும் பிறவும் அச்சிட்டுப் பழந்தமிழினைப் புதுத் தமிழர் கையில் கொடுத்த பைந்தமிழ் நன்றியினை இன்றும் நாம் மறப்பதற்கில்லை. இந்த நூற்றாண்டில் எழுந்த தென்முனைக்கதிர்ஒளி மயில்வாகனராய்ப் பிரபோத சந்திரராய் விபுலானந்தராய் விளங்கியது. மேனாட்டுக் கலைகளைத் தமிழில் அறிவுறுத்தி விஞ்ஞானத்தினையும் செந்தமிழாய்த் துய்க்க உதவிய பேரொளி இதுவேயாம்.

துறவுபூண்டு தம் உடல், பொருள், ஆவி அனைத்தினையும் தமிழுக்கும் தமிழர்க்கும் தமிழ்க் கடவுளுக்குமே அன்புடன் தந்துதவினர். துறவு நிலைக்கு ஏலாத உடல் கொண்டும் துறவு நிலையில் ஊன்றி நின்றதே இவருடைய பெருமை. சென்னையில் இராமகிருஷ்ண மடத்திலிருக்கும்போது அடிகள் சொற்பொழிவிவீடுபட்டவரில் யானும் ஒருவன். அறிவு நிரம்பிய பேச்சுக்கள்; புத்தம் புதிய ஒளிகள்; மேனாட்டுக் கலையும் கீழ்நாட்டுக் கலையும் ஒத்து இயைந்த இயைபின் இசை— இவற்றினை எல்லோரும் கேட்டும் எண்ணியும் மகிழாத நாட்களே இல்லை. செந்தமிழிலும் இராமகிருஷ்ணவிஜயத்திலும் அவர் எழுதிய கட்டுரைகள் என்றென்றும் வாழ்வன.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராக விளங்கித் தமிழ் வளர்த்த வரலாற்றினை ஒரு சிலரே அறிவர். அப்போது எழுந்த இடர்ப்பாடுகள் பல. அங்குப் பேராசிரியனாகத் தொண்டு செய்யப்போன யான் அறிவேன் அந்த நிலையின் கடுமையை. தீண்டாத மக்கட்கு அவர் செய்த தொண்டு அளப்பரிதாம். அண்ணாமலைப் பல்கலைக் கழகம் அவரது தொண்டினை இழந்தது. பின்னர் கொழும்பில் தமிழ்ப் பேராசிரியராக வந்த இந்தப் பெரியார் ஏன் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலேயே இருந்திருக்க முடியாது போயிற்று என்பதனைத் தமிழர் எண்ணிப் பார்த்தல் வேண்டும். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தொடங்கிய ஆராய்ச்சிதான் "யாழ் நூல்" என வெளிவந்துள்ளது. வடிவம்கூடத் தெரியாதபடி மறைந்த பண்டைய யாழின் நுட்பங்களை எல்லாம் நுணுகி நுணுகி ஆராய்ந்து வெளியிட்டார். ஒரு வியாழவட்டம் இத்தகைய ஆராய்ச்சியில் கழிந்தது. நூல் முடிந்து அரங்கேறியது என்பது அடிகளாருக்குப் பெரியதோர் ஆறுதலைத் தந்திருத்தல் வேண்டும். வடநாடு சென்றிருந்தபோது கடுகு எண்ணெய் இவர் உடலை வாட்டியது. கைலைக்காட்சியினைக் கண்டு அதன் உண்மையைத் தமிழ் நாட்டில் விளக்கிய பின்னர் இலங்கைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியராக வீற்றிருந்தார். அந்தப் பேரொளி மறைந்தது. அத்தகைய கல்வியும் அறிவு வளமும் துறவுள்ளமும் உள்ளத்துறுதியும் ஆராய்ச்சி மனப்பான்மையும் கடவுள் நிலையும் வேறு எங்கே காணக் கிடைக்கும்?

# நீரரமகளிர்

சீ. எம். இராமச்சந்திரன் செட்டியார்

விபுலாநந்த அடிகளைப்பற்றி நினைக்கும் போதெல்லாம் எனக்கு 'நீரரமகளிர்' என்ற பெயரே நினைவிற்கு வரும். ஏனெனில், நீர் அரமகளிர் என்ற ஒரு வகையார் தமிழரால் எடுத்தாளப்பட்டார் என்ற செய்தி அவர்களுடைய கட்டுரைகளாலேதான் முதலில் நான் அறிந்தது. முன்னர் கரந்தைத் தமிழ்ப் பொழிலிலும் பின்னர் யாழ் நூலிலும் அவ்வடிகளே நீரரமகளிரைப்பற்றி அருமையாக எழுதியிருக்கின்றனர். பிறகுதான் இலங்கையைப்பற்றிய ஆங்கில நூல்களில் மட்டக்களப்பில் உள்ள நீர் நிலையங்களில் இன்னிசை எழும்பும் செய்தியைப்பற்றிப் படித்தேன். இவைகள் எல்லாம் என் மனத்தில் நன்றாக ஊன்றிவிட, "அரமகளிர்" என்ற தலைப்புடன் இந்த ஆண்டுச் சித்தாந்தத்தில் ஒரு கட்டுரையும் எழுதியுள்ளேன். அதிலே விபுலாநந்த அடிகள் தமிழ் நாட்டிற்கு அரமகளிரைப்பற்றி அறிமுகப்படுத்திய செய்தியைக் குறித்துப் பாராட்டியுள்ளேன்.

பண்டைத் தமிழ் இலக்கியங்களிலே அரமகளிர் என்ற சொல் பல நூல்களிலும் எடுத்தாளப்பட்டுள்ளது. அச்சொல் மானுட நிலைக்கு மேலாக உள்ள ஒரு நிலையில் வாழும் பெண்களைக் குறிப்பதாகும். இவ்வகைப் பெண்கள் இருப்பதாக வேறு மொழியாளர்களும் எழுதி உள்ளார்கள். அவர்கள் மூவகையினர் ஆக வருணிக்கப் பெற்றுள்ளார்கள். பைசாசங்கள் (Ghosts), பூதங்கள் (Imps and Fairies), நீர் மகளிர் (Water nymphs) என மேல் நாட்டில் வகுக்கப்பெற்றுள்ளார்கள். இவர்களைப்பற்றி இளைஞர் கதைகளிலும், காவியங்களிலும் கூறியிருக்கிறார்கள். மேல் நாடுகளிலேயே இவர்கள் கூறப்பட்டுள்ளபோது கீழ் நாட்டு இலக்கியங்களிலே வருதல் வியப்பு அல்ல.

தமிழ் நூல்களிலே அரமகளிர் மூன்று வகையினராகவே கூறப்பட்டுள்ளனர்: வானரமகளிர், சூரரமகளிர், நீரரமகளிர் என்ற வகைகள் பேசப்படுகின்றன. இவர்கள் வானிலும், காற்றிலும், நீரிலும் வசிப்பவர்கள் என ஊகிக்கவேண்டும். வானரமகளிர், சூரரமகளிர் திருமுருகாற்றுப்படை, குறுந்தொகை முதலிய நூல்களிலும், நீரரமகளிர் கொங்குவேண்மாக்கதை முதலிய நூல்களிலும் கூறப்பட்டுள்ளார்கள். பிற்காலத்துக் கவிஞர்களுள் குமரகுருபரர் இம் மகளிரைப் பெரிதும் எடுத்தாண்டுள்ளனர். ஆகவே, தமிழ் இலக்கியங்களில் இவ்வகையார் குறிக்கப்பட்ட செய்தி தமிழ் மக்கள் அறியவேண்டும். நமது பள்ளி மாணவர்களுக்கு இச்சொற்களைக் கூறும்போது ஆங்கில நினைவு வருகின்றதே ஒழிய தமிழ் இலக்கிய நினைவு வருவதே கிடையாது. ஆகவே, முதன் முதலாக இந்நினைவை எடுத்துக்காட்டிய விபுலாநந்த அடிகளுக்குத் தமிழ்நாடு மிகவும் கடமைப்பட்டுள்ளது அல்லவா?

நீரரமகளிரின் உருவத்தைப்பற்றி மேல்நாட்டு எண்ணமும் தமிழ்நாட்டு எண்ணமும் ஒன்றுபட்டுள்ளது. இவர்கள் இடுப்பிற்குமேல் அழகிய பெண் உருவமும் இடுப்பிற்குக்கீழ் அழகிய மீன்உருவமும் கொண்டவர்கள். நமது நாட்டு ஆலயங்களில் காணும் மச்சாவதார வடிவை ஒத்திருப்பார்கள் என்று ஒருவாறு கூறலாம். தலையில் நீண்ட கருங்கூந்தலும், அழகிய மதிவதனமும், பொன்வண்ண மேனியும், திரண்டுருண்ட தனங்களும், வளைந்த இரட்டை வால்களும் கொண்டவர்களாம். நீருக்குள்ளே வாழுபவர்கள்; வேண்டியபோது நீர் மட்டத்திற்கு மேலே எழும்பி இன்னிசை பாடி ஆடுபவர்கள்; எப்போதும் மகிழ்ச்சியையே கொண்டவர்

கள்; எவரையும் வசீகரிக்கக்கூடிய வடிவத்தைக் கொண்டவர்கள். இவ்விதமான எண்ணமே இவர்களைப்பற்றிக் கவிஞர்கள் கொண்டிருக்கிறார்கள்.

ஈழநாட்டிலே பண்டைத் தமிழ்க் குடியேற்றப்பட்டினமாகிய மட்டக்களப்பிலே அழகிய நீர்நிலைகள் உண்டு. அவற்றில் ஒன்று புளியந்தீவிற்கும் கல்லடிக்கும் இடையில் இருப்பது. இங்கே, இளவேனிற் காலத்தில் முழு மதியத்தில் படகில் ஏறிச்சென்றால் மிகவும் மனோரம்மியமான இன்னிசை கேட்கலாம். அவ்விசையைப்பற்றிய பல கதைகள் உண்டு. மேல்நாட்டார்கள் அவ்விசை ஒருவகை மீன் இனத்தால் எழுப்பப்படுகிறது என்பர். ஆனால் மீன் பாடுவது இல்லை என்று அடிகள் குறித்து உள்ளார்கள். இவ்விசை நீரரமகளிர்களாலே பாடப்படுகிறது என்றே அடிகள் வெளியிட்டுள்ளார்கள். இவ்விசையைக் குறித்து ஒரு தமிழ்க் கவிஞர் பாடியுள்ள ஒரு கவிதையை யாழ் நூலில் அடிகள் வெளியிட்டுள்ளார்கள். அதில் ஒரு பகுதி மட்டும் எடுத்துக் காட்டுவோம்.

"நீல வானிலே நிலவு வீசவே
மாலை வேளையே மலைவு தீருவோம்
சால நாடியே சலதி நீருளே
பாலை பாடியே பலரோ டாடுவோம்
நிலவு வீசவே மலைவு தீருவோம்
சலதி நீருளே பலரோடாடுவோம்
நிசரி காசமா மபத நீநிசா
சரிக மாமபா பதநி சாசரீ"

இதைப்பாடிய கவிஞரின் மன எழுச்சியைப்பற்றி இக்கவிதையே காட்டுகிறதல்லவா?

இவ்விதத் தெய்வப் பெண்கள் உள்ளாரோ இல்லாரோ என்பதைப்பற்றிக் கவலை இல்லை. கவிதையில் உள்ள உணர்ச்சியைப் பார்த்து மகிழுங்கள். இவ்வித எண்ணத்தைத் தமிழ் நாட்டிற்கு ஊட்டிய விபுலாநந்த அடிகளுக்குத் தமிழ் மக்கள் என்றும் கடமைப் பட்டுள்ளவர்கள் அல்லவா!

## திரு. விபுலானந்த அடிகள்

தேகவியோகங் குறித்துப் பாடிய

# இரங்கற் பாக்கள்

[வித்துவான், சி. கணேசையர்.]

கொழும்புநகர்ப் பல்கலைதேர் கழகமதிற் றமிழ்த்தலைமைக் குரவ னாகிச்
செழும்புலங்கொண் டிடுமாறு மாணவர்க்குக் கற்பித்த சீர்சால் சாமி
எழும்புலனை் தடக்கும்விபு லானந்த வடிகளென வியம்பு ஞாலந்
தொழும் புலவன் றமிழின்பந் தந்துலகிற் கழிவிலின்பந் துய்த்தானன்றே.

எல்லோரு மெளிதுணரச் செறிவுபெறக் கட்டுரைக ளெழுதுந் தீர!
வல்லாரு மாட்டாரும் வியப்படைய வவையுரைக்கும் வன்மையாள!
சொல்லானும் பொருளானுஞ் சுவைபயப்பக் கவிபலவுந் தொடுப்போய் கற்ற
நல்லோரைப் போற்றுமொரு குணக்குன்றே! நின்பிரிவா னையார் யாரே?

சிவனொளிபா தத்தினெழுஞ் செழுமணியே! பொதிவளரு மிசைநூல் செய்த
தவவடிவே! யுயரண்ணா மலைநகரின் மிளிர்விளக்கே! தவத்தோர் மேவு
முவமையிலா விமயமிசை நாட்டுபுகழ்க் கலையரசே! யுனதாம் யாழ்நூல்
புவனமெலாந் தொழுமரனைக் கேட்பிக்க வெள்ளிமலை புக்காய் கொல்லோ!

# யாழ் நூலாசிரியர்

# அருட்டிரு. விபுலாநந்த அடிகளார்

[கோனூர் ஜமீந்தார், பெ. ராம. ராம. சிதம்பரஞ் செட்டியார்]

**ஈழ** நாட்டுத் தமிழ் மக்களுக்குச் சுவாமி விபுலாநந்தர் தெரியாதவரல்லர். மட்டக்களப்புப் பகுதியில் காரேறு மூதூரில் சாமித்தம்பியார் கண்ணம்மையார் என்னும் தமிழ்த் தவப் பெருமக்களுக்குச் சுமார் ஐம்பத்தைந்தாண்டுகளுக்குமுன் அரிய தவமகனைத் தோன்றியவர். அவருடைய பிள்ளைப் பெயர் மயில்வாகனன் என்பது. துறவுபூண்ட பின்னரே மயில்வாகனனார் சுவாமி விபுலாநந்தரானார். வடமொழி, தென்மொழி, ஆங்கிலமொழி என்ற மூன்று மொழியினும் ஆன்ற புலமையுடையவர். எண்ணூல், பூதநூல், வேதிநூல் முதலியன அவர்கள் கற்றுநிறைந்த பகுதிகள். மதுரைத் தமிழ்ப் பண்டிதத் தேர்தலில் தேர்ந்து முதிர்ந்து சிறந்த பண்டிதர். இலண்டன் பல்கலைக் கழகப் பி. எஸ்-ஸி. பட்டமும் பெற்றவர். ஈழ முதல் இமயம்வரை சமயத் தொண்டும், தமிழ்த் தொண்டும் ஆற்றியவர்.

சுவாமிகளுக்கும் எனக்கும் உண்டான தொடர்பு ஏழாண்டுகளுக்கு மேற்பட்டது. சுவாமிகளுடைய பேச்சுத் திறமும், பாவன்மையும் நயமாக உரையாடுந் தன்மையும் என்னுள்ளத்தைக் கவர்ந்து கொண்டன. இதுவரையில் துறவிகளோடு தொடர்பு கொள்ளாதிருந்த யான் சுவாமிகளுடைய உயர்ந்த துறவுநிலையைக் கண்டு தொண்டனானேன். தொண்டு செய்வது மாத்திரமல்ல, அத்தொண்டிலே உண்மையான விருப்பமும் மிகுந்தவனானேன். பயில்தொறும் நூல் நயம்போலப் பெரியோர் நட்பு பழகுந்தோறும் இன்பஞ் செய்யுமென்று பெரியோர்கள் சொல்வார்கள். உலக வாழ்க்கையில் அதற்குமாறாக இருப்பதுதான் பெரும்பான்மை. சுவாமிகளிடத்தில் பழகப் பழக மிகுந்த தெளிவும், உயர்ந்த இன்பமுமே நான் கண்டேன்.

எனக்குத் தமிழ்ப் புலவர்களிடத்தில் ஒரு தனியன்பு உண்டு. அவர்கள் நல்ல தமிழ்ப் பாட்டுக்களைச் சொல்லி அவற்றின் பொருள்நயம் சொல்நயங்களை விளக்கும்போது எனக்கு மிகுந்த இன்பமுண்டாகும். ஆனால் பல சமயங்களில் பல முறையுங் கேட்ட பாட்டுக்களும், கேட்ட கருத்துக்களும் கேட்கவேண்டி வந்து விடும். சுவாமிகளிடத்தும் அப்படியே நயமான பாட்டுக்களும் உரைகளும் வரும். ஆயினும் இவை யாவும் புதிய புதிய அரிய ஆராய்ச்சிக் கருத்துக்களையே யுடையவைகளாயிருக்கும்.

கரிய மேனியில் கல்லாடையணிந்து காலில் நடையன் அணிந்து மெல்ல நடந்து செல்லும் சுவாமிகளுடைய நடையில் ஒரு பெருமிதம் உண்டு. அகன்ற விழிகளைப் பரக்கத் திறந்து, தலையைச் சிறிது தாழ்த்தி இறைவனைத் தியானிக்கும் அவரது இருப்பில் ஒரு தனித் தெய்வத் தன்மை விளங்கும். உரையாடுங்கால் சுவாமிகள் ஏற்றுக்கொள்ளத்தக்கதொன்றை நாம் சொல்வோமானால் 'ஆம், அப்படித் தான் செய்யவேண்டும்' என்று முறுவலித்து மொழிவார்கள். அம்மொழியில் அழுத்தமான பொருளும், நடைமுறைக்கு வாய்ப்பான எண்ணங்களும் எதிர் நின்று கேட்கும் நமக்கு உள்ளத்தில் எழத் தொடங்கிவிடும். சொற்பொழிவு செய்கிறபோதும் தனித்து உரையாடுகிறபோதும் சுவாமிகளின் மொழிநடை ஒன்றாகவே இருக்கும். எழுத்துக்களுக்குரிய ஓசையளவை யெண்ணி அவ்வளவு குறையாமலும் மிகாமலும் பேசுபவர்போல அவர்கள் இயல்பாகப் பேசுவது அவர்களது தனிச் சிறப்பாகும்.

சுவாமிகள் எப்பொழுதும் குளிர்ந்த நீரிலேயே குளிக்க விரும்புவார்கள். நோய்வாய்ப்பட்டிருந்த காலத்திலும் எங்களுடைய தொந்தரவுக்காக வெந்நீரிற் குளிக்க இணங்குவார்கள். ஆனால், அவ் வெந்நீரையும் நன்றாய் ஆறவைத்தே குளித்தார்கள். சுவாமிகளுக்குக் காவிரியாற்றிற் குளிப்பதில் ஒரு தனி விருப்பம். இங்கு வந்தகாலத்து சிற்பவானந்த சுவாமிகளைக் காண விரும்பித் திருப்பராய்த்துறைக்கு அடிக்கடி சென்றுவருவார்கள். அப்பொழுது அவர்களுடன் யானும் சென்று வருவது வழக்கம். அங்கு நம் சுவாமிகள் அகண்ட காவேரியில் மிக மகிழ்வோடு நீராடுவார்கள். அகண்ட காவேரி இயற்கையழகு நிறைந்தது. இரு பக்கமும் பசிய நெல் வயல்களும், மரங்களடர்ந்த சோலைகளும் நிறைந்திருக்கும். அந்த அழகு சுவாமிகளின் உள்ளத்தைக் கவர்ந்து கொள்ளும். அந்த இயற்கை வனப்பு உடலாக அதனுள் தெய்வ வனப்பு உயிராக நின்று சுவாமிகளுக்குக் காட்சியளிக்கும். மனமுருகி இந்தக் காட்சியைச் சொல்லும்போது நமக்கு மயிர் சிலிர்க்கும். 'இசைப் பாட்டுக்களெல்லாம் இப்படி இயற்கை வனப்புந் தெய்வ வனப்பும் அமைந்திருக்கவேண்டும். தேவார ஆசிரியர்களெல்லாம் இந்த இரண்டழகும் அமையப் பாடியிருக்கிறதைப் பாருங்கள்' என்று அடிக்கடி சொல்வார்கள். தேவார திருவாசகங்களிற் போலவே நம்மாழ்வார் பாடிய திருவாய் மொழியிலும் சுவாமிகளுக்கு மிகுந்த ஈடுபாடுண்டு.

திருஞானசம்பந்தர் பாடிய திருப்பதிகங்களை அவரோடு உடனிருந்த திருநீலகண்ட யாழ்ப்பாணர் யாழிலிட்டு இசைத்தார் என்பதைக் கேட்டிருக்கிறோம். அந்த யாழ் 'சகோட யாழ்' என்றும் அதன் பழந் தமிழ்ப்பெயர் 'செம்முறைக் கேள்வி' யென்றும் அந்த யாழின் இயல்பைக் கண்டறிந்து இக்காலத்தில் அதை உருவாக்கி யிசைத்து இசைத் தமிழை வளர்க்கவேண்டுமென்றும் சுவாமிகள் அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியராக இருந்த காலத்தில் எண்ணங் கொண்டார்கள். இது இப்போதுக்குப் பதினைந்தாண்டுகளுக்கு முன்னாகும். இந்தப் பதினைந்தாண்டுகளும் அந்த எண்ணங் காரணமாக எழுந்த ஆராய்ச்சியிலேயே கழிந்தன. திருநீலகண்ட யாழ்ப்பாணருடைய சகோட யாழைக் காண்பதற்குச் செய்த ஆராய்ச்சியில் இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில் விரித்துச் சொன்ன இசை நுட்பங்களும் அக்காலத்திலிருந்தே யாழ்க் கருவியின் அமைப்பும், அதற்கு முன்னிருந்த பழந் தமிழிசையமைதியும் உலக முழுதுங் காணப்படும் இசை யெல்லாவற்றுக்கும் அவ்விசை அடிப்படையாயமைந்திருந்த அமைப்பும் இன்னும் இவை போன்ற கருத்துக்களும் கண்டறியப்பட்டன. இவையெல்லாம் இனிது விளங்கச் சுவாமிகள் யாழ் நூலை இயற்றியுள்ளார்கள்.

சுவாமிகள் இராமகிருட்டின விசயத்தின் ஆசிரியராகவிருந்து பல அரிய கட்டுரைகளை எழுதியிருக்கிறார்கள். செந்தமிழ், தமிழ்ப்பொழில், குமரன் என்னும் பத்திரிகைகளிலும் சுவாமிகள் கட்டுரைகள் எழுதி வெளியிட்டிருக்கிறார்கள். இந்தக் கட்டுரைகளால் என்னைப் போன்ற பலருக்குத் தமிழினிடத்து அன்பும், அறிவும், ஆதரவும் உண்டாயின. சுவாமிகள் இயற்றிய 'மதங்க சூளாமணி' யென்னுந் தமிழ் நூலால் மேலை நாட்டு ஷேக்ஸ்பியர் எழுதிய நாடகங்களின் நலமும், தசரூபக முதலிய வடமொழி நூல்களின் நாடக அமைப்பும் முத்தமிழுள் ஒன்றாகிய நாடகத் தமிழின் இயல்பும் விளக்கமாகச் சொல்லப்பெற்றுள்ளன.

இராமகிருட்டின மடத்தின் சார்பாக வெளிவரும் வேதாந்த கேசரி, பிரபுத்த பாரதம் முதலிய ஆங்கிலப் பத்திரிகைகளிலும் பல்கலைக்கழக ஆங்கிலப் பத்திரிகைகளிலும் சுவாமிகள் ஆங்கிலக் கட்டுரைகள் பல எழுதியிருக்கிறார்கள். இராமகிருட்டின பரமஹம்சரது நூற்றாண்டு நினைவுமலரில் தமிழன் தனி மாண்பை ஆங்கிலத்தில் அழகாக எழுதியிருக்கிறார்கள். ஆங்கிலப் பத்திரிகைகளுக்கு ஆசிரியராகவிருந்து தொண்டாற்றியபோது தமிழ் நூல்களிற் காணப்படும் அரியவுண்

மைகளை ஆங்கிலத்தில் தெளிவாக வெளியிட்டிருக்கிறார்கள்.

சுவாமிகள் பாட்டியற்றுவதில் ஒரு தனி மாண்புடையவர்கள். ஒரு சமயம் ஆங்கில நாட்டுப் பெருங் கவிகளின் நயவுரைகள் சிலவற்றை யெடுத்துச் சொல்லிக்கொண்டு வந்தார்கள். அவைகளையெல்லாந் தொகுத்துத் தமிழில் எழுதியுதவவேண்டுமென்று நாங்கள் கேட்டுக்கொண்டோம். சுவாமிகள் எங்கள் வேண்டுகோளுக்கிசைந்து 'ஆங்கிலவாணி' என்னுந் தலைப்புடைய உரைகலந்த செய்யுட் கட்டுரையினை மகாமகோபாத்தியாய பண்டிதமணியவர்களின் அறுபதாண்டு மணிவிழா மலராகிய "மணிமலர்" வெளியீட்டிற்கு அன்புடன் உதவினார்கள். எங்கள் குடும்பத்தில் நடைபெறும் நற்செய்திகள் எல்லாவற்றிற்குந் தொடக்கத்தில் நாங்கள் பேரையூர் அம்பாள்குளம் பொய்யாத விநாயகரை வழிபடுவது வழக்கம். எங்கள் குடும்பத்துள் ஒருவராய்ப் பிரிப்பறக்கலந்த சுவாமிகள் எழுதியருளிய யாழ் நூலரங்கேற்றத்தை முன்னிட்டுப் பேரையூர்ப் பொய்யாத விநாயகரை வழிபடச் சென்றோம். அப்போது சுவாமிகள் பொய்யாத விநாயகர் மீது பெருந்தேவபாணியொன்று பாடினார்கள். அதனுடைய இசையழகும் பொருளழகும் சொல்லொழுக்கும் எங்கள் நெஞ்சில் நன்றாகப் பதிந்திருக்கின்றன. யாழ் நூலரங்கேற்றத்தை எங்கள் தந்தையார் திருப்பணி செய்த திருக்கொள்ளம்பூதூர்த் திருக்கோயிலில் ஆளுடைய பிள்ளையார் திருமுன்னிலையில் நடத்துவதென ஏற்பாடு செய்திருந்தோம். அங்கே அத்திருவிழா செம்மையாய் நடைபெறும்பொருட்டுத் திருக்கொள்ளம்பூதூர் அழகிய நாச்சியார் திருவடி பரவும் வகையில் நான்மணி மாலையொன்று தொடங்கிப் பத்துப் பாடல்கள் பாடினார்கள். அதற்குள் விழா நெருங்கிவிட்டது. யாவரும் திருக்கொள்ளம்பூதூர் செல்லவேண்டிய நிலைமை வந்தது. அதனால் மேற்கொண்டு பாடவேண்டிய பாடல்கள் நிரம்பவில்லை. இப்பாட்டுக்களை அரங்கேற்றுவிழாவின் தொடக்கத்தில் அழகிய நாச்சியார் திருமுன் திரு. ஔவை துரைசாமிப் பிள்ளையவர்கள் இனிய ஓசையுடன் பொருள் விளங்கப் பாடக்கேட்டு விழாவிற்கு வந்திருந்த பெருமக்களனைவரும் பாட்டின் நலத்தையுணர்ந்து பெருமகிழ்ச்சி கொண்டார்கள். இயற்கை வனப்பில் தெய்வ வனப்பைக் கண்டு வழிபடும் முறையும், இசைத் தமிழிலீடுபட்டுத் தொண்டாற்றிய பண்டைப் புலவர்களின் பெருமையும் இச்செய்யுட்களில் அமைந்திருக்கின்றன. இந்நூல் முழுதும் முடிந்திருக்குமாயின் என்னென்ன புதிய கருத்துக்களும் இனியவுரைகளும் வந்திருக்குமோ? ஊழ்வினை நாம் அவற்றைப் பெறுவாறு தடுத்துவிட்டது. யாழ்நூல் அரங்கேறியவுடனே தம்முடைய அலுவல் முடிந்து இங்கிருந்து எங்கோ புறப்படுதற்கு முயலுபவர்போல சுவாமிகள் பயணமானார்கள். அந்தக் கருத்து அப்பொழுது எங்களுக்கு விளங்கவில்லை. தாம் முன்பு சென்று வணங்கிய திருக்கயிலைக்கு மீண்டும் சென்று சேரப் புறப்பட்டார்களோ என்னவோ? அது அந்தக் கயிலையிலுள்ள பெருமானுக்குத்தான் தெரியும். பல்கலைச் செல்வராகிய நம் சுவாமிகள் தாம் கற்ற கலைக்கெல்லாம் பொருளாகி நின்ற கண்ணுதற் பெருமான் திருவடிகளிற் கலந்து ஈறிலாத பேரின்பத்திற்றிளைத்து மகிழ்கின்றார்கள்.

நம் சுவாமிகள் தமிழ் நாட்டார்க்குக் கண்டுணர்த்திய பழந்தமிழ் இசை நலம் எளிதிற்புலனாமாறு அவ்வுண்மைகளை நம்மனோர் உள்ளத்திற்கு உண்ணின்றுணர்த்தியருளும்படி அவர்கள் திருவடிகளையிறைஞ்சிப் போற்றுவோமாக. சுவாமிகளின் அரிய ஆராய்ச்சியின் பயனாக உருப்பெற்ற முளரியாழ், செம்முறைக் கேள்வியென்னும் சகோடயாழ், பெருங்கலம் என்னும் பேரியாழ் முதலிய பழந்தமிழர் இசைக்கருவிகளை உருப்படுத்தி அவற்றின் வழியாகப் பழந்தமிழர் கண்ட இசையுருக்களை இசைத்துக் கேட்டற்குரிய வழிதுறைகளைத் தமிழகத்தார் மேற்கொள்ளுதல் வேண்டும். இயற்புலவர்களும் இசைப்புலவர்களும் ஒருங்கிருந்து சுவாமிகளது யாழ்நூற் பொருளை நன்கு

T. 1622



''யாழ்நூல்'' அரங்கேற்று விழாவில், சென்னை மாகாணத்துக் கல்வி மந்திரி, திரு. தி. சு. அவிநாசிலிங்கம் செட்டியார் அவர்கள் ஒலிபெருக்கியின் முன்னின்று விரிவுரை நிகழ்த்துகிறார். யாழ்கள், வீணைகள் ஒரு பக்கத்திலிருக்கின்றன.

# தவத்தின் செல்வன்

[ பண்டிதர், இ. நமசிவாய தேசிகர் ]

---

1. ஈழவள நற்கிரியின் மிசைத்தோன்றி யிருங்கலையஞ் ஞான வல்லைப்
போழவெழுந் தறிஞருளப் போதுவிரித் தகிலமெலாம் புகழ நின்ற
கேழிலகு புத்திரவி விபுலானந் தப்பெயர்கொள் விபுதன் கீத
யாழறிவ னிசைத்தமிழி லகத்தியனுக் கிணையென்ன விருந்த மேலோன்.

2. ஆங்கிலமுஞ் செந்தமிழு மாய்ந்தளவை விஞ்ஞான வறிவு கைவந்
தோங்குமண்ணா மலைச்சருவ கலாசாலை யுறுபுதமிழ்த் தலைமை தாங்கி
ஈங்கிவனுக் கிணையிலையென் றெவ்வவையு மேத்தவவை முதன்மை யேற்றுத்
தாங்கரிய புகழிட்டி யீழவளத் தாய்க்களித்த தவத்தின் செல்வன்.

3. கொழும்புநகர்ச் சருவகலா சாலைவளர் தமிழெனும்பூங் கொடிமே லோங்கத்
தொழும்புபல செய்துகளை கண்ணாகித் துணைநின்ற துகடீர் ஞானி
தொழும்படிவன் பொய்யடிமை யிலாதாரிற் கவிபுகலுஞ் சொல்லின் செல்வன்
தழுங்கருவி ஒழுக்கமென வசனநடை தமிழ்மொழிக்குத் தந்த சான்றோன்.

4. உலகமெலா மிந்துமத வுண்மைதெரிந் துயர்நெறியி னொழுகி யுய்யப்
பலவரிய பிரசங்க மொழிந்தவிவே கானந்தன் பரிந்து காட்டும்
அலகினெறி கடைப்பிடித்தே யகத்தோடு புறந்துறந்த வடிகள் செம்மல்
துலையினொரு புடைகோடாச் சமநிலையிற் றிரியாத தூய நெஞ்சன்.

5. தவவடிவ னருளொழுகு தடநயன னினியமொழி சாற்று வாயன்
தவவினிய முகனறிஞர் தகைமைதெரி பெரும்புலவன் சான்றோர் போற்றச்
சுவயமொழி தனிற்பேசுஞ் சொற்கொண்டன் மாச்சரியச் சுவடு மில்லான்
பவநெறியிற் சரியாத விரதன்றமிழ்ப் பற்றொன்றே பற்றா வாழ்ந்தான்.

6. இசைநுணுக்க முதலாய விசைத்தமிழ்நூ லவிந்துபல யாண்டு சென்று
மசைவிலுணர் வாலதனை மீட்டமைக்கு மறிஞர்பெறு தலந்த காலைக்
குசைநுதியி னுண்மதியிற் பன்னூலாய்ந் தியாழ்நூலென் றொருபேர்கூறி
இசையறிவ ரியலறிவ ரவைகேட்க மரபினரங் கேற்று மேந்தல்.

7. தான்யாத்த விசைநூலைத் தமிழ்முனிக்குங் கலைமகட்குஞ் சாற்ற வெண்ணி
ஊன்யாத்த பொய்யுடல மொருவியவி யூணமர ருடல மெய்திக்
கான்பூத்த கற்பகக்கா விறைசுரர்கள் முனிவரர்கள் களிப்பி னேற்ப
வான்னோக்கி நடந்தனனன் மண்ணுலக மொளிகுன்றி மயங்க மாதோ.

---

கற்றுத் தெளிதலே முதற்கண் வேண்டற்பாலதாகும். சுவாமிகள் உணர்த்திய இசை நலன்களையெல்லாம் அவர்கள் யாழ்நூலில் அறிவுறுத்திய முறையே ஆராய்ந்துணர்ந்து அவற்றை இன்று செய்கைமுறையில் தோற்றுவித்தற்குரிய ஆக்க வேலைகளைத் தமிழ்ச் செல்வர்கள் மேற்கொண்டு நிறைவேற்ற முந்துதல் வேண்டும். சுவாமிகள் அவ்வப்போது பாடிய சுவை மலிந்த பாடல்களை ஒன்றாகத் தொகுத்து வெளியிடுதலும் அவ்வாறே அவர்கள் அவ்வப்போது வெளியிட்ட ஆராய்ச்சியுரைகளைத் தொகுத்து நூலுருவாக்கி வெளியிடுதலும், மதங்கசூளாமணியினை மறுபதிப்பாக அழகிய வடிவில் வெளியிடச் செய்தலும் சுவாமிகள் நினைவாக உடனே செய்தற்குரிய பணிகளாம். இவை யாவும் எளிதின் நிறைவேறத் திருவருளை வழுத்துகின்றேன்!

**யாழ் நூலாசிரியர் திருத்தொண்டு வெல்க.**

# முப்பது வருஷங்களுக்கு முன்

[ பெ. நா. அப்புஸ்வாமி. ]

ஸ்வாமி விபுலானந்த அடிகளாரை நான் சந்தித்தது சுமார் முப்பது வருஷங்களுக்கு முன்னல். அப்பொழுதுதான் அவர்கள் இலங்கையிலிருந்து சென்னைக்கு வந்து, மயிலாப்பூரிலுள்ள மடாலயத்தில் சேர்ந்திருந்தார்கள். அக்காலத்தில் அவர்கள் முழுத் துறவி ஆய்விடவில்லை. அவர்கள் அந்தப் பதவிக்குரிய நியம நிஷ்டைகளை அனுசரித்துக்கொண்டு, மடாலயத்தில் தங்கிவந்தார்கள். அப்போது அவர்கள் பண்டித மயில்வாகனர் என்றே வழங்கப்பட்டார்கள்.

அந்தக் காலத்தில் சென்னையில் தமிழர் கல்விச் சங்கம் என்னும் ஸ்தாபனத்தை ஸ்ரீமான்கள்: நீதிபதி ஸர். டி. சதாசிவ அய்யர் அவர்களும், அ. ரங்கசாமி அய்யங்கார், ச. பவானந்தம் பிள்ளை, பேராசிரியர் கே. பி. ராமநாதய்யர், டி. ஆர். வேங்கடராம சாஸ்திரியார், டி. வி. கோபாலசாமி முதலியார், எஸ். முத்தையா முதலியார், பேராசிரியர் டி. எஸ். சுப்ரமணிய அய்யர், என் சிறிய தகப்பனாகிய அ. மாதவையர் முதலியோர் நடத்திவந்தார்கள். அவர்கள் செய்து வந்த வேலையில் அவர்கள் எனக்கும் சிறிது பங்களித்தார்கள்.

விஞ்ஞான விஷயங்களை எளிய தமிழில் தமிழ் மக்களிடையே பரவச் செய்ய வேண்டுமென்பதே அச்சங்கத்தின் முக்கிய நோக்கம். அதன்பொருட்டுப் பல அறிஞர்களைக் கொண்டு அச்சங்கமானது பிரசங்கங்களை நிகழ்த்தி வந்தது. விஞ்ஞானத் துறையிலே தேர்ந்தவராயும், ஆங்கிலநாட்டுப் பரீக்ஷையில் தேறியவராயும், தமிழில் மிக்க பாண்டித்யம் உடையவராயும் இருந்த பண்டித மயில்வாகனரை எங்கள் சங்கம் அடிக்கடி பயன்படுத்தி வந்தது. அவர்களும் விஞ்ஞான விஷயங்களைக் குறித்துச் சில பிரசங்கம் செய்தார்கள். விஞ்ஞான விஷயங்களில் மக்களுக்கு அதிகம் கருத்துச் செல்லாதிருந்த அந்த நாளில் அவர்களுடைய மலர்ந்த முகமும் பேச்சு வன்மையும் கேட்போர் மனதைக் கவர்ந்தன. அவர்கள் பிரசங்கத்தைப் பலரும் விரும்பிக் கேட்டார்கள்.

சிலகாலத்துக்குப் பின்பு, 1924-5-ஆம் வருஷங்களில், அவர்கள் மாதவையர் அவர்கள் பிரசுரம் செய்துவந்த ''பஞ்சாமிர்தம்'' என்னும் பத்திரிகையில் பிளேட்டோ எழுதிய ''பாங்க்வெட்'' என்னும் நூலைப் ''பாவலர் விருந்து'' என்ற தலைப்பில் தமிழில் மொழி பெயர்த்து உதவினர்கள்.

தொடக்கத்தில் அடிகளார் விஞ்ஞான விஷயங்களைக் குறித்தும், விஞ்ஞானச் சொற்களைக் குறித்தும் பல பத்திரிகைகளில் தங்களுடைய அபிப்பிராயங்களை வெளியிட்டு வந்தார்கள். தமிழில் கலைச் சொற்களை வெளியிடும் முயற்சியில் இவர்களும் பங்கெடுத்துக்கொண்டார்கள்.

ஆனல், பிற்காலத்திலே இவர்கள் கருத்து விஞ்ஞான விஷயத்தில் அவ்வளவு செல்லவில்லை. இலக்கியத்திலும், இசையிலும், தத்துவ விசாரத்திலும் அதிகமாகச் செல்லத் தொடங்கிற்று.

அடிகளாரை நான் கடைசிமுறை சந்தித்தது சென்னைச் சர்வகலாசாலை மண்டபத்தில். அப்பொழுது அவர்கள் தாம் செய்திருந்த யாழ் ஆராய்ச்சி விஷயங்களைச் சித்திரங்களில் வரைந்தும், அவற்றினும் தெளிவாக உள்ள சொல்லோவியத்தால் விளக்கியும் காட்டினர்கள்.

அவர்களின் இனிய முகத்தோற்றமும், அதில் நிலவிய ஆவலும் இன்னும் என் கண்முன் நிற்கின்றன. அவர்களுடைய கணீரென்ற தெளிவான பேச்சுக்குரலும் ஆழ்ந்த கருத்துக்களும் இன்றும் என் காதில் ஒலித்துக்கொண்டிருக்கின்றன.

# 'தீக்கால'னாகி விளங்குகின்றார்!

[ பண்டிதர், சே. சோமசுந்தரம் பிள்ளை ]

உவர்க் கடலைக் குடித்த தமிழ்ப் பெருங் கடலாரை மாந்திய நெடு முனிவரர், கோதாவிரியைப் போன்ற பரந்த பேரறிவினரும், பெரும் புலவரும், கவிச் சக்கரவர்த்தியும், சைவ சிகாமணியுமான தம் ஆசிரியரின் சரிதத்தினை எழுதிய காலத்து, அவ்வாசிரியர், தொண்டர்சீர் பரவுவார் நூலினைப் பாடஞ் சொல்லிய பொழுதும், பிரசங்கமாரி பெய்தபொழுதும், எடுத்துரைத்த நயங்களையும், இலக்கண விசேடங்களையும், சித்தாந்தக் கருத்துக்களையும் நாம் அனுபவிக்க, முதிருஞ் சுவையோடு கூடிய அவ்வமுதினையுண்டு, உண்டதின் பயனால் நெடுங்காலமிருந்து, தமிழை வளர்த்தவர்கள் யாது காரணத்தாலோ விரித்துரையாது விட்டார்கள். இப் பழக்கத்தினைத் தொன்று தொட்டுப் பெரும் புலவரெல்லாம் கையாண்டு வந்திருக்கின்றனர். நிற்க,

சிவஞான மணம் வீசும் சிவஞான முனிவரராம் தெய்வச்செம்மலின் தாளிணையை மறவாத, புலவர் சபாபதியாம் சபாபதி நாவலரை யொத்தவரே, நம்மடிகளின் அதீத நிலையையும் புலமையையும் பற்றி எடுத்துக்கூறத் தக்கவர்கள்.

அந்தப் பழம்பதி மறைந்துவிட்டபடியால், தமிழ்க் கற்பகங்களைத் தம்மிடங் கொண்ட சலியாத அசலமே, யாமெல்லாம் களிதுளும்ப, அரிய விஷயமணிகளை எடுத்துக்காட்டி விரித்துரைக்குந் தரத்தது.

இந்நிலையில், வெள்ளறிவுடைய யான் கூற எழுந்ததுதான் யாதெனிலோ, கரிகாலனும் காலகாலனுமாகிய செம்பெருமானை வணங்கும் அடிகள் ''தீக்கால'னாகி விளங்குகின்றாரென்பது ஒன்றேயாகும்.

எம்பெருமான், எம்பெருமானென எவரும் ஏத்தும் ஆனந்தரின் பின்வந்த ஆனந்தர், அங்ஙனம் விளங்காது பின் எங்ஙனம் விளங்குவரெனப் பேதையரும் மேதையருஞ் சிரிப்பர். அவர்களுக்குச் சிரிப்பூட்டவே இதனை எழுதி விடுத்தனன் என்க.

[ " தீக்காலன் " — காமத்தீக்குக் காலனாகி விருப்பவர்: அதாவது காமனை அல்லது காமத்தை முனிந்த முனிவர் என்க.

ப—ர். ]

★

# தமிழ்ப் பேராசிரியர் விபுலாநந்தர்

[ பூ. ஆலாலசுந்தரஞ் செட்டியார். ]

அருள்திரு. விபுலானந்த அடிகளின் அறிவு, ஆற்றல், பண்பு, தொண்டு முதலிய இன்னோரன்ன பிறவற்றைக் குறித்து எழுதப்புகின் அவை ஏட்டில் அடங்கா. எனவே, அடிகள் மாட்டு யான் கண்டறிந்த செயற்கரிய செய்கைகளுள் சிலவற்றைமட்டும் ஈண்டுக் குறிப்பிட விழைகின்றேன். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் யான் தமிழ் ஆனர்ஸ் வகுப்பில் படித்தபோது இரண்டு ஆண்டுகள் அடிகளிடம் படிக்கும் பேறு பெற்றேன். 1931-ம் ஆண்டு ஜூலை மாதம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ் ஆனர்ஸ் வகுப்பு (B. A. Hons. Tamil Literature) ஆரம்பித்தபோது அப் பல்கலைக் கழகத்தாரின் வேண்டுகோளுக்கு இணங்கி அடிகள் தமிழ்ப்பேராசிரியர் (Professor of Tamil)) பதவியினை ஏற்றுக் கொண்டனர். தமிழ் நாட்டில் தமிழ்ப் பேராசிரியர் என்ற பதவியினை முதன் முதலாகப் பெற்ற பெருமை அடிகளுக்கே உரியதாகும். பேராசிரியருக்கு ஏற்ற பண்பும் புலமை நலமும் அவர்களிடத்து மிகுதியாக விளங்கின என்று கூறுவேனாகில் அது புனைந்துரையாகாது. அடிகள் முத்தமிழ் அறிந்த உத்தமப் புலவர்; ஆங்கில இலக்கியத்தின் ஆழத்தையும் அகலத்தையும் அறிந்தவர்; வடமொழி லத்தீன் முதலிய மொழிகளையும் கற்றவர்; அறிவியல் நூல்களில் (Science) மிக்க ஆராய்ச்சி பெற்றவர்; வேதாந்தம் சித்தாந்தம் முதலிய தத்துவங்களை எழுத்தெண்ணிக் கற்றவர்; அவர்களைப்போல் பல்கலைப்புலவரை நாம் இனிக் காணும் நாள் எந்நாளோ? அடிகளின் மலர்ந்த முகமும் பரந்த நெற்றியும் இனிய குரலும் பலதிறப்பட்ட புலமை நலன்களும் தவக்கோலமும் எங்கள் உள்ளத்தைக் கொள்ளைகொண்டன. 1933-ம் ஆண்டில் யான் அண்ணாமலைப் பல்கலைக்கழகத். தமிழ்ப் பேரவையின் அமைச்சனாய் இருக்கும் பேறு பெற்றேன். இதனால் அடிகளுடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது.

மாணவர்கள் எம்முறையில் நாட்டிற்கும் மொழிக்கும் சமூகத்திற்கும் தொண்டு செய்தல் வேண்டும் என்பதைப்பற்றி அடிகள் எங்களுக்குப்பலமுறை கூறியதனோடு அமையாது தாமும் சிறந்த தொண்டுகளைச் செய்து காட்டினார்கள். தீண்டாமை என்ற பேயினை நம் நாட்டினின்றும் துரத்தல் வேண்டும் என்று பலகாலும் அடிகள் கூறுவதுண்டு. அடிகளின் துணைகொண்டு அண்ணாமலை நகருக்கு வடகிழக்கிலுள்ள திருவேட்களச் சேரியில் நாங்கள் ஒரு இராப்பள்ளிக்கூடம் ஏற்படுத்தினோம். அதில் பல ஹரிஜன சகோதரர் படித்துப் பயன்பெற்றனர். அங்குப் படிப்பவர்களுக்கு வேண்டிய பலகை புத்தகங்கள் முதலியன அடிகளே வாங்கித் தந்தார். 1933-ம் ஆண்டில் அடிகள் விரும்பியபடி அச்சேரியில் சுவாமி விவேகானந்தர் திருநாள் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. சுவாமி விவேகானந்தரின் படம் சிறக்க அலங்கரிக்கப்பட்டு ஊர்வலமாக வந்தபோது அச்சேரியிலுள்ள ஒவ்வோர் குடிசையிலும் பூரண கும்பங்கள் வைக்கப்பட்டிருந்தன. குடிசையிலுள்ள மக்கள் அப்படத்திற்குத் தீபாராதனை செய்தனர். அத்திருக்காட்சியினை யான் என்றும் மறவேன். அடிகளை அச்சேரியிலுள்ளார் அனைவரும் வாழ்த்தினர்.

அடிகளின் தாய்நாட்டுப் பற்றினை விளக்க ஒரு சான்று தருகின்றேன். 1933-ம் ஆண்டு அண்ணாமலை நகரில் பட்டமளிப்பு விழா (Convocation) மிகச் சிறந்த முறையில் நடைபெற்றது. அதுபோது அண்ணாமலை நகரிலுள்ள பட்டமளிப்பு விழா மண்டபம் பல கொடிகளால் அலங்

கரிக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு பேராசிரியர் வீட்டின் மேல்மாடியிலும் அரசியலாரின் கொடி (Union Jack) கட்டப்பட்டது. ஆனால் எங்கள் அடிகள் வீட்டின் மேல் மாடியில்மட்டும் தேசீயக்கொடி (Congress Flag) கட்டப்பட்டது. மாட்சிமை மிக்க கவர்னர் (The Right Hon'ble Sir George Frederic Stanley) பட்டமளிப்பு விழா மண்டபத்திற்கு வருவதற்கு முன்னர் அடிகளார் வீட்டினைச் சில போலீஸ் உத்தியோகத்தர் சோதனை செய்தனர். இதற்கெல்லாம் அடிகள் அஞ்சவில்லை. துறவிக்கு வேந்தன் துரும்பன்றே! அடிகள் வீட்டு மாடியின்மேல் தேசீயக்கொடி சிறக்கப் பறந்து கொண்டிருந்தது. இதைக் கண்ட பலரும் அடிகளாரின் நாட்டுப் பற்றினைப் போற்றினர். காங்கிரஸ் கொடி நம் நாட்டுக் கொடியாக மாறிய உரிமை பெற்ற இந்நாளினை அடிகள் காணவில்லையே என்பதற்கு யான் கவல்கின்றேன்.

தேசீயப்புலவர் சுப்பிரமணிய பாரதியாரின் பாடல்களைப் படிப்பதில் அடிகளுக்கு மிக்க மகிழ்ச்சியுண்டு. 1932-ம் ஆண்டில் அடிகள் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பாரதியார் கழகம் (Bharathi Study Circle) என்ற ஒரு கழகத்தைத் தோற்றுவித்தார். அப்புலவரின் பாக்களைக் குறித்து அடிகளின் தலைமையில் மாணவர் தினங்களுக்கு இரு முறை சொற்பொழிவு ஆற்றுவதுண்டு. இக்கழகத்தின் சார்பில் 2—2—1932-ல் அடிகள் தலைமையில் நடந்த சிறப்புக் கூட்டத்தில் திரு. S. சத்தியமூர்த்தி B.A., B.L. அவர்கள் பாரதியாரின் திருவுருவப் படத்தினைத் திறந்து வைத்தனர். அடிகள் தாம் எழுதிய கட்டுரை ஒன்றில் தேசீயக்கவி பாரதியார் காட்டிய சமரச வழியினை நாம் பின்பற்றவேண்டும் என்று எழுதியுள்ளனர். அவைகளில் சில வரிகளைமட்டும் ஈண்டுக் குறிப்பிடுகின்றேன். (*c. f.* Swamiji's article on "The development of Tamilian Religious Thought" Published in the Annamalai University Journal Vol. I. No. 2) "The charm of his lyrics, and the dignified tone of his patriotic songs have endeared him to his people. The healthy outlook on life underlying his poems has a universal appeal...... May the Tamil people, the inheritors of a glorious civilisation, view the world with the eyes of Bharathi, their latest poet and rising above narrow sectarianism and petty social conventions march on the path that will lead them to the Divine Spirit, which is the source of all goodness, beauty and truth."

அடிகள் கொள்ளும் உணவு சாத்வீக உணவாகும். உண்ணும் உணவு தனிப்பட்ட முறையில் சமைக்கப்பட்டது. அவர் புளிக்குப்பதிலாக எலுமிச்சம்பழம் சேர்த்துக்கொள்வது வழக்கம். கஞ்சியினை வடிக்காமல் சமைக்கப்பட்ட சோற்றினையே அடிகள் உண்பதுண்டு. கஞ்சியினை வடிப்பதால் சோற்றிலுள்ள சத்து போய் விடுகிறதென்று அடிகள் கூறுவதுண்டு.

அடிகள் ஆற்றிய தொண்டினை இனி ஆராய்வோம். அவர்கள் இயற்றிய நாடகத்தமிழ் பற்றிய "மதங்கசூளாமணி" என்ற நூலும், அவர் தாம் பல ஆண்டுகள் அரிதின் ஆராய்ந்து அண்மையில் வெளியிட்ட இசைத்தமிழ் பற்றிய "யாழ்நூல்" என்பதும் ஒப்புயர்வற்ற நூல்களாக விளங்குகின்றன. இவைகளேயன்றி "செந்தமிழ்" "தமிழ்ப்பொழில்" முதலிய திங்கள் வெளியீடுகளில் பல ஆராய்ச்சிக் கட்டுரைகள் வரைந்துள்ளார். மகாமகோபாத்தியாய பண்டிதமணி, மு. கதிரேசன் செட்டியார் அவர்கள் மணிவிழா மலரில் "ஆங்கிலவாணி" என்ற தலைப்பில் அடிகள் எழுதியுள்ள கட்டுரை ஒன்றே அடிகளின் ஆங்கிலப் புலமையினை விளக்கப் போதிய சான்றாகும். அடிகள் தாம் சேர்ந்துள்ள ஸ்ரீராமகிருஷ்ண மடத்திற்கு ஆற்றிய தொண்டு பலவாகும். இராமகிருஷ்ண மடத்தின் சார்பில் வெளிவரும் "வேதாந்தகேசரி" "இராமகிருஷ்ண விஜயம்" "பிரபுத்த பாரதம்" என்ற வெளியீடுகளுக்கு அடிகள் பத்திராசிரியராக இருந்து அவைகளைச் சிறந்த முறையில் வெளியிட்டனர் என்பதைத் தமிழ்நாடும் வடநாடும் நன்கு அறி

யும். 1933-ம் ஆண்டு ஜனவரி மாதம் நடைபெற்ற தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் 22-ம் ஆண்டு நிறைவு விழாவிற்கும், 1935-ம் ஆண்டு டிசம்பர் 19, 20, 21-ம் நாட்களில் திருவண்ணாமலையில் நடைபெற்ற சென்னை, சைவசித்தாந்த மகாசமாஜத்தின் 30-ம் ஆண்டு நிறைவிழாவிற்கும் தலைமை தாங்கினர். திருவண்ணாமலையில் அடிகள் தலைமையில் யான் பேசும் பேறு பெற்றேன். அன்று அடிகள் எனக்குக்கூறிய ஆசிமொழிகளை யான் என்றும் மறவேன். அடிகள் சில ஆண்டுகள் சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்க்கலைக் குழுவின் (Member of the Board of Studies in Tamil) உறுப்பினராக இருந்தனர். 20—9—1936-ல் சென்னையில் நடைபெற்ற கலைச் சொல்லாக்க மாநாட்டிற்கும் அடிகள் தலைமைதாங்கினர். கடந்த ஐந்து ஆண்டுகளாக அடிகள் இலங்கைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்ப் பேராசிரியராக இருந்து தமிழ்த் தொண்டாற்றினர். அவர் தமது இறுதிக் காலத்தைத் தாம் பிறந்த இலங்கையில் கழித்தல் வேண்டுமென்பது இறைவன் திருவுள்ளம் போலும். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலருக்குப் பிறகு இலங்கையிலும் தமிழ்நாட்டிலும் தமிழ்த்தொண்டாற்றிப் புகழ்பெற்றவர் அடிகளேயாவார்.

அடிகள் சமயத்துறையில் சமரசக் கொள்கை உடையவர். தில்லையிலுள்ள எல்லையற்ற பரம்பொருளாகிய ஸ்ரீநடராஜப் பெருமானிடத்தில் அவருக்கு அளவற்ற அன்பு உண்டு என்பதை யான் நன்கு அறிவேன். அடிகள் இலங்கையிலிருந்து சென்னைக்குச் சென்றால் இடையில் சிதம்பரத்தில் ஒரு நாள் தங்கி தரிசனம் செய்துவிட்டுப் போவதுண்டு. சிதம்பரத்திலுள்ள தீக்ஷிதர்களுள் ஒருவரான திரு. தங்கசபாரத்தின தீக்ஷிதர் என்பவர் அண்ணாமலை நகரில் தமிழ் படித்து வித்துவான் பட்டம் பெற்றவர். அவர்தாம் அடிகளுக்கு அர்ச்சனை முதலியன செய்து வைப்பது வழக்கம்.

"எண்ணிய வெண்ணியாங் கெய்துப
வெண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்"

என்ற பொய்யா மொழிக்கு ஏற்ப மன உறுதியுடன் தமது உடல் நலத்தையும் பொருட்படுத்தாது அடிகள் இமயமலைச் சாரலுக்குச் சென்று கைலைமலையைத் தரிசனம் செய்தது அவர் பண்ணிய புண்ணியத்தின் பயனேயாகும். திருவாசகம் படிப்பதில் அடிகளுக்கு ஒரு தனிப்பட்ட மகிழ்ச்சியுண்டு. இத்துணைத் தொண்டு ஆற்றித் தமக்கென வாழாப் பிறர்க்குரியாளராய் விளங்கிய அடிகளின் ஆன்மா இறைவன் திருவடியினைச் சார்ந்திருக்கும் என்பது ஒருதலை. அவரது தூய ஆன்மா அமைதி பெறுவதாக.

# "ஓர் பழைய தமிழன்பர்"

[ செ. வே. ஜம்புலிங்கம்பிள்ளை ]

விபுலானந்த சுவாமிகளை யான் 1920-ம் ஆண்டு முதல் அறிவேன். அவர்கள் அப்போது பண்டிதர் சாமிதாச மயில்வாகனனார் என்னும் பிள்ளைத் திருநாமத்தோடு மானிப்பாய்க் கல்லூரியில் பேராசிரியராக விளங்கினர். தமிழ்ப்பற்று காரணமாக இவர்கள் அவ்வாண்டிற்றான் போலும் சுவாமி வேதாசலத்தை ஈழநாட்டிற்கு வரவழைத்து அவர்களைக்கொண்டு யாழ்ப்பாணம், கொழும்பு முதலிய இடங்களில் பிரசங்கஞ் செய்வித்து அச்சுவாமிகளுக்குப் பெரும் பொருள் பரிசளித்தது. இரண்டு ஆண்டுகளுக்குப்பின் அதாவது, 1922-ம் ஆண்டின் கடைசியில் மயிலாப்பூரிலுள்ள இராமகிருஷ்ண மடத்தைச் சேர்ந்து சந்நியாசம் பெற்றார். அப்போது தான் யான் அவர்களை முதன் முதல் பார்க்க நேர்ந்தது. இவர்களை எனக்கு அறிமுகப்படுத்தியவர்கள் மட்டக்களப்பு வித்துவான், ச. பூபால பிள்ளையும், தென்கோவை, பண்டிதர் ச. கந்தையா பிள்ளையுமாவர். அது முதல் சுவாமிகளோடு எனக்குப் பழக்கம் உண்டு. நேர்ந்த போது ஒருவர்க்கொருவர் சந்திப்பதுண்டு.

இவர்கள் நற்குண நற்செய்கைகளிற் சிறந்தவர். எவரிடத்தும் இனிமையாகப் பேசுபவர். அமைதியுடையவர். கல்விச் செருக்கு, டாம்பீகம் முதலிய தீய குணங்கள் இல்லாதவர். இராமகிருஷ்ண மடத்திற் சேர்ந்து துறவறம் பூண்டும் தமிழ்ப் பற்றை விடாது தமிழ்த்தொண்டு புரிந்தது வியக்கத்தக்கது. இராமகிருஷ்ண மடத்தைச் சேர்ந்தவர்களில் சுவாமிகள் ஒருவரே தமிழைப் போற்றியவர் என்பது மிகையாகாது. சுவாமிகளின் பிரிவால் யான் ஓர் பழைய தமிழன்பரை இழக்கலானேன்.

நெருந லுளனொருவ னின்றில்லை யென்னும்
பெருமை யுடைத்திவ் வுலகு.

---

"பாவலர்கள் காணுமணி; பண்டிதர்கள் பேணுமணி;
நாவலர்கள் தம்-இசையை நாட்டுமணி—பூ உலகில்
எல்லாரும் பூணுமணி; 'ஈழமணி' வாழிஅரோ;
நல்லோர்செய் ஆட்சி நயந்து."

—க. சு. நவநீதகிருஷ்ண பாரதியார்

# விபுலானந்த அடிகளின் பிரிவு.

[ நவாலியூர், க. சோமசுந்தரப்புலவர் ]

---


என்றுமுள செந்தமிழ்த்தா யீன்றெடுத்த
தவப்புதல்வா! வெவரும் போற்றும்
குன்றனைய நற்றவத்துக் கோமானே!
தமிழ்படர்கற் பகப்பூங் கொம்பே!
வென்றபுல னுடைவீரா! விபுலானந்
தப்பெயர் கொள் மேலோய்! விண்ணிற்
சென்றனையே யாம்வருந்த வார் செய்த
தவக்குறைவோ தெரிகி லோமே. 1

பொன்னரும் மணியிலங்கைப் பூம்பாவை
கலைக்கண்ணே! போத மிக்க
மன்னவோ! மாசற்ற துறவு நெறி
கடைப்பிடித்த வரதா! வில்லா
தந்நாளில் மறைந்தவிசை யாழ்நூலை
நுண்மதியா லடைவிற் கோத்தே
இந்நாளி லரங்கேற்றித், தமிழ்த்தாயை
மகிழ்வித்தே யேகி னயே. 2

செந்தமிழ்த்தா யருளாலும் நுண்மதியா
னும்பழநூற் றேர்ச்சி யாலும்
சந்தயாழ் நூலியற்றித் தமிழுலகுக்
கருளவந்த தலைவா! விந்நாள்
அந்தயாழ் நூலறிவை விண்ணகத்துக்
கந்தருவர்க் கருள வோநீ
நந்தாத மணிவிளக்கே! யிப்புடவி
நீத்தங்கே நடந்த வாறே. 3

தனியான செந்தமிழு மாங்கிலமும்
பலகலையும் சமய நூலும்
முனியாது துறைபோகக் கற்றறிந்து
தத்துவநூல் முழுதும் தேறித்
துனியாகும் பவத்தொடக்கைத் துடைத்து
முனியாகி யொருதுணையாய் நின்றாய்
இனியாரே இனியாராய் மற்றெமக்குத்
துணையாவா ரியம்பு வாயே. 4

சொன்னோக்கும் பொருணோக்கும் தொடைநோக்கும்
நடைநோக்கும் துறும்ப் பன்னூல்
நன்னோக்கொ டருள்செய்த நற்றமிழ்ப்பா
வல்லோனே! ஞானமூர்த்தீ!
மன்னோக்குஞ் சிறப்புடையாய் கவலையிலா
வாழ்வுடையாய் மண்ணை நீத்தே
என்னோக்கி விண்ணோக்கி ஏகினைநீ
என்றினையா மினிக்காண் போமே. 5



''யாழ்நூல்'' அரங்கேற்று விழாவின்போது தமிழ் நாட்டுப் புலவர்களும், புரவலர்களும், இசை வல்லுநர்களும், பிறரும் விபுலாநந்த அடிகளை மாலை சூட்டி அழைத்துச் செல்லுங் காட்சி.

# உயர்திரு. விபுலாநந்த அடிகளார்

[ பண்டிதை, இ. பத்மாசனி அம்மையார் ]

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக".

என்று தெய்வப்புலமைத் திருவள்ளுவனார் கூறியாங்கு, அறிவு, ஆற்றல், ஒழுக்கம், கலையாகியவற்றைப் பயிற்றி மனிதனைத் தேவனாகச் செய்யும் கல்வியே கற்கத் தகும். அவ்வாறு கற்ற கல்வியே மனிதனுக்கு இம்மைக்கும் மறுமைக்கும் நற்பயனையளிக்கவல்லது.

மனிதனுடைய உள்ளமானது சாதாரணமாக ஆசைவழிப்பட்டு அகங்கார சொரூபமாக அமைந்துள்ளது. சிங்கத்தினுடைய கோபமும், மதயானையினுடைய வன்மமும், புலியினுடைய மூர்க்கமும், கரடியினுடைய குரூரமும், சர்ப்பத்தினுடைய நஞ்சும், நரியினுடைய தந்திரமும் மனிதனுடைய உள்ளத்தில் பங்குபெற்றிருக்கின்றன.

"Blow, blow thou winter wind,
Thou art not so unkind
As man's ingratitude."

என்று ஒரு மேல்நாட்டு மேதாவியார் கூறியுள்ளார்.

இவ்விதமான கேடுள்ள எண்ணங்களை மனதில் இடம் பெறாது தடுத்து மனதைப் புனிதமாக்கி மனிதன் தெய்வத் தன்மையடைதற்கு இன்றியமையாத சாதனம் கல்வியாகும். ஆகவே, மேன்மை வாய்ந்த அறிவு, ஆற்றல், ஒழுக்கம், கலையாகிய செம்மைகளைக் கொடுக்கத்தகுந்த கல்வியைக் கற்றவனே இம்மைக்கும் மறுமைக்கும் நற்பயனையடையத் தகுந்தவன் என்பது பெறப்படுகின்றது.

இவ்விதமான செம்மைவாய்ந்த கல்வியைக் கற்று அதன் பயனைத் தாமும் அநுபவித்துப் பிறரும் அறிந்து நன்னெறிப் படுமாறு தமது வாழ்க்கையிற் காட்டியவரே உயர்திரு. விபுலானந்த அடிகளாவார். ஈழநாட்டின் தவப்பயனாய் அவதரித்த அடிகளார் கல்வித் துறைகளிற் றலைசிறந்து பண்பாடுற்று விளங்கிய காலத்தில் செந்தமிழ் முதலிய பத்திரிகைகளில் இப்பெரியார் தமது இயற் பெயராகிய பண்டிதர் மயில்வாகனனார் என்னும் நாமத்தோடு வெளியிட்டுள்ள கட்டுரைகளையும், ஆராய்ச்சியுரைகளையும் வாசிக்குந்தோறும் இத்தகைய விரிந்த நோக்கோடும் பரந்த உள்ளத்தோடும் பண்பாடுற்று விளங்கும் நிறைமொழிப் பெரியார் தம் புலமையைக் குறித்து யான் பேரதிசயமடைவதுண்டு.

இவர்தம் கட்டுரைகளும், ஆராய்ச்சியுரைகளும் கற்றோர்க்கும் மற்றோர்க்கும் களிபேருவகை பயப்பனவாயமைந்துள்ளன. இவராலியற்றப்பட்ட மதங்க சூளாமணியென்னும் மொழிபெயர்ப்பு நூல் தமிழிற்கோர் புது விருந்தாயமைந்து விளங்குவது.

இப்பெரியார்தம் பேருரைகளை வாசிக்குந்தோறும் இவருடைய வாக்குச் சாதுரியத்தையும் அறியவேண்டுமென்னும் எண்ணமானது என் மனத்தில் உண்டாயிற்று. இவர் கொழும்பிலுள்ள ஆங்கில போதனாவித்தியாசாலையிற் கல்வி பயின்ற காலத்தில் இவருடன் ஒரு வகுப்பிற் கல்வி பயின்ற மாணவரொருவரை யான் சந்தித்தபோது இவரைப்பற்றி அன்னார் கூறிய சிலவற்றையும் இங்கே குறிப்பிட விரும்புகின்றேன்.

ஆங்கிலம் கற்கும்பொழுதும் (வகுப்பில்) தமிழ்ப்புத்தகம் ஒன்று மேசையின் கீழ் இருக்கும். உபாத்தியாயர் வேறு மாணவர்களுடன் பேசும் தருணத்தில் மேசையின் கீழுள்ள தமிழ்ப் புத்தகத்தை

யெடுத்துப் படித்துக்கொண்டிருப்பார். இப்படியே ஒருநொடிப்பொழுதையேனும் வீணுக்காமல் எந்த நேரமும் கல்வியிலே யே கண்ணும் கருத்துமாக இருப்பார் என்பதே.

இவ்வளவாகத் தம் வாழ்நாளைக் கல் விக்கெனவே அர்ப்பணம் பண்ணிய பெரியார் துறவறம் பூண்டு திருக்கோணமலையிலுள்ள இராமக்கிருஷ்ண மடத்திலிருக்கும்போது-அதாவது-ஏறக்குறையப் பதினெட்டு வருஷங்களின் முன் அவரைச் சந்திக்கும் பேறு எனக்குக் கிடைத்தது. அக்காலத்தில் அவர் வாசஞ்செய்துள்ள இல்லத்தின் சமீபத்தில் யானும் வசித்திருந்தமையால் அடிக்கடி அவரை யான் சந்திக்கத்தக்கதாயிருந்தது.

அவரைச் சந்திக்கும் நேரங்களில் தமிழ், சமஸ்கிருதம், ஆங்கிலம் என்னும் மூன்று பாஷைகளிலுமுள்ள கலைச் சிறப்புக்கள் பலவற்றையும் குறித்துப் பேசுவதுண்டு. எந்நூலில் எம்மொழியில் எப்பொருளிருந்தாலும் அவற்றையெல்லாம் தமிழில் அமைத்துத்தமிழைச் சிறப்பிக்க வேண்டும் என்று ஒரு சமயம் கூறினார். அதைக் கேட்ட யான் அடிகளாரை நோக்கித் தமிழில் நூல்களியற்றலாம்: ஆனல், அவைகளை ஆதரிக்கத் தமிழர் இல்லையே யென்று கூறினேன். தமிழையாதரிக்க இன்னும் இருபது வருஷங்களுக்கிடையில் தமிழர் முற்படுவார்கள். அப்படியான் காலம் வரும் என்று அடிகளார் மிக உறுதியுடன் கூறினர். இன்றைக்கு அதன் உண்மையைக் கண்கூடாகக் காண்கின்ருேம்.

சில சமயங்களில் சுவாமிகள் பகவத்கீதை சம்பந்தமாகப்பேசுவார். அக்காலையில் அவர் கீதையிலுள்ள சில சுலோகங்களை யெடுத்து அவைகளுக்குத் தமது நுண்புலத்தால் ஆராய்ந்து தெளிந்த வியாக்கியானங்களை வெகு திறமையுடன் விளக்குவார். சில சமயங்களில் அவைகளைக் கேட்கின்ற எனக்கும் ஒரு புதுவிதமான எண்ணத்தை என் மனத்தில் நிலைபெறச் செய்துவிடுவார். எல்லாவற்றிலும் மேலாக அடிகளாரிடத்தில் யான் கண்டுள்ள பெருங்குணமொன்றை யான் வியவாமலிருக்க முடியாது. பல நாளும் அவருடன் உரையாடியிருக்கின்றேன். ஆனல் ஒரு நாளாவது வீண் வார்த்தை பேசினமையை நான் கேட்டதேயில்லை. நூலாராய்ச்சிகளையும் மற்றும் கலைச்சிறப்புகளையும் பற்றியே பேசுவார். அவர் வாக்கில் கலைவாணி நடம்புரிவாள். அவர் வாக்கினின்றும் பயனில் சொல் என்று சொல்லப்படும் ஒன்றை பலநாளும் பழகிய என் காதில் கேட்டதேயில்லை. துறவியாயிருந்தமையால் தமது துறவு நிலையைப்பற்றி யாதேனும் பேசுவாரோவென்ருல், அதையும் யான் கேட்டதேயில்லை. என்னே! அடிகளார் தவமாண்பு! இவரன்ருே மனத்துறவடைந்த பெரியார்! அடிகளார் அல்லும் பகலும் அநவரதமும் கல்விக்கே தம் வாழ்நாளை அர்ப்பணம் பண்ணினர் என்று கூறுதல் மிகையாகாது.

இவ்வருந்தவப்பெரியார் தமது நீண்ட கால ஆராய்ச்சியின் பயனகத் தமிழ் நாட்டிற்கு அளித்துள்ள யாழ்நூலைக் குறித்து பலரும் அறிவர். விவேகாநந்த சபை மண்டபத்திலே யான் ஒருமுறை சுவாமிகளைச் சந்தித்தபோது, தாம் இயற்றும் இசைக்கலைநூலைப்பற்றிக் குறிப்பிட்டார். அதனைக்கேட்டதும், அடிகளாரை இராமகிருஷ்ண மடத்திற் சென்று கண்டு அந்நூலைப்பற்றி விசாரித்தேன்; சுவாமிகள் அந்நூலில் தாம் எழுதிய விஷயங்களைக் குறித்துச்சுருக்கமாக விளங்கக் கூறினர். தமிழ் நாட்டில் ஆதிகாலத்திற் சிறப்புற்று விளங்கிய யாழைக் குறித்துப் பலவிடங்களிலும் துருவியாராய்ந்து யாழொன்றைச் செய்வித்தேம் என்று அடிகளார் கூறிய கூற்ருனது என்னுள்ளத்தைக் கொள்ளை கொண்டது. தமிழ் மொழியில் தாமியற்றிய யாழ்நூலானது அரங்கேற்றப்பட்டபின் அதனை ஆங்கிலத்திலும் மொழி பெயர்த்து வெளியிடுவதாகச் சுவாமிகள் கூறியருளினர். ஆனல், தமிழன்னையின் தவக்குறைவோ அன்றி ஈழநாடு செய்த தவக்குறைவோ அடிகளார் பூதவுடம்பை யொருவினர். அடிகளார் இலங்கைச் சர்வகலாசாலையில் கடமையாற்ற

முன் வந்த காலத்தில் ஈழநாட்டினுள்ள தமிழர் யாவரும் தம்து நாடு பண்டைப் பெருமையையடையுங் காலம்வந்ததெனக் குதூகலமடைந்தனர். இன்று தமிழன்னை தனது அருந்தவப்புதல்வனை யிழந்தாள். ஈழநாடு நிலைகலங்குகின்றது. தமிழபிமானிகள் தவிக்கின்றனர். அந்தோ! அடிகள்ளார் பூதவுடம்பு மறைந்தது. ஆனாலும், அடிகளார் தமிழன்னையையும் தமிழ்க் கலைச் செல்வத்தையும் தமது நாட்டையும் மறந்தாரல்லர். அன்னார் தமிழ்க்கலையிற் கொண்டுள்ள ஆர்வமும் அபிமானமுமே நம் நாட்டிற் கலைச் சிறப்பைப் பெருக்கி நம் நாட்டைப் பெருமைப்படுத்தும் என்பதிற் சந்தேகமில்லை. அடிகளார் இச்சை வழியே தமிழ்க் கலையோங்குக! தமிழ் நாடு சிறக்க!

1. நற்கலையாந் தமிழ்க்கலையு நலந்திகழாங் கிலக்கலையுஞ்
சொற்கலையா வடகலையுந் தூய்மைசெறி தவக்கலையாம்
வற்கலையாற் சிறப்பெய்த வளம்பெருக்கி மாதவத்தின்
சிற்கலையார் மதியமெனச் சீர்சாலுந் தவமுனிவா!

2. தமிழணங்கின் றவக்கொழுந்தே! தாளாண்மை மிக்குடையாய்!
அமிழ்தெனவின் னிசையளிக்கும் யாழ்நூலை யாராய்ந்தே
யிமிழ்திரைசூழ் ஞாலத்தோ ரெல்லோரு மின்பமுறத்
துமிதமழை சொரிவிபுலா நந்தனெனுந் தமிழ்முனிவா!

3. மேனாட்டின் றலைச்சிறப்பாம் விஞ்ஞானக் கலைபயின்று
தானுக்குந் தனிநூற்கோர் பெருந்துணையா யதைக்கொண்டே
வானீட்டும் புகழ்படைத்த யாழ்நூலை வகுத்தருளி
யேனோர்க்கும் வழிகாட்டு மிசைமுனிவா வேகினையோ!

வேறு

4. பிறந்தவ ரிறத்தல் திண்ணம் பெருகிய வறிவான் மிக்கோ
ரிறந்தன ரெனினு மேலோ ரிறந்தவ ரல்லரென்னு
மறந்தரு முரைதா னுண்டே யாதலா லடிகளார்தம்
திறம்படு புகழை வாழ்த்திச் செய்யநன் னெறியி னிற்பாம்.

# ...மீண்டும் தமிழகத்தே பிறக்கவேண்டும்!

[ வித்துவான், மா. இராசமாணிக்கம் ]

---

காலஞ்சென்ற உயர்திரு. விபுலானந்த அடிகள் இருபதாம் நூற்றாண்டுப் பெரும் புலவர் மிகச் சிலருள் ஒருவர்; துறவுள்ளம் கொண்ட தூயவர். விவேகானந்த அடிகளால் தாய்நாட்டு இந்து சமயம் விளக்கமுற்றாற்போல அடிகளார் தொண்டினால் தாய்மொழியாகிய தமிழ் விளக்கமுற்றது. பழந்தமிழ் இசை, இசைக் கருவிகள் இவைபற்றிய விளக்கத்தை உலகறியச் செய்த சிறப்பு அடிகட்கே உரியதாகும். இவைபற்றிப் பத்தாண்டுகட்குமுன் அடிகளார் சென்னைப் பல்கலைக் கழகக் கட்டடத்தில் ஐந்து சொற்பொழிவுகள் ஆற்றினார்கள்; இசைக் கருவிகளைப் படம் வரைந்து காட்டினார்கள். டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்களும், பிறரும் அடிகளைப் பாராட்டிப் பேசினர்.

அன்று தொட்டு, அடிகள் தமிழ் இசைபற்றிய நுணுக்கங்களை ஆராய்ந்து நூல் வரைந்து உலகறியச் செய்ய முயன்றார்கள். அவர்கள் அல்மோராவில் இருந்தபொழுதும் ஈழத்தில் இருந்த பொழுதும் தமிழிசை நூலை வரைந்து வந்தார்கள். சென்ற கோடை விடு முறையில் சென்னை மாகாணக் கல்வி அமைச்சரும் தமிழ்த் தாயின் தவப் புதல்வரும் ஆக உள்ள உயர்திரு. அவிநாசிலிங்கம் செட்டியார் அவர்கள் முன்னிலையில் தமிழிசைக் கருவிகளை மீட்டுத் தமிழ்ப் பண்களை விளக்கித் திருமுறைப் பதிகங்களைப் பாடிக் காட்டினார்கள். அந்நிகழ்ச்சியைச் செய்தித்தாள்களிற் கண்ட தமிழர் 'தமிழ் இசை மறுமலர்ச்சி பெற்றது' என்று மகிழ்ந்தனர்; அடிகட்குப் பல்லாண்டு கூறினர்.

தமிழர் தவக்குறை உடையவர். அடிகள் தம் முயற்சியில் முழுவதும் வெற்றி பெறுமுன்னே காலமானார்கள். இனித் தமிழிசை பற்றிய நுட்பங்களை உரைப்பவர் யாவர்? அடிகள் விட்டுச் சென்ற திருப்பணியைத் தொடர்ந்து நடத்த வல்லவர் யாவர்? பொதுவாகத் தமிழர் வீரம் பேசுதலில்வல்லவர்; மேடைப்பேச்சுகளில் மேசையைத் தட்டிப்பேசுதலில் வல்லவர் உறங்கும் மக்களை ஊக்கம் கொள்ளச் செய்தலில் திறனுடையவர்; ஆயின், ஆக்க வேலைகளில் ஊக்கமற்றவர்; மொழி இனப்பற்றற்றவர்; ஆரவாரப் பேச்சுகளில் ஈடுபட்டு ஆர்ப்பரிப்பவர்; அமைதியை அணிகலனாகக் கொண்டு ஆராய்ச்சித் துறையிற் சென்று உண்மையாகத் தமிழுக்கு உழைக்கும் உத்தமர்களைக் கவனியாதவர். அங்ஙனம் கவனித்திருப்பாராயின், அடிகளார் முயற்சி பல ஆண்டுகட்கு முன்னரே வெற்றி பெற்று, இன்று இசை அரங்குகளில் தமிழிசைக் கருவிகள் தம் பணி செய்துகொண்டிருக்கும் அல்லவா? அத்துறையில் தமிழர் பலர் போதிய பயிற்சி பெற்றிருப்பர் அல்லரோ? தமிழகத்துச் செல்வர்க்குத் தாய்மொழியிலும் தமிழர் நலத்திலும் பற்றில்லை; கற்று அலுவலகங்களில் இருக்கும் நடுத்தரத் தமிழரும் அந்நிலையிற்றான் இருக்கின்றனர். இங்ஙனம் அறிவும் பொருளும் இருப்பர் கவனியாவிடின், நாட்டின் கலைகள் நாசமுறுதல் திண்ணமன்றோ?

அடிகளிடமிருந்து தமிழிசை நுட்பங்களை அறிந்தோர் இருப்பின், அவர்களைக் கொண்டு அடிகளார்விட்டுச்சென்ற திருப்பணியைத் தொடர்ந்து முடித்தல் நாட்டுக்குகந்த நற்பணியாகும்.. அடிகளார் அன்பே உருவமாக அமைந்தவர்கள் என்பதை விளக்கச் சென்னைப் பல்கலைக் கழக ஆராய்ச்சித்துறைத் தலைவராகவுள்ள பெரும் புலவர் திரு. ரா. பி. சேதுப் பிள்ளை அவர்கள் (பி. ஏ., பி. எல்.) பல நிகழ்ச்சிகளை என்னிடம் கூறி அவர்கள் மறைவைப் பற்றிப் பெரிதும் வருந்தினார்கள். தமிழகம் தனியே பிரிக்கப்பட்டுத் தன்னாட்சி கொள்ளும் இக்காலத்தில்—தமிழிசை தமி

# வீர சந்நியாசி விபுலாநந்த அடிகளார்.

[ ஆவினிப்பட்டி, அ. பழநியப்ப செட்டியார் ]

ஈழ நாட்டில் பிறந்து, தமிழ்ச்சங்கம் தோன்றிய மதுரையம்பதியில் சுமார் இருபத்தைந்து ஆண்டுகட்கு முன்னர் அங்கு விஜயம்செய்து, பண்டிதர் பரீட்சையில் தேர்ச்சிபெற்று ஆங்கிலக் கலையிலும் அரிய புலமை அடைந்து பீ.எஸ்-சி.யில் தேர்ச்சியடைந்தார்கள். அவர்களுடைய பிள்ளைத் திருநாமம் மயில்வாகனனார் என்பது. நமது 'பண்டித மயில்வாகனனார் ராமகிருஷ்ண மடத்தில் அரும் தொண்டில் ஈடுபட்டு அம்மடத்தில் சேர்ந்தார். அங்கு பயிற்சி பெற்றார். மடத்தினரால் அவருக்களிக்கப்பெற்ற தீட்சா நாமம் பிரபோதசைதன்யர் என்பது. பின்னர் ஆனந்தர் பட்டமும் பெற்றார். அப்பொழுது விபுலாநந்தர் என்று பெயர் வழங்கலானார்கள். வடமொழியிலும் பயிற்சி நிறைந்தார். இலங்கையில் ஏராளமான கல்விக் கழகங்களை அங்குள்ள இராமகிருஷ்ண மடத்தின் சார்பில் கண்காணித்துவந்தார். பின்னர் இமயமலைச் சாரலில் உள்ள அல்மோரா மடத்துக்குச் சென்று அங்கு பணியாற்றினார். கைலையங்கிரிக்குச் சென்று திரும்பினார். இராமகிருஷ்ண மடத்துத் தலைமைப் பத்திரிகையான பிரபுத்தபாரதம் என்ற ஆங்கிலப் பத்திரிகையின் ஆசிரியர் பீடத்தில் அமர்ந்து சில வருடங்கள் அரும்பணி ஆற்றினார்கள். பின்னர் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராகச் சில ஆண்டு பணியாற்றினார்கள். முடிவில் கொழும்புச் சர்வகலாசாலையில் தமிழ்ப் பேராசிரியராக அமர்ந்து பணியாற்றினார்கள். அடிகளை பல ஆண்டுகளுக்குமுன் மேலைச்சிவபுரியில் பார்த்து எங்கள் கழகத்திற்கு வரவேண்டுமென்று அழைத்தோம். பின்னர் வருவதாக வாக்களித்தார்கள். பல ஆண்டுகள் கழிந்தும் வர இயலவில்லை. இறுதியாகச் சந்தித்து அவசியம் வரவேணுமென்று அன்புடன் அழைத்ததற்கு வாக்குத்தவறாது வருவதாய்ச் சொல்லி எங்கள் கழகத்தின் பதினைந்தாம் ஆண்டு விழாவிற்கு வந்து தலைமைவகித்துப் பணியாற்றிச் சென்றார்கள். அவ் வாண்டு விழா எங்கள் கழகத்தில் நடந்த விழாக்களுக்கெல்லாம் சிகரமாக அமைந்தது. அன்று முதல் இன்று வரை எங்கள் கழகம் எவ்வித குறைவுமின்றிச் செவ்வனே நடைபெற்று வருகின்றது. ஆடம்பரமில்லாத ஒரு சந்நியாசி. தமிழ்த் தாயினிடம் உள்ளம் முழுமையும் ஈடுபடுத்திய உத்தமப் புலவர். கல்விக்கடல். மணமே வேண்டாமென்று உதறித்தள்ளிய ஒழுக்கக்குன்று. அன்புநிறை உருவம்; சிரித்த முகம்; அன்பு ததும்பும் பேச்சு. இப்படிப்பட்ட விபுலாநந்தரின் பிரிவு யாரைத்தான் துன்புறுத்தாது! இறுதியாக 'நமக்கு யாழ் நூல் வெளியீடாகிய பொக்கிஷத்தைத் தந்து சென்றார்கள். மணிதர்கள் பிறக்கிறார்கள், இறக்கிறார்கள்! ஆனால் சுவாமிகளைப் போன்றவர்கள் உடல் பிரிந்தாலும் இறப்பதில்லை அல்லவா?

முகத்தில் மறுமலர்ச்சி கொள்ள இருக்கும் இக்காலத்தில் — தமிழ் நாட்டு வள்ளல் இராஜா ஸர். அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் தமிழிசைக்கு ஊக்கமும் ஆக்கமும் அளித்துவரும் இக்காலத்தில் அடிகளார் மறைந்தது வெண்ணெய் திரளும்பொழுது தாழி உடைந்த கதைபோன்றது! எனினும், அடிகளார் காட்டிய அடிச்சுவட்டைப் பின்பற்றித் தமிழறிஞர் உழைப்பார்களாக! அடிகளார் மறைவினால் தமிழகத்துக்கு உண்டான பேரிழப்பை எண்ணி, தமிழகப் பெருமக்கள், எஞ்சியிருக்கும் தமிழ்ப்பெரும் புலவர்களையேனும் பயன்படுத்தித் தமிழுக்கு ஆக்கம் தேடுமாறு வேண்டுகின்றேன்.

அடிகள் ஆன்மா அமைதி பெறுவதாக! பிறவி இருக்குமாயின், அடிகள் மீண்டும் தமிழகத்தே பிறக்க இறைவன் அருள் புரிவானாக!

# ஈழ நாட்டின் தமிழர் பெருந்தகை

—தென் புலோலியூர், மு. கணபதிப்பிள்ளை—

இலங்கைப் பல்கலைக் கழகத்துத் தமிழ்ப் பேராசிரியர் அருட்டிரு. விபுலாநந்த அடிகளார் திடுமெனத் தம் பருவுடல் நீத்த பொல்லாச் செய்தி, தமிழ் நாட்டைத் திடுக்கிடச் செய்து தமிழ் மக்களையும் துன்பக் கடலில் ஆழ்த்திவிட்டது. விபுலாநந்த அடிகளைத் தமிழுலகு நன்கு அறியும். "பிரபுத்த பாரதம்" எனப்படும் கலையாக்கங் கருதிய ஆங்கிலத் திங்கள் வெளியீட்டின் ஆசிரியராயிருந்து நமது நாட்டில் "காலமுங் கடலும் செல்லும் கவர்ந்தனபோக எஞ்சி நிற்கும் அருந்தமிழ் நூல்களின் வரலாற்றினைச் செவ்விய முறையிலே ஆராய்ந்தறிந்து, நமது மொழியிலும், பிற மொழியிலும் தமிழிலக்கிய வரலாறுகள் சிறியவும் பெரியவுமாக எழுதித் தமிழ் நூல்களின் மதிப்பினை உலகிற்கு அறிவுறுத்த முயலவேண்டும்" எனக்கூறி பற்பல கட்டுரைகளை ஆங்கிலத்திலும் எழுதித் திகழ்ந்தமையால் அவர்களை ஐரோப்பா, அமெரிக்கா முதலிய மேலைத்தேயங்கள்கூட அறிந்துகொள்ள இடம் எழுவதாயிற்று. வட நாட்டில் இமாலயம் வரை சென்று, தமிழின் புகழ் நாட்டி அதன் ஆக்கங் கருதி உழைத்த சுவாமிகள் இவ்வுலக வாழ்வை நீத்தமை கல்வியுலகில் ஒரு அதிர்ச்சியையும், பெருங் கவலையையும் கொடுப்பது புதுமையல்ல. இந்தியாவிலும் இலங்கையிலும் கல்வி சான்ற பெருமக்கள் வரிசையில் முன்னணியில் வைத்துப் போற்றப்பட்ட ஈழத்துப் புலவர் சுவாமிகளே என்பதை எவரும் மறக்க முடியாது.

இலங்கையிலே தமிழ் மக்கள் வசிக்கும் இடங்கள் முக்கியமாய் வட மாகாணமும் கீழ் மாகாணமுமாம். வட மாகாணத்தில் தலைமையாயுள்ளது யாழ்ப்பாணம். கீழ் மாகாணத்தில் தலைமையாயுள்ளது மட்டக்களப்பு. மட்டக்களப்பின் இயற்கையமைப்பால் அது ஏனைய தமிழ்நாட்டுப் பகுதிகளுடன் சேராமல் தனிமையுற்றும், சிங்கள நாட்டுடன் அண்மையில் இருந்ததனால் அங்கு வாழ்ந்த மக்களது நடை, உடை, பாவனை ஆதியன சிறிது யாழ்ப்பாணத்திலிருந்து மாறுபட்டும் வந்துவிட்டது. ஆயினும் தூய தமிழ்ச் சொற்கள்-சங்க காலச் சொற்கள்-இன்னும் அந்நாட்டுப் பேச்சு வழக்கிலுள்ளன. யாழ்ப்பாணத்துப் பழந் தமிழ்க் குடிகள் சிலர் அங்கே போய்க் குடியேறியிருந்ததுமுண்டு. அங்ஙனம் பல ஆண்டுகளுக்கு முன்னதாக் யாழ்ப்பாணத்து உடுவில், வட்டுக்கோட்டை என்னும் இடங்களிலிருந்து சென்று மட்டக்களப்பிற் குடியேறியவர்கள்தான் சுவாமிகளின் தாயாராகிய கண்ணம்மையாருடைய முன்னோர்கள்.

சுவாமிகள், 1892-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 29-ந் திகதி (கர வருஷம் பங்குனி மாதம் 16-ம் திகதி) ஞாயிற்றுக்கிழமை சூரியோதயத்தில், மட்டக்களப்பிலுள்ள காரைதீவு என்னும் கிராமத்தே திருவவதாரஞ் செய்தார்கள். இவருடைய தந்தையார் பெயர் சாமித்தம்பியார். சுவாமிகளுக்கு இளமையில் அவருடைய தந்தையாரால் வைக்கப்பட்ட பெயர் மயில்வாகனன் என்பதாகும்.

இவர், தமது இளம் பருவத்திலேயே திருக்குறள், நன்னூல், சூடாமணி நிகண்டு முதலிய நூல்களைப் பயின்றதுமல்லாமல், தமது தந்தையாரிடத்திலும் தாய் மாமன்மாராகிய சிவகுருநாதபிள்ளை, வசந்தராசபிள்ளை என்பவர்களிடத்திலும் பாரதம், கந்தபுராணம் முதலிய நூல்களை முறையே கற்றார். யாப்பு அணி படியாமல் விளையாட்டுப்போலப் பாட்டுப் பாடும் வன்மை இயல்பாக இவருக்கு அமைந்திருந்தும், யாப்பு அணியிலக்கணங்

களைச் செவ்வனே படித்தறிய வேண்டுமென்னும் ஆசையால் உந்தப்பெற்று அவற்றைப் படித்துச் செய்யுள் யாக்கவும் பயின்றுகொண்டார்.

முதலில், வீட்டிலிருந்தே ஆங்கிலத்தைப் படித்துக்கொண்டிருந்தவர், *1902*-ம் ஆண்டில் கல்முனை மெதெடிஸ்த பாடசாலை ஆரம்பிக்கப்பட்டதும், அதிலே படிக்க வைக்கப்பட்டார். பின் மட்டக்களப்பு மத்திய கல்லூரியிலும் அர்ச். மிக்கேல் கல்லூரியிலுமாக இவர் படித்து *1908*-ம் ஆண்டிற் பதினறு வயது கழிவதன் முன்னதாகவே, கேம்பிரிச் சர்வகலாசாலையாரால் நடாத்தப்பட்ட சீனியர் வகுப்புப் பரீட்சையிற் சித்திபெற்றனர்.

*1911*-ம் *1912*-ம் ஆண்டுகளில் அரசினர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையிலே சேர்ந்து படித்துச் சித்தியடைந்தார். அக்காலத்தில், தமிழை மேலுங் கற்றுக்கொள்ள வேண்டுமென்னும் அவாவினல் ஆங்கிலத்திலும் பார்க்க தமிழ் படிப்பதிலேயே அதிக நேரத்தைச் செலவிட்டார். தமிழைப் பாடங்கேட்டுப் படிப்பதற்குக் கோப்பாயைச் சேர்ந்த பண்டிதர் எஸ். கந்தையா பிள்ளை அவர்களும், முதலியார் எஸ். கைலாச பிள்ளையும், வித்துவான் சி. தாமோதரம் பிள்ளையும் வந்து வாய்ப்பாராயினர். இங்ஙனம் கல்வி பயின்றுகொண்டிருக்கும் காலத்திலேயே சுவாமிகளுக்குக் கொழும்பு விவேகானந்த சபையுடன்தொடர்பு ஏற்படுவதாயிற்று.

இரண்டு ஆண்டுகள் வரை (*1913—1914*) மட்டக்களப்பு அர்ச். மிக்கேல் கல்லூரியில் ஆசிரியராகக் கடமை பார்த்தவர், *1915*-ம் ஆண்டில் அரசினர் பல தொழிற் (ரெக்னிக்கல்) கல்லூரியிற் சேர்ந்து மேற்கல்வி கற்கத் தொடங்கினர். பேராசிரியர்கள் திரு. ஏ. எவ். யோசேப்பு, திரு. டபிள்யூ. என். றே என்னும் இருவரிடத்தும் விஞ்ஞான சாத்திரம் பயின்று *1916*-ம் ஆண்டில் வைக்கப்பட்ட பரீட்சையில் முதலாவது பிரிவிற் சித்தியெய்தி ''டிப்புளோமா'' பட்டமும் பெற்றுக்கொண்டார்.

பிறமொழியிலுள்ள விஞ்ஞான நூல்களையெல்லாம் துருவித்துருவிப் படித்துக்கொண்டிருந்தவரெனினும் தமிழ்மொழியினைச் சிறிதும் மறந்தாரில்லை. உத்தியோகத்தையே பெரிதெனக் கருதி ஆங்கில மோகத்தில் மக்கள் மூழ்கித் தமிழைக் கவனியாதுவிட்ட காலத்தில்—ஒருவரும் தமிழ்ப் பரீட்சையை விரும்பாத காலத்தில்—இலங்கையிலிருந்து மதுரைத் தமிழ்ச் சங்கத்தினரால் நடாத்தப்பட்ட தனித்தமிழ்ப் பரீட்சையை எடுத்து அதிற் சித்தியுமெய்தினர். இலங்கையிலிருந்து முதன் முதல் மதுரைத் தமிழ்ப் பண்டிதர்ப் பரீட்சையிற் சித்திபெற்றவர் சுவாமியவர்களே என்பதை யாம் மறந்துவிடலாகாது. இக்காலத்திலேயே—பண்டிதர் மயில்வாகனர் என அழைக்கப்பட்ட—சுவாமிகள் இராமகிருஷ்ண மிஷனைச் சேர்ந்த ஸ்ரீமத் சுவாமி சர்வாநந்தாவுடன் தொடர்பு பூண்டார். இதுவே, இராமகிருஷ்ண மிஷனுடன் சுவாமிகளுக்கு முதன்முதலாக ஏற்பட்ட தொடர்பு. இதன்பின் சுவாமிகளுடைய வாழ்க்கையிலேயே ஒரு பூரணமான மாறுதல் ஏற்படுவதாயிற்று. சமயம் தத்துவம் முதலியவற்றில் அவருக்கு ஒரு தனி ஆராய்ச்சி விருப்பு ஏற்பட்டதும் இக்காலத்திலேதான்.

*1917*-ம் ஆண்டின் முகனையிலே அரசினர் பல தொழிற் (ரெக்னிக்கல்) கல்லூரியில் இரசாயன உதவி ஆசிரியராக இருந்தவர், யாழ்ப்பாணத்து சம்பத்திரிசியார் கல்லூரியில் இரசாயன சாத்திரப் பேராசிரியராகக் கடமையாற்றத் தொடங்கினர். இங்கே ஏறக்குறைய மூன்று ஆண்டுகள்வரை தங்கியிருந்தவர், நடக்கும் வாசகசாலைஎனப் புகழ்பெற்ற சுன்னுகம், திரு. அ. குமாரசாமிப் புலவருடனும் பிற தமிழறிஞர்களுடனும் நெருங்கிய தொடர்பு பூண்டவரானர். சம்பத்திரிசியார் கல்லூரியில் பேராசிரியராகவிருக்கும்பொழுதுதான் லண்டன் சர்வகலாசாலையாரால் நடாத்தப்பட்ட பீ. எஸ்-சி. பரீட்சையில் சித்தியடைந்தார்.

*1920*-ம் ஆண்டில் மானிப்பாய் இந்து கல்லூரியின் பிரதம ஆசிரியராகக் கடமையேற்று இரண்டு ஆண்டுகள் வரை கல்லூரியின் முன்னேற்றத்திற்கு வேண்டியவற்றைச் செய்துகொண்டிருந்தார். அக்காலத்தில் யாழ்ப்பாண ஆரியதிராவிட பாஷாபிவிருத்திச் சங்கம் சீரான நிலையில் இருக்கவில்லை. அதனைக் கவனித்துக்கொண்டிருந்த சுவாமிகள் தமிழறிஞர் பலருடன்கூடி ஆலோசித்து, சங்கத்தைப் புதுக்கியமைப்பித்தார். நாளடைவில் சங்கத்தின் பண்டித பரீட்சைகளுக்குப் பரீட்சகராகவும் கௌரவ அங்கத்தவராகவும் தெரிவுசெய்யப்பட்டார்.

சுவாமிகளின் வாழ்க்கையில் மாறுதல் ஏற்படத் தொடங்கியது *1914*-ம் ஆண்-

டிலே யெனினும் 1922-ம் ஆண்டுவரை உலகிற்கு அது தெளிவாக விளங்கவில்லை. 1922-ம் ஆண்டில், இனிது இனிது ஏகாந்தம் இனிதுஎனக் கருதிப்போலும் சுவாமிகள் சென்னையிலுள்ள இராமகிருஷ்ண மிஷனைச் சேர்ந்தார். அங்கிருந்துகொண்டு இராமக்கிருஷ்ண விஜயம் என்னும் தமிழ் மாதாந்த வெளியீட்டுக்கும், வேதாந்த கேசரி என்னும் ஆங்கில மாதாந்த வெளியீட்டுக்கும் ஆசிரியரானார். அக்காலத்திலேதான் மகா மகோபாத்யாய தக்ஷிணாத்ய கலாநிதி டாக்டர் உ. வே. சாமிநாதையருடன் தொடர்பு ஏற்படுவதாயிற்று. சென்னையிலும் பிறவிடங்களிலுமுள்ள தமிழறிஞர்களுடன் சுவாமிகள் அளவளாவிக்கொண்டதும் இக்காலத்திலேயேயாகும். மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் இலக்கிய சபையில் அங்கத்தும் வகித்துக்கொண்டு அச்சங்கத்தாரால் நடாத்தப்படும் பண்டித பரீட்சைக்குப் பரீட்சகராகத் திகழத் தொடங்கியதும் இக்காலத்திலேயாகும். மதுரைத் தமிழ்ச் சங்கத்தார், சங்க ஆதரவில் நடத்திக் கொண்டிருந்த "செந்தமிழ்" என்னும் வெளியீட்டில் சுவாமிகள் எழுதிய இலக்கிய ஆராய்ச்சிக் கட்டுரைகள் மிளிர்ந்தன. சுவாமிகளது கட்டுரை மாண்பினையும் ஆராய்ச்சித் திறனையும் கண்டு தமிழுலகம் அவரைப் போற்றத் தொடங்கியது. இச்சிறப்புகளையும் சுவாமிகளின் திறனையும் ஒரே நோக்காக நோக்கிக்கொண்டிருந்த ஈழத் தமிழர்கள், சேர். பொன்னம்பலம் அருணாசலம் அவர்களைத் தலைமையாகக்கொண்டு,கொழும்பு சைவ பரிபாலன சபை விவேகானந்த சபை ஆகிய பல சங்கங்களின் சார்பாகச் சுவாமிகளைத் தாங்கள் புதுவதாக நிறுவிய சர்வகலாசாலைக்குத் தமிழ்ப் பேராசிரியராக வரும் வண்ணம் அழைத்தார்கள்.

''பண்டிதர் மயில்வாகனர்''என அழைக்கப்பட்டவர், "சுவாமி விபுலானந்தர்" என அழைக்கப்படத் தொடங்கியது 1924-ம் ஆண்டு சித்திரை மாதப் பௌர்ணமையிலன்றாகும். அன்றே, இராமக்கிருஷ்ண மடாலயங்களின் தலைவர் ஸ்ரீமத் சுவாமி சர்வாநந்தர் மயில்வாகனனாருக்குக் குருப்பட்டஞ் சூட்டிப் புது நாமகரணமுஞ் செய்த தினமாகும்.

அதன்பின் சுவாமிகளுடைய புகழ் யாண்டும் விரைவாகப் பரவத்தொடங்கியது. திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் மடத்தில் நடைபெற்ற வருடாந்தத் தமிழ் மகாநாட்டினைத் தலைமை தாங்கி நடத்தும்படி சுவாமிகளை வேண்ட, சுவாமிகளும் அதற்கிசைந்து மகா நாட்டினைச் சிறப்புற நடத்தி முடித்தார்கள்.

"இருவர் தேவர் தரு மணியுடனே
உருவளர் மதங்கசூளாமணி யொன்றும்
திடமுடனருளிய நடனநூற் செல்வ!"

எனப் போற்றப்படுபவர், 'மதங்கசூளாமணி' என்னும் நாடகத் தமிழ் நூலையும் இயற்றி மதுரைத் தமிழ்ச் சங்கத்தாரால் வெளியிடுவித்தார்.

இலங்கையிலுள்ள இராமக்கிருஷ்ண மிஷனின் பாடசாலைகளை 1925-ம் ஆண்டு தொடக்கமாக ஆறு ஆண்டுகள்வரை சுவாமிகள் முயன்று திருத்தியமைத்தார்கள். பின் திரிகோணமலை இந்துக் கல்லூரியின் பிரதம ஆசிரியராகவும் சிலகாலம் கடமையாற்றினார். சுவாமிகள் இராமக்கிருஷ்ண மிஷனின் பாடசாலைகளுக்கு மனேஜராக இருந்தகாலத்தில் தாராள மனப்பான்மையோடும் விரிந்த நோக்கத்தோடும் தன்னுடைய சொந்த நன்மைகளைக் கருதாமல் பாடசாலைகளின் நன்மையை மாத்திரமே கருதி நடந்துவந்தாரென்று எல்லோரும் புகழ்ந்தார்கள். சுவாமிகள் செய்த ஆக்க வேலைகளையும் பிறவற்றையும் பார்க்க விரும்பினால் அவர் கீழ் மகாணத்துக்குப் போகவேண்டும். அங்கே சுவாமிகள் போகாதிருந்தால் இந்து சமயமே இல்லாமற் போய் விடும் போலிருந்தது. அங்கே சுவாமிகள் ஒரு அநாதசாலையும் தொடக்கி நடத்தி வந்தார்.

தமிழ்ச் சர்வ கலாசாலை விசாரணைச் சபையொன்று, இந்திய நாட்டிலே, 1926-ம் ஆண்டில் நியமிக்கப்பட்டது. இராமநாதபுர அரசர் விசாரணைச் சபைக்குத் தலைமை வகித்தார். அப்பொழுது சென்னைச் சர்வ கலாசாலையார் வேண்டுகோளுக்கிணங்கிச் சுவாமிகள் மதுரைக்குச் சென்று முதலாவதாகச் சாட்சியம் கொடுத்தார். அதன் பயனாகவே அண்ணாமலைச் சர்வ கலாசாலை நிறுவப்பட்டதாகும். செட்டி நாட்டரசர் ராஜா, சர். அண்ணாமலைச் செட்டியார் விரும்பியபடி அண்ணாமலைச் சர்வ கலாசாலையின் முதலாவது தமிழ்ப் பேராசிரியராக 1931-ம் ஆண்டில் பதவியேற்று 1933-ம் ஆண்டு வரையிலும் அங்கிருந்தார். அண்ணாமலைச் சர்வ கலாசாலையிலிருந்தபோதே, சுவாமிகள், இராமகிருஷ்ண மிஷன் பதிப்பிப்பதற்காகச் சுவாமி விவேகா

ஞந்தரின் ''விவேகானந்த ஞான தீபம்'' ''கர்மயோகம்'' ''இராசயோகம்'' ''பதஞ்சலியோக சூத்திரம்'' முதலான நூல்கள் பலவற்றைத் தூய தமிழில் மொழிபெயர்த்துக் கொண்டார்கள்.

சென்னைச் சர்வகலாசாலைத் தமிழ் ஆராய்ச்சித்துறை சம்பந்தமாக 1935-ம் ஆண்டில் நியமிக்கப்பட்ட விசாரணைச் சபையில் மகாமகோபாத்யாய டாக்டர் உ. வே. சாமிநாதையர், மதுரைத் தமிழ்ச் சங்க உபதலைவர் திரு டீ. ஸ்ரீநிவாச ஐயங்கார் முதலியவர்களுடன் கூடியிருந்து விசாரித்து அறிக்கை எழுதுவதில் சுவாமிகள் முக்கிய பங்கெடுத்தார். பின், உப அத்தியட்சர் கேள்விப்படி சர்வகலாசாலைத் தமிழாராய்ச்சி சம்பந்தமாக விரிவானதொரு திட்டத்தையும் தயாரித்துக் கொடுத்தார். ''பழந்தமிழர் இசையும் பிறநுண் கலைகளும்'' என்னும் பொருள்பற்றிச் சென்னைச் சர்வகலாசாலையிற் பல சொற்பொழிவுகள் ஆற்றினர். இச்சொற்பொழிவுகள் ''ஹிந்து'' முதலாகக்கொண்ட ஆங்கிலப் பத்திரிகைகளிலும் பிற தமிழ் வெளியீடுகளிலும் வெளிவந்தன. அக்காலத்திலே அண்ணுமலைச் சர்வகலாசாலையிலும் ''இசை'' ''அலங்கார சாத்திரம்'' முதலிய பொருள்கள்பற்றி விரிவுரைகள் நிகழ்த்தியதுண்டு. திருச்சி வாமனைவிநிலையத்திலும் சுவாமிகள் ''பண்டைத் தமிழரின் இசைக்கருவிகள்'' பற்றிப் பேசியது தமிழ் மக்கள் யாவருக்கும் தெரிந்ததொன்ருகும்.

தென்னிந்தியாவில் சைவத்திற்கும் தமிழுக்கும் அருந்தொண்டாற்றிவரும் சைவ சித்தாந்த மகாசமாஜம் திருவண்ணுமலையில் வருடாந்த விழாவினை நடத்தியபோது சுவாமிகள் தலைமைதாங்கியதும் ஈழநாட்டுத் தமிழ்ச் சைவ அன்பர்கள் நன்கு அறிந்த தொன்ருகும். 1936-ம் ஆண்டு டிசம்பர் மாதம் சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கத்தின் ஆதரவில், ''கலைச் சொல்லாக்கமகாநாடு'' கூடியது. அம் மகாநாடு திருவாங்கூர் சர். ஸி. பி. இராமசாமி ஐயரால் திறந்துவைக்கப்பட்டது. அம் மகாநாட்டிற்குப் பொதுத் தலைவராகத் தலைமைதாங்கிய பெருமை சுவாமிகளுக்கே உரியதாகும்.

1937-ம் ஆண்டில் சுவாமிகள் இமயமலையைத் தாண்டி, தீபெத்துக்குப் போய்த் திருக்கயிலையைத் தரிசித்துக்கொண்டு திரும்பினர். திருக்கயிலை யாத்திரை செய்ததுமன்றி அந்நாட்டின் பலவிடங்களிலும் உள்ள மகாயன பௌத்தப் பள்ளிகளுக்கும் சென்றிருந்தார். திருக்கயிலை யாத்திரை செய்து திரும்பியதின்பின் 'விண்ணுலகம்' என்ற தலையங்கத்துடன் 'ஈழகேசரி' ஆண்டு மட்லுக்கு எழுதிய கட்டுரை சுவாமிகளின் தத்துவ சாத்திர அறிவையும் உவமைத் திறமையையும் நன்கு புலப்படுத்துவதாயிற்று.

திருக்கயிலாய யாத்திரை செய்துகொண்டு திரும்பிவந்ததும், சென்னைச் சர்வகலாசாலையார் தமது ஆராய்ச்சிச் சபையில் அங்கத்தவராக்கிக்கொண்டதுமல்லாமல், சர்வகலாசாலையின் தமிழ்ப் பரீட்சகர்களுள் ஒருவராகவும் சுவாமிகளை நியமனஞ் செய்து கொண்டார்கள்.

இங்ஙனமிருக்கையில், 1930-ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 'பிரபுத்த பாரதம்' எனப்பட்ட கலையாக்கங் கருதிய ஆங்கில வெளியீட்டின் ஆசிரியராக நியமிக்கப்பட்டார். சுவாமிகள் இமயமலைச் சாரலிலுள்ள மாயாவதி ஆச்சிரமத்திற்குப் பிரயாணப்படவிருந்தபொழுது யாழ்ப்பாணத்து வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் ஒரு மாபெருங் கூட்டம் பிரியாவிடை அளிப்பதற்காகக் கூடிற்று. அப்பொழுது தமிழ் வித்துவான் பிரமஸ்ரீ. சி. கணேசையர், ''முன்னைக்காலத்தில்எம் நாட்டிலிருந்து எமக்குப் பெரு நன்மைகளைச் செய்த இருபாலைச் சேனதிராய முதலியார், நல்லூர் சரவணமுத்துப் புலவர், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் முதலிய பெரும்புலவர்களைப்போலத் தாமும் எமக்கெல்லாம் பெரு நன்மைகளைச் செய்து பெரும் புலவர்களாய் (ஸ்ரீலஸ்ரீ சுவாமியவர்கள்) விளங்குகின்ருர்கள் என்பது எவருமறிந்ததே. அவர்கள் ஓரறிவுயிரினும் ஈரறிவுயிர் மூவறிவுயிர் விசேடம் பெற்றவாறு போல ஒரு மொழி இரு மொழிப் புலவரினும் விசேடமாகப் பல மொழிப் புலவராயும் விளங்குகின்ருர்கள். அதனுலும் அவரறிவின் பெருமை அளவிடற்கரியதென்பதை நாமறிந்துகொள்ளலாம். இத்தகைய பெரும் புலவரைப் பிரிந்திருப்பது எமக்கு அரிதாயினும் அவர்கள் இமாசலத்தில் ஒரு ஞானசூரியனுக விளங்கி எமக்கே பிரகாசந்தரச்செய்வதால் அதுவும் மகிழத்தக்கதொன்றே என்பதைத் தங்களுக்கு அறிவிக்கின்றேன். தென்னுட்டில் அன்றி வடநாட்டிலும் அவர்கள் சென்று எம் கீழ்நாட்டின் பெருமையை விளக்குவது எமக்கெல்லாம் பெருமகிழ்ச்சியைத் தரத்தக்கதொன்றேயாம்'' எனத் தெரிவித்ததையும்

தமிழன்பர்கள் நினைவுகூரவேண்டும். ஐயரவர்கள் கூறியவண்ணம், சுவாமியவர்கள் ஆசிரியராய் இருந்த காலத்தில் மேலைநாட்டுத் தத்துவசாத்திரிகள் பலருடனும் பழகவேண்டி நேர்ந்தது. சேர். எஸ். ராதாகிருஷ்ணன் முதலிய அறிஞர்கள் பலர் சுவாமிகளுடன் உறவாடினர்.

மாயாவதியை—அங்குள்ள ஆச்சிரமத்தை—விவரித்துப் புகழ்ந்து "இனிது இனிது ஏகாந்தமினிது' என்ருங்கு அவ்விடம் சாந்தம் நிலவுவதற்கு ஏற்ற இடம். மக்கள் அங்கு இலர்" என்று கூறிச்சென்ற அடிகளை தமிழ் நாட்டில் அவருக்குள்ள தணியாக் காதல் விரைவில் ஈர்த்துக்கொண்டோடி வந்தது. சுவாமிகள் திரும்பிவந்ததும் அவர்களைச் சமய ஆக்கம் கருதிய சபைகளும் இலக்கியக் கழகங்களும் தமிழ்நாட்டின் பல பக்கங்களிலிருந்தும் அழைத்தன. 'உடம்பு இளைத்துள்ள நிலையில் உடல்நலங் குறைந்திருந்த சுவாமிகள் தம் உடல் பொருள் ஆவியனைத்தையும் தொண்டிலீடுபடுத்தி எட்டு மாதங்களாகத் தமிழ்நாடெங்கணும் சுற்றுப்பிரயாணஞ் செய்தார். அவ்வேளையிலேயே பிறரொருவரானுங் காணுதற்கரிய ஆராய்ச்சி உண்மைகளைக் கண்டுள்ளார்கள். இதனை, பன்மொழிப் புலவரும் விழுமிய ஆராய்ச்சி அறிஞருமான வித்துவான் தெ. பொ. மீனுட்சி சுந்தரனர், எம். ஏ., எம். ஓ. எல்., பி. எல். அவர்கள் அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தே சுவாமிகளின் படத்தைத் திறந்து வைத்தபொழுது அழகாகக் கூறுகிருர்:— "விஞ்ஞானம், கணிதம், சங்கத்தமிழ், இசை ஆகியஇவற்றை எல்லாம் அறிந்தவர்கள் தாம் இந்த ஆராய்ச்சியைச் செய்யமுடியும். தமிழிசை ஆராய்ச்சி இங்குதான் தோன்றியது. சுவாமிகள் உலக இன்பங்களைத் தியாகஞ்செய்தார்கள். அவர்கள் மேனுட்டு மக்களின் நாகரீகத்தை நன்கறிந்தவர்கள். ஹோமர், ஷேக்ஸ்பியர் ஆகிய மேல்நாட்டுப் புலவர்களின் பாக்களை நன்கறிந்தவர்கள். வடமொழியிலும் வல்லுநர். தமிழையும் பழைய முறையில் நிறையக்கற்றவர்கள். ஆங்கிலத்திலும் அறிவு படைத்தவர்கள்".

இலங்கைப் பல்கலைக் கழகம் நிறுவப்பட்டதும் சுவாமிகளைத் தமிழ்ப் பேராசிரியராக வந்து பதவியேற்கும்படி வேண்டி நின்றனர். இலங்கை நாட்டின் தனித்தலைவர்கள்—சமயச் சபைகள்—இலக்கியக் கழகங்கள்—எல்லோருமாகத் திரண்டு இராமகிருஷ்ண மிஷனுருக்கு முறையிட்டனர். 1943-ம் ஆண்டின் பிற்பகுதியில் சுவாமிகள் நமது இலங்கைப் பல்கலைக் கழகத் தமிழ் பேராசிரியர் பதவி நிலையை மேற்கொண்டார். இதை அகத்துக்கொண்ட புலவரொருவர்,

> "ஆங்கிலம் முதன்மை யடைவது கண்டு
> ஏங்கிய தமிழ்த்தா யிரங்குகுரல் கேட்டுத்
> தாய்குரல் கேட்ட தூயவான் கன்றென
> மால்வரை யிமையம் வழிதுறமீண்டு
> நூல்வரை நுண்டமிழ் நுவல் தேசிகனுய்
> வந்தெமக் கருளிய சுந்தரத் தோன்றல்!
> விரிந்தபே ரறிவின் மேவிய வின்பந்
> நயந்தகா ரணத்தால் நல்லவரிட்ட
> விபுலா நந்தப் பெயர்பெறு மேலோய்!"

என்று வாயார வாழ்த்துகின்ருர்.

சுவாமிகள் பேராசிரியராகப் பதவியேற்ற பின் வித்தியா பகுதியின் பரீட்சைச் சபை, பாடநூற் சபை, கல்வி ஆராய்ச்சிக் குழு முதலியவற்றிலெல்லாம் அங்கத்துவம் வகித்து எமக்குச் செய்த பலவாய நன்மைகளை யாம் என்றும் மறக்கமுடியாது.

சுவாமிகள் தாம் பதின் நான்கு ஆண்டுகளாக நிகழ்த்திய ஆராய்ச்சியின் பயனுய் இயற்றிய 'யாழ் நூல்' கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் சார்பில், சென்ற 5-6-47, 6-6-47-ம் நாட்களில் திருக்கொள்ளம் பூதூர்த் திருக்கோயிலில், ஆளுடைய பிள்ளையார் திருமுன்னிலையில், சுவாமிகளாலேயே அரங்கேற்றப்படுவதாயிற்று. தமிழ்நாட்டின் பல பாகங்களிலுமிருந்து இயற்றமிழ்ப் புலவர்களும், இசைத்தமிழ்ப் புலவர்களும், செந்தமிழ்ப் புலவர்களும், புலவரவர்களும், அன்பர்களும் ஒருங்கே கூடி அரங்கேற்று விழாவிற் பங்குபற்றிக்கொண்டார்கள்.

தமிழ் நாட்டின் தவமணியை—முதற்றரமான முத்தினை—அருங்கலை நிதியம் அளித்த அடிகளாரை—ஆதியாழ் செய்த ஆருயிரை—சென்ற 19-7-47 காலை 1-30 மணியளவில் இழந்துவிட்டோம். ஈழ நாடும் இந்திய நாடும் சேர்ந்த தமிழ் நாட்டுக்கு மாத்திரமல்ல, உலகம் முழுவதுக்குமே சுவாமிகளின் பிரிவு ஈடு செய்ய முடியாத பெரும் நஷ்டமாகும்.

பிரிந்த இன்னுயிர் மீண்டும் தமிழ் நாட்டிலேயே பிறந்து விட்ட தொண்டு தொட்ட தொண்டுகளைச் செய்து முடிக்குமாறு இறைவன் தண்ணளி புரிவானுக.

# ஸ்வாமி சொன்னூர்!

—:( "லேகினி" ):—

'நினைவு மலர்' என்றதும் ஸ்வாமியவர்களோடு தொடர்புபட்ட சில சந்தர்ப்பங்கள் ஞாபகத்துக்கு வருகின்றன. இத்தனையாம் ஆண்டு, இன்னமாதம், இன்ன நட்சத்திரத்தில் தோன்றினூர்; வளர்ந்தார்; படித்தார்; பட்டம் பெற்றூர்; அடிகளாகி அல்மோரா சென்றூர்; ஈற்றில் மறைந்தார் என்ற விபரமெல்லாம் கேட்டுச் சலித்துவிட்டது. இவை நமக்கு வேண்டாம்.

ஸ்வாமியவர்களோடு அளவளாவும் பாக்கியம் பெற்றவர்களில் நானும் ஒருவன். உளம் கலந்த காதலியோடு அளவளாவிப் பேசும் போதுண்டாகும் ஆனந்தம் ஒருதலையானது. அதைவிட ஒருபடி உயர்ந்தது விபுலானந்த அடிகளோடு சல்லாபிப்பது. வெண்கலம் போன்று கலகலத்த தொனியோடு பற்பல விஷயங்களைப்பற்றி அன்னவர் பேசும் போதுண்டாகும் இன்பக் கிளர்ச்சியை அறிந்தவர்தான் அறியலாம்; எழுத்தும் பேச்சும் அறிவிக்கும் ஆற்றலில்லாதன.

நம் கீழ்நாட்டில் அடிக்கடி சங்கங்கள் சபைகள் கூடிக் கலைவதுண்டு. சில நிலைத்து நிற்கும்; பல கலைந்து போகும். குலைந்துபோன வர்க்கத்தைச் சேர்ந்த சங்கமொன்றில் நானும் ஒரு சில்லறை அங்கத்தவனுகி இருந்த காலம், அப்பொழுது ஒருசமயம் அடிகளாரை நமது 'சங்கம்' வரவேற்றது. அந்த வரவேற்புச் சமயத்தில் நான் கொஞ்சம் முக்கிய பங்கெடுத்துக்கொண்டேன்.

பேச்சு வாக்கிலே அடிகளாருக்கும் எனக்குமிடையில் முட்டிக் கொண்டது. 'மறுமலர்ச்சித் தமிழ்' பற்றிய விவாதம் கடிப்பாக மூண்டது. ஓரிடத்தில் 'இந்த மறுமலர்ச்சிக்காரர்' என்று கொஞ்சம் குறைத்துப் பேசியதுபோல எனக்குப் பட்டது. மறுமலர்ச்சி வயலிலே உழுது கொண்டிருக்கிற இந்த 'லேகினி'க்கு இது பொறுக்க முடியவில்லை.

"மறுமலர்ச்சி விஷயமாக ஸ்வாமி தப்பான அபிப்பிராயம் கொண்டிருக்கிறீர்கள் போலத் தெரிகிறது" என்று நான் பாணத்தைத் தொடுத்தேன்.

ஸ்வாமி ஆரம்பித்தார்:

"'ஸ்வாமி' ஒன்றும் தப்பான அபிப்பிராயம் கொள்ளவில்லை. லேகினிதான் 'ஸ்வாமி'யைத் தப்பாக எண்ணிவிட்டது.

"இந்த மறுமலர்ச்சிக்காரர் என்று நான் சொன்னது இந்தக்காலத்தில் எழுவாய் பயனிலைப் பொருத்தங்கூட இல்லாமல் தமிழெழுதும் மறுமலர்ச்சிக்காரரைத்தான். நாவலரும் ஒரு மறுமலர்ச்சிக்காரர்—இவர்களும் மறுமலர்ச்சிக்காரர்களா? தமிழிலும் உயர்ந்த ஆழ்ந்த கருத்துள்ள, ஆற்றல் வாய்ந்த (Effective) வசனம் எழுதமுடியும் என்ற உண்மையை நாவலர் காட்டவில்லையா?

---

யாழ் நூலைத் தமிழில் இயற்றியதுபோல ஆங்கிலத்திலும் இயற்றிவிட வேண்டுமென்ற ஆசை சுவாமிகளுக்கு இருந்ததை யான் அறிவேன். இதன் அவசியத்தைப் பெரிதும் உணர்ந்தவரான உப வித்தியாதிபதி திரு. கே. எஸ். அருணந்தி அவர்கள் சுவாமிகளிடம் ஒரு சுருக்கெழுத்தாளனை அனுப்பி யாழ் நூலை எழுதி முடிப்பிக்க ஒழுங்கு செய்திருந்தார். தமிழர் (ஏன்? உலகினர் என்றே கூறிவிடலாம்) தலையெழுத்து இதைக் கைகூட விடவில்லை. திருக்குறளுக்கும் செவ்விதான மொழி பெயர்ப்பு ஆங்கிலத்தில் இயற்ற வேண்டுமென்று சுவாமிகள் ஆவல்கொண்டிருந்தார். 'மதங்க சூளாமணி'யைக்கூடப் புதுக்கிப் பதிப்பிக்கவிடாமல் 'கொடிய கூற்றுவன்' சுவாமிகளது உயிரைக்கவர்ந்துகொண்டு போய்விட்டான்! கொடிய கூற்றுவன்!

"மறுமலர்ச்சி யென்றால் தமிழுக்கே சிறப்பாக உண்டான இலக்கண வரம்புகளை மீறி எழுதுவது பேசுவது என்று சிலர் எண்ணிக்கொள்கிறார்கள். இலக்கண வரம்புகளை ஒரோரிடத்தில் மீறுவதனால் அழகு ஏற்பட்டுத்தானிருக்கிறது. அப்படி மீறும்திறம் 'உமக்கும் எனக்கும்' ஏற்பட்டுவிடாது. 'உள்ளத்தில் உண்மையொளி' உண்டாய அறிவாளிகளுக்குத்தான் அது உண்டாகும். அவர்கள் அந்த வரம்புகளையும் கட்டுப்பாடுகளையும் மீறும்போது ஒரு புதிய-ஆழ்ந்த-அற்புதமான-கருத்து வெளிப்பட்டுவிடுகிறது. சாதாரண மறுமலர்ச்சிக்காரர் அப்படி மீறும்போது [அப்படி எங்கே மீறுகிறார்கள்; வேண்டுமென்றல்லவோ மீறுகிறார்கள்] — அது விழுக்காடாக, சில சமயம் விகாரமாகவும் தோன்றுகிறது.

"பழைய இலக்கியங்களில் இல்லாத மலர்ச்சியையா இந்த மறுமலர்ச்சிக்காரர் கொண்டுவரப் போகிறார்கள்? எத்தனையோபேர் நமது பொக்கிஷங்களான பழந்தமிழ் நூல்களை வெறுக்கிறார்கள். அவற்றைத் தொடுவதுகூட இழிவான செயலெனக் கருதுகிறார்கள். ஆனால், அப்படியானவர்கள் கட்டுரைகளும் கதைகளும் பாட்டுக்களுமாக எழுதிக்குவிக்கிறார்கள். எல்லாம் மணமற்ற வெறும் காட்டுப்பூக்களேதாம்.

"பழைய நூல்களில் ஊறிப் பயின்று தமிழ் மரபும் பண்பாடும் உள்ளத்தில் மலராவிட்டால், எழுத்திலும் பேச்சிலும் மறுமலர்ச்சி காண்பதென்னவோ அற்புதம்தான். காலப் போக்குக்கும் நாகரீக வளர்ச்சிக்கும் ஏற்ப, தமிழின் நடையும் மலரவேண்டியது ஒரு வரவேற்கத்தக்க விஷயம். ஆனால், மரபும் ஒழுங்கும் தவறிப் போவது இயல்பிலமைந்த அழகையே சிதைப்பதாகும்.

"அருமையாக எழுதக்கூடிய எத்தனையோ மறுமலர்ச்சி எழுத்தாளர்கள் தமிழிலக்கியங்களிலே பயிற்சியின்மையாலோ — பயிற்சிக் குறைவினாலோ — சில இடங்களில்வழுக்கி விழுவதைப் பார்க்கப் பரிதாபமாயிருக்கிறது. இவர்கள் மனது வைத்துக் கொஞ்சம் தமிழ்நூற் பரிச்சயம் செய்து கொண்டால் எவ்வளவு நலமாயிருக்கும். தமிழ் நாட்டுக்குத் தேவை பழந்தமிழ்நூற் பரிச்சயம் உள்ள புதுமை எழுத்தாளர்களே!"

இவ்வளவும் கேட்டுக்கொண்டு என் பக்கத்திலேயிருந்த சில நண்பர்கள் முகம் கறுக்கச் செய்தது என்னவோ உண்மைதான். அப்படிக் கறுத்த முகங்களே வெளித்தால் தமிழும் அதன் மறுமலர்ச்சியும் கூட நன்கு பிரகாச மடையுமல்லவா?

# சாமி மயில்வாகனனாரும் (விபுலாநந்த அடிகளும்) யானும்.

[ கவுணியனார், பண்டிதமணி, க. சு. ந. கி. பாரதியார் ]

நான், ஆயிரத்துத் தொள்ளாயிரத்துப் பதினேழாம் ஆண்டு, ஐப்பசி மாதம், முதலாம் திகதி, இராமநாதன் கல்லூரித் தலைமைத் தமிழாசிரியர் பதவியை மேற்கொண்டேன். ஏறக்குறைய இரண்டு திங்கள் கழிந்தன. அக்காலத்தில் யாழ்ப்பாணத்து வண்ணார்பண்ணையிலே, பன்றிக்கோட்டுப் பிள்ளையார் கோவிலுக்குப் பக்கத்திலே உள்ள ஒரு சிறு மனையில் நடைபெற்ற இந்துவாலிப சங்கத்தின் சார்பாகத் தேவாரத் தெரிவு ஒன்று நிகழ்ந்தது; அதற்கு என்னையும் அழைத்தனர். அத்தெரிவு முடிவில் ஒரு சொற்பொழிவு செய்யுமாறு அச்சங்கத்தினர் என்னைக் கேட்டுக் கொண்டனர்; யான் அப்போது "தமிழும் தமிழரும்" என்னும் பொருளுரை ஒன்றை எடுத்துரைத்தேன்; அதனை அவையிடத்தே இருந்து கேட்ட மயில்வாகனனார் (விபுலானந்த அடிகள்) அப்பொருளுரையை வியந்து குறிப்புரை கூறினார். அதிலிருந்தே அவர்கட்கும் எனக்கும் அன்பாலாகிய நண்பு ஊற்றெடுக்கத் தொடங்கிற்று. அவர்கள், மட்டக்களப்பிலே காரை நகரில் உள்ளவர் என்றும், மதுரைத் தமிழ்ச் சங்கப் பண்டிதர் என்றும், ஆங்கில ஆசிரிய பயிற்சிக் கழகத்திலே தேர்ச்சி பெற்றவர் என்றும், விஞ்ஞான பால பண்டிதர் என்றும் யான் அறிந்து கொண்டேன்.

இயல்பாகவே தமிழ் மொழியையும், தமிழ்ப்புலவரையும் நன்கு மதித்தல் இன்றி, ஆங்கிலங் கற்றாரையே நன்கு மதித்து வருதல் அக்கால வழக்காறு. மயில்வாகனனார் (விபுலாநந்த அடிகள்) தமிழ்ப்புலமையோடு ஆங்கிலப் புலமையும் பெரிதுடையார் என்பதை யான் அறிவேன்; ஆதலினால் அவர் நண்பைக் கொண்டு என்னுடைய கருத்துக்கள் பாட்டுக்கள் முதலியவற்றை உலக மதிப்புக்குரியதாக்கலாம் எனவும், எனது தமிழ்ப்புலமை ஒன்றனையே கொண்டு நன்கு மதிப்புப் பெறலாம் எனவும், யான் எண்ணியதுண்டு. அக்காலத்து என்னை ஆதரித்த இரு பெரும் செல்வத்து ஒரு பெரும் குரிசிலாளராகிய சேர். பொன். இராமநாதன் அவர்கள்மீது இக்கருத்தடங்கிய ஒரு பாடல் பாடினேன். அது வருமாறு :—

> ' ஆங்கிலங் கற்றில மேயென்று
> சேந்தமிழ்க் காம்புலவர்
> ஏங்கில ராகி இறுமாக்
> திருக்க இதயம் வைத்துத்
> தாங்குவ துன்கட னாகையி
> னாலென்னைத் தாங்கிக்கோள்வாய்
> தேங்கமழ் தாரணி சீராம
> நாத சிகா மணியே ''

இவ் வெண்ணம் கொண்ட எனக்கு அவ் வடிகளின் நண்பு கிடைக்கப் பெற்றமையால், யான் கொண்ட ஆனந்தம் அளப்பரிது. அக்காலம் முதலாக மருதனமடத்திலே தெருக்கரையில் உள்ள ஓர் இல்லத்தில், உயர் திரு. யோகர் சுவாமிகள், மயில்வாகனனார் (விபுலாநந்த அடிகள்), திரு. வயிரமுத்து (இராமநாதன் கல்லூரி) ஆசிரியர், அளவை திரு. மயில்வாகனனார் (திரு. ஸ்ரீகாந்தா அவர்கள் தந்தையார்), என் துணைவர் திரு. வே. மகாலிங்க பண்டிதர் முதலிய பலரும் நாள்தோறும் பல நாழிகையளவும் ஒருங்கு கூடித் தமிழ் நலங்களைப்பற்றி உரையாடி ஆராய்ந்து வருவது வழக்காறு. இடையிடையே யான் இயற்றிய பாடல்களை உரைப்ப, அவர்கள் மகிழ்தலும் உண்டு.

சில காலங் கழிந்த பின்பு மயில்வாகனனார் (விபுலாநந்த அடிகள்), மானிப்பாய் இந்துக் கல்லூரித் தலைமைப் பேராசிரியராக அமர்ந்தனர். அவர்கள் எனது பாடல்களைத் திரட்டி ஒரு நூலாக்கவேண்டுமென என்னை வற்புறுத்துவாராயினர். அவர்கள் கட்டளையை மறுத்தற்கஞ்சிய யான், அவற்றையெல்லாம் தொகுத்துத் "தனி நிலைச் செய்யுட் கோவை" எனப் பெயரிட்டு வைத்துக்கொண்டேன். அக்காலத்து இராமநாதன் கல்லூரி ஆசிரியராயிருந்த திரு. வைரமுத்து அவர்களால், மதுரைத் தமிழ்ச் சங்கத்துச் செந்தமிழ்ப் பத்திரிகையிலே அப்பாடல்கள் வெளியிடப்பெற்றுப் பெருமதிப்பை அடைந்தன.

ஆயிரத்துத் தொள்ளாயிரத்துப் பத்தொன்பதாம் ஆண்டு மார்கழித் திங்களில், கீரிமலையில் இந்து வாலிப சங்க மாபெரும் கூட்டம் ஒன்று நடைபெற்றது. அக்கூட்டத்தில் யானும் சொற்பொழிவு செய்தனன். அக்கூட்டத்துக்கு இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் தமிழ் அறிஞர்கள் வந்திருந்தார்கள். மட்டக்களப்பு நகரில் இருந்தும் பல அறிஞர்கள் வந்திருந்தார்கள். அவர்கள், இருபதாம் ஆண்டு வைகாசி மாதம் அங்கே நிறுவப்பட்ட ஒரு சங்கத்துக்குச் சொற்பொழிவாற்றுமாறு வேண்டியழைத்தனர். பெருஞ் செல்வர் வைத்திலிங்கம் மார்க்கண்டு அவர்கள் தலைமையில் மூன்று சொற்பொழிவுகள் செய்தேன். அப்போது மயில்வாகனனார் (விபுலானந்த அடிகள்), தமது பிறப்பிடமாகிய காரை நகருக்கு வந்து சொற்பொழிவாற்றவேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்; அவர் கட்டளையின் பேரில் யானும் அங்குச் சென்றேன்; செல்லும்போது உப்போடை முதலிய இடங்களில் எல்லாம் என்னை வரவேற்று மகிழ்வுகூரச் செய்தனர். பின்னர் காரை நகரில் ஒரு சொற்பொழிவாற்றினேன்; பின்பு மட்டுநகரில் நான் சென்றபோது வித்துவான், ச. பூபாலபிள்ளை அவர்கள் எமது தனி நிலைச் செய்யுட் கோவையை வியந்து அதற்கு உரை வகுக்கப் போவதாகவும் கூறினர். அந்நகரில் தானே பிரியாவிடைப் பத்திரமும், அடிகளும் வேறு பல பெரியாரும் உள்ளிட்ட நிழல் உருவப்படமும் எமக்கு உவந்து கொடுக்கப்பட்டன. அவர்கள் இன்றும் என் அகத்துப் பிரிந்திலர். இன்னோரன்ன சிறப்புக்கள் பலவற்றுக்கும் யான் அருகதை உடையனல்லன் ஆயினும், அடிகள் அவர்களே இவற்றுக்குக் காரண புருடராய் இருந்தமையை யான் என்றும் மறந்திருக்கமாட்டேன்.

தனிநிலைச் செய்யுட் கோவையை உரையுடன் தாமே பதிப்பிக்க வேண்டுமென அடிகள் முன்வந்து என்னை ஊக்கி அருளினார்கள். அவ்வளவோடமையாமல், அந்நூலுக்கு உலகியல் விளக்கம் எனப் பெயரிட்டனர்; வாழ்த்தும் பதிகமும் அருளிச்செய்தனர்; அவ்வாற்றானே அதை உருவாக்கினர்; உயிரும் கொடுத்தனர். அதனுளடங்கிய பாடல்களை ஆங்கில மொழியிலும் பரப்பினர். பின்னர் மிகுந்த சிரமத்தோடு அந்நூல் அச்சாகி வெளிவந்தது. அம்மையார் அருள் இருப்பின் எக் காரியந்தான் இனிது நிறைவேறாது.

சில காலங்களின் பின் அடிகள் தந்தையாருடைய எலும்புகளைக் கங்கையில் உய்த்தற்கும், துறவு பூணற்கும் எண்ணங்கொண்டனர். அவ்வாறு எண்ணினும் என்னைப் பிரிதற்கு அஞ்சி உள்ளம் ஒடுங்கினர். ஆயினும் என்னுடன் அதனை உரைத்திலர். சின்னாட்கள் எமது இல்லத்திலேயே அமர்ந்து அகம் நெகப் பழகினர். பின்பு அந்தோ! என் ஆருயிர் பிரிந்ததுபோல் எம்மைப் பிரிந்து சென்றனர்; அங்ஙனமாயினும் கடிதப் போக்குவரவுகள் ஒழிய மாட்டா: துறவு பூண்ட அடிகள் சென்னை நகரில் சிலகாலம் தங்கியிருந்தனர். அக்காலத்தேதான் உலகியல் விளக்கமும் உருப் பெற்றது; அப்போது அடிகள், இராமக்கிருஷ்ண மிஷன் வெளியீடாகிய "வேதாந்தகேசரி" என்னும் ஆங்கில வெளியீட்டில், உலகியல் விளக்கப் பாடல்கள் சிலவற்றை வெளியிட்டருளி, அன்பே பற்றுக் கோடாக என்னை உலகத்திற்கு அறிவுறுத்தியருள்

செய்தார். அடிகள் பலவகையானும் பயன் கருதாது என்னைச் சிறப்புறச் செய்தமையை யான் எழுமையினும் மறப்பேனல்லன். என்றும் நினைந்துருகிறையும் உள்ளம் உடையேன். அடிகள் எமக்கெழுதிய கடிதங்களுள் ஒன்றின் பகுதியை வெளியிடாதிருப்பின், பெருநன்றி கொன்ற பாதகம் என்னைச்சூழும் ஆதலின், அதனைக் குறிப்பிடுகின்றேன்.

("உலகிற் சிறந்த உலகியல் விளக்கம்; அதனினும் சிறந்த இன்ப நெறிபியல், அதனினும் சிறந்தது முல்லைப்பாட்டு, அதனுளும் சிறந்தவை கண்ணனைக் கூறியபதின்மூன்றடிகள். இவ்வரிய நூலை ........யாழ்ப்பாணத்துக்கு உதவியது") இவ்வாறாகிய பல கடிதங்களைத் திரட்டி வெளியிடும் நோக்கமுடையேன்.

அடிகள் பின்னர் சென்னையினின்றும் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்தார்; அப்போது கன்றினைக் கண்ட தாய்ப் பசுபோலக் கட்டுவிட்ட உள்ளத்தோடு அடிகளை அடைந்தேன்; அவர்களை அழைத்துக்கொண்டு கீரிமலைத் திருக்குளத்தில் திருமுழுக்காட்டி, மாவைக் கந்தர் ஆலயத்தில் ஆயிரத்தெட்டு அர்ச்சித்து, யான் இப்போது இருக்கும் இல்லத்துக்கு அழைத்து வந்தேன்; அடிகளும் அன்புடன் எழுந்தருளினர்; இல்லத்தில் நிறைகுடம், ஆலத்தி முதலியன எடுப்பித்து, மனதால் பேரன்புக்குரிய சிறு விருந்தாற்றி மகிழ்ந்தேன்; காங்கேயன் துறையில் ஒரு பெரும் கூட்டம் கூடி, வாழ்த்துப் பாக்களை அவர்க்கு அணிந்து நறுமணம் பெற்றுக்கொண்டேன்.

சில ஆண்டுகளின் பின் அடிகள், திரிகோணமலைக்கு என்னை அழைத்துச் சிறப்புச் செய்தனர்; அவ்விடத்திற்றானே திருமகள் சண்முகம் வீட்டுக்கு என்னை அழைத்துச்சென்று, அவ்வம்மையாருக்கு என்னை அறிமுகம் செய்தருளினர். அம்மையார் எம்மோடு அன்புடன் உரையாடித் தம்மிடம் இருபதினாயிரம் ரூபா உண்டென்றும், பெண் பாடசாலை அமைத்தற் பொருட்டு யான் அதை ஏற்றுக்கொண்டால் எம்மிடத்தே அதைக் கொடுத்துவிடுவதாகவும் சொன்னார்கள். யானோ அம்மையாரை நோக்கி, யான் இல்லறத்தன்; நன்னெஞ்சுடையனாயினும் குடும்ப முட்டுப்பாட்டினால் பலவற்றைக் குடும்பத்துக்கே செலவு செய்ய நேரிடும்; ஆதலால் இப்பெருந்தொகையை, இப்பெருங்கலைஞரும், உண்மைத் துறவியும் ஆகிய இம்முத்தமிழ் நாட்டு முனிவர்பால் அளிப்பது தக்கதென்று கூறினேன்; அப்பொருள் அடிகள்பால் சென்று இப்போதும் நன்கு விளங்குகின்றது. சில காலங்கட்கு முன் கீரிமலைக்கு வந்த அவ்வம்மையார் என்னைக்கண்டு அதனை நினைவூட்டினர்.

மற்றதன்மேல் அடிகள் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராய் இருந்து தமிழ் நாட்டையும், இமயமலைச் சாரலிலே பிரபுத்த பாரதம் என்னும் பத்திரிகைக்கு ஆசிரியராய் இருந்து ஈழ நாட்டையும் இருளோட ஒளி காட்டி விளங்க வைத்த பெருமையை எவரும் மறவார். கனவாகிக் கதையாகி மறைந்துபோன யாழையும் இசையையும் திசைமுகனாகி உருப்பெறச் செய்து, தமிழ் உலகுக்குக் கண்ணும் செவியும் வாயும் ஈந்த பெருமை அடிகட்கே உரியது.

அடிகள் பாடிய பாட்டுகட்கு அளவுண்டோ? உரை நடைகள் அளவில் அடங்குமா? அடிகள் அருள் ஊற்றெடுப்ப, மழலை ததும்பத், தமிழ் உலகைச் செவி குளிரச்செய்து உள்ளத்தைத் திறந்து வைத்த பெருமையை—ஐயையோ!—இனி எக்காலம் காண்பேன்?; உள்ளம்.

ஒரு பிரலாபம்

## சுவாமீ! அடிகாள்!!

[ அ. வி. மயில்வாகனன் ]

அதன்பின் னிங்கே அவலங் கேளீர்!
தமிழ்மண நாறு தனிப்பெரு மதுரை
சான்றவர் மலிந்த சால்புறு கரந்தை
அமிழ்தத் தமிழினை அழகோ டிசைக்கும்
அரிய யாழ்நகர் என்னு முப்பதிச்
சங்க மியாவும் எங்கே யெங்கே!
ஆய்கலை அண்ணலார் நோயிலை மதியார்
கருவிலு முருவிலும் கண்ணன் அனையார்
அறிவலைப் பள்ளியுள் அமைந்த அடிகாள்!
இறந்துந் தமிழினை மறவா
ஏழிசைத் தொகுதி எழுப்பிய கிழமையோரே!

"பூவால் பசுங்கொடியும் புன்சிரிப்பாற் கைம்மகவும்
நாவால் இளங்கிளியும் நன்கோதும்"—ஓவாதே
வீசுபுகழ் விபுலா நந்தவித்த கன்றன்
வாசலிடை வந்த வர்க்கு!

உலகளித்த உத்தமனுர் உதவியநற் றீந்தமிழைப்
பலகலையாய்ப் பண்பலவாய்ப் பயின்றருளும் பாவலனே!
அலககன்ற தமிழிசைக்கு மளவுகண்ட அடிகாள்! நீர்
நிலவுகின்ற புகழ்நிமிர நின்மலன்ருள் நேர்ந்தனிரோ?

அருங்கலை பொலியண் ணுமலை சென்னை அணிகிளர் மாடங்கள் மலியப்
பெருங்கலை பொலியும் கொழும்புமா நகரப் பெட்புறு பல்கலைக் கழகம்
விரும்புறத் தமிழினை விரித்தருள் விநேத! வேகுமிக் கழகங்கள் வெதும்பி
வருந்துற எங்கோ மறைந்தனை? வாணி மலர்ப்பத நீழலோ மகிழ்ந்தாய்?

பதறுகின்றது; கண்ணீர் பெருகுகின்றது; இக்கண்ணீரும் கம்பலையுமா(?) அடிகளை மீட்டுத் தரவல்லனவாகும்; அன்னருடனிருக்கத் தவம் புரியாத யாம் என்ன செய்ய வல்லோம்?

யாழ்உற்றேம் செந்தமிழ்க்காம்
யாணர் இசை உற்றேம்
வீழ் உற்ற ஆல்போல்
வீறு உற்றே—வாழ்வுற்றேம்
என்றுவிபு லாநந்தா!
இங்கிருந்தோம் நீபிரிந்தே
கொன்றுவிட்டாய் எங்களிப்பைக் கொண்டு

பூணும் துறவழகும்
போற்றுதமிழ்த் தொண்டழகும்
பேணும் மழலையருட்
பேச்சழகும்—காணுநெறி
ஏதுவிபு லாநந்தா
என்றரற்ற வாளாநீ
போதுதலோ நிற்காகும் பொற்பு.

என்று யான் இரங்குதலே அன்றி வேறென் செய்ய வல்லேன்? அம்மே! இஃதோ, உலக இயல்பு!!

# உயர் திரு. விபுலாநந்த அடிகள் எழுதிய கட்டுரைகள்.

[ மயிலை, சீனி. வேங்கடசாமி அவர்கள் தொகுத்தது. ]

பேராசிரியர், உயர் திரு. விபுலாநந்த அடிகள் அவ்வப்போது பத்திரிகைகளுக்கு எழுதிய கட்டுரைகளின் பட்டியலைத் தொகுத்துக் கீழே தந்துள்ளேன். இது பூரணமான பட்டியலன்று; விடுபட்ட கட்டுரைகள் பல உள்ளன. உதாரணமாக "ஏனுதிமோதிரம்" என்னும் கட்டுரையை எழுதியுள்ளார்கள்; அதனைப் படித்தும் இருக்கிறேன். எந்தப் பத்திரிகையில் வெளிவந்ததென்றும் ஞாபகமில்லை. இதைப்போன்று பல கட்டுரைகள் இப் பட்டியலிற் குறிக்கப்படாமல் விடுபட்டுள்ளன. அறிந்த அன்பர்கள், விடுபட்ட கட்டுரைகளின் பட்டியலை வெளியிடுவார்களாக.

பண்டித மயில்வாகனனார் (B. Sc., London) என்னும் பெயர்தாங்கியிருந்த காலத்தில் சுவாமிகள் எழுதியவை :—

1. **பூஞ்சோலை காவலன் :** வங்கநாட்டுக் கவி ரவீந்திரநாத் தாகூர் அவர்கள் இயற்றிய "கார்டனர்" என்னும் ஆங்கிலப் பாக்களின் தமிழ் மொழிபெயர்ப்பு. செந்தமிழ், தொகுதி 20. பக்கம் 301—307

2. மேற்றிசைச் செல்வம் : செந்தமிழ், தொகுதி 20. பக்கம் 381—390; 469—475.

3. விஞ்ஞான தீபம் : செந்தமிழ், தொகுதி 20. பக்கம் 431—440. செந்தமிழ், தொகுதி 21. பக்கம் 1—10; 61—68.

4. பொருனூற் சிறப்பு : செந்தமிழ், தொகுதி 21. பக்கம் 123—130; 560—561.

பிரமச்சரிய ஆச்சிரமம்கொண்டு பிரபோத சைதன்யர் என்னும் பெயருடன் இருந்தகாலத்தில் சுவாமிகள் எழுதியவை :—

5. சூரிய சந்திரோற்பத்தி : (விஞ்ஞான தீபம் என்னும் கட்டுரையின் தொடர்ச்சி.) செந்தமிழ், தொகுதி 21. பக்கம் 245—251.

6. மலைகடலுற்பத்தி : செந்தமிழ், தொகுதி 21. பக்கம் 349—356.

7. மேற்றிசைச் செல்வம் ; (செந்தமிழ், தொகுதி 20. பக்கம் 475 தொடர்ச்சி) செந்தமிழ், தொகுதி 21. பக்கம் 185—192.

8. யவனபுரத்துக் கலைச் செல்வம் : செந்தமிழ், தொகுதி 21. பக்கம் 501—507.

9. பூஞ்சோலை காவலன் : (ரவீந்திரநாத் தாகூர் அவர்கள் இயற்றிய பாக்களின்மொழி பெயர்ப்பு. செந்தமிழ், தொகுதி 20. பக்கம் 307-இன் தொடர்ச்சி)செந்தமிழ், தொகுதி 22. பக்கம் 69—77.

10. மேற்றிசைச் செல்வம் : (செந்தமிழ், தொகுதி 21 தொடர்ச்சி) செந்தமிழ், தொகுதி 22 பக்கம் 121—130.

துறவு பூண்டு ஸ்ரீமத் விபுலாநந்த சுவாமிகள் என்னும் பெயருடன் விளங்கிய காலத்தில் எழுதிய கட்டுரைகள் :—

11. மதங்க சூளாமணி : செந்தமிழ், தொகுதி 22. பக்கம் 321—344; 361—368; 401—422; 467—489. தொகுதி 23. பக்கம் 1—24; 73—86; 121—130; 161—172; 201—206. (இக் கட்டுரைகளைத் தொகுத்து மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் பிரசுரமாக "மதங்க சூளாமணி" என்னும் பெயருடன் வெளியிடப்பட்டது. இது நாடகத்தமிழ் ஆராய்ச்சி நூல்.)

12. மகா லக்ஷ்மி தோத்திரம் : (செய்யுள்) செந்தமிழ், தொகுதி 22. பக்கம் 241—245.

13. விஞ்ஞான தீபம் : (செந்தமிழ், 21-ம் தொகுதி தொடர்ச்சி) செந்தமிழ், தொகுதி 22. பக்கம் 209—222,

14. இமயஞ்சேர்ந்த காக்கை : தமிழ்ப்பொழில் 16-ம் துணர், பக்கம் 367-375

15 உள்ளங்கவர் கள்வன் : தமிழ்ப்பொழில், 16-ம் துணர், பக்கம் 335—341.

16. திருக்குறள் முதலதிகாரமும் திருச்சிவபுரத்துத் திருப்பதிகமும் } தமிழ்ப்பொழில் 16-ம் துணர், பக்கம் 207-213.

17. நீரரமகளிர் இன்னிசைப் பாடல் : தமிழ்ப் பொழில் 16-ம் துணர், பக்கம் 291—296

18. பண்ணும் திறனும் : தமிழ்ப் பொழில் 16-ம் துணர், பக்கம் 391—397; 439—448.

19. லகரவெழுத்து : தமிழ்ப் பொழில் 16-ம் துணர், பக்கம் 189—195.

20. உணவு : தமிழ்ப் பொழில் 17-ம் தொகுதி, பக்கம் 9—13.

21. குழலும் யாழும் : தமிழ்ப் பொழில் 17-ம் தொகுதி, பக்கம் 26—30; 35—43.

22. கண்ணகியார் வழக்குரை : தமிழ்ப் பொழில் 17-ம் தொகுதி, பக்கம் 59—61.

23. எண்ணும் இசையும் : தமிழ்ப் பொழில் 17-ம் தொகுதி, பக்கம் 67—71; 45—107; 127—130; 158—160.

24. பாலைத் திரிபு: தமிழ்ப் பொழில் 17-ம் தொகுதி, பக்கம் 246—249; 278—281; 306—309; 338—341.

25 பாலைத் திரிபு : தமிழ்ப் பொழில் 18-ம் தொகுதி, பக்கம் 5—12.

26 சுருதி வீணை : தமிழ்ப் பொழில் 18-ம் தொகுதி, பக்கம் 41—48; 81—87.

27. இயலிசை நாடகம் : தமிழ்ப் பொழில் 18-ம் தொகுதி, பக்கம் 160—170.

28. கங்கையில் எழுதியிட்ட ஓலை: (செய்யுள்) தமிழ்ப் பொழில் 18-ம் தொகுதி, பக்கம் 411—441.

29. சோழமண்டலத் தமிழும் } கலைமகள்
ஈழமண்டலத் தமிழும் }
பக்கம் 82—88.

30. தமிழில் எழுத்துக் குறை : கலைமகள்.

31. ஆங்கில வாணி : (ஆங்கில நாட்டின் கலைச் செல்வத்தை விளக்குவது.) பண்டித மணி, மு. கதிரேசச் செட்டியார் அவர்களின் 60-ம் ஆண்டு நிறைவு விழா வெளியீடாகிய மணிமலரில் வெளிவந்துள்ளது.

32. மானசவாவி : திரு. பண்டித ந. மு. வெங்கடசாமி நாட்டார் அவர்களின் 60-வது ஆண்டு நிறைவு விழா மணிமலரில் வெளியிடுவதற்காக எழுதப்பட்டது. இந்த மணிமலரை அச்சிடும் பொறுப்பை ஏற்றிருந்த திரு. ச. க. கோவிந்தசாமிப்பிள்ளை எம். ஏ. அவர்கள் திடீரென்று காலஞ் சென்றுவிட்டபடியால் மணிமலர் வெளியிடப்படவில்லை. ஆகவே, மானசவாவிக் கட்டுரையும் வெளியாகவில்லை.

33. யாழ்நூல் : இசைத் தமிழ் நூல். சுவாமிகள் 14 ஆண்டுகளாக ஆராய்ச்சி செய்து வெளியிட்ட அரிய நூல். இது அரங்கேற்றம் செய்யப்பட்டது (5-6-47-ல்) அடுத்த மாதத்தில் அடிகள் இறைவன் அடி எய்தினார்கள்.

(அடிகள் எழுதிய ஆங்கிலக் கட்டுரைகளிற் சில :—)

1. The book of books of Tamil Land. (திருக்குறளைப்பற்றியது) Vedanta Kesari. 1940.

2. The Harps of Ancient Tamil Land and the twenty-two srutis of Indian Musical Theory. Calcutta Review 1941.

3. The Origin and growth of Tamil Literature The Calcutta Heritage of India.
Sri Ramakrishna Centenary Memorial Vol. III.

4. Phonetics (தமிழ் நெடுங்கணக்கின் ஒலிவடிவத்தைப் பற்றியது.)—Modern Review ?

★

# அடிகளார் நினைவு

[ முதலியார், துல. சபாநாதன் ]

---

விபுலானந்த அடிகளார் பெருங் கூட்டங்களில் சொற்பொழிவாற்றியதை என் இளமை தொட்டு அடிக்கடி கேட்டு வந்திருக்கிறேன். எனினும் 1935-ம் ஆண்டிலும் 1947-ம் ஆண்டிலும் யான் கண்ட காட்சிகள் பசுமரத்தாணிபோல் என் மனதிலே பதிந்து கிடக்கின்றன.

1935-ம் ஆண்டு மார்கழித் திங்கள் அரசாங்க விடுமுறை நாட்களில் நானும் என் நண்பர் சிலரும் தென்னிந்திய யாத்திரை செய்யக் கருதினோம். திருவண்ணாமலையில் வீற்றிருந்து திசையெல்லாம் ஞான ஒளி பரப்பும் பகவான் ஸ்ரீ ரமண மகரிஷிகளின் திவ்விய தரிசனம் பெற வேண்டுமென்ற ஆசை நாளுக்கு நாள் வளர்ந்துகொண்டே வந்தது. அந்நாட்களில் சைவ சித்தாந்த சமாஜ மகாநாடும் திருவண்ணாமலையில் நடைபெறுமென்றும், அருணகிரிநாதர் பாடியருளிய "திருப்புகழ்" என்னும் நூல் அவ்வமையத்தில் வெளியிடப் பெறுமென்றும் அறிந்தோம். மகா நாட்டு நிகழ்ச்சிகளை ஒரு முறையாவது பார்க்கவேண்டுமென்ற ஆசையும் இருந்தது. சித்தாந்த மகாநாட்டுக்குச் செல்லவிருப்பதை யறிந்த கொழும்பு விவேகானந்த சபையார், தங்கள் சபையின் பிரதிநிதியாகச் செல்லுமாறு என்னைப் பணித்தனர். எனவே, இவ்விரு ஆசைகளாலும் உந்தப்பட்டு 1935-ம் ஆண்டு மார்கழித் திங்களில், நானும் என் நண்பர் மூவரும் தென்னிந்தியாவிற்குப் புறப்பட்டோம். நாங்கள் மதுரை, பழனி முதலிய திருத்தலங்களைத் தரிசித்துக்கொண்டு, திருவண்ணாமலைக்குச் சென்றோம். கொழும்பிலிருந்து வந்திருப்பதை யறிந்த சமாஜக் காரியதரிசி அவர்கள் நாங்கள் தங்குவதற்காக ஒரு தனி அறையை ஒழுங்கு செய்து தந்தார்கள். அதே கட்டடத்தில் வேறு அறைகளில் திரு. வி. கலியாணசுந்தர முதலியார், பண்டிதை. அசலாம்பிகையம்மையார், திரு. சி. கே. சுப்பிரமணிய முதலியார் முதலிய சைவ அறிஞர்கள் தங்கியிருந்தார்கள். அன்று திருவண்ணாமலையிலுள்ள ரமண மகரிஷிகளின் தரிசனம் கிடைத்தது. திருவண்ணாமலையில் நடைபெறும் சித்தாந்த மகாநாட்டிற்குத் தலைமை வகிப்பதற்கு வரும் உயர் திரு. விபுலானந்த அடிகளாரை வரவேற்று ஊர்வலமாக அழைத்துவருவதற்கு வேண்டிய ஒழுங்குகளை அவ்வூரவர்களும் சமாஜ உத்தியோகஸ்தர்களும் ஏற்பாடு செய்தார்கள். திருவண்ணாமலை முழுவதுமே திரண்டு வந்தது. சுவாமியவர்களைப் பூமாலை சூட்டி ஊர்வலமாக அழைத்து வந்தார்கள். இலங்கையிலே பிறந்த துறவிக்கு இந்திய நாட்டிலே இவ்வளவு மரியாதை செய்யப்படுவதைக் கண்ட எங்கள் உள்ளம் குளிர்ந்தது. ஸ்ரீ ஞானப்பிரகாசத் தம்பிரான், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர், திரு. சி. வை. தாமோதரம் பிள்ளை, திரு. தி. த. கனகசுந்தரம் பிள்ளை, திரு. கனகசபைப் பிள்ளை, திரு. கரல். விஸ்வநாத பிள்ளை, திரு. பூ. முருகேச பிள்ளை, வித்வசிரோன்மணி ந. ச. பொன்னம்பல பிள்ளை, திரு. நா. கதிரைவேற்பிள்ளை, சபாபதி நாவலர் ஆதியாம் ஈழத்தறிஞர்கட்குப்பின் எங்கள் நாட்டுக்குப் பெருமை யளிக்கக்கூடிய அறிஞர் இல்லையே என்ற கவலையை விபுலானந்த அடிகளார் தீர்த்து வைத்தார்கள். சைவ சித்தாந்த மகா நாடுகளில் தலைமை வகிக்கும் ஆற்றல் வாய்ந்தவர்களின் தொகையைக் கைவிரல் விட்டு எண்ணி விடலாம். சுவாமியவர்களுடைய ஆங்கில அறிவும், சம்ஸ்கிருத அறிவும், தமிழறிவும், விஞ்ஞான சாத்திரவறிவும் ஒருங்குசேர்ந்து

தமிழகத்தில் தலைசிறந்த அறிஞராக அவரை விளங்கும்படி செய்தன. அடுத்த நாட்காலை சித்தாந்த மகா நாடு ஆரம்பமாயிற்று. சுவாமியவர்களுடைய தலைமைப் பேருரையும் தலைசிறந்து விளங்கியது. அன்றியும் ஒவ்வொரு சொற்பொழிவாளரும் பேசி முடிந்ததும், சுவாமியவர்கள் அவ்வத்துறையில் வல்லுநர் போலவே குறிப்புரை கூறி, மகா நாட்டைச் சிறப்புற நிறைவேற்றினர். ஈழநாட்டிலிருந்தும் சிலர் வந்திருப்பதையறிந்த சுவாமியவர்கள், சந்தோஷமடைந்து, மகாநாட்டின் பின்னர் எங்களுடன் சிறிது நேரம் கலந்து உரையாடினர்.

அடிகளார் இவ்வுலக வாழ்வைவிட்டு நீங்குவதற்குச் சில வாரங்கட்கு முன் நிகழ்ந்த சம்பவம் ஒன்றும் என் மனதிற் பதிந்து கிடக்கின்றது. அடிகளார் இந்தியாவிற்குச் சென்று, தாம் பல்லாண்டுகளாக ஆராய்ந்து எழுதிய "யாழ் நூலை" அரங்கேற்றியபின் மீளவும் கொழும்புக்கு வந்து வெள்ளவத்தையில் இராமகிருஷ்ணமடத்தில் தங்கியிருக்கிறார்கள் என்பதைக் கேள்வியுற்று அவர்களைத் தரிசிக்க மடத்துக்குச் சென்றேன். என் மனைவியும் என்னுடன் வந்தாள். நாங்கள் சென்று சிறிது நேரம் கழிந்ததும் அரங்கேற்று விழாவைப் பற்றிய சகல விபரங்களையும் விரிவாகச் சொல்லி மகிழ்ந்தார். "எனது உடல் நலம் குன்றியிருக்கும் இத்தருணத்தில் வெளியூருக்குப் பிரயாணஞ் செய்யக் கூடாதென எனது வைத்தியர் பன்முறை தடுத்திருந்த பொழுதும், அக்கட்டளையை மீறி யான் இந்தியாவுக்குச் சென்றேன். யான் சபையிலே அதிக நேரம் இருந்து பேசியபொழுது எனது நோய்கள் யாவும் மறைந்து போய் விட்டன" என்று அடிகளார் கூறினர்கள். அடிகளாரின் மனவுறுதி உடல்நலக்குறைவையும் வென்றுவிட்ட தென்பதற்கையமில்லை. ஏறக்குறைய இரண்டு மணிவரை எங்களுடன் பேசிக்கொண்டிருந்தார்கள். யாழ் நூலில் இருந்து சில பகுதிகளையும் வாசித்துக் காட்டினர்கள். அவர்களைத் தரிசித்த தினத்திற்கு அடுத்த நாளிரவும் வித்தியா பகுதியாரின் கடிதமொன்றைக் கொண்டு சென்றேன். அப்பொழுது சுவாமியவர்கள் கூறிய வார்த்தைகள் என் உள்ளத்தை இன்றும் ஈர்த்தவண்ணம் ஒலித்துக் கொண்டிருக்கின்றன. "இனிமேல், வித்தியாபகுதியார் நடத்தும் பரீட்சைகளில் பங்கு பற்றும்படி என்னைத் தொந்தரவு செய்ய வேண்டாம். எனக்குச் சர்வ கலாசாலை சம்பந்தமான விஷயங்களே அதிகம் உண்டு. ஆகையால் என்னை இப்பரீட்சை விஷயத்தில் விலக்கி விடும்படி இன்று உங்கள் வித்தியாதிபதிக்கும் கடிதம் எழுதி விட்டேன்" என்று சொன்னர்கள். மேலும், அன்றிரவு அவர்களுடன் இருந்து வேதாந்த சமய பாடத் திட்டத்தைத் தமிழில் மொழி பெயர்த்துக் கொண்டு திரும்பினேன். இதுவே சுவாமியவர்களுடைய உதவியுடன் யான் கடைசியாகச் செய்த மொழி பெயர்ப்பு வேலை.

காலஞ்சென்ற திரு. எச். எஸ். பெரேரா அவர்கள் வித்தியாதிபதியாகவிருந்த காலத்தில், இலங்கையில் வழங்கும் தமிழ்ப் பாட புத்தகங்களின் குறை நிறைகளை ஆராய்வதற்கும், புதிய பாடப் புத்தகங்களை எழுதிப் பிரசுரிப்பதற்குமாகத் "தமிழ்ப் பாடப் புத்தக ஆலோசனைச் சபை" யொன்றை நிறுவினர். திரு. சு. சிவபாதசுந்தரம் அவர்களைத் தலைவராகவும், விபுலானந்த அடிகள், திரு. கே. எஸ். அருணந்தி, திரு. ஏ. எம். கே. குமாரசுவாமி ஆதியோரை அங்கத்தவர்களாகவும் கொண்ட ஆலோசனைச் சபைக்கு யான் காரியதரிசியாகச் சில வருடம் கடமையாற்ற நேர்ந்தது. அக்காலத்தில் அடிகளுடன் நெருங்கிப் பழகும் சந்தர்ப்பம் வாய்த்தது. வித்தியாபகுதிக்குப் பல துறைகளில் அவர்கள் உதவி செய்துவந்தார்கள்.

அடிகளார் காலத்துக்குக் காலம் எழுதிய நூல்களையும், சிறந்த ஆராய்ச்சிக் கட்டுரைகளையும், செய்யுட்களையும் தொகுத்து வெளியிடலும் அவர்களுக்கு நாங்கள் செய்யும் சிறந்த ஞாபக சின்னமாகும் என்பது எனது கருத்து. அவற்றைச் சிதையவிடாது திரட்டி வெளியிட்டுத் தமிழகத்தில் நிலவச் செய்தல் தமிழரின் தலையாய கடமையெனவும் குறிப்பிட விரும்புகிறேன்.

# பழைய நினைவு

[ சோம. சரவணபவன் ]

என்னை உருவாக்கும்பொருட்டு எனக்கு ஆரம்பக் கல்வி ஊட்டி வந்தது வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயம். அந்தக் காலத்திலே, தமிழ் சைவம் என்னுமிரண்டும் ஓங்கி வளரும்படி அரும்பெருந் தொண்டுகளைச் செய்துகொண்டிருந்தது யாழ்ப்பாணம் "இந்து வாலிபர் சங்கம்." அது செய்து வந்த முயற்சிகளுளொன்று வருடத்துக்கொருமுறை கீரி மலையிலே மகாநாடு நடத்துவித்தலுமாம். காரியஸ்தர், அம்மகாநாட்டிலே யாழ்ப்பாணத்திலிருந்து மாத்திரமல்லாமல் இலங்கையின் பிறபாகங்களிலுமிருந்தும் பரத கண்டத்திலிருந்தும் பெரியோர் பலரை வருவித்துப் பிரசங்கமாரி பொழிவிப்பர். மகாநாடு பெரும்பாலும் மூன்றுநாள் நடைபெறும். அத்தனை தினமும் அங்கே குழுமியுள்ள ஆயிரக்கணக்கானோருக்கு உண்டி சயனம் முதலான வசதியெல்லாம் சங்கமே செய்துகொள்ளும். கவலையொன்றுமின்றி மகாநாட்டு நிகழ்ச்சியெல்லாவற்றையும் அனுபவித்தின்புறுதலே வந்தோர் கண்ட பலன். பிரசங்கம், பஜனை, சிவாலய தரிசனம், போசனம் ஆகிய இவை நடைபெற்ற பின்பு, ஒழிந்த இடை நேரங்களிலே, யாவரும் கடற்கரை மணலிலே உல்லாச சல்லாபங்களிற் பொழுதுபோக்கிக் கொள்வர்.

ஒரு வருஷம் அப்படியான வேளையொன்றிலே எனது தகப்பனாரிருந்த சிறு குழுவொன்றிலே நானும் இருந்தேன். சமீபத்திலே நாலைந்துபேர் அங்குமிங்கும் சிற்றுலாக் கொண்டவண்ணம் வார்த்தையாடிக் கொண்டிருந்தனர். அவருள் வசீகரமான தோற்றமுள்ளாரொருவரை என் தகப்பனார் தம்மோடிருந்த நண்பருக்குச் சுட்டிக்காட்டி, "இவர் தான் St. Patricks கல்லூரி Science Master—மயில்வாகனர். இங்கிலீஷிலே B. Sc. தமிழிலே மதுரைத் தமிழ்ச் சங்கத்துப் பண்டித பரீக்ஷையிலே சித்தியடைந்துள்ளார். மிகவும் கெட்டிக்காரனென்று கேள்வி................" என்றிப்படியாகச் சொன்னார். சொன்ன சிறிது நேரத்தினுள்ளே இவர்களெல்லாரும் அளவளாவிப் பழகிக்கொண்டனர். பத்துப் பன்னிரண்டு வயதுப் பள்ளிச் சிறுவனான எனக்கு இவர்களோடு நடத்திக்கொள்ள விவகாரம் என்னதானுண்டு? எந்தைக்கறிமுகமானோர் எனக்கும் அறிமுகமானாரே என வரும் திருப்தியுடன் இருந்துகொண்டேன்.

வித்தியாலயத்திலே தினமும் பள்ளிக்கூடம் தொடங்கும்போதும் முடியும்போதும் கடவுள் வணக்கமாகத் தேவாரபாராயணம் பண்ணுவது பெரும்பாலும் என் பொறுப்பாயிருந்தது. அதனாலே பள்ளிக்கூடத்திலும் அதன் சமீபத்திலும் நடைபெறுகின்ற சாதாரணமான கூட்டங்களிலே தேவாரபாராயணத்திற்கு நானே கோயில் மேளமானேன். எங்களை அக்காலத்திற் படிப்பித்து வந்த ஆசிரியர்மார் ஸ்ரீமான்கள் (இடைக்காடர்) நாகமுத்து, (நல்லூர்) முத்துக்குமாரு, பிரம்மஸ்ரீ E. K. சிவசுப்பிரமணிய ஐயரவர்கள் முதலானோர் இந்தக் கூட்டங்களிலே ஈடுபட்டுள்ளவர்களாதலினாலே, அவர்கள் போகிற கூட்டங்களுக்கெல்லாம் எங்களுட் சிலரும் நிழல் போலத் தொடர்ந்து போய்க் கொள்வது வழக்கமாகிவிட்டது அக்கூட்டங்களிலே அவ்வச்சபையின் முயற்சிகளில் ஈடுபட்டுள்ள பண்டித மயில்வாகனனாரைத் தவறுமற காணவும் அன்னாரது பேச்சைக் கேட்கவும் இடமுண்டாயிற்று.

வித்தியாலயப் படிப்பு முடிந்து வண்ணை இந்துக் கல்லூரியிற் படித்துக்கொண்டிருந்த பொழுது வாசஸ்தான மாற்றத்தினாலே மாவிட்டபுரம் இந்துக் கல்லூரியிற் சேரவேண்டியவனானேன். நான் அங்கே போய்ச் சேர்ந்த தினத்திலே அக்கல்லூரியின் பிரதமாசிரியர் பதவியைப் புதியவரொருவர் ஏற்றுக்கொள்ளலானார். அவர்தான் யாரோவெனில், பண்டித மயில்வாகனனாரேயாம். ஸீனியர் வகுப்பிலிருந்த எங்களுக்கு விசேஷ பாடங்கள் சிலவற்றைப் படிப்பிக்கும் பொறுப்பையும் அவரே ஏற்றுக்கொண்டார். நித்திய தொடர்பு ஏற்பட்ட பின்பு விளைகின்ற விளைவுகளைச் சொல்லவும் வேண்டுமா? வாரந்தோறும்

சமய சம்பந்தமாக அவர் செய்துவந்த அறிவுரையின் அருமை பெருமைகளை என்னென்போம்! லத்தீன் உபாத்தியாயர் வராத வேளைகளிலே அதைப் படிப்பிக்கத் தாமே முற்பட்டு வந்து லத்தீன், இங்கிலிஷ், தமிழ் என்னும் மூன்றினுடைய தாரதம்மியங்களை எடுத்துக்காட்டும் திறமையை என்னென்போம்! நாங்கள் ஸீனியர் படித்த வருஷம் பாடப் புத்தகமாக லத்தீனில் அமைந்த நூல் வேர்ஜில் எயினேயிட் என்பதில் ஓர் பகுதியாகும். அதற்குத் தமிழ் தாம் பாடின ''எயினேய காவியம்'' என்பதிலிருந்து தமிழ் மீது அபிமானம் பொங்கியெழும்படி தீஞ்சுவை சொட்டச் சொட்ட எடுத்துக் காட்டுவார். இங்கிலிஷிலே ஷேக்ஸ்பியர், பேக்கன் முதலான நூல்களைப் படிப்பிக்க நேர்ந்தால், அவைகளுக்குச் செகசிற்பியார், பேக்கனார் எனத் தமிழ் மணம் ஊட்டி ஈடாகச் சங்க இலக்கியங்களிலிருந்து பொன் பொன்னாக எடுத்துக் குவிப்பார்.

அந்நாட்களிலே அவருக்கு ஜாகை ஷை கல்லூரி மானேஜரும் சிவானுபூதிச் செல்வரும் பரம ஞானியுமாயிருந்த ஸ்ரீமான் திருவிளங்கம் அவர்களது கிருகமாகும். அங்கே அவர்களுடைய பொழுதுபோக்கெல்லாம் வேதாந்த சித்தாந்த சல்லாபமே என்பது சொல்லாமலே புலப்படும். ஓரிரவு அவ்விடத்திற் கழிக்கும்படி சேதி பெற்றிருந்த என் பிதா அதற்கிணங்கி அங்கே போனபொழுது நானும் கூடப் போயிருந்தேன். அன்றிரவு முழுதும் தேவாரம், கந்தரலங்காரம், கந்தரனுபூதி, திருப்புகழ், தாயுமானவர்பாடல், பட்டினத்தார் பாடல் என்னுமிவைகளிலேதான் தோய்ந்து தோய்ந்து திளைத்துக்கொண்டிருந்தார்கள்.

சுவாமி வேதாசலம் அவர்கள் யாழ்ப்பாணம் வந்து பிரதமாசிரியராம் பண்டித மயில்வாகனாரவர்களுடன் தங்கியிருந்தபொழுது ஜாகையிலே எந்த நேரமும் பண்டிதர் குழாமாகவேயிருந்தது. அக்காலத்திலே நாடெங்கும் இவர்களுக்குச் சாதக பாதகமான பிரசங்கங்களும் பிரசுரங்களும் கிளம்பலாயின. கலகம் பிறப்பது நியாயம் பிறக்கத்தானே!

பிரதமாசிரியர் ஒன்றரை வருஷமாவது நீடித்திருக்கவில்லை. லௌகிகப் பதவிகளையெல்லாம் துறந்து இராமகிருஷ்ண மடத்தைச் சேர்ந்துகொண்டார். பிரதமாசிரியராயிருந்த காலத்திலே மாணவர்களாகிய எங்களை நோக்கி, ''சிவபெருமான் காட்சிதந்து உங்களுக்கு என்ன வரம் வேண்டும் என்று கேட்டால், நீங்கள் என்ன கேட்பீர்கள்'' என்று கேட்டபொழுது, ஒவ்வொருவரும் ஒவ்வொன்றைச் சொல்ல, அவர் சொன்னதாவது, ''நானென்றால் முத்தி தரும்படி கேட்கமாட்டேன். முத்தி என்னளவில் நின்றுவிடும். அதிலும் பார்க்க எல்லோரும் இன்புறும்படி சேவை செபவதானால் அதிலுள்ள இன்பமோ ஒப்பற்றது. ஆனபடியால், சேவை செய்ய வரம் தா. தமிழ்த்தொண்டு செய்ய வரம் தா — என்றிப்படியாகக் கேட்பேன்,'' என்பதாகும். துறவியான பின்பு அவர் தீவிரமாக ஈடுபட்டுக்கொண்டது, தாம் இயல்பாகவே நெடுநாளாக விரும்பிக்கொண்டிருந்த பெருஞ் சேவையிலேதான்.

துறவு பூண்டபின் சுவாமிகள் யாழ்ப்பாணத்துக்கு வந்தபொழுது மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கும் விஜயஞ் செய்தனர். அப்பொழுது அங்கே ஆசிரியனாயிருந்த சிறியேனும் உட்பட எல்லோரும் சுவாமிகளுக்கு விசேஷமாகப் பாமாலை சூட்டி வரவேற்று இன்னுரைகூறி மகிழலானோம். பலவிடங்களிலும் முன்பு கொள்கை வித்தியாசம் பாராட்டியிருந்த குழுவினர் தாமும் சுவாமிகளைப் பேரன்புடன் உபசரிக்கலாயினர். சுவாமிகளுடைய தொண்டுமோ பிரசங்கஞ் செய்தல், கட்டுரை வரைதல், கல்விச்சாலை நிறுவல், நிறுவியது நடத்தல் எனப் பலதிறப்பட்டு விரைந்து பெருகுவதாயிற்று.

நான் எனது அற்பமான கல்விக்குகந்த அடிமைத் தொழிலை விரும்பி அதற்குரிய பரீக்ஷையிலே சித்தியடைந்திருந்த பொழுது, கண்டியிலுள்ள கந்தோரொன்றிற் கடமை செலுத்தும்படி எனக்கு அரசாங்கக் கட்டளை வந்தது. அதன் பிரகாரம் கண்டிக்குப் போகச் சித்தம் பண்ணினேன். ஆனால், புறப்படுந் தினத்திலன்று மத்தியானம் பெற்ற தபாலிலே கண்டியதிகாரிகள் என்னைத் திரிகோணமலையிலுள்ள கிளைக் கந்தோருக்கும் செல்லும்படி பிறப்பித்துள்ள உத்தரவு வந்து சேர்ந்தது. திடீரென்று உத்தரவு மாற்றம் உண்டானதினாலே, புத்தம் புதிய இடத்திலே எனக்கு ஜாகை முதலான வசதிகளை ஏற்படுத்திவைக்க நேரங்கிடைக்கவில்லையேயென்றும், முன்னொருபோதும் பிறவூர்ப் பழக்கமில்லாதவனாயிற்றே யென்றும் என்னையிட்டு மனங்கவன்ற எந்தையார், ''எதற்கும் ஆண்டவனே துணை'' என்று

ஆறுதல் சொல்லி, முதன் முதலாக வெள்ளிக்கிழமையிலே வீட்டை விட்டுப் போகக் கூடாதென்று வியாழன் இரவே புறப்பட்டு வேறெங்காயினும் தங்கி நின்று வெள்ளிக்கிழமை காலை றெயிலேறுவது நன்று என்று நிச்சயித்திருந்தபடி, வியாழனிரவு வழியனுப்ப என்னுடன் வந்தார். அன்றிரவு வழித்தங்கலுக்கு நாங்கள் புகுந்த இடம் மருதனார் மடத்து வைரவர் கோவிலாகும். அங்கே புகுந்த பொழுது எதிர்பாராத வண்ணம் எங்களுக்குண்டான ஆனந்தத்திற்கு அளவேயில்லை. என்னே! அங்கே யோகர் சுவாமிகள் எழுந்தருளியிருந்தனர். அன்னாருடைய தரிசனமும் நல்லாசியும் பெறலானோம்.

அடுத்த நாட்காலை றெயிலேறிச் சென்றேன். அநுராதபுரத்திலே கட்டுச் சோறுங் கையுமாய் நண்பர் சிலர் சந்தித்தனர். அவர்கள் பின்திக்கிடைத்த உத்தரவு இன்னதாமென அறிந்தவுடனே, அவருள் இருவர் நான் திரிகோணமலையை அடையும்போது இருட்டிவிடுமாதலினாலே அவ்வூருக்குப் புதியவனாய் முன்னேற்பாடொன்றும் செய்யாமற் செல்லும் எனக்குக் கஷ்டமாயிருக்குமென்றெண்ணித் தாமும் கூட வரலாயினர். மாலை ஆறுமணியளவிலே திரிகோணமலையடைந்தோம். ஜாகை முதலியன விசாரிக்கும் பொருட்டு முதன் முதலாக நுழைந்தோம் ஓரிடத்தே. நுழைந்த பொழுது, "என்ன சரவணபவன்? என்ன காரியம் இந்தப் பக்கம்?" என்று அறிந்த குரலொன்று கேட்கலாயிற்று. என்னே! ஆச்சரியம்! அது கேட்டவர் வேறொருவருமல்லர் விபுலானந்த சுவாமிகளேயாவர். எங்களுக்கும் கவலையுண்டாகுமோ! எனது நிலைமையை அறிந்த சுவாமிகள் நான் எனக்கு வசதியான இடம் தேடிக்கொள்ளும்வரைக்கும் தமது பள்ளிக்கூட ஆசிரியர் சிலர் வசித்து வந்த 'ஆச்சிரமத்திலே'' தங்குவதற்கு அநுமதியளித்தனர். ஏறக்குறைய ஒரு மாதம் அவ்வாச்சிரமத்தில் வசிக்கலானேன். அக்காலத்தில் அங்கிருந்தவர்கள் ஆசிரியர்மார் ஸ்ரீமான்கள் பீதாம்பரம் பிள்ளை, பரமசாமி, பண்டிதர் பூபால பிள்ளை, வித்துவான் பெரியதம்பியவர்கள் என்போராவர்.

பகற்பொழுதெல்லாம் அவரவர் வேலையிற் கழியும். சுவாமிகள் எங்கேனும் பிறவூர் போகாமலிருந்தால் மாலை வேளையிலே கல்லூரிக் கட்டடத்திற்கெனக் கொணர்ந்து குவித்திருந்த மணலிலே சுவாமிகளும் கல்லூரிப் பிரதமாசிரியர் பிரம்மஸ்ரீ இராமசுவாமி ஐயரவர்களும் நடுவேயிருப்ப அவர்களைச் சுற்றி மேற்கூறிய ஆசிரியர்மார் முதலானோருடன் நானும் ஒதுங்கியிருப்பேன். அவ்வேளையில் நடக்கும் சம்பாஷணை பெரும்பாலும் கண்ணகியார் வழக்குரை, பரிபாடல், இராமாயணம் என்னுமிவைகளிலே இந்த ஆசிரியர் பண்டிதர்மார் கேட்கும் சந்தேகங்களுக்கு விடை கூறுவனவாகவே அமைந்திருக்கும்.

நான் அரசாங்க ஊழியனாதலினாலே அரசினர் கட்டளையின் பிரகாரம் காலத்துக்குக் காலம் ஊர் மாறிக்கொள்ள வேண்டியவனானேன். இலங்கையிலே எந்த மூலை முடுக்கிலும் ஒரு தமிழ்ச் சபை இராமற் போகாது. அங்கெல்லாம் வருடத்துக்கொரு முறையாவது சுவாமிகளது தரிசனமும் அறிவுரையும் தமிழ் மக்களுக்குக் கிடைக்கும்.

அந்தோ! அந்தப் பாக்கியத்தை இப்பொழுது நாமிழக்கலானோம். சுவாமிகளது சகவாசத்தினால் உண்டான இன்பத்தை நினைக்குந்தோறும் மேல்வரும் பழைய செய்யுளொன்று ஞாபகத்திற்கு வந்துகொள்ளுகிறது.

"குடிப்பிறப் புடுத்துப் பனுவல் சூடி
விழுப்பொருள் ஒழுக்கம் பூண்டு காமுற
வாய்மை மடுத்து மாந்தித் தூய்மையின்
காதல்இன் பத்துள் தங்கித் தீதறு
நடுவுநிலை நெடுநகர் வைகி வைகலும்
அழுக்கா றின்மை அவாவின்மை
[என்றாங்கு
இருபெரு நிதியமும் ஒருதாம் ஈட்டுந்
தோலா நாவின் மேலோர் பேரவை
உடன் மரீஇ இருக்கை ஒருநாட் பெறு
[மெனில்
பெறுகதில் அம்ம! யானே வரன்முறை
தோன்றுவழித் தோன்றுவழிப் புலவுப்
[பொதிந்து
நின்றுழி நின்றுழி ஞாங்கர் நில்லாது
நிலையழி யாக்கை வாய்ப்ப இம்
மலர்தலை உலகத்துக் கொட்கும்
[பிறப்பே.

# விபுலானந்தர் நினைவு.

[ சோ. நடராஜன் ]

மகிழ்ந்தன மிறும்பூதொன் றெய்தின மீழத்தும்
புகழ்ந்தனம் போயெங்கும் போற்றலும் போற்றினம்;
இகழ்ந்துஞ் சிலவுரைகள் புறத்தே யிரைந்திட்டோம்;
கமழ்ந்துசெந் தேன்பிலிற்றும் கற்பகப்பூப் போலத்
திகழ்ந்தனை தேடுவார் தேடிச் சிறப்படைந்தார்.
அகழ்வாரைத் தாங்கும் நிலம்போல வுன்புலத்தை
யகழ்வாரைத் தாங்கியென்று மாதரித்தாய் வாழி.

நில்லா வுலகத்து நிலையுள்ள செம்பொருளைச்
செல்லா திருக்கின்ற செல்வத்தை யறிவாலே
சொல்லாது கண்டறியத் துறவுநெறி கண்டனையே
எல்லார்க்கு மிந்தவழி யேலாதென் றேற்றனையே.

பொன்னைத் துறந்துவிட்டாய் போகத்தை யுந்துறந்தாய்
பெண்ணைத் துறந்ததனாற் பெருந்துறவு கற்றுவிட்டாய்
கண்ணைத் திறந்துவைக்கும் கல்வியையோ துறவாமல்
மண்ணிற் புகழ்துறக்க மறந்ததுவோ மறந்தாயோ.

" அன்னை தனைத்துறப்பே னருந்தமிழ் நாடுந்துறப்பேன்
விண்ணவர் தம்வாழ்வை வேண்டாமெனத் துறப்பேன்
என்னுயிருக்குயிரா மிறைவனையுந் தான்துறப்பேன்
கன்னித் தமிழென்றால் கனவிலும் நான்துறவேனே "

எனவாங்கு,

ஒன்றுநீ யெம்மவர்க்கு முணர்த்திவிட்டா யுத்தமனே!
நன்றுநீ செய்தாய் நலங்கள்பல கண்டோமால்
கலைபலவுங் கற்றதனாற் கற்றவர்க்கு விருந்தானாய்!
விலையொன்றுங் கருதாதே வித்தையினைத் தேடல்
தலையென்று கொண்டதனாற் தலைநின்றா யெம்முள்
நிலையில்லா நினைவுகளுள் நிலைத்ததுநின் நினைவே.

# சுவாமி அவர்கள் சொன்னவற்றுட் சில

( கி. இலக்குமண ஐயர், M.A. )

அப்பொழுது யான் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் (B. A. Hons. வகுப்பில்) தமிழ் பயின்று கொண்டிருந்தேன். சுவாமியவர்கள் அங்கு வந்து பல்கலைக்கழக விருந்தினர் இல்லத்தில் தங்கியிருந்தனர். அந்த வருடம் அங்கு சென்று கலைபயின்ற இலங்கை மாணவர் நாங்கள் ஆகப் பதினெழுவர் தான். இலங்கைப் பெருமக்கள் யார் அங்கு வரினும் தனித்தோ இருவர் மூவராயோ அவர்களிடம் ஆவலுடன்சென்று, உபசரித்து, அளவளாவி மகிழ்ந்து, அவர்கள் அன்பையும் ஆசியையும் பெற முயல்வது வழக்கமாயிருந்தது. இலங்கையிலிருந்து வந்து அங்கு தங்குகின்றார் சுவாமி விபுலானந்தர் என்றால் பின்னர் கேட்கவும் வேண்டுமா ? இலங்கையைச் சேர்ந்த வேறு எந்த அறிஞரைக் காட்டிலும் சுவாமியவர்களுக்கு அண்ணாமலைப் பல்கலைக்கழகத்து உரிமையும் தொடர்பும் பன்மடங்காகும் என்று சொல்லவும் வேண்டுமா ? தமிழ் நாட்டின் மாபெரும் தமிழ்ப் பல்கலைக்கழகத்தே தமிழ்ப் பகுதியில் முதன்முதல் தலைமை தாங்கிய பெருமை சுவாமிகளுடையதன்றோ ?

சுவாமிகளோடு உரையாடிக்கொண்டிருக்கும்பொழுது பேராசிரியரைப்பற்றியும் பேச்சு எழுந்தது. யார் யார் என்னென்ன பாடங்களைக் கற்பிக்கின்றனர் எனச் சுவாமிகள் வினவினர். அக்காலம் எங்களுக்குத் தமிழ் கற்பித்தவருள் கந்தசாமியார் என்பவர் ஒருவர். அவருடைய போக்கே அலாதி. அவர் ஏனையாசிரியர்கள் இருக்கும் அறைக்கு வருவதே கிடையாது. யாருடனும் நெருங்கிப் பழகுவதோ அளவளாவுவதோ கிடையாது. தானுண்டு தன்பாடுண்டு. குறிப்பிட்ட நேரத்துக்கு நேரே தனது வகுப்புக்கே வந்துவிடுவார். வகுப்புத் தொடங்கச் சிறிது நேரமிருப்பின் எங்காவது ஒரு மூலையில் உட்கார்ந்துகொள்வார். தனது பாடம் முடிந்ததும் நேரே வீடு சென்றுவிடுவார். நன்னூல் விருத்தியுரையைக் கற்பித்த ஆசிரியர் அவர்தான். திரு. கந்தசாமியார் எங்களுக்கு நன்னூல் விருத்தி பாடம் சொல்லுகின்றார்என்று சுவாமிகளிடஞ் சொன்னதும், “கந்தசாமியாரா?” அவர் சிறந்த அறிவாளியாவாரேஎன்று மிகுந்த ஆர்வத்துடன் கூறினர். திரு. கந்தசாமியார் அவர்களின் திறமையைப் பலர் அறியவில்லையென்றும் உரிய மதிப்பு அவருக்கு வழங்கப்படவில்லையென்றும் சுவாமிகள் கூறினர். தான் பேராசிரியராக விருந்த காலத்து திரு. கந்தசாமி அவர்களை மேல் வகுப்புப் பாடங்களைக் கற்பிக்கும்படி நேர சூசியமைத்து அவர்களைப் பெருமைப்படுத்தினமையையுஞ் சுவாமிகள் சொல்லினர்.

மூன்றாண்டுகளுக்குப்பின், கொழும்பு இராமக்கிருஷ்ண மடத்தில் சுவாமிகளோடு பேசிக்கொண்டிருக்க நேர்ந்தது. தன்னிடத்தில் மிகுந்த வாரப்பாடு கொண்ட நண்பர் ஒருவரைக் குறிப்பிட்டு அவர் தான் இயற்றும் யாழ் நூலுக்கு வேண்டிய பொருளுதவியும் புரியக் கூடும் எனச் சுவாமிகள் குறிப்பிட்டனர். தங்கள் நண்பரும் நிறைந்த கல்வியறிவுடையவர் தானேயென யான் வினவினேன். அதுதான் கிடையாது என்றனர் சுவாமிகள். தனது நண்பர் ஒரு பண்டிதராகவோ பட்டதாரியாகவோ இருப்பின் தன்னிடமோ தனது நூலிடமோ நயமேதும் காண ஒப்புக்கொள்ளமாட்டார் என்ற கருத்தைச் சுவாமிகள் சொல்லாமற் சொல்லிவைத்தனர்.

சுவாமிகளைக் காணவும் அவர்களோடு உரையாடவும் ஏற்பட்ட சந்தர்ப்பங்கள் பல. அப் பலவற்றுள்ளும் இந்த இரண்டு சந்தர்ப்பங்களை மட்டுமே தெரிந்து யான் இங்கு குறிப்பிடுகின்றேன் : நோக்கமொன்றில்லாமலல்ல. இந்த இரு சந்தர்ப்பங்களும் சுவாமிகளின் வாழ்க்கையின் உயரிய அம்சமொன்றினைத் தெளிவாய்ப் புலப்படுத்துகின்றன. அதோடு கூடப் பெரியதொரு உண்மையினை இடித்துரைப்பன போல உணர்த்தவும் உணர்த்துகின்றன.

தனது நண்பர் பெரிய செல்வமுடையவர். இனிய குணங்களுடையவர். ஆனால் பெரிய கல்விமானல்ல. அதனால்தான் தன்னையும் தான் யாத்த நூலினையும் களங்கமற்ற உள்ளன்போடு போற்றுகின்றனர் என்று கூறியதால் தனது சிறந்த நண்பரைச் சுவாமிகள் குறைவுபடுத்திப் பேசினர் என்று கொள்ளல் கூடாது. ஈழநாட்டினுஞ் சரி இந்தியநாட்டினுஞ் சரி தமிழ் கற்றார் பலருள்ளுங் காணப்படும் அடிப்படையான பெரிய குறையொன்

# சிவானந்த வித்தியாலயம்

[ பண்டிதர், வி. சீ. கந்தையா [

---

விபுலாநந்த நினைவு மலருக்கு ஒரு கட்டுரை எழுதவேண்டும் என மலராசிரியர் அவர்கள் என்னைக் கேட்டார்கள். எப்பொருளில் எழுதலாம் என்ற யோசனைக்குக் கிடைத்த முடிவு பொருத்தமானதென்றே கருதுகின்றேன். எனக்கு எழுத இலகுவானதும் குறித்த மலருக்கு மிகவும் பொருத்தமானதுமான கட்டுரைப் பொருளே அது. சிலவேளை இதை உட்கொண்டு தான் நான் கேட்கப்பெற்றேனே என என் பாக்கியத்தை நினைந்து மகிழ்ந்து மேற்கண்டவாறே தலையங்கமிட்டு எழுதத் தொடங்கினேன்.

ஈழநாட்டு அருங்கலைப் பொக்கிஷமான உயர்திரு. விபுலாநந்த அடிகளார் நம்மை விட்டகன்றார். ஆனால் அவர் நமக்குத் தந்த அருங் கலாரத்தினங்களான ஆராய்ச்சி நூல்களையும் உடன் கொண்டு போய் விட்டனரா? யாழ்நூல் தடவிய கரங்களும், நுண்மாணுழை புலமும் அவருடன் சென்றன. நமது புண்ணியப் பேறு, அவர் செல்லுமுன் யாழ்நூலை நமக்குக் கிடைக்கச் செய்ததல்லவா! அவருடைய உயர் தனிக் கலைப்பண்பு உடன் சென்றது. ஆனால் அப்பண்பின் இலட்சியமும் உடன் சென்றுவிடவில்லையே! அன்னாரது இலட்சியத்தூண்தான் மட்டு நகரின் ஒருசார், தூயமணற்பாங்கான கல்லடி—உப்போடை எனும் இடத்தே விளங்கும் 'சிவானந்த வித்தியாலயம்' என்னும் கலைக்கோயில், அழியாத கலாக்ஷேத்திரம். சுவாமிகளின் புகழுடம்புக்கு இலங்கையில் நிறுவப்பெற்ற ஞாபகச்சின்னம் அதுவே. போனதற்கு வருந்துவதால் புன்மைதீர வழியுண்டோ!

வெறும் மணல்வெளி. சுடலை மைதானம். படர்ந்த கர்யான் பற்றைகள். அடர்ந்த இரண்டொரு முந்திரிகைச் செடிகள். இவற்றின் நிழலே நிலத்துக்குக்

---

றையே சுவாமிகள் கண்டு கண்டு மனம் பொருது வாய்விட்டுக் கூறிவிட்டனர். இன்று தமிழ் கற்றவராகக் காணப்படுபவருட் பலர் தமிழ் கற்ற பிறரெவரிடத்திலும் குணமேதுவும் காண விரும்புவதில்லை. பிற அறிஞர் மாட்டுள்ள அறிவுச் சிறப்புக்களைக் காண அவர்கள் உளத்தில் பொறாமையே மிகுதியாகின்றது. ஏனையோர் மாட்டு உண்மையாகவே காணுஞ் சிறப்புகளுக்கெல்லாம் வழுக் கற்பித்து குணமனைத்தையும் கொல்லுவதிலேயே தமது காலம் முழுவதையும் போக்கும் தமிழறிஞர் பலரை நாம் நாளும் கண்ணாரக் காண்கின்றோம். இவர்கள் பிறரைப்பற்றி மேடைகளில் புகழுரை ஏதேனும் கூறினும் அவை உண்மையில் மனப் பூர்வமாகப் பிறப்பனவல்ல. "வித்துவக் காய்ச்சல்" என்று கூறப்படும் இப்பொல்லாத நோயினையே சுவாமிகளும் மிகக் கொடியது அகற்றப்படவேண்டியது எனக் கண்டார். தாம் ஏதைக் குற்றமென ஒப்புக்கொள்ளுகின்றனரோ அதே குற்றத்தைக் களைய வியலாமல் அக்குற்றத்துக்குத் தாமே ஆளாகி இடர்ப்படுவது மக்கள் பலரது இயல்பாகும். தவநெறிச் செல்வராம் சுவாமிகள் தாம் குற்றமெனக் கொண்டதினை நீக்கித் தம் வாழ்க்கையையே ஓர் எடுத்துக் காட்டாக வாழ்ந்து காட்டினமையை உன்ன உன்னப் பெருமகிழ்வன்றோ ஏற்படுகின்றது. கல்விமான்கள் ஏனைய கல்விமான்களையும் அவர்கள் ஆக்கிய நூல்களையும் மனமார மதிப்பது அரிதெனக் கண்ட சுவாமிகள் தாம் நிகரற்ற கல்விமானாயிருந்தும் ஏனைய அறிஞரைச் சிறிதேனும் தயக்கமின்றிச் சொல்லால்மட்டுமன்றிச் செயலாலும் மதித்து உபசரித்து உரிய பதவி வழங்கி வாழ்ந்து காட்டினர். சுவாமிகளின் இனிய இயல்புக்கும் உயரிய இலட்சியத்துக்கும் பரந்த நோக்குக்கும் அவர் வாழ்க்கையிற் கண்ட இச்சிறு செய்திகள் போதிய சான்றாகுமன்றோ!

குளிர் கொடுத்தன. 18 வருடங்களின்முன் இங்கிலே. அன்றைய சுடலே இன்று ஒரு 'சாந்தி நிகேதனம்' ஆக விளங்குகின்றது. 18 மாணவர்களுடன் அன்று தொடங்கப் பெற்ற நிலேயம் இன்று 500-க்கு மேற்பட்ட மாணவர்கள் கொண்டு இப் பகுதியிலேயே மிகச் சிறந்த ஸ்தாபனமாக வளர்ந்துள்ளது.

ஆங்கில நாகரிகப்புயலானது கிழக்கு நோக்கி வீசி அனைத்தையும் தன்னகம் வாரிக்கொண்டதனல் 'அன்ன நடை நடந்து தன்னடையும் கெட்ட காக்கைகளாக' மக்கள் வாழ நேரிட்டபொழுது, சுவாமிகள் மட்டக்களப்பு முழுவதும் நல்வழிபற்றி நடக்க இவ்வாங்கிலக் கலாசாலையை நிறுவினர். தேசீய மனத்தோடு ஆங்கில அறிவை ஊட்டி நாட்டை நலம் படுத்த அவர் கொண்ட மனக்கோள் எதிர்பாராத விதத்தில், பலன்தரும் வழியில் நிறைவேறிற்று. கிழக்கே அலேகடற் புருவமும், மேற்கே மட்டக்களப்பு வாவியின் கரைசார்ந்த தென்னந் தோப்புகள் நிறைந்த கிராம ஒழுங்கும் கொண்டு நடுவண் அமைக்கப்பெற்ற வித்தியாலயத்துக்குச் சுவாமிகள் தமது குருவும், ஸ்ரீ ராம கிருஷ்ண பரமஹம்ஸ தேவரது பேரருட் சீடருமான ஸ்ரீ சிவாநந்த சுவாமிகளது திருநாமத்தைச் சூட்டி மகிழ்ந்தனர். ஏழை மாணவரும் உயர்ந்த கல்விகற்று முன்னேற உதவிபுரிதற்காக இலவச விடுதி ஒன்றையும் அடிகள் ஏற்படுத்தியமை பெரும் பயனளிப்பதாயிற்று.

பாஷைகாட்டி ஆசையூட்டி மதமாற்றம் செய்யும் கொடிய அரக்கன், ஓட்டம் பிடித்தான். மக்கள் சொந்த மதத்தையும், சொந்தக் கலேயையும், சொந்தப் பண்பாட்டையும், சொந்த நாகரிகத்தையும் வளர்க்க வழிகண்டனர். சுவாமிகளுடைய உள்ளம் பூரித்தது. தனது வாழ்க்கையின் முக்கிய பாகத்தை இப் பணியிற் செலவழித்தார். வாழ்வையும் பல்காலம் இங்கேயே கழித்தார். இராம கிருஷ்ண மடத்துப் பெரியோரும் இச்சேவையைப் பாராட்டி ஆதரவு தந்தனர்.

கலே வளர்ந்தது. மக்கள் நிலே உயர்ந்தது. பழுநிலே நாடிவரும் பறவைகள் போல இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் மாணவர் இக்கலாநிலயத்தை நோக்கி விரைந்தனர். பக்கத்துக் காட்டு எல்லே ஒடுங்கியது. பாடசாலே எல்லே அகன்றது. உள்ளூரவரும், மற்றைய பாகங்களிலிருந்து பல பெரியோரும் புது வேலேகளுக்காகப் பணம் கொடுத்தனர். வித்தியாலய ஆசிரியர்களே தமது சம்பளப் பணத்தையும் விடுத்தனர். புதுப்புதுக் கட்டிடங்கள் தோன்றி நின்றன. விடுதிச் சாலேகள் விரித்தமைக்கப்பட்டன. 'சித்திரகூடம்' 'கமலாலய'த்தையும் கூடக் கொண்டது. 'சிவபுரி' சுவாமிகளின் ஆசிரமமாகத் தோன்றிற்று. கழுநீர்த் தொட்டிகளும், மல்லிகைத் தோட்டங்களும், ரோஜாப் பந்தர்களும் ஆங்காங்கே எழில்பெற முளைத்தன. சில காலத்துள் 'ஆசாரிய மந்திரமும்' (Principal Quarters), 'சாரதை பவன'மும், 'இரத்தினலய'மும் எழுந்து நின்றன. விஞ்ஞான சாலேகளும், இலக்கிய மன்றங்களும் விரிந்தமைந்தன. சிறந்த நூல் நிலயமொன்று திறக்கப்பெற்றது. தண்ணீர்க் குழாய்கள் பதிக்கப்பட்டன. மாமரங்களும் வேப்பு மரங்களும் பாலே நிலத்தைப் பசுந்தரையாக்கின. மின்சார விளக்குகள் பூட்டப்பெற்றன. குருகுலத்திலிருந்து குற்ற இருள் ஓட்டப்பட்டது. சங்கீதவகுப்புகளும், சமய வகுப்புகளும், யோகாசானப் பயிற்சிகளும் செவ்வனடைந்தன. இதனல் உள விருத்தியும், உடல் விருத்தியும் சிறந்து நல்ல சமூக வாழ்க்கைக்கேற்ற முறையில் மாணவர்கள் பயிற்றப்பட்டார்கள். அனைத்துக்கும் மத்தியில் சமையற் கூடமென ஆதியில் அமைந்து, சுவாமிகள் கண்ட கனவுப்படி குருதேவராலயமாக மாற்றப் பெற்ற சிறு கோயிலில் உறை பரமஹம்ச தேவர் சகல இன்னல்களேயும் துடைத்து அனைவரையும் அவ்வப்போது ஆசீர்வதித்து வந்தார்.

சிலகாலம் விபுலாநந்த அடிகளாரே வித்தியாலயத்தின் அதிபர் (Principal) ஆக இருந்து சகல துறைகளேயும் நேரிற் கவனித்து நல் முன்னேற்றமடையச் செய்த

னர். மதுரைத் தமிழ்ச் சங்கத்துத் தமிழ்ப் பண்டிதரும், லண்டன் நகரப் பல்கலைக் கழகத்துப் பௌதிக சாஸ்திரப் பட்டதாரியும் (B. Sc.), பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியருமாயிருந்ததோடு கணித சாஸ்திரத்திலும், ஆங்கில இலக்கியங்களிலும், மானத சாஸ்திரத்திலும் அடிகளார் துறைபோகக் கற்ற வித்தகக் கலைஞருமன்றோ! ஆசிரியராய் மாணவர்களது தனிப் பண்புகளை அறிந்து சுவைபடக் கற்பிப்பதில் சுவாமிகள் மிகத் தேர்ந்தவர். ஆங்கிலங் கற்கும் மாணவர்களுக்குத் தமிழில் உண்டாகும் அக்கால வெறுப்பு இவருடைய மாணவர்களிடம் இல்லாததாயிற்று. தமிழின் நறுந்தீஞ் சுவையை இன்னாரிடம் அனுபவித்த மாணவர்கள் சிவானந்த வித்தியாலயத்திலும், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலும், கொழும்புச் சர்வகலாசாலையிலும், யாழ்ப்பாணம், மதுரை, சென்னை முதலிய மற்றும் பாகங்களிலும் மிகப் பலராவர். "பிற நாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ்மொழியிற் பெயர்த்தல் வேண்டும்" என்ற இலக்குக்கேற்ப விஞ்ஞான சாத்திரத்தைத் தமிழொடு கலந்து தாமே இங்கு கற்பித்தார். உயர்ந்த தமிழிலக்கிய இலக்கணங்களை அறிந்து ரசிக்கச் செய்வதற்காக வளர்ந்தோர் சிலருக்கு என்று பிரத்தியேகமாக 'புலவர் வகுப்பு' ஒன்றை நிறுவினர். தமிழினை முற்ற ஒருவன் அறியவேண்டில் சம்ஸ்கிருதமும் நன்கு கற்கவேண்டுமென்பது சுவாமிகளது முடிபு. எனவே ஒரு 'சமஸ்கிருத வகுப்பு'ம் உடன் நிறுவப்பட்டது. புலவர் வகுப்பினர் சமஸ்கிருதமும் கற்றனர். புலவர் வகுப்பு நடக்கும்போது மாணவர் யாவரும் புலவர்களென்றே அழைக்கப்பெற்றார்கள். சுறுசுறுப்பாகவும், உணர்ச்சியுடனும் இது நடக்கத் தாமே தலைமைப் புலவராகவும், புலவர்களின் ஆசிரியராகவுமிருந்தார். வகுப்பின் முதல்நாள், இறை வணக்கத்தின் பின் சுவாமிகள் தமது கம்பீரமும், சாதுர்யமும், கவித்துவமும், கவர்ச்சியும் நிறைந்த குரலில் "பூவார் சோலை மயிலாட புரிந்து குயில்களிசை பாட, காமர் மாலை அருகசைய நடந்தாய் வாழி காவேரி" எனும் சிலப்பதிகார அடிகளைப் படித்து, அதை எங்களை எழுதிக்கொள்ளச் சொன்னார். பின்னர் கையினால் தாளம் போட்டுக்கொண்டே சீரறுத்து இரண்டு முறை பாடினார். மூன்றாம்முறை "தானாதான தனதான" என்று இசை ஏற்பத் தொடர்ந்து எங்களைப் பாடச் செய்தனர். நாங்கள் பாடிய 'கரு'விலிருந்து சீர் வகுத்து அப்படியே சீரும் அசையும் சொற்ப நேரத்துள் மிக இலகுவாகக் கற்பிக்கப் பெற்றோம். உடனே பாட்டுகள் புனையும்படி எங்கட்குக் கட்டளை பிறந்தது. காரிகை கற்காதே கவி பாட 'இசை' புரியும் உதவியை எங்கட்கு நன்கு காட்டினார். இதனால் உடனே கவிபாடக் கற்றுக்கொண்ட அனைவரையும் "நமது புலவர் மன்றம்" என்று அன்பொழுக அடிகளார் குறிப்பிடும்போது நாங்கள் களிமகிழ் பூப்போம். இவ்வாறு தமிழ் மணம் கொழிக்கும் ஒரு ஆங்கில மலராக இவ்வித்தியாலயத்தை ஆக்கினார். ஆங்கிலம், கணிதம், தமிழ், விஞ்ஞான சாஸ்திரம் முதற் சகல பாடங்களிலும் மாணவர்கள் திறமையான சித்தி பெற்றுவந்தனர்.

ஆங்கில பாடசாலைகளுக்கான கூட்டங்களிலும், மற்றும் ஆங்கில மயமான மகாநாடுகளிலும் இவ்வித்தியாலயத்தின் சமுகம் தனித்துத் தோன்றியது. தேசீய உடையும், தேசீய நடையும் இவ்வாறு ஆங்கிலத்தின் மத்தியில் அன்றும் இன்றும் எடுத்துக்காட்டாக நின்றுவர அடிகளார் கற்பித்தேகினர். பௌத்தம், கிறிஸ்தவம், இஸ்லாம் முதலாய சகல மதங்களின் அடிக் கொள்கைகளையெல்லாம் எடுத்துக்காட்டும் இராமகிருஷ்ண உபதேசங்கள் மாணவர்கட்குச் சமயசமரசத்தைக் கற்பிப்பன. விவேகானந்தருடைய வீரகர்ச்சனைகள் மாணவரை அஞ்சாத சிங்கங்களாக்குவன. காந்தீயம் தூய சத்திய மார்க்கத்தைப் போதிப்பதொன்று. இவற்றினை அடிப்படையாகக் கொண்ட சிறந்த சமயமும், ஒழுக்கமும், பழக்கங்களும் இவ்வித்தியாலயத்தே முக்கியமாகக் கற்பிக்கப்படுகின்றன. மாணவர்களின் கல்விமுதற் சகல பகுதிகளையும் கவனித்து அவர்கட்குள்ள தடைகளை நீக்கி உதவிபுரிய, வித்

தியாலய ஆசிரியர்களிற் பலரும், இராம கிருஷ்ண சங்கத்துத் துறவிகள் இரண்டொருவரும் உடன் வதிகிறார்கள். பாடசாலைக் கட்டிடங்களின் அமைப்பும், அமைதியான சூழலும், சதாவீசுகின்ற இனிய கடற்கொண்டற் காற்றும் இங்கு வரும் எவருக்கும் கல்வியின் மணத்தை உணரச்செய்யாமலிரா.

இடைக்காலத்து அடிகளாருடைய சேவையை அண்ணாமலைப் பல்கலைக்கழகம் வேண்டி நின்றது. அதன்மூலம் தமிழ் நாடு முழுவதற்கும் சேவை செய்யவேண்டிய கடமையையும் அவர் மறுக்கமுடியாதவரானார். அப்போது ஸ்ரீமான் ச. அம்பலவாணர் (B. Sc.) அவர்களை வித்தியாலய அதிபராக்கிச் சுவாமிகளுடைய பரிபூரண ஒத்துழைப்பு இவருக்குக் கிடைத்தது. தனக்குக்கிடைத்த எத்தனையோ உயர்ந்த உத்தியோகங்களையும் இக்கல்லூரியின் சேவைக்காகத் துறந்து சுவாமிகளுடைய இலட்சியத்துக்காக உழைத்துவரும் இவரது சேவை பாராட்டத்தக்கது. இலவசக் கல்வியின் பின்னர், அரசினர் கல்லூரிகளிற் கிடைக்கும் உயர்ந்த சம்பளத்தோடு கூடிய விசேட உத்தியோகங்களையும் மறுத்துச் சேவை செய்யும் ஆசிரியர்கள் இன்னும் சிலர் இங்கிருக்கிறார்கள். இன்னாருடைய தீவிர உழைப்பினாலும், மனப்பூர்வமான சேவையினாலும் பொது மக்களுடைய நல்லாதரவு இவ்வித்தியாலயத்துக்கு இருந்து வருகின்றது. விஞ்ஞான சாஸ்திரக் கலைகள் பலவும் உயர்தர வகுப்புகளுக்குக் கற்பிக்கக்கூடிய வசதிகள் அமைக்கப்பெற்றிருக்கின்றன. இவ்வித்தியாலயம் மதவேற்றுமை முதலிய எந்த வித்தியாசமுமின்றிப் பொது நோக்குடன் தேசத்துக்கு உயர்ந்த சேவை புரிந்து வருகின்றது.

சுவாமிகள் 'பிரபுத்த பாரத' ஆசிரியராக வடநாடு சென்றதன் பின்னர் உத்தியோக முறையான எவ்வித தொடர்பும் இதனுடன் அவருக்கு ஏற்படவில்லை. அவரைத் தொடர்ந்து பின்னர் முறையே வித்தியாலய பாரத்தை ஏற்ற இராம கிருஷ்ண சங்கத் துறவிகள், சுவாமிகளின் தூய சேவையையும் அரிய உயர்ந்த நோக்கத்தையும் பாராட்டி இதன் இலட்சியத்துக்குத் தாமும் நன்குழைத்தனர்; உழைத்து வருகின்றனர்.

இந்நல்நிலையில் ஒருநாள் வித்தியாலயமே அதிரும்படியான செய்தியொன்று கிடைத்தது. இந்நிலத்தின் தந்தையான 'ஸ்ரீமத் விபுலாநந்த சுவாமிகள் விண்ணுலகெய்தினர்' என்ற செய்தி இங்குள்ள ஒவ்வொரு அணுவையும் அசைத்தது. இராம பிரானது பிரிவு நோக்கி அயோத்தியில் பறவைகளும், விலங்குகளும், தாவரம் முதலிய சகல நிலையியற் பொருட்களும் அழுதன என்று கம்ப நாடார் கூறியதுபோலவே இங்கும் நடந்தது. 'வெளியுலகுக்கும் உயரிய சேவைசெய்து வருக' என்று இவரை அனுப்பிவைத்த சிவாநந்த வித்தியாலயம், 1947-ம் ஆண்டு ஆடி மாதம் 21-ம் திகதி மாலை அடிகளாருடைய பூதவுடலை மாத்திரம் தன்னிடம் திரும்பிவரப் பெற்றது.

"மாதர்களைப் போற்றிமிக
மதிமயங்கி வாழாது
மாதவனைப் போற்றி ஒளிர்
மதி நிறைந்து வாழ்ந்தாயே
காதகனை அந்தகனும்
கண்ணிலியை ஏமாற்றப்
போதமிலா தேகினையோ!
புவிமீதார் சரணெமக்கே!"

என்று பலகூறி மாணவர்களும் ஆசிரியர்களும் பரிதவித்தனர். திருவுடற் கடைசிச் சடங்குகள் சிறப்புற நடந்தன. வித்தியாலய எல்லையுள் ஒரு அழகிய ஆலமர நிழலில் சுவாமிகள் சமாதி வைக்கப்பட்டனர். தங்கள் குருதேவரை நினைத்து மாணவர்கள் தினம் அவ்விடத்தே காலைப் பிரார்த்தனை செய்து வருகிறார்கள். அவ்விடத்தில் ஒரு ஞாபகார்த்த மண்டபம் நிறுவ நிதி திரட்டப்படுகிறது. சுவாமிகள் விட்டகன்றபோதும் அவருடைய ஆன்ம ஆசீர்வாதம் இவ்வித்தியாலயத்துக்கு இருக்கிறது. கிழக்கிலங்கையின் ஆறுமுகநாவலரும், தமிழகத்தின் பொற்கால அகத்தியரும், "சிவாநந்த

# விபுலாநந்த வள்ளல்

[ வித்துவான், க. இராமலிங்கம் ]

---

சுவாமி விபுலானந்த அடிகள் தமது பரோபகார சிந்தையையும் விரிந்த மனப் பான்மையையும் 1913-ம் ஆண்டு பண்டிதர் மயில்வாகன ரென்னும் நாமத்துடன் எம்மைக் கொழும்புமா நகரிற் சந்தித்த பொழுது எமக் குணர்த்தி வைத்தார். அதுவே எங்கள் முதற் சந்திப்பு. 1917-ம் ஆண்டு தொடங்கி யாழ்ப்பாணத்தில் சில கல்லூரிகளில் ஆசிரியராயிருந்திருக்கிறார். என்னாலாக்கப்பட்டதெனச் சொல்லப் பெறும் மட்டுவில் கமலாசனை வித்தியா சாலைக்கு அக்காலங்களில் பிரசங்கத்திற் காக அடிகளையும் வேறுபலரையும் பல முறை அழைத்திருக்கிறேன். முதன் முறை அடிகள் வந்த வண்டிச் செலவைக் கொடுக்க முயற்சிக்க வித்தியா தருமத்தில் தனக்குப் பங்கில்லையோ என்று பகிடி செய்து மறுத்துவிட்டார். கமலாசனை வித்தியாசாலைத் தலைமையாசிரியர், முத்துக் குமாரு என்னும் ஒரு வறிய அனாதைச் சிறுவனின் குணாதிசயங்களைப்பற்றி அடிகளிடங் கூற, அடிகள் அச்சிறுவனைத் தன்னுடன் அழைத்துச் சென்று ஆங்கிலமும் தமிழும் பயிற்றி மட்டக்களப்பில் உள்ள இராமகிருஷ்ண வித்தியாசாலையில் ஆசிரியனாக வைத்திருந்தார். அகால மரணம் அவ்வாசிரியனை வாயிற் போட்டது. உடனே அடிகள் தலைமையாசிரியருக்குத் தந்தி சொல்லிச் சவத்தைக் கார்மூலம் மட்டுவிலுக்கு அனுப்பிவைத்தார். கற்றார் கல்லாதார் பெரியார் சிறியார் என்ற பேதமின்றிச் சகல சராசரங்களிலும் கடவுளின் சான்னியத்தைக் கண்டுணர்ந்து அன்பு பாராட்டிய புண்ணிய புருடன் என்பதைத் திருவருள் எமக்குணர்த்தியது. ஆதலின் தமியேனது கட்டுரையும் செய்யுட்களும் ஈழமணி நினைவு மலருக்கு மணங் குணம் தேசஸ் முதலியன பயக்காதென அஞ்சினேனாயினும் அடிகள் பேரிற் கொண்ட அன்பு மேலீட்டினால் வாணி வழங்க காணெழுதி அன்பளிப் பளிக்கின்றேன்.

---

வித்தியாலயம்'' என்னும் சாந்தி நிகேதத்தின் தாகூரும் ஆன அடிகளாருடைய புகழுக்கும், இலட்சியங்களுக்கும் இழுக்கு வராது இந்நிலையம் உழைத்து முன்னேங்கி வருகின்றது.

ஆநந்தமான சிவானந்தசாலை—இதை
அன்புடன் வணங்குவமே—(ஆனந்த)

1. தானம், அறம், கலை ஞானம் உயருக!
சாதன வாழ்வு தலைநிமிர்க!
மானமு யர்ந்து நல் மாணவர்கள் தாம்
வானமு யர்ந்து புகழ் பெறுக
பெறுக! பெறுக! புகழ் பெறுக! (ஆனந்த

2. இராமகிருஷ்ண மணிமொழி வழியே
சகல மதங்களும் ஒன்றவே
பரவிவளரும் பல்கலை நிலையே
பாரினில் ஓங்கிட வாழியவே
வாழ்க! வாழ்க! வாழியவே! (ஆனந்த

என மாணவர்கள் இதைப் போற்றிக் கலை பயில்கிறார்கள். இந்நிலையத்தினுடைய தளராத நல் வளர்ச்சிக்கு இறைவனது நல்லருள் என்றும் உடன் தங்குவதாக!

## வெண்பா.

1. கந்தனரு ளாலிந்தக் காசினியி லோர்குருவாய்
வந்தவிபு லானந்த வள்ளலே—பந்தவினைப்
பூதவுடம் போடு புகழுடம்பு மிங்கிருப்பச்
சோதியுடம் பேனெடுத்தாய் சொல்.

## கொச்சகம்.

2. செந்தமிழோ டாங்கிலமும் தேசுதரு மாரியமும்
சிந்தைகொளக் கற்றுமிகச் சிறந்ததோர் யாழ்நூலும்
தந்தெமக்குப் புகழீந்த தவக்கொழுந்தே தமிழ் நாட்டுச்
செந்திருவே திகழ்குருவே சிறந்தமயில் வாகனனே.

3. சன்மார்க்க மேமார்க்கம் சமயங்கள் மற்றதெலாம்
துன்மார்க்க மென்றுவிட்டுத் துறவுகொண்டு தொண்டாற்றி
விண்மார்க்கஞ் சென்றவிபு லானந்த விற்பனனே
எம்மார்க்கஞ் சென்றாலும் இனியுனையாம் காணுவமோ.

4. சன்மார்க்க நெறியோடு தமிழ்மொழியு மாங்கிலமும்
எம்மார்க்கத் தவர்க்கும்யா ழிசைநூலும் புகட்டிவைத்தே
துன்மார்க்க நெறிபூதாத் துறவறமுங் காட்டியெமக்
கெம்மார்க்கஞ் சென்றனையா மேங்கிமனம் வாடிடவே.

## அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

5. அந்நாளி லண்ணா மலைக்கழகத் ததிபதியாய்த் தமிழ்வ ளர்த்தாய்
பின்னாளி லீழத்துக் கழகமதிற் பெரியதமிழ் ஆசா னானாய்
இன்னாளில் யார்செய்த புண்ணியமோ இயலிசைநா டகங்கள் மூன்றும்
தென்னாரும் தேவர்கள்தம் கழகத்திற் செப்பிடநீ சென்றிட்டாயே!

6. உத்தமா சிரியனா யுவந்துநன் மாணவரை உய்ய வைத்தாய்
பத்திரா சிரியனாய்ப் பல்லோர்க்கும் பேரறிவு பரப்பி வைத்தாய்
புத்தியா யுலகமதில் துறவறமு மெல்லோர்க்கும் புகட்டி வைத்தாய்
பத்தியாய் ஸ்ரீராம கிருஷ்ணபதம் தேடிநீ பரந்திட் டாயே!

## பன்னிருசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

7. கல்வியறி வுடனாக நல்லதுற வானவுன்
கருணையை நினைந் தழுவனே
கமலா சனைக்கழக மதிலேபிர சங்கித்த
காட்சியை நினைந் தழுவனே
தொல்வினைக ணீங்கும்வகை இன்மொழிக ளாலெங்கு
சொன்னதை நினைந் தழுவனே
தூயமன சோடுமெமை ஆசீர்வதித் திட்ட
துதிகளை நினைந் தழுவனே
எல்லவர்க் குங்கலைகள் சொல்லிவைத் தீரென்னு
மெழிலதை நினைந் தழுவனே
இசைநூலை ஆக்கியிவ் வீழமதற் கேபுகழை
ஈந்ததை நினைந் தழுவனே

தில்லைநட ராசனின் சேவடிகள் மறவாத
சிந்தையை நினைந் தழுவனே
தேடவரு துறவுநெறி கோடாத நின்செயல்கள்
சிந்திக்கி லெவரு மழுவார்.

## கட்டளைக் கலித்துறை

8. ஏராட்டும் புன்னகை தன்னுட னேசொலு மின்சொற்களால்
தாலாட்டும் பிள்ளை சலிப்பகன் றூலன்ன சஞ்சலம்போம்
பாராட்டிப் பேசியெம் பக்குவம் கண்டு பகுத்துணர்ந்து
சீராட்டக் காணுவ மோவிபு லானந்த தேசிகனே.

9. அன்றுடுசெய்த அருந்தவத் தாற்கயிலை யங்கிரியைக்
கண்டே திரும்பியிக் காசினிக் கேயதைக் காட்டமனங்
கொண்டேகி வந்திங் குருவ மெழுதி உணர்த்தியங்கு
சென்றாய் திரும்புவை யோவிபு லானந்த தேசிகனே.

## ஆச்சிரமச்சிறர் கவலுற்றுத் தேறல்

(வள்ளிக்கணவன் பேரை வழிப்போக்கன் சொன்னாலும்தான் என்ற மெட்டு.)

I. ஸ்ரீராம கிருஷ்ணர் தங்கள் சிஷ்ய வர்க்கங்கள் தன்னுள்
செம்மல் விபுலானந்தா அடிகள்
எம்மைப் பிரிந்தாரம்மா ,,
எம்மைப் பிரிந்தா ரம்மா

II. எம்மைப் பிரியாமலே ஏகமாய் நிற்குமவர்
தம்மை யடைந்தாரையா அடிகள்
மெய்யை யுணர்ந்தாரையா ,,
மெய்யை யுணர்ந்தா ரையா

III. மெய்யுணர் வோடுமிங்கு மேதினி தன்னிற்காண
ஐயன் விபுலானந்தா அடிகள்
பைய வருகுவாரோ ,, (நா)
முய்ய வருகுவாரோ

IV. தெய்வ உருவெடுத்த தேசிகரென்று மெங்கள்
சிந்தை தனிலிருப்பார் அடிகள்
சிந்தித் துணர்வோமையா ,,
சிந்தித் துணர்வோமையா

V. சிந்தித் துணருமந்தச் சித்த சுத்தி வைத்தாலுந்தான்
பந்த வினை விடுமோ அடிகள்
பக்குவம் வந்திடுமோ ,,
பக்குவம் வந்திடுமோ.

VI. பக்குவம் பண்ணநட ராஜ ஆனந்தனெங்கும்
இப்பதி தன்னிலும் தான் அடிகள்
என்றும் இருப்பாரையா ,,
செப்பிய தந்தை ஐயா

# விபுலாநந்த அடிகளின் ★ ★ வாழ்க்கைச் சித்திரம்

[ த. இராமநாதபிள்ளை, B.A. (LONDON) ]

அருந்தவக்குரிசில் விபுலாநந்த அடிகளாவார், ஈழமண்டலத்திலே மட்டக்களப்பிலே, ஐம்பத்தைந்து யாண்டுகளுக்குமுன் தோன்றினார். அவரது இயற்பெயர் மயில்வாகனனார். அவர் இளவயதிலேயே ஆங்கிலமும் தமிழும் மட்டக்களப்பிலுள்ள கத்தோலிக்க கல்லூரியிலே கற்று முதன் மாணாக்கரெனப் புகழ்பெற்றார். அவர் கொழும்பிலுள்ள ஆசிரியர் கலாசாலையில் பயின்றபின், மதுரைத் தமிழ்ப் பண்டித பரீட்சையிலும் இலண்டன் பல்கலைக் கழகக் கலைப் பரீட்சையிலும் சித்தியடைந்து கலைஞர் எனத் திகழ்ந்தார். அவர் சிறிது காலம் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் தலைமையாசிரியராகச் சேவித்திருந்து, கலையின்பம் சுவையின்பம் இசையின்பம் என்பவற்றுக்கு அப்பாலாகிய பேரின்பம்பெற விழைந்து, இராமக்கிருஷ்ண மடத்தைச் சேர்ந்து துறவியாகினார். இராமக்கிருஷ்ண மடத்திலே அவர் ஆரியமும் சமயமும் புரைதபக் கற்றுத் தெளிந்தபின், இலங்கை வந்து விரிவுரைகள் பல செய்திருந்தனர். அக்காலத்தில் சுவாமியவர்கள் மட்டக்க

---

VII. தந்தையர் போலவந்தெம் சிந்தைக்கு நல்லுணர்வு
தந்துவருவாரம்மா — அடிகள்
சந்ததிப் பாக்கியமம்மா — ,,
சந்ததிப் பாக்கியமம்மா

VIII. சந்ததிப் பாக்கியமது வந்த தென்றாலுமது
முந்திய நல்வினையால் — அடிகள்
சிந்தை தெளிந்தாரையா — ,,
சிந்தை தெளிந்தாரையா

IX. சிந்தைக்கு நல்லுணர்வு வந்து தெளிந் தாலங்கு
சொந்தக் குருவாயிங்கு — அடிகள்
வந்தருள் செய்வாரம்மா — ,,
வந்தருள் செய்வாரம்மா

X. இந்தத் துணிவுடனே பந்தவினைகள் நீங்க
சிந்தனை செய்வோமையா — கடவுள்
வந்தருள் தந்திடுவார் — ,,
வந்தருள் தந்திடுவார்

### வெண்பா

கல்லா துணர்வு கலைமாது நல்கியதா
லெல்லாரும் வித்துவான் னென்றென்னைச்—சொல்லுவார்
சிந்தைக்குள் வாணிதனைச் சிந்தித்துச் செப்பினேன்
கந்தைய ராமலிங் கன்.

ளப்பு திரிகோணமலை என்னும் இடங்களில் இந்துக் கல்லூரிகளை நிறுவிக் கல்வியை வளர்த்து வந்தார்கள்.

சுவாமியவர்கள் மட்டக்களப்பு, கொழும்பு, யாழ்ப்பாணம், அண்ணுமலை நகர், கரந்தை, இமயம் முதலிய இடங்களில் விரும்பித் தங்குதல் வழக்கம். சுவாமியவர்கள் காவியணிந்தபின் யாழ்ப்பாணம் வந்திருந்த காலத்தில் கீரிமலை என்னும் புண்ணிய ஸ்தலத்திலே அவரை யான் முதன் முதல் தரிசித்தேன். சுவாமியவர்களைத் தரிசிப்போர் யாவரும் அவருடைய மழலைச் சொற்களைச் சலிப்பின்றி நெடுநேரம் கேட்டுக் கொண்டிருத்தலை யான் பலமுறையும் கவனித்தேன். சுவாமியவர்கள் 'மதங்க சூளாமணி' என்னும் நூலை இயற்றி நாடக நூற்பரப்பை விரிவுறச் செய்து சுவைகளின் சொரூபத்தை விளக்கினர். அவர்கள் தமிழ்ப் பொழில் செந்தமிழ் முதலிய திங்கள் வெளியீடுகளுக்கு அளித்த கட்டுரைகளை வாசித்தால் அவர்களுடைய உரைநடை செய்யுள்போல் ஓசையுடைய தென்பது புலப்படும்.

சுவாமியவர்கள் அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராகத் தொண்டாற்றிய காலத்தில், கலைஞர் பெருமான் அரிஸ்தாத்தில் இயற்றிய ஒழுக்க நூலை மொழிபெயர்த்துச் சுவாமியவர்களிடம் அனுப்பிவைத்தேன். சுவாமியவர்கள் அந்நூலுக்கு "யவனமஞ்சரி" எனப் பெயரிட்டுப் பண்டைய யவன புரத்துதித்த அறிவுச் சுடர் தமிழ் நாட்டில் பரவுதல் வேண்டும் என்னும் விருப்பம் அவர்கள் சிந்தையுட் கிடந்ததாதலின் அம் மொழிபெயர்ப்பு நூலினைத் தமிழ் நாட்டிற்கு அணிகலமென விளங்கும் 'செந்தமிழ்' வாயிலாக வெளியிட விழைந்து கையெழுத்துப் பிரதியினைப் பத்திரிகாசிரியருக்கு அனுப்பி வைத்தார்கள். நுண்மாண் நுழைபுலமிக்கு அளவைநூற் புலமை நிரம்பிய பேரறிஞராகிய திரு. நாராயண ஐயங்கார் அவர்களும் அதனை உவப்புடன் ஏற்று வெளியிட்டார்கள். பின்பு அந்நூலை யான் புத்தகமாக வெளியிடும்போது அடிகள் அணிந்துரை தந்து 'யவனமஞ்சரி'யை அணிபெறச் செய்தனர். அடிகள் காட்டிய அன்புக்கும் ஆதரவுக்கும் கைம்மாறு அந்நன்றி மறவாமையே.

சுவாமியவர்கள், அண்ணுமலையை விட்டு நீங்கி இமயஞ் சென்று இராமக்கிருஷ்ண கூட்டத்தார் வெளியிடும் பிரபுத்த பாரதத்தின் இதழாசிரியராக இருந்து வேதாந்த சூத்திரங்கள் முதலியவற்றை விளக்கி உரை செய்தனர். இமயத்திலிருந்து சுவாமியவர்கள் எழுதிய ஆராய்ச்சியுரைகளும், இமயஞ் சென்ற காக்கை, நீரர மகளிர் என்னும் கட்டுரைகளும் என் மனதை மிகவும் கவர்ந்தன. சுவாமியவர்கள் ஈழமண்டலம் திரும்பித் தான் கைலாயம் கண்ட வரலாற்றை இனிது வருணித்துக் கைலாயமடைய மாட்டாதோரை மகிழ்வித்தார்கள்.

பின்பு, சுவாமியவர்கள் கொழும்புப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராக இருந்த காலத்தில் சங்க விலக்கியங்களையும் தமிழிசை நூல்களையும் ஆராய்ந்து, மறைந்துகிடந்த யாழ் நூலை உருவாக்கி இயற்றி உதவினர்கள். அவ்வியாழ் நூலைச் சுவாமியவர்கள் கரந்தை சென்று அரங்கேற்றியபின் கொழும்பு திரும்பினர்கள். சுவாமியவர்கள் இசையுலகில் இறைவனுடன் கலந்து என்றும் இசைபெற்றிருப்பார்களாக.

விபுலாநந்த அடிகளைத் தமிழ்க் கூட்டத்தினருக்கு மாத்திரம் பயனளிக்க வல்லோர் எனக் கூறுதல் தவருகும். சுவாமியவர்கள் கலைவல்லோர்—வித்தை வல்லோர்—உரை வல்லோர்—பல் மொழிப் புலவர்—என்போர் யாவராலும் போற்றற்குரியவராவார்கள். அவர்கள் கவிஞராலும் அறிஞராலும் புலவராலும் புரவலராலும் மாணவராலும் ஆசிரியராலும் அமைச்சராலும் அரசராலும் பாராட்டுதற்குரியவராவார்கள். சுவாமியவர்களுடைய கலையாராய்ச்சியும், அளவை நுட்பமும், தத்துவ நூலுணர்ச்சியும், இலக்

# அருள் திரு. விபுலாநந்த அடிகளின் மேன்மையுரை.

[ பிரம்மஸ்ரீ ச. சோமசுந்தர ஐயர் அவர்கள் ]

**யான்** சில காலத்தின்முன் எனது தமையனாரவர்கள் எழுதி அச்சிட்ட கந்த புராண உற்பத்திகாண்ட உரையை உபயோகப்படுத்தும் தகுதியுடைய மேதாவியர்கட்குக் கொடுத்து அதன் மூலம் சேரும் பொருள் கொண்டு அடுத்த காண்டங்களை அச்சிடும் நோக்கத்துடன் வெளித்தேசங்களுக்குச் செல்ல எண்ணி மட்டுக்களப்புக்குச் சென்றபோது, காரைதீவிலுள்ளவர் சமயாபிமானமும் கல்வியறிவுமுடையாரென்றறிந்து ஆங்குச் சென்றேன். ஆங்கு ஸ்ரீமான் சாமித்தம்பி விதானை அவர்கள்தான் சைவாசார சீலரும் கல்வியறிவின் மேம்பட்டவரும் என அறிந்து அவரிடம் சென்றேன். அவர் தமது அருந்தவப் புதல்வரை அழைத்து அவரிடம் புத்தகத்தைக் கொடுத்தவுடன் பார்த்து அடங்கா ஆர்வமுற்றார். அப்புத்தகத்தை விநியோகஞ் செய்யும் விஷயத்திற் பிதாவும் பிள்ளையும் செய்த உதவிகள் பல. நான் அவ்விடம் தங்கியிருக்குஞ் சமயங்களில் ஸ்ரீ சாமித்தம்பி விதானையவர்கள் தாம் சற்புத்திரப் பேற்றை வேண்டி மனைவியாருடன் அநேக ஸ்தலங்களுக்குச் சென்று பகவானை வேண்டியதன் பயனாக இவ்வருந் தவப் புதல்வரைப் பெற்றதாகவும் அவர் ஸ்ரீமத் பு. பொ. வைத்தியலிங்க தேசிகரிடம் முறையாகத் தமிழ் கற்பதுமன்றி, ஸம்ஸ்கிருதமும் படித்து வருகிறாரெனவும், ஆங்கிலத்திலும் உயர்தர வகுப்பிற் சித்தியெய்துமாறு கவனமாகப் படிக்கிறாரெனவும் கூறி மகிழ்ந்தார். "விளையும் பயிரை முளையிற் றெரியும்" என்றபடி சிறுவயதிற்றானே மூன்று பாஷைகளையும் ஆர்வத்துடன் கற்பதும், இராக் காலத்தில் 12-மணிவரை நித்திரையின்றிப் படித்துவிட்டு அதிகாலையிலும் 4 மணிக்கே எழுந்து நித்திய கருமங்களை முடித்துப் புத்தகத்தை யெடுத்துப் படிப்பதும் ஆகிய இவைகளை நான் உற்று நோக்கி இவ்விதம் ஆறுதலில்லாமற் படிப்பதினால், மூளைக்குச் சில பிழைகளுண்டாகுமென ஓர் தினம் கூறவே, அதற்குத் தகுதியான சமாதானம் கூறியதுமன்றி, அன்றிரவு அதிக நேரம்வரை என்னையும் விழிக்கச் செய்து அநேக விஷயங்களை எனக்குத் தெரிவித்தார். ஸம்ஸ்கிருதப் புத்தகங்கள் சிலவற்றை எடுத்து அவைகளிலுள்ள சந்தேகங்களை நம்மிடங் கேட்டும் காலத்தைப் போக்கினர். அன்றிரவு அவருடன் சம்பாஷித்ததினால் நித்திரை தலைகாட்டாது மறைந்தது. அன்று அவருடன் பேசியதிலிருந்து நான்

---

கண இலக்கியப் பயிற்சியும், இசை வன்மையும் எல்லை கடந்தவையாதலின் அவர்களுடைய புகழ் தமிழுலகிலன்றி, நாகரீகமடைந்த உலகு முழுவதிலும் துலங்கா நிற்கும். சுவாமியவர்களுடைய ஆற்றல்களைப் பாவல்லோர் பாட வல்லோர் அல்லர்; பல்கலைக் கழக மாணவர் மதிக்க வல்லோர் அல்லர்; ஆசிரியர் அளக்க வல்லோர் அல்லர். மக்கள் இயற்கையாகப் பேசும் கொடுந் தமிழை இயற்றமிழ் எனவும் ஓசையில்லாப் பாடல்களை இசைத் தமிழ் எனவும் கருத்தில்லாக் கட்டுரைகளை நாடகத் தமிழ் எனவும் மயங்கும் இக்காலத்தில் முத்தமிழ் முனிவராகிய அடிகளைச் செந்தமிழ்க் கடல் தந்த அமிர்தம் என்றால் பொருத்தமாகாதோ! நிற்க: அடிகள், யாதியாது நன்மையாயும் நீதியாயும் உளதோ அதுவது அழகாகவும் நிலையாகவும் இருக்கும் என்னும் உண்மையை உணர்ந்து சுவைத்திருந்தார்கள் என்பதையும் அணுகுவோர் யாவருக்கும் அச்சுவையினை ஊட்டும் செந்தண்மை பூண்ட அந்தணராய்த் திகழ்ந்தார்கள் என்பதையும் தமிழ் மக்கள் மறவாதிருப்பாராக.

அநேக அரும்பெரும் விஷயங்களை அறிந்து கொண்டேன்.

பின், அவர் பிதாவுடன் சம்பாஷிக்கும்போது "தங்கள் குமாரன் சிலகாலத்தில் இவ்வுலகினர் மெச்சும் பெருந்தகையினராக விளங்குவார்" என்று கூறினேன். பின் சில யாண்டு கழித்துத் திரிகோணமலையிற் சந்தித்து அளவளாவிப் பேசியபோது தாம் B.A. பரீட்சையிற் சித்தியெய்தியதாகவும் ஓர் வித்தியாசாலையில் உபாத்தியாயராகக் கடமையாற்றுவதாகவும் கூறினர். யாழ்ப்பாணத்தில் ராமகிருஷ்ண மிஷன் பாடசாலையில் பின்னோர் முறை சந்தித்தபோது முன்னிலும் பார்க்க அதிக மனத்தூய்மையும் அறிவின் மேம்பாடும் அமைந்திருக்கக் கண்டேன்.

காலத்துக்குக் காலம் ஆங்காங்கு தமிழ் வளர்ச்சிக்கேற்ற சபைகளை ஸ்தாபித்தும் அநேகமானவர்கட்கு கல்வி யூட்டியும் பத்திரங்களில் அரும்பெரும் விஷயங்களை எழுதி வெளிப்படுத்தியும் தமிழகத்துக்குப் பெருந் தியாகியாயிருந்தார். அக்காலத்தில் "பண்டித மயில்வாகனனார்" என்னும் பெயருடன் விளங்கினர்.

சில காலத்தின்பின் இந்தியா தேசத்திற்குச் சென்று ஸ்தல யாத்திரை செய்து சன்னியாசாஸ்ரமத்தைப் பெற்று "விபுலாநந்த சுவாமிகள்" என்னும் திருநாமத்தைப் பெற்றுத் தாய்த் தேசமாகிய இலங்கைக்கு வந்து தமிழ் வளர்ச்சிக்கேற்ற பல சேவைகளும் செய்து அரும்பெரும் சபைகளிற் பிரசங்கங்களும் செய்தார். கன்னியாகுமரிமுதல் ஹிமாசல பரியந்தம் பெரும் புகழ் பெற்றார். வட இந்தியாவில் ஹிமாலயத்துக்குச் சமீபத்தில் பலகாலந் தங்கியிருந்து அவ்விடமுள்ளவர்கட்கு பேருதவி புரிந்தார். சங்கீத சாஸ்திரத்தில் மிக ஆழமாகப் புகுந்து இந்தியாவிலுள்ள சங்கீத வித்வான்கள் யாரும் மெச்சத் தகுந்த விதம் "யாழ் நூலை" நிரப்பி அரங்கேற்றினர். இன்னும் அடிகள் தமிழருக்கும் தமிழ்த் தேசத்துக்கும் செய்த பேருதவியை யான் எடுத்துக்கூற வேண்டியதில்லை யாவரும் நன்கறிவர்.

அடிகள் நிரம்பிய கல்வியறிவும் ஞானமும் அமைந்தவராக உலகத்தில் எத்தகைய மேதாவியரும் கொண்டாடும் நிலைமை அமைந்திருக்கும் சமயத்திலும், சில சமயம் தமக்கு முதலிற் தமிழ்க் கல்வியை ஆரம்பித்து ஊட்டிய குருவை மறவாது நன்றி செலுத்துவார்கள். செய்த நன்றி மறவாப் பெருந்தகையார். தம்மிடம் நிறைந்துள்ள கல்வியின் மேன்மையாற் செருக்குற்று மற்றையோரை அவமதிக்கும் குணம் அடிகளிடமில்லை. சிறியார், பெரியார், படித்தவர், படியாதவர் என்னும் வித்தியாசம் பாராமல் எவருடனும் அன்புடன் பயிலுமியல்புடையார். தம்மையடைந்தவர்கள் அறிவு கல்வியாற்றல் இல்லாதவர்களாயின் தமது உடல் நலத்தையுமே கருதாமல் அவர்கட்கு அறிவு மேம்படும் கல்வி யூட்டி உயர் நிலையில் வைக்கும் தியாகி.

இத்தகைய பெரியார் இன்னும் பல காலம் நற்சுகத்துடனிருந்து தமிழுலகிற்குப் பேருபகாரஞ் செய்வாரென எண்ணியிருந்தோம். அதற்கு மாறாக, அடிகள் தமது பூதவுடலை இப்புவியில் விடுத்து புகழுடம்பைத் தமிழுலகமுழுதும் வியாபிக்க வைத்து, இறைவன் பாதகமலத்தின்புறும் பேரின்ப வாழ்வையடைந்தார்கள். அடிகளின் பிரிவு அவர் குடும்பத்தினருக்கும் உலகத்தினர் யாவருக்கும் பெருந் துன்பமாயினும் அன்னார் இன்ப வாழ்வடைந்தமை குறித்துச் சந்தோஷித்துப் போற்றுவதே முறையாகும்.

# பேராசிரியர், உயர்திரு.

# விபுலாநந்த அடிகள் வரலாற்றுக் குறிப்பு

[மயிலை, சீனி. வேங்கடசாமி அவர்கள் தொகுத்தெழுதியது.]

---

*1892* மார்ச்சு மீ 29-உ (கர வருஷ பங்குனி மீ 16-உ ஞாயிற்றுக்கிழமை உதயத்தில் பூரட்டாதி நக்ஷத்திரத்தில்) பிறப்பு.

*1898* கல்விப்பயிற்சி தொடங்கப்பட்டது.

*1901* தகப்பனுருடன் கதிர்காமயாத்திரை. கல்முனை என்னும் ஊரில் உள்ள ஆங்கில பாடசாலையில் சேர்ந்து ஆங்கிலம் பயின்றார்.

*1904* மட்டக்களப்புப் பட்டினத்தில் உள்ள மெதொடிஸ்து மிஷன் மத்திய பாடசாலையில் சேர்ந்து கல்வி பயின்றார்.

*1906* மட்டக்களப்பில் செய்ன்ட் மிக்கேல் பாடசாலையில் கல்வி பயின்றார். இவ்வாண்டு டிசம்பரில் கேம்ப்ரிட்ஜ் ஜூனியர் பரீக்ஷையில் தேர்ச்சியடைந்தார்.

*1908* கேம்ப்ரிட்ஜ் சீனியர் பரீக்ஷையில் தேர்ச்சியடைந்தார்.

*1909—10* மட்டக்களப்பு செய்ன்ட் மிக்கேல் பாடசாலையில் ஆசிரியர்.

*1911* தாயார், கண்ணம்மையார் காலஞ்சென்றார்கள். ஆகவே, சொந்த ஊருக்குச் சென்று, கல்முனையில் உள்ள கத்தோலிக்க மிஷன் பாடசாலையில் ஆசிரியராக அமர்ந்தார்.

*1911—12* கொழும்பு நகர் ஆசிரியர் கல்லூரியில் ஆசிரிய பயிற்சி.

*1913—14* மட்டக்களப்பு செய்ன்ட் மிக்கேல் கல்லூரியில் ஆசிரியர்.

*1915—16* இலங்கை அரசினர் டெக்னிகல் கல்லூரியில் விஞ்ஞானம் பயின்று தேர்ச்சியடைந்தார். மதுரைத் தமிழ்ச் சங்கத்துப் பண்டித பரீக்ஷையில் தேர்ச்சியடைந்தார். இது முதல், பண்டித மயில்வாகனனார் என்னும் பெயர் பெற்றார்.

*1917* கொழும்பு அரசினர் கல்லூரியில் வேதிநூல் உதவி ஆசிரியர்.

*1920* இவ்வாண்டில் யாழ்ப்பாணத்து செய்ன்ட் பேற்றிக்ஸ் கல்லூரியில் வேதிநூல் தலைமை ஆசிரியர். B. Sc. (London) பரீக்ஷையிலே தேர்ச்சியடைந்தார்.

*1920—22* மானிப்பாய் இந்துக்கல்லூரியின் தலைமை ஆசிரியர். இக்காலத்தில் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்திற்குச் சிறந்த தொண்டுபுரிந்தார்.

*1922.* சென்னை, மயிலாப்பூர் இராமகிருஷ்ண மடத்தில் சேர்ந்தார். பிரபோத சைதன்யர் என்னும் பிரமசரிய ஆசிரமப் பெயர் சூட்டப்பெற்றார். இராமகிருஷ்ண மடத்தில் வெளியிடப்பெற்ற இராமகிருஷ்ண விஜயம் (தமிழ்), வேதாந்தகேசரி (ஆங்கிலம்) பத்திரிகைகளுக்கு ஆசிரியராக இருந்தார். இக்காலத்தில் சென்னையில் பல கழகங்களிலும் சங்கங்களிலும் சொற்பொழிவு நிகழ்த்தினார். செந்தமிழ் முதலிய பத்திரிகைகளுக்குக் கட்டுரைகள் எழுதினார்.

*1924* சித்திரை பௌர்ணமியில் துறவு பூண்டு விபுலாநந்த சுவாமி என்னும் துறவுத் திருநாமம் பெற்றார்.

*1925* மார்ச்சு மீ காலி, நாவலப்பிட்டி, கண்டி, மாத்தளை, தொப்பிதோட்டம், வதுளை முதலிய ஊர்களில் அழைக்கப்பட்டுச் சொற்பொழிவுகள் செய்தார்.

*1925* ஏப்ரல் மீ மட்டக்களப்பில் ஆங்கிலக் கலாசாலை ஏற்படுத்துவதுபற்றி யோசிக்க, கல்லடியுப்போடை என்னும் ஊரில் ஒரு மகாசபை கூட்டினார். யாழ்ப்பாணம் மாணவர் மகாநாட்டில் தலைமை வகித்தார். சைவ மாணவர் சங்கத்தில் விரிவுரை.

*1925* ஜூன் மீ காரைதீவு, ஆனைப்பந்தி, மண்டூர், ஆரப்பற்றை என்னும ஊர்

களிலுள்ள பாடசாலைகளைப் பராமரிக்கும் பொறுப்பைக் கையேற்றார். இப்பாடசாலைகள் மட்டக்களப்பு விவேகாநந்த சபையின் ஆதரவில் நடைபெற்றன.

1925 ஜூன் மீ 8-உ மதுரைத் தமிழ்ச் சங்கத்தார் மகாமகோபாத்தியாய சுவாமிநாதையருக்கு அளித்த பொற்கிழி விழாவிற்கு (ஈழநாட்டு வித்துவான்கள் பிரதிநிதியாக) சென்றார். 9-உ மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் விரிவுரை நிகழ்த்தினார்.

1925 ஆகஸ்டு மீ கொழும்பு, கண்டி, நாவலப்பிட்டி, அநுராதபுரம் முதலிய ஊர்களில் சமயப் பிரசாரம்.

1925 அக்டோபர் மீ 28-உ காரைதீவு சாரதா வித்தியாலயத்தின் அஸ்திவாரக்கல் நாட்டினார். (இவ்வித்தியாலயம் பெண்கள் படிப்பதற்காக, சுவாமிகளின் அம்மானாகிய இராமநாத பிள்ளை அவர்களால் ஏற்படுத்தப் பட்டது. தமது காணிகளையெல்லாம் இராமநாத பிள்ளை அவர்கள் இவ்வித்தியாலயத்திற்கு அளித்தார்.)

1925 நவம்பர் மீ 6-உ கல்லடியுப்போடை சிவாநந்த வித்தியாலயத்தின் அஸ்திவாரக்கல் நாட்டினார். (இந்த வித்தியாலயத்திற்கு நிதியளித்தவர்கள் கல்லடியுப்போடையில் பிரபல தனவந்தர்களான கதிர்காமத் தம்பியுடையார், சபாபதிப்பிள்ளை உடையார் என்பவர்களின் சந்ததியாராவர்.)

1925 நவம்பர் மீ 30-உ திருக்கோணமலை ஆங்கில கலாசாலைப் புதுக்கட்டிடத்திற்கு அஸ்திவாரக்கல் நாட்டினார்.

1926 பிப்ரவரி மீ 15-உ யாழ்ப்பாணத்து வண்ணார்பண்ணை வைத்தியேஸ்வரர்வித்தியாலயம், விவேகாநந்த வித்தியாலயம் என்னும் பாடசாலைகளை நடத்தும் பொறுப்பை ஏற்றுக் கொண்டார்.

1926 மார்ச்சு மீ 24-உ விவேகாநந்த சபையார் வேண்டுகோளின்படி கொழும்பு நகரில் விவேகாநந்த வித்தியாலயத்தைத் தொடங்கி வைத்தார். இம்மாதத்தில், திருக்கோணமலை மட்டக்களப்பு பகுதிகளில் கல்வி விஷயங்களையோசிக்கும் சபையின் அங்கத்தினராக இலங்கை அரசாங்கத்துக் கல்வி இலாகா அதிகாரிகளால் நியமிக்கப்பட்டார்.

1926 ஏப்ரல் மீ 7-உ கல்கத்தா வேலூரில் உள்ள ஸ்ரீ ராமகிருஷ்ண தலைமை மடத்தில் நடைபெற்ற மகாநாட்டில் இலங்கைப் பிரதிநிதியாகச் சென்றார்.

1926 ஜூன் வைத்தியேஸ்வர வித்தியாலயத்தின் சார்பாக, அனாதைச் சிறுவர்களின்பொருட்டு மாணவ இல்லம் ஏற்படுத்தினார்.

1927 ஏப்ரல் மீ 19-உ மதுரை சேதுபதி அரசர் தலைமையில் கூடிய, தமிழ்ப் பல்கலைக் கழகம் நிறுவுவதுபற்றி ஆலோசனைக் கழகத்தில் தமது கருத்துகளை விளக்கிக் கூறினார்.

1927 ஆகஸ்டு மீ 27-உ கண்டி சைவ மகா சபை ஆண்டு விழாவிற்குத் தலைமை வகித்தார்.

1927 நவம்பர் மீ 26-உ யாழ்ப்பாணம் மாணவர் மகாநாட்டுக்குத் தலைமைவகித்தார். 27-உ இலங்கைக்கு விஜயம்செய்த மகாத்மா காந்தியை, மாணவர் மகாநாட்டுத் தலைவர் என்னும் முறையில் வரவேற்றார்.

1928 ஜூன் முன்பு பொறுப்பேற்ற பாடசாலைகளின் பொறுப்பை பிறரிடம் ஒப்படைத்து திருக்கோணமலை ஆங்கில கலாசாலையை வளர்க்கும் நோக்கத்தோடு இப்பாடசாலைக்குத் தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொண்டார்.

1929 மே மீ கல்லடியுப்போடைச் சிவாநந்த வித்தியாலயத் திறப்புவிழா. இந்த வித்தியாலயத்தின் நிலத்தையும் கட்டிடத்தையும், கல்லடியுப்போடை தமிழ் வித்தியாலயத்தையும் கதிர்காமத் தம்பி உடையார், சபாபதிப்பிள்ளை உடையார் சந்ததியார் நன்கொடையாக அளித்தார்கள். இந்நன்கொடைகளை, இலங்கை இராமகிருஷ்ண சங்கத்துக்காக நமது சுவாமிகள் கையேற்றார்கள்.

1930 ஜூலை மீ திருக்கோணமலை கலாசாலைத் தலைமை ஆசிரியர் பொறுப்பை இன்னொருவரிடம் கொடுத்துவிட்டு, சங்கத்துப் பாடசாலைகளைப் பரிபாலிக்கும் பொறுப்பைக் கையேற்றார்கள். யாழ்ப்பாணத்து ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தார் சுவாமிகளைப் பண்டித பரீக்ஷகராக நியமித்தார்கள்.

*1931* ஜனவரி மீ ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் வேண்டுகோளின் படியும், சங்கத்துப் பெரியோர்கள் கருத்துப் படியும் அண்ணாமலைச்சர்வகலாசாலைத்தமிழ்ப் பேராசிரியராக அமர்ந்தார்கள். சர்வகலா சாலையில் பெற்ற ஊதியத்தை, சிவாநந்த வித்தியாலயத்திற்கு அளித்தார்கள்.

*1931—1933* அண்ணாமலை பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர்.

*1934* கரந்தைத் தமிழ்ச் சங்கத்து 22-ம் ஆண்டு விழாவிற்குத் தலைமை.

*1935* டிசம்பர் வேலூரில் நடைபெற்ற சைவ சித்தாந்த சமாஜத்தின் 30-ம் ஆண்டு விழாவிற்குத் தலைமை பூண்டார்.

சென்னைப் பல்கலைக் கழகத்தார், தமிழ் ஆராய்ச்சிக் குழுவில் அங்கத்தினராக நியமித்தார்கள்.

*1936* பிப்ரவரி மீ 22-உ சென்னைப் பல்கலைக் கழகத்தில் ''யாழ்ப்பாணன்'' என்னும் சொற்பொழிவு.

24-உ ''தமிழிசை'' என்னும் சொற்பொழிவு.

25-உ ''சிலப்பதிகார அரங்கேற்றுக் காதை'' சொற்பொழிவு.

27-உ ''7-ம் நூற்றாண்டிலும் அதற்குப் பின்னரும் இருந்த தமிழிசை'' என்னும் சொற்பொழிவு.

28-உ ''பழந் தமிழகத்தின் சிற்பாசாரிகள்'' என்னும் சொற்பொழிவு.

29-உ ''பரிசனவேதி'' என்னும் சொற்பொழிவு.

டிசம்பர் மீ 20-உ சென்னை மாகாணத் தமிழர் சங்கத்தின் ஆதரவில் சென்னை பச்சையப்பன் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற கலைச்சொல்லாக்க மகாநாட்டிற்குத் தலைமை தாங்கினார்.

இமயமலைக்கு வடக்கேயுள்ள திருக்கயிலாய மலைக்கு யாத்திரை செய்தார்.

*1939—1941* ''பிரபுத்த பாரத'' என்னும் ஆங்கில மாதப்பத்திரிகையின் ஆசிரியராக இருந்தார். இது ஸ்ரீராமகிருஷ்ண தலைமை மடத்தின் பத்திரிகை. இக்காலங்களில் இமயமலைச் சாரலில் உள்ள மாயாவதி என்னும் இடத்தில் தங்கியிருந்தார்.

*1943* இலங்கைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராக அமர்த்தப்பட்டார்.

*1947* மே மீ 5, 6 தேதிகளில் கும்பகோணத்துக்கடுத்த திருக்கொள்ளம்பூதூரில் ''யாழ் நூல்'' அரங்கேற்றம்.

*1947* ஜூலை மீ 19-உ இரவு $1\frac{1}{4}$ மணிக்கு கொழும்பு மாநகரில் வீடுபேறடைந்தார்.

# தமிழ் நாட்டுத் தவப் புதல்வர்

[ சைவப் புலவர், வ. சுப்பிரமணியம் ]

அமிழ்தினுமினிய தமிழ்மொழி மிளிரும் ஈழநாட்டன்னை தனது அருந்தவப் புதல்வனை இழந்தனள். எழிலுறு புதல்வனை இழந்து தழலுறு மெழுகதுபோலக் கரைகின்றனள். தமிழன்னையின் கண்மணி மறைந்தது. தமிழ் மக்கள்தம் தவச் செல்வர் ஒழிந்தார். தமிழ் உலகம் அருந் தமிழ்க் களஞ்சியத்தை இழந்து அலமருகின்றது. ஆராய்ச்சி உலகம் ஆயுமறிஞரைத் தோற்று அவலப்படுகின்றது.

அடிகளாவார் மீளா வழியை அறிந்து சென்று இறைவனடி சேர்ந்ததினல், அறிஞர் அதற்குச் சிறிதும் வருந்தாராயினும், உலகியலையொட்டி, விலை மதித்திடற்கரியதும், விட்டொளிர்வில் பெருக்குவதுமாகிய நன்மணியொன்று திடீரென மறைந்ததுபற்றி நாம் வருந்தாதிருக்க முடியாது.

பல் கலைகளிலும் வல்லுநராகிய சுவாமிகள் கொழும்புமாநகரில் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியராயிருந்தது யாவருமறிந்த விஷயம். தமிழ், சம்ஸ்கிருதம், ஆங்கிலம் என்னும் முப்பாஷைகளிலும் பாண்டித்தியம் பெற்ற பெரியார். இசை நூலிலும் வல்லுநர். நுண்மாண் நுழைபுலம் மிக்க இப்பெரியார், தமது பேச்சினுலும், எழுத்தினுலும், செய்கையாலும் ஆற்றிய தொண்டுகள் அளவிறந்தன. அறிஞர்கள் அருவி கண்களிற் பெருகிட அன்பே உருவாய் ஆனந்தவாரிதியிற் றிளைக்கவும், பண்டிதர்கள் யாண்டும் இவரிற் புலவரைக் கண்டிலமென்று சொல்லவும், ஒன்னர் அகத்திற் புகழ்ந்து புறத்திற் சுளிக்கவும், பிரசங்கமாரி பொழியும் கொண்டல். ஆங்கிலத்திலும் தமிழிலும் தனித்தும் மொழிபெயர்த்தும் கத்திய, பத்திய ரூபமாய் யாத்த நூல்களும் பல; அவற்றுள் 'மதங்க சூளாமணி' 'யாழ் நூல்' என்பன தனிச் சிறப்புற்று விளங்குகின்றன. இங்ஙனம் சுவாமிகள் இரு பாடைகளுக்கும் புத்துயிரளித்திருக்கின்றனர். சிவபதமடைவதற்குச் சில தினங்கட்கு முன்னரே, யாவராலும் தேடுதற்கரிதாய், அருகி அழிந்தொழிந்த இசைக் கலையின் பண்புகளைப் பல்லாண்டுகளாக ஆராய்ச்சி செய்து தொகுத்தெழுதிய யாழ் நூலைத் திருக்கொள்ளம்பூதூர்க் கோயிலில் ஆளுடைய பிள்ளையார் முன்னிலையில், பல அறிஞர்கள் குழுமிய சபையில் அரங்கேற்றி வெளியிட்ட செயற்கருஞ் செயல் எவரும் வியக்கத்தக்க தொன்றேயாம்.


சுவாமிகள் அன்பு, அருள், பொறை நிறையாதியாம் சுகுணங்கள் நிறைந்து, தனக்கெனவாழாப் பிறர்க்குரியாளனுதலில், மன்பதை உய்வான் வழிநாடி, யௌவன பருவத்திலேயே, ஐம்புலனை அடக்கிச் செம்பொருளையடைய வழிகாட்டும் இராமகிருஷ்ண சங்கஞ் சார்ந்து துறவுபூண்டு மெய்ஞ்ஞான வழிகாட்டிய நன்னெறியொழுக்கும் தொண்டும் நம்மனோர் பின்பற்றற்கேற்ற எடுத்துக்காட்டுக்களாம்.

இன்னணம் தமது உடல் பொருளாவி மூன்றினையும் சீரிய தொண்டினுக்கே அர்ப்பணஞ் செய்த அடிகள், பூதவுடம்பு நீத்துப் புகழுடம்பு பெற்றனராயினும், இத்தமிழகமும் சைவ நாடும் உள்ளவரையில், அவரது புகழுடம்பு கோடி சூரியப் பிரகாசம்போல மிளிர்ந்துகொண்டேயிருக்கும். அவர்கள் நமக்கு என்ஞான்றும் தோன்ருத் துணையாயிருந்து நம்மை நன்னெறியிற் செலுத்துவார்கள் என்பதிலெட்டுணையுமையமின்று.

**சுவாமிகள் திருவடி வாழ்க, வாழ்கவே!**

# விபுலாநந்த மணி

[ கொழும்பு, அருள். தியாகராஜா ]



அருள். தியாகராஜா அவர்கள்

---

“ தவலருந் தொல் கேள்வித் தன்மை யுடையா
ரிகலில ரெஃகுடை யார் தம்முட் குழீஇ
நகலி னினிதாயிற் காண்பா மகல் வானத்
தும்ப ருறைவார் பதி. ”

செந்தமிழன்னையை மணியாசனத்திலேற்றி மகிழ்வித்த தமிழர் பெருந்தகையாகிய ஸ்ரீ விபுலாநந்த அடிகள் ஈழநாட்டின் கணுள்ள, மட்டக்களப்பிலே, 1892-ம் ஆண்டு மார்ச்சு மீ 27-ந் திகதிக்குச் சரியான கர ஹூ பங்குனி மீ 16-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை உதயத்தில் பூரட்டாதி நக்ஷத்திரத்தில் மீன லக்கினத்தில் சாமித்தம்பியாருக்கும் கண்ணம்மையாருக்கும் புத்திரராகத் திருவவதாரஞ் செய்தார்கள். அவருடைய ஜாதகத்தின் கிரக நிலை பின்வருமாறு :—

| | | | |
|---|---|---|---|
| ல வி சூரி | சுக் புதன் ராகு | 3 | 4 |
| சந் | | | 5 |
| | | | 6 |
| சே | 9 | கேது | சனி |

அவருடைய ஜாதகத்திலிருந்து, அவர் ஓர் பெரிய துறவியாகவும், அருங்கலை நிதியமாகவும், பிற்காலத்தில் திகழ்வாரென்பதைச் ஜோதிஷத்தில் நிரம்பிய புலமையெய்தாதாரும் கூறுவர். அடிகளுக்கு அவர் தந்தையாரிட்டழைத்த பெயர் மயில்வாகனன். அடிகள் செந்தமிழையும், ஆங்கிலத்தையும் நிரம்பக் கற்று அவைகளில் நல்ல பாண்டித்தியமடைந்தபின் வடமொழியையும் தொடர்ந்து கற்றார்கள்,

கல்வியறிவின் காரணமாக இவருடைய புகழானது ஈழநாட்டிலும் பரதகண்டத்திலும் வரம்பின்றிப் பரந்து சென்றது.

சுவாமிகள் தமக்கிருந்த புலமையின் காரணமாகச் “செந்தமிழ்”, “இராமகிருஷ்ண விஜயம்”, “தமிழ்ப்பொழில்” முதலிய மாதாந்த வெளியீடுகளுக்கு அனேக உயரிய கட்டுரைகள் வழங்கினார்கள். வேதாந்த கேசரி (‘Vedanta Kesari’) பிரபுத்த பாரத (‘Prabuddha Bharatha’) முதலிய சிறந்த ஆங்கில வெளியீடுகளுக்கு ஆசிரியராகத் தொண்டாற்றி, பல பெரியார்களின் உள்ளத்தைக் கொள்ளை கொண்டு, அவர்களுடைய நன்மதிப்பையும் பெற்றார்கள். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலும் இலங்கைப் பல்கலைக் கழகத்திலும் முதற்றமிழ்ப் பேராசிரியராகக் கடமையாற்றிய பெருமை, அடிகளுக்கே உரியது. திருவாவடுதுறை, தருமபுரம், திருப்பனந்தாள், சூரியனார்கோயில் முதலிய ஆதீனங்களுடன் தொடர்புடையவராய் இருந்து, அவ்வாதீன கர்த்தாக்களின் நட்பையும், மதிப்பையும் பெற்றார். அவ்வாதீனங்களிலுள்ள ஏட்டுச் சுவடிகளை ஆராய்ந்து, தமது புகழை என்றும் நிறுவவல்ல “யாழ்நூல்” என்னும் இசைநூலை அரிதின் முயன்று வெளியிட்டார்கள். யான் சென்ற மார்கழி மாசத்தில் தருமபுர ஆதீனத்திற்குச் சென்றிருந்தேன். அங்கே 25-ம் பட்டத்தில் எழுந்தருளியிருக்கும்

ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள், விபுலாநந்த அடிகளின் பிரிவை மிக்க வருத்தத்துடன், எமக்குக் குறிப்பிட்டார்கள்.

அடிகளுடைய, சமயப்பற்று மிகவும் வியத்தற்குரியது. மதுரையென்று மும்மையும் பெருமை வாய்ந்த க்ஷேத்திரத்தில் ''துவாசாந்தப் பெருவெளியில், துரியங் கடந்த பரநாத, மூலத்தலத்து முளைத்த முழுமுதலாகிய அருள் சூல்கொண்ட அங்கயற் கண்ணம்மையிடம் (மீனாக்ஷியம்மை) மிக்க பேரன்புடையவர். அனேகமாகச் சுவாமிகள் சொற்பொழிவாற்றுமுன் தொடுக்குங் கடவுட் பழம்பாடற்றொடையின் பயனே, நறைபழுத்த துறைத் தீந்தமிழி னொழுகுநறுஞ் சுவையே...........'' என்று தொடங்கும் மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழைப் பாடித்தான், அப்பால் தன் சொற்பொழிவையாற்றுவார்கள்.

அதுவுமன்றி 'ஓங்கொளியா அருள் ஞானமூர்த்தியாகி உலகமெல்லாம் அளித்தருளும் உமையம்மை காண, மணிமன்றுள் நிருத்தம் செய்யும்' ஸ்ரீமங் நடராச மூர்த்தியிடம், சுவாமிகள், எல்லையில்லாததோரன்பு பூண்டவர். அடிகள் இந்தியாவிற்குச் செல்லுங் காலங்களில், அனேகமாகச் சிதம்பரத்தில் தங்கிச் சனக முனிவர்களும், சித்தர் வித்தியாதரர்களும், தும்புரு நாரதரும், ஏனைய அமரர்களும் வந்து வணங்கும் தில்லையப்பனை நன்புலனொன்றிப் பாடிப் பரவிப் பணிந்து செல்லும் வழக்கமுடையவர்.

அருச்சுனனைப் போலச், சுவாமிகள், காவிரியென்னும் நதியானவள், திருவரங்கத்தில் தன் திரைக்கைகளால் அடிவருட தென்திசை நோக்கிப் பள்ளிகொள்ளும் கருணைமாமுகிலாகிய, ஸ்ரீ ரங்கநாதனிடம் மிக்கதோர் பெருவிருப்புடையவர். ஸ்ரீமங் நாராயணமூர்த்தியின் பிரபாபத்தைச் சொன்மாலைகளால் கூறும் திவ்வியப் பிரபந்தத்தில் மிகவும் ஈடுபட்டவர். 'பிரபுத்த பாரத' 1941 நவம்பர் மாத வெளியீட்டில் 'ஆசிரியர் கருத்துரையாக' சுவாமிகள் எழுதிய (Religious revival in Medieval India) பொருளுரையினை வாசிப்பவர்களுக்குக் கிருஷ்ணபரமாத்மாவிடம், சுவாமிகளுக்கிருந்த பிரேமை விளங்கும். அக் கட்டுரையின் மொழிபெயர்ப்பின் ஓர் பகுதி வருமாறு ''...தென்னாட்டு வைணவமோ வென்றால், ஆழ்வார்களாகிய ஊற்றினின்று உதித்து, அன்பு வெள்ளம் பெருக்கி, வடக்கு நோக்கி அலையெறிந்து பாய்ந்து பாரதநாடு முழுவதும் பரவியது. முன்னாளிலே பகீரதர் என்னும் பெரியார் கங்கையாகிய வானதியினைப் பூவுலகிற்குக் கொணர்ந்தாரெனப் புராணங் கூறும். இராமநுஜ முனிவராகிய பகீரதர் தென்னாட்டுத் தெய்வக் காவிரி வெள்ளத்தினை வடநாட்டுக் கங்கையிலே கலக்குமாறு செய்தார். இத்தகைய கலப்புக் கங்கை நதியூற்றெடுக்கும் திருமலைக்கும் சென்று சேரும் கடலுக்கும் இடையே கிடந்த பலவிடங்களிலும் நிகழ்ந்தது. கலப்பினால் ஏற்பட்ட அன்பு வெள்ளம் பாரத நாட்டின் மேற்குத் திசையிலும் பரவியது. மும்மையும் செம்மை வாய்ந்த இப்பாரத நாட்டில் அரியின் திருநாமம் ஆயிரமும், யாங்கணும் முழங்குவவாயின.''

சுவாமிகளுக்கு 'பண்ணொடு யாழ்வீணை பயின்றவரும், நாற்றிசைக்கும் விளக்காய நாதரும் நான்முகற்கும் மாற்கும் அரியவருமாகிய', கயிலைமலையானிடத்தில் ஆராத பெருங்காதல் முறுகி வளர்ந்துகொண்டே வந்தது. அதன் விளைவாக எமது விபுலாநந்த அடிகள், 1937-ம் ஆண்டில், திருநாவுக்கரசு சுவாமிகளும் அந்நாட்களில் தரிசிக்க முடியாத, திருக்கயிலை மலையைக் 'கண்டு கும்பிட விருப்பொடுங் காதலின் அடைந்து' தெரிசித்துத் திரும்பிவந்து 'வெள்ளிவெற்பின் மேல் மரகதக்கொடியுடன் விளங்கும், தெள்ளு பேரொளிப் பவள வெற்பென இடப்பாகம், கொள்ளுமாமலை யாளுடன் கூட வீற்றிருந்த வள்ளலாரைக்' கண்ணால் பருகி, அதனாலவரடைந்த சிவானுபவத்தைப் பல பிரசங்கங்கள் வாயிலாகப் பொழிந்து எம்மைப் பரமானந்த வெள்ளத்தில் ஆழ்த்தினார்கள். இஃதொன்றுக்கு மாத்திரம் ஈழநாட்டவர்களாகிய யாம் சுவாமிகளுக்குச் செய்யும் கைம்மாறொன்றுளதோ? யான் அறியேன்! ஈழத்தினின்றும் போந்து, கைலாசபதியைத் தெரிசனஞ் செய்த தன்னந் தனிப் பெருமை சுவாமியவர்களுக்கு மட்டுமே உரியது.

சுவாமிகள் 1938-ம் ஆண்டில் திருக்கயிலாய யாத்திரையைப்பற்றிக், கொழும்புமாநகரில் சொற்பொழி வாற்றியபோது, திருநாவுக்கரசு சுவாமிகள், கயிலைக்கு இருள் மார்க்கமாகச் செல்லும்போது, நாக பாம்புகள், தங்கள் ஒளிகாலும் நாக ரத்தினங்களைக் கக்கி வைத்து, அவைகளை நாவுக்கரசு சுவாமிகளுக்கு விளக்காகப் பாவித்தன, என்னும் இனிய வார்த்தைகள் இன்றும் என் மனதை உருக்குகின்றன. சுவாமியவர்கள் சுருங்கக் கூறில், கைலாச பர்வதம்முதல், கதிர்காமம்

ருகவுள்ள அனேக சிவஸ்தலங்களையும் திருமால் திருத்தளிகளையும், சுப்பிரமணிய க்ஷேத்திரங்களையும், தெரிசிக்கும் பெரும் பேறு பெற்றவர்கள்.

அடிகளார், கற்றவர்களிடத்தில் பெருமதிப்பும் பேரன்புமுடையவர்கள். சுன்னாகம் குமாரசாமிப் புலவர், வட்டுக்கோட்டை அம்பலவாண நாவல பராசக்தி சுவாமிகள், மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள், கம்பராமாயண சாரம் எழுதிய வெள்ளக்கால் (திருநெல்வேலி ஜில்லா) V. P. சுப்பிரமணிய முதலியார் ''செந்தமிழ்''ப் பத்திராதிபர் திரு. நாராயண ஐயங்கார், சேது சமஸ்தானம் மகா வித்வான் பாஷா கவி சேகரர் ரா- இராகவ ஐயங்கார் ஸ்வாமிகள், சென்னை சைவசித்தாந்த சமாஜத்தின் காரியதரிசியாக 20 ஆண்டுகளாகத் தொண்டாற்றிய ம. பாலசுப்பிரமணிய முதலியாரவர்கள் B. A. B. L., மகாமகோபாத்தியாய பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியாரவர்கள், தமிழவேள் த. வே. உமாமகேசுவரம் பிள்ளையவர்கள், சேர். பொன். அருணாசலம் அவர்கள், டாக்டர் சேர். A. இலட்சுமண முதலியாரவர்கள், இந்தியாவின் நாகரீகத்தையும், தத்துவ சாத்திரத்தையும் மேனாட்டில் பரப்பிய டாக்டர் சேர். S. ராதாகிருஷ்ணன் (Dr. Sir Sarvapalli Radhakrishnan) முதலிய பெரியார்களுடன் இனிது பழகியிருந்தார்கள். ''கற்றவிற் கற்றாரை வழிபடுதல் நன்று'' என்று சுவாமிகள் எமக்குக் கூறுவார்கள். ஒருமுறை சுவாமிகள் எம்மை நோக்கி கல்வியறிவொழுக்கத்தில் முதிர்ந்த பெரியோர்களை வழிபடுதல் க்ஷேத்திர யாத்திரைக்கு ஒப்பாகுமெனக் கூறி, மேற்போந்த திரு. V. P. சுப்பிரமணிய முதலியாரவர்களையும், ரா. இராகவ ஐயங்கார் ஸ்வாமிகளையும் யான் நேரில் சென்று தரிசிக்க வேண்டுமென்றும், தாம் அதற்கேற்ற சௌகரியங்களையெல்லாம் செய்து வைக்கிறேனென்றும் 5 ஆண்டுகளுக்குமுன் கூறினார்கள். அப்பொழுது எமக்கிருந்த வசதிக் குறைவினால் போக முடியவில்லை. அந்தோ! மேற்கூறிய இரு பெரியார்களும் மறைந்து விட்டார்கள்; சுவாமிகளும் விண்ணடைந்து விட்டார்கள். என் தவக் குறையை என்னென்பேன்?

சுவாமிகளுக்குச் சைவத்தையும், தமிழையும் இரு கண்மணிகளைப் போல வளர்த்த யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலர் பெருமானிடத்திலே ஓர் தனிப்பட்ட அன்பு இருந்தது. நாவலர்மீது உருக்கமான பாக்கள் பாடியிருக்கின்றார்கள். தமிழ் நாட்டில் எத்தனையோ புலவர்களின் சரித்திரம் மிகச் செவ்விய முறையில் எழுதப்பட்டிருந்தும், நாவலர் சரித்திரம் அவ்வண்ணம் எழுதப்படாதது பெரிதும் வருந்தத் தக்கதென்றும் சுவாமிகள் கூறுவார்கள். ஒருமுறை சுவாமிகள் அடியேனை நோக்கி ''நீர் நாவலர் சரித்திரத்தைச் செவ்விய முறையில் எழுத வேண்டும். யான் அதற்குவேண்டிய உதவி செய்வேன்'' என்று பணித்து உறுதிமொழி கூறினார்கள். எம்மவர்கள் சங்க நூற்களையும், சைவசித்தாந்த சாத்திரங்களையும், ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து, அவைகளின் பெருமையை மேனாட்டாரும், ஏனையோரும் அறியும் வண்ணம் செய்ய வேண்டுமென்று சுவாமியவர்கள் எமக்குப் பல சமயங்களில் கூறியிருக்கிறார்கள்.

சுவாமியவர்கள் தமிழன்னைக்குச் செய்த தொண்டினை, உணர்ந்து சுவாமியவர்களுக்கு ஓர் பாராட்டுக் கூட்டம் வைத்துக் கௌரவிக்க வேண்டுமென்று கொழும்புமாநகரிலுள்ள தமிழ்ப் பிரமுகர்கள் தீர்மானஞ் செய்தார்கள். அவர்களுள் தலை நின்றவர்கள், யார்க்குங் காட்சிக்கெளியரும், எவருடனும் இன் சொற்களையே அன்பு ததும்பப் பேசுகின்றவரும், சிறந்த பேருபகாரியும், சைவாபிமானியும், இலங்கை அரசாங்கத்தில் கணக்குப் பரிசோதனைப் பகுதியில் தலைமையதிகாரியா யிருந்து ஓய்வு பெற்றுத் தற்பொழுது இலங்கைப் பாராளுமன்றத்தில் வட்டுக்கோட்டைப் பிரதி நிதியாயிருக்கின்ற திரு. க. கனகரத்தினம் அவர்களும், இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வரும் பிரமுகர்களை யெல்லாம் விருந்தூட்டி உபசரிப்பவரும், தமது அருமையான பாரிய சட்ட நூல் வாசிக சாலையை (Law Library) இலங்கைப் பல்கலைக் கழகத்திற்கு (Ceylon University) நன்கொடையாக அளித்தவரும், பொருள் வருவாய் குறைந்த அநேக மாணவர்களுக்கு உயர்தரக் கல்வி கற்பதற்குச் சாதி, மத பேதமின்றி, மறைமுகமாக விரும்பிப் பொருளுதவி செய்து நின்றவரும், கொழும்பு விவேகானந்த சபையின் தலைவராயிருந்தவரும், இலங்கையில் பிரக்கியாதி பெற்ற நியாய துரந்தரராயிருந்து, பின்பு உயர்தரமன்றத்து நீதியரசராயிருந்து, எம்மை விட்டுப் பிரிந்த திரு. ந. நடராசா, K.C. அவர்களுமாவர்.

இவ்விரு பெரியார்களின் முயற்சியினால், கொழும்பு விவேகானந்தா சபை, ஸ்ரீ இராம

கிருஷ்ண ஆச்சிரமம், கதிர்காம தொண்டர் சபை, தெஹிவலைச் சைவசித்தாந்த மன்றம், இலங்கைப் பல்கலைக் கழகத்தின் தமிழ்ச் சங்கம், தெக்ஷிணத்து வேளாளர் சங்கம், கொழும்புத் தமிழ்க் கழகம், கொம்ப



காலஞ்சென்ற
திரு. ந. நடராசா, K.C. அவர்கள்.

னித்தெரு தமிழர் சங்கம், வெள்ளவத்தைத் தமிழர் பயிற்சிக் கழகம், இலங்கைச் சைவ பரிபாலன சபை, வெள்ளவத்தைச் சைவ மங்கையர் கழகம் முதலிய சபைகளெல்லாம் ஒருங்கு சேர்ந்து, அப்பொழுது கொழும்புத் தமிழ்க் கழகத்தின் தலைவராயிருந்து தொண்டாற்றிய பெரியாராகிய, திருவாளர் அ. சுப்பிரத்தினமவர்களைத் தலைவராகவும் எம்மைக் காரியதரிசியாகவும் நியமித்தார்கள்.

இதன் பயனாக, சுவாமியவர்களுக்குக் கொழும்பு நகரசபை மண்டபத்தில், ஓர் மிகப் பெரிய உபசரணைக் கூட்டம் நடந்தது. சுவாமியவர்கள் அதனைத் தமிழன்னைக்குச் செய்ததாகவே ஏற்றுக்கொண்டார்கள். இலங்கைப் பல்கலைக் கழகத்தின் உப அத்தியக்ஷகராயிருந்த (Vice-chancellor) டாக்டர் சேர். ஐவர் ஜென்னிங்ஸ் (Sir Dr. Ivor Jennings) கல்வி மந்திரியாயிருந்த டாக்டர் C. W. W. கன்னங்கரா, அரசாங்க சபை அங்கத்தவராயிருந்த சு. நடேசபிள்ளை B.A., B.L., டி. பி. ஜயா, வண. பீற்றர் பிள்ளை முதலிய அறிஞர்கள் சுவாமியவர்களின் பெருமையைப் புகழ்ந்து கூறினார்கள்.

மேற்கூறிய கூட்டத்திற்கு, மந்திரிகளும், உயர்தரமன்றத்து நீதியரசர்களும், அரசாங்க சபை அங்கத்தவர்களும், அரசாங்க இலாக்காக்களின் தலைவர்களும், பல்கலைக் கழகத்தின் பேராசிரியர்களும், பிரபல வர்த்தகர்களும், இன்னும் பல்வேறு துறைகளில் தொண்டாற்றுபவர்களும் சமுகமளித்திருந்தார்கள். இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் இந்தியாவிலிருந்தும் வாழ்த்துச் செய்திகள் பல வந்தன. இவ்விதமான அழகான காட்சியைத் தமிழ் மக்கள் இங்கு கண்டதில்லை யென்று கூறின், அதுமிகை யாகாது.

இலங்கைப் பல்கலைக்கழகத்தின் 'பிதா' (Father of the Ceylon University) என்று அழைக்கப்படும், சேர். பொன்னம்பலம் அருணாசலம் அவர்கள் 1922-ம் ஆண்டில் சுவாமிகளுக்கு எழுதிய கடிதமும், இலங்கைச் சர்வகலாசாலையின் பிரதம ஆசிரியராயிருந்த (Principal) பேராசிரியர் "மார்ஸ்" (Professor Marrs) எழுதிய கடிதமும் இங்கு பிரசுரிக்கப்படுகின்றன. 25 வருடங்களுக்கு முன்பே இவர்கள் சுவாமிகளிடத்தில் எவ்வளவு நன்மதிப்பு வைத்திருந்தார்களென்று தெரிகிறது. அக்கடிதங்கள் வருமாறு :—

**TRUE COPY**

Ponklar,
Horton Place,
Colombo, 22nd Nov. 1922.

S. Mylvaganam Esqr.,
Mylapore,
MADRAS.

Dear Sir,

Reference to your letter of the 19th inst. to Mr. Marrs, Principal of Ceylon University College, I have on behalf of the Hindus of Ceylon and of the Ceylon Saiva Paripalana Sabha and Colombo Vivekananda Society (of which I am President and Patron respectively) written to Swami Sarvanandaji requesting him to permit you to accept the post in question. I enclose copy of the letter.

I have been reading with great interest your excellent articles in the "Sen Tamil" on Vijjanana Dipa.

Looking forward to seeing you among us at work for the benefit of the Tamils and Hindus of Ceylon.

I am
Yours truly,
(Sgd.) P. ARUNACHALAM.

---

University College,
CEYLON,
2—12—22.

Dear Mr. Mylvaganam,

I gather that it will not be possible for you to assist us as a secular teacher, and therefore propose to make other arrangements.

I thank you for your courtesy in replying to my letter. Sir, P. Arunachalam has shown me a copy of a letter from your monastic superior in which he very kindly made the position clear.

With kind regards and good wishes for your intellectual and spritual progress.

Yours Sincerely,
(Sgd.) R. MARRS.

சங்க நூற் கடலுள் படிந்து திளைத்தவரும், தொல்காப்பியம் முதலிய ஐந்திலக்கணங் களைத் துறைபோகக் கற்றவரும், சைவசித் தாந்த வேதாந்த நூல்களை நன்கு பயின்ற வரும், வடமொழிப் புலமை சான்றவரும், ஆங்கிலத்தில் பூதபௌதிக ரசாயன சாஸ்தி ரங்களைக் கற்று ஆராய்ச்சி செய்தவரும், கதிர்காமம் முதல் கயிலை யீருகத் தலயாத் திரை செய்தவரும், மாதர்களைப் போற்றி மதிமயங்கி வாழாது, காமனைக் காய்ந்த கண்ணுதலாகிய நீலமேனி வாலிழை பாகத் தொருவனை, வழுத்தி வாழ்ந்த துறவியு மாகிய விபுலாநந்த மணியின் பூதவுடல் மறைந்து விட்டது. என்மனக்கினிய விபுலா நந்த அடிகளை நினைக்கும் போதெல்லாம்,

"பொன்னுலகோர் வியந்துருகிப்
புந்தியினுன் மலர்பொழிந்தா ரந்தோ! [வந்தோ!
வன்னநெடுந் துவசனிவற்
காயுமிகக் கொடுத்திலனே யந்தோ! [வந்தோ!"

என்று காண்டீபனுகிய அருச்சுனன் புலம் பியதும்,

"என்றினி மதுரை காண்பே
மெப்பகல் சவுந்த ரேசன்
றன்றிருவடிகள் காண்பேந்
தாயையெஞ் ஞான்றுகாண்பேம்!"

என்று புலவர் பெருந்தகையாகிய நக்கீரன் கூறியவடிகளும் என்னுள்ளத்தில் பொங்கி யெழா நிற்கும்.

# யான் அறிந்த விபுலாநந்த அடிகள்

[ ஜனாப் ஏ. எம். ஏ. அஸீஸ், C.C.S. ]

---

1922-ம் ஆண்டு என்று ஞாபகம். யாழ்ப்பாணத்து வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலம் எனப்பட்ட ஆங்கிலக் கல்லூரியில் யான் கல்வி பயிலுவதற்காகச் சேர்ந்து ஒரு வருடமிருக்கலாம். அங்கிருந்த நிர்வாக ஊழல்களை ஒழிப்பதற்காக சுவாமி சர்வானந்தர் இந்தியாவிலிருந்து வந்திருந்த காலம். பள்ளிக்கூடமெல்லாம் ஒரே கலகலப்பு. ஆனால், சர்வானந்தர் திரும்பிப் போகும்பொழுது பேச்செல்லாம் ஒரே பேச்சு. பண்டிதர் மயில்வாகனனார் மானிப்பாய் இந்துக் கல்லூரித் தலைமைப் பதவியை விடுத்துத் துறவியாகி விட்டாரென்று! சில வருடங்களுக்குப் பின், சுவாமியவர்கள் அண்ணாமலைச் சர்வகலாசாலையிலே பேராசிரியராயமர்ந்து, ஆறுமுகநாவலர் மரணத்தின்பின் ஈழ நாட்டிற்குப் புகழ் தேடிக் கொடுத்தார். கர்மயோகக் கொள்கைகள் இராமக்கிருஷ்ணமிஷன் குழுவாரின் ஒரு தனிச் சிறப்பு. அதற்கிணங்கிய விபுலாநந்த அடிகள், தாம் பிறந்த கீழ் மாகாணப் பகுதியின் கல்வி நிலைமையையும், அங்குள்ள மக்கள் (விசேஷமாக இந்துக்கள்) பெரும்பாலானோர் மதத்தோடிணங்கிய கல்வி விருத்தி பெருமையையும் உணர்ந்து, கல்வித்துறையில் ஆக்க வேலைகளைச் செய்து கொண்டிருப்பதாகப் பத்திரிகை வாயிலாக அறிந்துள்ளேன். இராமக்கிருஷ்ண மிஷன் பாடசாலையிலே ஆங்கில ஆரம்பக் கல்வி பயின்ற எனக்கு அதனோடு சம்பந்தப்பட்ட புதினங்களை அறிந்துகொள்வதில் எப்பொழுதும் ஒரு தனி ஆசை.



ஜனாப். ஏ. எம். ஏ. அஸீஸ் அவர்கள்.

சுவாமியவர்களை முதன் முதலாக யான் நேரிலே கண்டுகொண்டது 1939-ம் ஆண்டிலாகும். அதுவும் அவர்கள் மாயாவதித் தவப் பள்ளிக்குச் செல்லும்பொழுது, எனது பிறப்பிடமாகிய வண்ணார்பண்ணையில் வைக்கப்பட்ட ஒரு பிரிவுபசாரக் கூட்டத்திலாகும். அதன்பின் அவர்களுடன் நெருங்கிப் பழகக் கூடிய சந்தர்ப்பம் எனக்குக் கிட்டுவதாயிற்று.

1943-ம் ஆண்டிலே, அவசிய கால மாகாண அதிபதி (A. G. A. Emergency) யாக யான் கல்முனையிலிருந்த பொழுது சின்ன முகத்துவாரவாடி வீட்டில், நண்பர் திரு. V. நல்லையா M.S.C. அவர்கள் விபுலாநந்த அடிகளை எமக்கு அறிமுகம் செய்து வைத்தார்கள். எமது விருப்பத்திற்கு இணங்கி அடிகளார், தாம் பிறந்த கிராமமாகிய காரைதீவிலே (இது கல்முனையிலிருந்து நாலு ஐந்து மைல் தூரத்

திலுள்ளது.) இராமக்கிருஷ்ண மிஷன் தமிழ்ப் பாடசாலையில் "முத்தமிழ்" என்னும் பொருள் பற்றிச் சொற்பொழி வாற்றினார்கள். அப்பொழுது, தலைமை வகிக்கும் பெரும் மதிப்பினை அடியேன் பெற்றுக்கொண்டேன். சுவாமிகள் அவ்வேளையிலேதான் இலங்கைப் பல் கலைக் கழகத்திற்குப் பேராசிரியராக வந் திருந்தார்கள். அடிக்கடி யானும் மிகவும் உறவு கொண்டாடி, அதிக நேரம் வரையில் உரையாடிக்கொண்டிருந் தோம். அப்பொழுது கல்வியைப் பற்றிய பல விஷயங்களை அவர்களிடமிருந்து அறிந்துகொள்ளும் பாக்கியம் எனக்குக் கிடைப்பதாயிற்று.

சுவாமியவர்கள் சமூக சேவையின் முக்கியத்துவத்தைப் பற்றி அடிக்கடி எடுத்துக் கூறுவார்கள். மட்டக்களப்புச் சிவானந்த வித்தியாலயத்தைப் பற்றியும் சுவாமியவர்கள் பல விஷயங்களைச் சொல் லுவார்கள். கீழ் மாகாணத்து இந்துக் களுக்கும் முஸ்லீம்களுக்கும் பொதுவாகிய கலாச்சாரத்தைப் பற்றியும் எடுத்து விளக்குவார்கள். "நவயுகத்தின் போக் கிலும் முயற்சி மிகுதியிலும் நம்முடைய பழஞ் செல்வங்களை யாம் மறந்துவிடுத லாகாது; நாட்டுப் பாடல்களையெல்லாம் மக்கள் மறந்து விடுமுன் அவற்றைத் தொகுத்து வெளியிடுதல் வேண்டும்" என்றும் கூறுவார்கள். கீழ் மாகாணத் தில் புதுவதாக நிறுவப்பட்ட பள்ளிக் கூடங்களில் சுவாமியவர்களுக்குத் தனிப் பிரீதி. பொது மக்களின் முன்னேற்றத் தில் மிகுதியான விருப்பம். "வெறும் வயிற்றோடு, உண்ண உணவும் உடுக்க உடையுமின்றி வாழும் மக்களுக்குக் கலாச்சாரம் எதற்கு? நாட்டைத் திருத் திப் பயிரிட்டு வயிறு குளிர மக்கள் உண் ணுதல் வேண்டும்" என்பார்கள். இப்படி யான உரைகள் சுவாமிகளின் தூய உள்ளத்திலிருந்து இயல்பாக எழும் உணர்ச்சியின்பாற் பட்டவை. இந்த வாச கங்களையெல்லாம் மிகுதியாகக் கேட்ப தற்குச் சந்தர்ப்பங்கள் பல ஏற்படுவனவா யின், அதைப் பெரும் பாக்கியமாகவே யான் கருதினேன். சுவாமியவர்கள் மட்டக்களப்புப் பகுதிக்கு வரும்போதெல் லாம் நாங்கள் அடிக்கடி சந்திப்பதுண்டு. விரைவில், யானும் கல்முனையிலிருந்து மாற்றப்பட்டேன். சுவாமிகளும் பல்கலைக் கழகத்தோடு கொழும்பிலிருக்க வேண்டி யவரானார்.


பின் 1944-ம் ஆண்டிலே, கண்டியில் மருத மலைய மாளிகை (Mount Airy Bungalow) யகத்தே, பன்னிரண்டு நாட் கள்வரை சுவாமியவர்களை விருந்தினராக வைத்துபசரிக்கும் பெரும்பேறு எனக் குக் கிடைப்பதாயிற்று. கண்டியிலே அவர்கள் "வரகவி பாரதியார்" என்னும் பொருள்பற்றி நிகழ்த்திய பிரசங்கம் இன்னும் என் நினைவிலுள்ளது. தமி ழிலே எளிய நடையில் பாட்டுகளை இயற்றியவருள்ளே பாரதி தலை சிறந்த வர் என்பதையல்ல, தேசீய உணர்ச்சி யும் தேசாபிமானமும் பொங்கும்படி கவிகளை எளிமைசார இயற்றியவர் பாரதி என்பதையே யாம் நினைவு கொள்ள வேண்டுமென்று வற்புறுத்திக் கூறினர். பாரதியார் சிற்சில சொற்களை எடுத்து உபயோகித்த செம்மையை வடிவாக எடுத்துக் காட்டினார்கள். ஒவ்வொன்றுக் கும் பற்பல உதாரணங்களை எடுத்துக் காட்டி "கவிஞனுள்ளம்" இதுவென விளக்கினார்கள். கண்டியிலே சுவாமிகள் என்னுடன் தங்கியிருந்தபொழுது அரசி யல், பொருளாதாரம், கல்வி, சமய சம்பந் தமான பல விஷயங்களைப் பற்றி உரை யாடினோம். அந்தக் காலத்திலேயே யான் இலங்கை முஸ்லீம் கல்விச் சகாய நிதிக்கான திட்டமொன்றினை வகுத்துக் கொண்டிருந்தேன். அம் முயற்சியிலே சுவாமிகள் எனக்கு அளித்த உற்சாக மும், கூறிய புத்திமதிகளும் இவ்விடத் துக்கூற அடங்காது. இலங்கை முஸ்லீம் மக்களின் பேச்சு வழக்கிலுள்ள றஹ்மத்து, பறக்கத்து, மௌத்து, அலாதி, ஹயாத்து போன்ற சொற்களை யெல்லாம் திரட்டிச் சேர்க்க வேண்டுமென்று சுவாமிகள் ஆசை கொண்டிருந்தார்கள். மொழி நூல் சம்பந்தமாகப் பல சொற்களை எடுத்து மாற்றங்களையும் எனக்குச் சுட் டிக்காட்டினார்கள்.

அவர்கள் என்னுடன் தங்கியிருந்த பொழுது, அவர்களுடைய தூய்மையையும் ஒழுக்கத்தையும் கடவுள் பக்தியையும் ஒருவாறு கண்டேன். சமூக ஊழல் களைப்பற்றி அவர்கள் கொண்டிருந்த கொள்கைகளை அறிந்தேன்; ஏழை எளியவர்கள்மீது கொண்டிருந்த இரக்கத்தையும் சமய சமரச நோக்கினையும் கூடக் கண்டேன். இஸ்லாம் மதத்திற்கு அவர் காட்டிய பெருமதிப்பினையும் கண்டேன். இவற்றோடுகூடி, வற்றாத ஊற்றுப் பெருக்குப் போன்ற அவருடைய சங்க நூலறிவினையும் ஆராய்ச்சி மாண்பினையும் கண்டேன்.


1945-ம் ஆண்டில் கொழும்புக்கு மாற்றம் பெற்றபின், யான் அடிக்கடி வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷனுக்குச் சென்று அடிகளாரைச் சந்திப்பதுண்டு. கடைசியாக, யான் சுவாமிகளைக் கண்டு உரையாடியது, யான் எகிப்திற்குப் போவதற்கு இரண்டொரு வாரங்களுக்கு முன்னதாகவாகும். அப்பொழுது, சுவாமிகள் யாழ்ப்பாணத்துக்குப் போய்த் தங்கியிருந்த வேளையில் ஏற்பட்டதொரு காயத்துக்குக் கையில் மருந்து கட்டிக் கொண்டிருந்தார்கள்; உடல் நலமும் குறைந்தே இருந்தது. பல்கலைக் கழக முயற்சிகளைக்கூடத் துரிதமாகச் செய்ய முடியாத நிலையிலிருந்தார். அவர்கள் தமிழ்ப் பகுதியின் வேலைகளை மாத்திரமல்ல, பல்கலைக் கழகத்தின் முயற்சிகள் எல்லாவற்றையும் ஓரளவுக்குக் கவனித்துக்கொண்டிருந்தார். இப்போது புதுவதாக அமைக்கப்பட்ட அறபுப் பகுதியின் தலைவரான டக்டர். இமாம் நிகழ்த்திய சில விரிவுரைகளை வெகு ஆர்வத்தோடு கேட்டின்புற்றார். சுவாமியவர்கள் இந்தியநாட்டுப் பல்கலைக் கழகங்களிற் பெற்றுக்கொண்ட அனுபவமானது நமது பல்கலைக் கழக அதிகாரிகளுக்குப் பெரிதும் உதவுவதாயிற்று. அவர்கள் இந்து மதத்தவராகவும் யான் முஸ்லீம் சாதியத்தவனாகவும் இருந்த போதிலும் கூட எங்கள் அன்புரிமை விரைந்து வளர்வதாயிற்று. அவர்களை யான் எனது மூத்த சகோதரன்போல மதித்து நடந்தேன்; சிற்சில விஷயங்களில் எனக்குச் சிக்கல் ஏற்படும்போது அவருடைய புத்தி மதிகளை நாடி நின்றேன். இப்போது அவர்கள் எங்களை விட்டுப் பிரிந்தமை எங்கள் எல்லோருக்குமே பரிகரிக்க முடியாத பெரிய நஷ்டமாகும். சுவாமிகளை நாங்கள் இலகுவில் மறந்துவிட முடியாது.

சென்ற நூற்றாண்டிலே, ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் விஞ்ஞான நூல் மிகவும் விருத்தியடைந்து விளங்குகின்றது. அந்த அறிவுச் செல்வத்தைத் தமிழ் மொழி பெறுவதற்கு ஆவன செய்தல் சிறந்த தமிழ்த் தொண்டாகும். ''சாதிமத வேறுபாடின்றியும் அரசியற் கட்சிப் பிரிவினையின்றியும் செய்யக்கூடிய தொண்டு தமிழ்த் தொண்டு'' எனச் சுவாமியவர்கள் ஓரிடத்தில் கூறுகிறார்கள். இவ்விதமான தமிழ்த் தொண்டில் ஈடுபடுவதே சுவாமியவர்கள் பேரால் யாம் செய்யக்கூடியதாகும்.

# அடிகளார் தோற்றங்கள்



Govt. Oriental Mss. Library,
Triplicane P.O., Madras



( இளமையிலும் .... .... ... முதுமையிலும் )

# விபுலாநந்தர் விறலினி லொருபால்.

[ போன். சின்னத்துரை ]

---

### கட்டளைக் கலித்துறை.

1. வித்தை புலமை தலையின் விளங்கிட வேந்துமொழிப்
புத்தியின் பாலா ரிடையிற் பொலிந்து புதுமைநலம்
மெத்த முதலுற்றுச் சிந்தை நடுநெறி சேர்ந்தழகு
தத்து தமிழின் தலைமைக் கடையிவர் தன்பெயரே.

2. எண்டமி ழின்ப மெழுதமி ழாறு தமிழ்நிலத்தின்
பண்டமி லைந்து தமிழ்மண நாற்றமிழ் தாமெனவே
கண்டிட மூன்று தமிழ்வளம் கொண்டிரு தண்டமிழின்
விண்டல மெச்ச வடைவிபு லாநந்த னோர்தமிழே.

3. காந்த முருண்டுதம் பாட்டினி லோடிடக் காரிரும்பு
தாந்த மிடம்விட் டதுபற்றிச் சார்புறுந் தன்மையெனச்
சாந்த மிகுவிபு லாநந்த சாமிகள் சார்கலைகள்
சேர்ந்தன சேர்ந்து பொலிந்தன னென்னிது செப்படியே.

4. நம்பனை நாடுயர் யாழ்ப்பாணர் நாடு நறுந்தமிழின்
கம்பனி னாடு வழுக்களை நாடுநல் வீழமெனும்
வெம்புகழ் நாவிபு லாநந்த நாடெனின் வேறுபல
வம்புவி நாடெனத் தோன்றினு மீங்கிதற் காகுவவோ.

5. அளியக லாவிசைக் காவின மெங்கு மலைந்தடுத்து
வளியக லாமணத் தேனரம் பார்த்து வளம்பதித்துத்
தெளிபுலத் தாருங் கணிக்க வியாத்தனன் தீந்தமிழின்
தெளிவுல காரவைத் தானியாழ் நூலெனுந் தேறலையே.

6. நாவல னாறு முகனெனத் தோன்றிநல் லூர்புகழ
நாவலந் தீவுற நல்லுரை யாமுறை நாட்டினனே
நாவலர் மட்டு நகர்மயில் வாகனன் யாழிசைநூல்
நாவலங் கொண்டுதந் தான்விபு லாநந்த நாவலனே.

7. தலத்திற் ககத்தியன் முன்னிருந் தான்தக்க சான்றுகளில்
புலத்துக் ககத்தியர் தாம்பல ரென்பதும் போதவில்லை
நலத்திற் கிளைத்துத் தழைத்து வளரியல் நற்றமிழின்
குலத்திற் ககத்திய னின்றனைக் கொண்டு குளித்தனமே.

8. அன்பாற் பிறந்தரு ளால்விளித் தேதமிழ் நாவசைத்துத்
துன்னுங் கிலமாரி யந்தவழ்ந் தாயுந் துறையிருந்து
தன்னுய் நடந்து தவமெழுந் தாணவ மோடியுள
மன்னுகி ஞானக் கிழவிபு லாநந்தர் மாண்டனரே.

# திரும்பிவந்த இளங்கோவடிகள்

—:( "ஆனந்தன்" ):—

புலவர் நாவிற் பிறந்து தவழும் பொதியத் தென்றலின் மணம் அங்கேயில்லை; சீராட்டித் தமிழ் வளர்த்த பாண்டிய மன்னனின் கொடி அங்கேயில்லை; அமிழ்தம் குழைத்த தமிழ் யாழும் மங்கையர் கையிலேயில்லை; தமிழ் மன்றமில்லை; தமிழர் நாவிலும் தமிழ் இல்லை. ஆங்கிலமும் சிங்களமும் கலந்து தென்காற்றிலே மணம் வீசுகிறது; ஆங்கிலரின் கொடி பறக்கிறது; பியானோவும் வயலினும் அரை நிர்வாண மங்கையரின் கையிலே துலங்குகின்றன; யந்திரங்கள், மோட்டார்கள், ரிக்ஷாக்கள், காற்றாடிகள், ஆலைகள், விமானங்கள், மனிதர்கள், மனிதரின் மூளைகள் எல்லாம் மேலே கீழே எங்கு பார்த்தாலும் அசைந்துகொண்டிருக்கின்றன. மேல்நாட்டுப் போர்வீரரின் கூட்டங்கள், அவரைக் கண்டொதுங்கும் சிங்கள மயிலினங்கள், சப்பாத்துக்களின் சப்தங்கள், விமானத்தின் அலறல்கள், புகைவண்டிகளின் கூவல்கள், காய்கறி விற்போரின் அலறல்கள்—இவைகளின் இடையேதான் செந்தமிழ்த் துறவி இளங்கோவடிகளைச் சந்தித்தேன்.

துறவிகள் பலர் அவரைப் புடைசூழ்ந்திருந்தனர். வங்காளத் துறவிகள், தென்னாட்டினர், ஆந்திரத் துறவிகள் சுற்றியிருப்ப வெள்ளவத்தை இராமகிருஷ்ண இல்லத்திலே அவரைக் கண்டேன். வாரும், வாரும் என்று அன்பாக உபசரித்து அழைத்துச் சென்றார் விபுலாநந்த அடிகள். உயர்ந்து தடித்து வளர்ந்த ஆஜானுபாகு போன்ற கரிய தோற்றம். சாந்தமும், கருணையும், கலையழகும், ஆண்மையும் சுடர்விடும் அகன்ற விழிகள். தீர்மானமும், கம்பீரமும், வசீகரமும் நாதமிடும் குரல். தமிழொளியும், கலைச்சுடரும் விவேகமும் மிளிரும் முகம். அவசரமின்றி ஒழுகிச்செல்லும் நதியின் அமைதியோடு அடிகள் என்னோடு அளவளாவினர். தாம் ஆராய்ச்சி செய்யவேண்டிய நூலின் பரப்பையும் அதற்காதாரங்கள் திரட்டவேண்டிய நூல்களின் பரப்பையும் இசை பற்றி மேனாட்டவர் எழுதிய நூல்களையும் பற்றி நீண்டநேரம் என்னுடன் பேசிக்கொண்டிருந்தார். செங்குத்தாய்ச் செல்லும் கரடு முரடான ஒரு மலைப் பாதையைக் காட்டுவதுபோல் தமது இசையாராய்ச்சிப் பாதையை எனக்குக் காண்பித்தார். மலையோ நெடிது வழியோ தொலைவு; பாதையோ குழியும் குன்றும். நான் அதைரியமும் குழப்பமும் அடைந்தேன். யாழ்நூல் என்னும் மலையின் முன்னே அதன் உயரத்

---

### தரவு கொச்சகம்.

9. தென்னாடு முழுமையினுஞ் செழித்தாண்டு முடிவின்றிப்
பன்னாளுந் தமிழருணக் கொளத்தழைக்குந் தமிழ்மரத்தை
யின்னாளிற் பண்பினர்போ விரண்டொன்றி லேறாமே
தொன்னாளி னூற்கனிகள் சுவைதேறித் தலைநின்றான்.

10. இரண்டொன்று பட்டமிக விடர்ப்பட்டுப் பெற்றினியார்
திரண்டொன்று மிப்புவியி லெனைநிகர்வா ரெனநினைவார்
கரங்கொண்டு புகட்டிடினும் காண்கில்லாக் கலைநிறைவை
வரங் கொண்டே பெற்றவிபு லாநந்த வல்லுனனே.

### ஆசிரிய விருத்தம்.

11. சிந்துவின் நாக ரீகத் திறந்தனிற் சிறக்கும் யாழின்
வந்தியை நகரத் தீழத் தலத்துறுந் தமிழன் னாயே!
புந்திநீ வாடேல். ஈழப் புலவிபுலாநந் தன்போலப்
பிந்தியு மனேகர் நின்னைப் பேணுவார் சிங்களத்தே.

தைக் கண்டு மருளும் சிறுவன்போல் நின்றேன். எனினும், எல்லாவற்றையும் அவரிடம் கற்பதென்றே மனத்தைத் திடம் செய்துகொண்டு அவர் பணியைச் சிரமேற்கொண்டேன்.

மாலைக் காலங்களும் முன்னிரவுகளும் கலையிலும் கவியிலும் இலக்கியத்திலும் கழிந்தன. காலை வேளைகள் ஆராய்ச்சித் துறையிற் பறந்தன. உண்ணும்போதும் உலவும்போதும் பேச்சுடன் தமிழ்க்கலையை ஊட்டி என் பிஞ்சு உள்ளத்தை வளர்த்தார் அடிகள். அப்பொழுதுதான் கண்டேன்! அவர் கனிந்த இருதயத்தை; வர்ணங்களெல்லாம் ஒன்றித்துப் பொலிவுறும் சித்திரம் போலிருக்கும் அவர் கலையுள்ளத்தை; சிற்றருவிகளெல்லாம் ஒழுகித் தெளிந்திருக்கும் சுனை போன்ற அவர் தெய்வத் திருவுள்ளத்தைக் கண்டேன்.

ஆமாம், அவர் உள்ளம் சுருதிகளெல்லாம் அமைந்து இயங்கும் ஒரு யாழ்தான்! கணிதம், விஞ்ஞானம், இசை, சித்திரம், கலை, இலக்கியம், நாடகம், சமயநூல் ஆகிய எல்லாத் தந்திகளும் அங்கே தனித்தனி நாதமிடுகின்றன. அவையெல்லாம் இணைந்தும், ஒன்றையொன்று தழுவியும் ஒரு இனிய கீதத்தை எழுப்புகின்றன. தெருப்பாட்டுகளே புதுமைக் கவியென்று மானமற்ற வைக்கோற் கவிகளைச் சுவைக்கும் தமிழர்கட்கு பொருள் பொதிந்து தேன் சொட்டும் அமிழ்தக் கவிகளைக் கொடுக்கவல்ல இன்றைய புலவன் நவநீதகிருஷ்ணபாரதியொருவனே. சங்கப் புலவர்களின் பொருட்செறிவும் ஓசையும் கொண்டு தேன் பிலிற்றப் பாடும் பாக்கள் அவருடையதே. கற்பனையும் கனிவும் இணைந்து செல்வது அவர் பாட்டிலேதான். மூழ்கிக் குளித்து ஆழ்ந்த கருத்துகள் எடுக்க இடங்கொடுப்பதும் அவர் பாத்தான். ஆனால் அடிகள் அவரைப்போல இணையற்ற புலவனுமல்ல.

வித்துவான் சி. கணேசையரோ பழுத்த பண்டிதன்; தொல்காப்பிய இலக்கணத்தை அட்சரம் அட்சரமாய் நுட்பம் பார்ப்பவர். நுண்மதியினால் நுனித்து ஆராய்ந்தெடுத்த மாணிக்கங்கள் எத்தனையோ உள. சிக்குண்டு கிடக்கும் சூத்திரங்களையும் கருகலான உரைகளையும் இழை வேறு நூல் வேறாகப் பிரித்துக் குலுக்கித் தெளிய வைக்கும் அற்புத மதிநுட்பம் வாய்ந்தவர். ஆனால், அடிகளோ கணேசையரைப்போல் ஒரு தனி இலக்கண வித்துவானுமல்ல.

புதுமைக் கவியாய் மலர்ந்து தமிழ்மரபு சிதையாமல் உயிருள்ள பாக்களைப் பாடும் சோமசுந்தரரைப்போல புதுமைக் கவியுமல்லர் அடிகள். தமது வாழ்நாளைத் தமிழ் நூல்கள் பதிப்பித்தற்கென்றே அர்ப்பணித்த தமிழ்த்தந்தையாகிய சாமிநாதையரைப் போல் அடிகள் சிறந்த பதிப்பாளனுமல்ல. அதுதான் அவரிடம் இருந்த விந்தை! அதுதான் அவரிடம் இருந்த தனியழகு!

ஆங்கிலங் கற்ற கணித விற்பன்னர்கள். இவர் தமிழ்ப்படித்தவர் என்று கணிதமகாத்மியத்தைப் பற்றி ஏமாற்ற முடியாது. "ஆங்கில இலக்கியம் ஆகா! அப்படி இருக்கிறது இப்படியிருக்கிறது என்று ஆங்கிலங் கல்லாத பண்டிதர்களுக்குச் சொல்லும் புளுகுகளோடு யாரும் அடிகளை அணுக முடியாது. விஞ்ஞானத்தைத் தமிழில் பெயர்க்கமுடியுமா" அதெல்லாம் தமிழில் வராது என்று அடிகட்குக் கேட்கும்படி சொல்லமுடியாது. அவர் ஒரு புலவன்; அவர் ஒரு நுண்ணிய தமிழாராய்ச்சியாளன்; அவர் ஒரு கணித விற்பன்னன், விஞ்ஞானி; சங்கீத ஞானி. ஆங்கிலப் பட்டதாரி, கலைஞன்—இவைகள் எல்லாவற்றிற்கும் மேலே—அவர் ஒரு மாசற்ற துறவி; அவர் கைபட்டு அழகாகாத கலையுமில்லை; அவரை வந்து அடையாத கலைத்துறையுமில்லை. அவர் உள்ளம் பரந்த கடல்போல் அளவற்ற துறைகளை அடக்கிநின்றது. சுருதிகளெல்லாம் ஒருங்கே இசைந்து பிறக்கும் யாழ்போல் அவர் உள்ளம் பல்கலையிலும் பயின்று பண்புற்றது ஒன்றையொன்று மேம்பட்டதில்லை, ஒன்றையொன்று பின்னியதில்லை, ஒன்றையொன்று விலகியதில்லை. இந்த அற்புதம் ஒன்றை எண்ணி எண்ணித்தான் ஆச்சரியமும் அன்பும் கொண்டேன்; எவ்வளவு கலைஞனும் வித்துவானும் இருக்கலாம். ஆனால் அத்துடன் அடிகளைப்போல் மாசற்ற ஒரு துறவு வாழ்க்கை வாழமுடியுமா? இதை எண்ணித்தான் அவரை அணுகினேன்.

தமிழிலே இன்று புதுமைத்தமிழ் என்று ஒரு பெரிய குரலுண்டு. தமிழ் மரபின்றி எழுதும் தமிழ் எல்லாம் புதுமைத்தமிழ். தமிழ்ப்பிழைகள் இல்லாமல் எழுதினால் பண்டிதத்தமிழ். கிராமச் சுப்பனின் பேச்சைப் போல் இருந்தால்தான் அது மறுமலர்ந்த தமிழ்நடை. வெறுங் கதைகள் எல்லாம் இலக்கியங்கள். எழுந்த வாக்கில் தெருப் பாட்டைப் பின்பற்றுவதுதான் கவி இந்தப் பாதையிற் செல்கிறது. அந்தப் புதுமைத்தமிழ் சிறு

பெயலுக்குத் தலைகாட்டி மடியும் புல்லினம் போல் அவை தலைகாட்டி மடிகின்றன. எத்தனை கதைக் கோவைகள்; எத்தனை கவிக் கோவைகள்; எத்தனை சிறுகதை இலக்கியங்கள் மளமளவென்று முளைத்தன. இதில் எத்தனை கதைகள் இன்று வேரூன்றி நிற்கின்றன. இது புதுமையை நாடுவோரின் போக்கு எடுத்ததெல்லாவற்றிற்கும் தொல்காப்பிய மேற்கோள், கேட்டதெல்லாம் பிறநானூறும் பதிற்றுப்பத்துமேயன்றி வேறில்லை; பிரயோகிப்பதென்றால் புறநானூற்றுச் சொற்களேயன்றி வேறில்லை. இப்படி இன்னொரு பாதை செல்லுகின்றது. புராதன காலத்தில் எழுதியதெல்லாம் பழைய கர்னாடகப் போக்கென்றும் அன்றன்று முளைப்பதுதான் புதியதென்றும் புதுமைக்கு ஒரு கருத்தைக்கொடுத்துவிட்டோம். சிலப்பதிகாரத்தை எத்தனை சந்ததி கற்றுவிட்டது. கோவலன் கண்ணகி சரித்திரத்தை எத்தனை முறை நாடகமாய்ப் பார்த்துவிட்டோம். சினிமாத் திரையில் கண்டு ஆனந்தித்தோம். ஆனால் முப்பது முறை கற்றவரும் முப்பத்தோராவது முறை ஒரு புது ஆர்வத்தோடு எடுக்கிறார். கம்பர் பாவை ஆயிரத்தொரு முறை கேட்கும்போதும் கொஞ்சி முத்தாடியல்லவா சீராட்டுகிறோம். இந்தப் புதுமை எங்கிருந்து வந்தது. இந்த வற்றாத இன்பம் எந்த ஊற்றிலிருந்து பிறக்கிறது. புது மெருகு, புது சிருஷ்டி, புது இலக்கியம் என்ற புதியனவற்றில் எத்தனை நூலை இரண்டாம் முறை படிக்கிறீர்கள். ஆனால் புராதன நூல்களின் புதுமையையும் பிறபோக்கு வழியில் எழுதுவோர் சீர்குலைக்கிறார்கள்.

இந்த நோக்கில்தான் அடிகளின் உள்ளம் புதிய உள்ளம் என்று கூறுகின்றேன். புது மலர்களை நாடிச்செல்லும் வண்டுபோல் புதுமை இலக்கியங்களை அவர் உள்ளம் நாடிச் செல்லும். ஒருநாட் காலை, குளிப்பறைக்குப் போகும்போது "வெள்ளிப் பனிமலையின் மீதுலவுவோம்" என்று தன்னை அறியாமல் வாய்விட்டுப் பாடுவார். இன்னொரு நாள் "யாழும் குழலும் அமிழ்தும் குழைத்த மழலைக் கிழவிக்கு" என்று தமிழ் ததும்பச் சொல்லிக்கொண்டு அறையினுள் நுழைவார். வேறொரு நாள் "யாழ் மறவாக் கலையினமே வாழ்பிடி விட்ட கலா" என்று மனோன்மணீய அடிகளை முரலுவார். சிறு சுழல்காற்றுக்குச் சுழன்று எடுபடும் மெல்லிய சருகுகள்போல் புதுமையென்னும் பித்தலாட்டத்தில் அவர் ஏடுபடவில்லை, சலித்த பழம் போக்கிலும் நின்று வைக்கோல் உரைகளைச் சப்பவில்லை. தேனும் மணமும் தேடும் வண்டுபோல புதுமையும் சுவையும் பொதியும் இலக்கியங்களைத் தேடினார். அவர் எழுதிய கட்டுரைகளும் நூல்களும் யாத்த பாக்களும் இதற்குச் சான்று பகரும். மதங்கசூளாமணி யாழ்நூல் போன்ற நூல்களிலும், ஆங்கிலவாணி போன்ற கட்டுரைகளிலும் அவர் புதுமையுள்ளம் மலர்வதைக் காண்கிறோம். அந்தப் புதுமையைச் சோபிக்க அவரிடம் இருந்தது இன்னொரு சக்தி. அது அவரைப் பெரியோர்களின் பீடத்துக்கு உரித்தாக்கியது. அதுதான் அவருடைய பழுத்த உள்ளம்.

அவர் உள்ளமோ பழுத்தஉள்ளம். அவர் தமிழ்நடை, அவருடைய பேச்சு, அவருடைய வாழ்வு இவை யெல்லாவற்றையும் ஒருதரம் பார்த்தால் என் கண்முன் தோன்றுவது நிறைந்த ஒரு மங்கல பூரண கும்பமே. கணிதம், விஞ்ஞானம், இலக்கியம், சமயம், சங்கிதம் என்னும் நூல்களைத் துறைபோகக் கற்றமையால் அவர் உள்ளம் பழுத்துவிட்டது. அவர் இலக்கியத்தை நுகரும் முறையே தனிப்பட்டது. உயர்ந்த சித்திரகாரன் வர்ண அமைதி, பாவம், அளவு இவற்றை நோக்கி அழகு காணுவதுபோல இலக்கியத்தில் அழகு காண்பார். அதனால் மனத்தின் உணர்ச்சிகளைக் கட்டறுத்துவிட்டுக் கூத்தாடுவதில்லை. ஒரு மாசற்ற துறவியாயிருந்தவர் உலக காரியங்களிற்றோய்ந்தவர்போல் மாதவியின் நடனத்தையும் கோவலனின் காதலையும் சீவகனின் நாடகங்களையும் சுவைக்கிறாரே! இது எப்படி முடியும் என்று அநேகருக்கு அதிசயம். அழகில் இறைவனைக் காணும் துறவிகளின் மனப்பாங்கை அவர்கள் அறியார். களங்கமற்ற இதயத் துறவியான இளங்கோ எப்படிச் சிலப்பதிகாரத்தைப் பாட முடிந்ததோ, திருத்தக்கதேவர் எவ்வாறு சீவக சரித்திரத்தைப் பாட முடிந்ததோ அவ்வாறே அடிகளும் இலக்கியத்தைச் சுவைத்தார். அவர் இலக்கியத்தை நுகரும் வகையிலே ஒரு அமைதியிருந்தது. அந்த அமைதியை நான் வேறெவரிடத்தும் கண்டதில்லை. புலவனுய் அன்றி ரஸிகனுய்த் தோன்றுவார்கள். பெரும்பாலும் உணர்ச்சிச் சுழலிலே ஏற்றப்படுகிறார்கள். இன்ப துன்பங்களாலும் உலக விவகாரங்களாலும் அவர்கள் உள்ளம் அசைந்து விடுகிறது. மாதவியின் நாட்டியத்தைச் சுவைத்து அதை இலக்கியத்தோடு விட்டு விட்டுப் பூவுலகுக்கு வந்து கடமையாற்றக்கூடிய உள்ளமுடையவர்கள் வெகு சிலரே.

# அறிவாளி

[ அ. செ. முருகானந்தன் ]

புதிதாகத் தொடங்கிய 'மறுமலர்ச்சி' யில் தமிழ்ப் பிரமுகர்கள் என்ற ஒரு பகுதியை ஆரம்பித்து சில மாசங்கள் ஆகவில்லை. மூன்று பெரியார்களைக் கூடச் சரியாகப் பேட்டி கண்டு முடிக்கவில்லை. அதற்கிடையில் நடைபெற்ற அதிர்ச்சியான சம்பவங்களை எண்ணிப் பார்த்தால் ஆச்சரியமாயிருந்தது.

நவாலியூர் ஸ்ரீ சோமசுந்தரப் புலவரைக் கண்டு கதைத்த வரலாறு பத்திரிகையில் வெளியாகி இரண்டு கிழமை ஆயிற்று. அதன்பின்னர் ஒருநாள் புலவரிடமிருந்து நமக்கு ஒரு கடிதம் வந்தது. அது, புலவர் அவர்கள் கடுமையான தொய்வு நோயினல் சில தினங்களாகக் கஷ்டப்படுகிறார் என்று தெரிவித்தது.

இதற்குப் பிறகு அடுத்த முறையில் சுவாமி ஞானப்பிரகாசரைப் போய்ப் பார்த்துப் பேசிவிட்டு வந்தேன். அவர்களைப் பற்றிய எனது கட்டுரை பத்திரிகையில் வெளியாகி மூன்று அல்லது நாலு தினங்கள் செல்லவில்லை. அதற்குள்ளாகவே "நல்லூர், வண. சுவாமி. ஞானப்பிரகாசர் காலமானர்" என்ற இழவு சேதி வந்தது.

மறுதடவை சுவாமி விபுலாநந்தாவைப் பற்றி எழுதுவதென்பது நமது திட்டம். ஆனல், என்ன் கொடுமை பாருங்கள். அந்த திட்டம் இன்னும் எண்ணத்தில்தானிருந்தது. . செயலில் கொஞ்சமேனுங்கூட உருவாகவில்லை. அவ்வளவுக்கிடையிலே அந்தத் தமிழ்ப் பிரமுகருக்கு வந்தது ஆபத்து. நாம் இனி என்

---

ஒரு மாதின் தாமரை முகத்தையும், ஒதுங்கி நடக்கும் அன்ன நடையையும் ரசிக்கலாம். ஆனல் அதில் உள்ளத்தைப் பறிகொடுத்துக் கூத்தாடுவது இலேசான மனத்தின் அடையாளமல்லவா? சித்திரத்தைப் பார்த்துச் சித்திரத்தோடு விடவும், இலக்கியத்தை நுகர்ந்து இலக்கியத்தோடு விடவும், கணிதத்தைக் கணிதத்தோடு விடவும் அவரால் முடியும். "கங்கையில் விடுத்த ஓலை"யென்று, ஸ்ரீமான் கந்தசாமியாரின் பிரிவைக் குறித்து ஒரு பாடல் இயற்றினர். மிகவும் உருக்கமாக அதைப்பாடி அனுபவித்துக்கொண்டிருந்தோம். இடையில் யாரோ ஒருவர் ஒரு கணிதச் சிக்கலைக் கொண்டுவந்தார். மிக இலேசாக இலக்கிய உணர்வோட்டத்தை நிறுத்திக் கணிதத்தில் மனத்தைத் திருப்பினர். அந்த அமைதியும், ரஸிகபாவமும் நிறைந்த தன்மைதான் அவர் பேச்சிலும் புலனுகும். "அறவோர் பள்ளியிலும், மருதத்தண்பணையிலும், கான்யாற்றடை கரையிலு , மடவார் ஆடரங்கிலும் இசை விளங்கியது தமிழ்நாட்டிலே என்று கூறும் பேச்சொழுக்கையும், அமைதியையும் கேட்கவேண்டுமே? அதனல் தான் அவர் உள்ளம் பழுத்த உள்ளமென்றேன்.

அடிகளின் உள்ளம் பரந்த உள்ளம்; புதிய உள்ளம்; அமைந்து பழுத்த உள்ளம்; சிலப்பதிகாரத்துக் காணும் அழகுகளெல்லாம் அவர் வாழ்விலும் பேச்சிலும் அமைந்திருந்தது. இளங்கோ அடிகளின் தூய துறவு வாழ்க்கை அவர் வாழ்விலும் அமைந்திருந்தது. அதனுலேயே, அவர் சிலப்பதிகாரத்தை மீண்டு மீண்டும் பயின்ருர். அங்கே தோன்றும் இசை நுட்பங்களை ஆராய்ந்த ஆராய்ச்சியின் பயனுகவே யாழ்நூல் பிறந்தது.

"அவர் ஒரு அடிகள் எழுதிவைத்தார், நான் ஒரு அடிகள் அதை விளக்குவேன்". என்று அடிக்கடி சொல்லுவார். பத்தினிக் கடவுள் பக்தியும் அவருக்கு இதனுலேயே ஏற்பட்டது. கம்பர்தானு திரும்பிப் பிறவாவிடினும், புகழேந்தி தான் வராவிடினும், இளங்கோவடிகள் பின்னும் பூவுலகுக்குத் திரும்பி வந்தார். அதுவும் தமிழ் நாடு செய்த தவமல்லவா?

றைக்குமே அவர்களை கண்டுகொள்ள முடியாத தூரத்துக்கு சுவாமிகள் நம்மை விட்டுப் போய்விட்டார்கள்.

மேலே சொன்ன இந்த மூன்று காரியங்களும் சேர்ந்து எனக்குப் பெரும் யோசனையை உண்டாக்கி விட்டது. கரிநாப் புலவரின் நாக்கும் காலகண்ட வைத்தியரின் மருந்துப் பையும் பெற்ற சத்தி நமது பேனவுக்கும் ஒரு சமயம் ஏற்பட்டு விட்டதோ என்ற ஏக்கத்தில் மேற்படி விஷபத்தை இந்த ஜன்மத்தில் இனி மறுதடவை தொடங்குவதில்லை என்று முடிவு கட்டி அதை அவ்வளவோடு நிறுத்திக்கொள்ள விட்டேன்.

எப்படியானாலும் விபுலாநந்த அடிகளைப் பற்றி இனிமேல் யோசிக்கவேண்டியதில்லையல்லவா? அவர்களோடு நேரில் கலந்துகொண்ட சில சந்தர்ப்பங்களைப் பற்றி இங்கே சுருக்கமாகச் சொல்லுகிறேன்.

சுவாமிகளை எனக்குப் பத்து வருஷங்களுக்கு மேலாகத் தெரியும். பள்ளிக்கூடத்திலே படிக்கிற காலத்திலேயே அவர்களை அறிந்திருக்கிறேன். ஒரு சமயம் இமாலய யாத்திரை பற்றி சுவாமிகள் பள்ளிக்கூடத்தில் செய்த சொற்பொழிவு இன்றைக்கும் நன்ருக ஞாபகமிருக்கிறது.

1942-ம் ஆண்டு என்று ஞாபகம். யாழ்ப்பாணத்தில் தமிழ் இளைஞர்கள் பலர் சேர்ந்து மறுமலர்ச்சிச் சங்கம் என்னும் ஓர் இலக்கிய சங்கத்தை நடத்தி வந்தார்கள். அந்த நாட்களில் ஒரு சமயம் சுவாமிகள் யாழ்ப்பாணத்துக்கு வந்தார்கள். அந்த சந்தர்ப்பத்தை மறுமலர்ச்சிச் சங்கத்தினர் தவற விடாமல் சுவாமிகளைக் கொண்டு ஒரு சொற்பொழிவு செய்விக்க எண்ணினர்கள். சுவாமிகளைக் கண்டு பேசி அதற்கு ஒழுங்குபடுத்த நான் போக வேண்டியதாயிற்று. அதற்குமுன் நமக்குள் நேர் அறிமுகம் ஏற்பட்டதில்லை. அதுதான் முதல் தடவை. போய் சுவாமிகள் அருகே உட்கார்ந்ததும் கூடவிருந்த ஸ்ரீ அம்பிகைபாகன் அறிமுகப்படுத்தினர். நான் அப்போதிருந்த பத்திரிகையின் பெயரைச் சொல்லி "இவர்தான்-அவர்" என்ருர். ஆனல் சுவாமிகள் அவருக்கு இடங்கொடுக்க வில்லை. இடைமறித்து 'ஓ, அவ்வரை எனக்குத்தெரியுமே தெரியுமே!' என்ருர்கள். இது எனக்கு ஆச்சரியமாகத்தானிருந்தது முதலில். ஆனல், பிற்பாடு உண்மையைத் தெரிந்து கொண்டேன். ஒரு பத்திரிகைக்காரனையோ எழுத்தாளனையோ தெரிந்து கொள்வதென்ருல், அவனது பத்திரிகையையும் எழுத்தையும் கொண்டு அவனைத் தெரிந்து கொள்வதுதான் முக்கியமேயொழிய முகாலோபனம் பெரிதல்ல; அது இரண்டாவது காரியம். என்பதைக் கருதித்தான் சுவாமிகள் அப்படிச்சொன்னர்கள். அவர்களுடைய இந்த அபிப்பிராயம் பின்னுமொரு சந்தர்ப்பத்திலும் வெளியாயிற்று. அதைப் பின்னர் சொல்லுகிறேன்.

சுவாமிகள் தமிழின் மறுமலர்ச்சி பற்றி எவ்வளவு பரந்த நோக்கம் கொண்டிருந்தார்களென்பது மறுமலர்ச்சி சங்கத்தின் மறுநாள் அவர்கள் வெளியிட்ட கருத்துக்கள் மூலம் நன்கு தெரிந்தது. மறுமலர்ச்சிச் சங்கத்திலுள்ள இளம் எழுத்தாளர்களுக்குச் சுவாமிகள் சொல்லிய புத்திமதியை அவர்கள் ஒருபோதும் மறக்கமாட்டார்கள். "நீங்கள் உங்கள் மனேதர்மத்தின்படி நன்ருக எழுதுங்கள்; புதியன புதியனவாக எழுதித் தமிழை வளருங்கள். ஆனல் மற்றவர்களைக் கண்டிக்கத் துணியாதீர்கள். சொந்த மண் மணம் வீசும் சிறு கதைகளையும் நாவல்களையும் அதிகமாய் எழுதுங்கள். எழுத்தில் எப்போதும் சொற்செட்டும், இலக்கணமும், கருத்து ஆழமும் இருக்கவேண்டியது பிரதானம். இதற்கு உதாரணமாக சென்னை "சுதேசமித்திரன்" ஆசிரியர் ஸ்ரீ C. R. ஸ்ரீநிவாசனை எடுத்துக்கொள்ளலாம்" என்று குறிப்பிட்டுப் பேசினர்கள். அன்று கூடியிருந்த சங்க அங்கத்தினர்கள் ஒரு 30 பேர்கள்வரையில்தானிருக்கும். அவ்வளவு பேர்களுக்கும் நடுவில் சுவாமிகள் கீழே தரையில் உட்கார்ந்து

கொண்டு அவர்களுள் ஒருவராகவே கல ந்து உறவாடிப் பேசிய அந்த எளிய காட்சி என் மனக்கண்முன் நேற்றுத் தான் நடந்ததுபோல இன்றைக்கும் அடி க்கடி தோன்றி மறைகிறது.

சுவாமிகள் எழுத்தாளர்களையும், பத் திரிகைக்காரர்களையும் பெரிதும் மதித்து வந்திருக்கிறார்கள். அதன் காரணம் அடிகளே ஒரு பத்திரிகைக்காரராகவிரு ந்து அந்தத் தொழிலின் உயர்வை அனு பவத்தில் தெரிந்துகொண்டதாயிருக்க லாம்.

மூன்று வருஷங்களுக்கு முன்பாகக் கொழும்பிலிருந்த காலத்தில் ஒரு சமயம், வெள்ளவத்தை இராமகிருஷ்ண மடத்து க்கு சுவாமிகளிடம் போயிருந்தேன். இல க்கியம், அரசியல் என்று பல விஷயங் களைப்பற்றியும் சுமார் இரண்டு மணித்தி யாலம்வரை சுவாரஸ்யமாகப் பேசிக்கொ ண்டிருந்தோம். பேசிக்கொண்டிருந் தோம் என்பது தவறு. பேசியதெல்லாம் சுவாமிகள்தாம். நான் வாய்மூடி மௌ னியாகக் கேட்டுக்கொண்டிருந்தேன். நான் பேசுவதற்கு அங்கே இடம் ஏற்பட வில்லை; கேட்பதற்குத்தான் நிறைய இரு ந்தது. பேச்சிலும் இன்பம் உண்டு; ஈடு பாடு உண்டு; மயக்கம்கூட உண்டு என்ற உண்மையை அன்று சுவாமிகளின் பேச் சைக் கேட்டதிலிருந்து உணர்ந்துகொண் டேன். இடையே நமக்கு வந்த தேநீரைக் கூட மறந்துபோய், தாழ்மை மனப்பிராந் திக்குக் காரணமான மனிதனது அநாக ரிகப் பழக்க வழக்கங்களைப்பற்றி சுவாமி கள் சொல்லிய ருசிகரமான தகவல்களைக் கேட்டு ரசித்துக்கொண்டிருந்தேன். ''தமக்குக் கீழ்ப்பட்டவர்கள் சாஷ்டாங்க மாகக் கீழே விழுந்து தம்மைக் கும்பிட் டுச்செய்யும் மரியாதையை மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்ளும் சிங்களப் பெருங்குடி மக்கள் அரசாங்கசபையிலேகூட இருக் கிறார்கள்'' என்று அவர்கள் தெரிவித்த போது எனக்கு வெட்கமாயிருந்தது.

கடைசியாக விடைபெற்றுக்கொண்டு எழுந்தபோது, ''நான் சமீபத்தில் இந்தி யாவுக்குப் போகலாமென எண்ணுகி றேன். அங்குள்ள பல பிரமுகர்களையும் சந்தித்துப்பேச விருப்பமாயிருக்கிறது. ஓர் அறிமுகக் கடிதம் தருவீர்களா?'' என்று கேட்டேன்.

சுவாமிகள் சிரித்துக்கொண்டு, ''வேண்டுமானால் தருகிறேன். ஆனால் எழுத்தாளனுக்கும் பத்திரிகைக்காரனுக் கும் அறிமுகக் கடிதம் என்பது எதற் காக? அது அநாவசியம். அவர்களது எழுத்துக்கள்தான் அவர்களை எங்குமே அறிமுகப்படுத்திவைக்குமே! அவர்கள் தான் நாடறிந்த பார்ப்பனர்களாயிற்றே! அவர்களுக்கு அவர்களது சொந்த எழுத் துத்தான் அறிமுகக் கடிதம், நற்சாட்சிப் பத்திரம் எல்லாமே ஆகும்'' என்றார்கள்.

கடைசியாக சுவாமிகளைச் சந்தித்துப் பேசியது ஒரு வருஷத்திற்குமுன். மார் பில் ஏதோ சொற்ப சுகவீனமாக யாழ்ப் பாணத்தில் டக்டர் சுப்பிரமணியம் வீட் டில் தங்கிருந்தார்கள். நானும் நண்பர் நாவற்குழியூர் நடராஜனுமாகப் போயிருந் தோம். ''டாக்டர் என்னைப் பேசக் கூடாது; வெளியே போகக்கூடாது; அதி லும் வண்ணார்பண்ணைப் பக்கம் தலை காட் டவே கூடாது என்று கண்டிப்பான உத் தரவு போட்டிருக்கிறார்'' என்று அடிக் கடி நம்மிடம் சொல்லிக்கொண்டே இலங் கைச் சர்வகலாசாலையில் தமிழ் வளர்வ தற்கான தமது திட்டங்கள்முதல் வித்து வான் பரீட்சை ஈருக வெளுத்துக் கட்டி விட்டார்கள். அம்மட்டோடு நிற்காமல் உடனேயே டக்டருடைய காரை எடுத்து எங்களையும் கூட்டிக்கொண்டு பட்டணத் தை ஒரு சுற்றுச் சுற்றி வந்துவிட்டார் கள். டக்டர் கேட்டால் கடலோரம்வரை யில்தான் போய் வந்தோம் என்று சொ ல்லும்படி இரகசியமாக கார் டிரைவரிடம் சொல்லிவைத்துவிட்டார்கள்!

பட்டண வீதி வலத்தின்போது ஒரு வேடிக்கையான சம்பவம் நடைபெற்றது. கார் பெரிய தபாற்கந்தோருக்கு முன்னால் போனதும் சுவாமிகள் காரை நிறுத்தி, தமக்கு தபால் முத்திரைகள் வாங்கவே ண்டுமென்றார்கள். நாங்கள் வாங்கிக் கொண்டுபோய்க் கொடுத்தோம். சுவாமி கள் கொடுத்த காசில் ஒரு சதத்தை •மே .

# "ஈழமணி" விபுலாநந்த அடிகளார் ஞாபக மலர் மணி மூன்று.

( யாழ்-வயவையூர், ந. நமசிவாயம் )

1. வித்தகனை வியனிலங்கை விளங்க நின்ற
விறல்மணியை வேதமுதல் சாஸ்தி ரங்கள்
சித்தியுற வோர்ந்தவனைச் சமயம் பாஷை
சிறக்கவரு மாறுமுக நாவ லோர்பின்
இத்தலத்தி லிறையருளா லெழில்சேர் யாக்கை
இனிதெடுத்துப் பரதமுத லிசைநா டெல்லாம்
மெத்தவரும் புகழ்நாட்டும் விபுலா நந்த
மெய்ம்மணியை யிழந்ததுளம் விதியின் பாற்றே.

2. மட்டுநகர் மணித்தடத்தில் மலர்ந்த செந்தா
மரைமலரை, மாணிக்க மணியை, வித்தை
எட்டுமட்டுங் கண்டானை யெண்ணில் நூல்கள்
எமக்கீந்த விற்பனனைப் பிரசங் கங்கள்
கொட்டுமட்டுங் கொட்டிமுழக் கிட்ட கோதிற்
குருமணியை, யாழ்நூற்பேர்க் குவையை யீந்த
சிட்டனென வருவிபுலா நந்த ஞானச்
செழுஞ்சுடரை, யிழந்தனமென் செய்கு வோமே.

3. கலைமணியைத் தமிழ்வளர்த்த கார்மே கத்தைக்
கவிஞருளங் கொளுவகையிற் கண்டி டாத
விலைமணியை நிலையறியா விறல் சேர்ஞான
வித்தகனை யொன்றெனநின் றிடாத பாடை
மலைவுஅறத் தேர்ந்துகரை கண்டு மேலாம்
மனமொடுங்க மோனஅறம் மருவி னன்சீர்
கலைவலுனர் உளமகிழ வுரைகள் தீட்டும்
கவின்"ஈழ மணி"மலரிற் காண லாமே.

---

லதிகமாக நாங்கள் முத்திரை விற்றவனிடம் கொடுத்துவிட்டோம். ஆனல் அதைச் சுவாமிகளிடம் தெரிவிக்காமல் மீதிப்பணத்தையும் தபால் முத்திரைகளையும் அவர்கள் கையில் கொடுத்துவிட்டுக் காரில் ஏறிக்கொண்டோம். ஆனல் கார் நகர்ந்தபாடில்லை. சுவாமிகள் கணக்குப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். ஒரு நிமிஷம் கழித்து நிமிர்ந்து எங்களைப் பார்த்து, "கணக்குப் பார்த்தீர்களா?" என்று கேட்டார்கள். "பார்த்தோம்" என்ரோம். "இரண்டு பேரும் சேர்ந்து கணக்கில் பிழை விட்டுவிட்டீர்கள். ஒரு சதம் தபால் கந்தோருக்குக் கூடுதலாகப் போயிருக்கிறது" என்று சிரித்தார்கள். அதன் பின்னர்தான் கார் கிளம்பிற்று. நாங்கள் போகவேண்டிய இடத்தில் எங்களை இறக்கிவிட்டுக் கார் திரும்பிற்று.

அன்று மாலை பிரிந்த பிரிவு நமது நீடித்த பிரிவாகவே போய்விடும் என்று நான் எண்ணியதேயில்லை.

# அடிகளாரும் பாரதமும்

[ "இறைமணி" ]

சுவாமிகள் மட்டக்களப்பில் தங்கியிருந்த காலம். மட்டக்களப்புச் சிவாநந்த வித்தியாலயம் கட்டி முற்றுப்பெறும் நிலையிலிருந்தது. ஓய்வொழிச்சலின்றிச் சுவாமிகள் உழைத்து வந்தார்கள். கோடை விடுமுறையில் அவர்களைக் காணச் சென்றிருந்தேன். காலை பத்து மணிப் பொழுதிருக்கும். தமது காரியாலய அறையில் தரையில் பத்மாசனம் போட்டு உட்கார்ந்து ஏதோ குறித்துக்கொண்டிருந்தார்கள். ஒரு சில ஓலைச் சுவடிகள் தரையிற் சிதறிக் கிடந்தன. பாரதம் அச்சு நூலொன்று பக்கத்தில் விரித்திருந்தது. அடிகளாரின் இக்கோலம் புத்தகக்குவியலின் மத்தியிலே காலங்கழித்த 'தமிழ்த் தாத்தா'வின் நினைப்பை எழுப்பியது. என்னையும் மறந்து வாயிலில் நின்றுவிட்டேன். சுவாமிகள் நிமிர்ந்து பார்த்து என்னைக் கண்டதும் தமது இயற்கையான பாணியில் வரவேற்புக் கூறினார்கள்.

அன்று சுவாமிகள் தாம் செய்துவரும் பாரத ஆராய்ச்சியைப்பற்றி என்னிடம் கூறினார்கள். தமது ஆராய்ச்சி விருப்பைத் தூண்டும் நூல்கள் பாரதமும் சிலப்பதிகாரமுமேயென்று கூறியபோது அவர் முகத்தில் ஒருவித சோபையைக் கண்டேன். சுமார் இரண்டு மணிநேரம் எங்கள் சம்பாஷணை நீடித்தது. அதைத் தொடர்ந்து அவ் வருள்வள்ளலாரிடம் இவ் விடயமாகப் பல தடவைகள் கலந்து கொண்டேன்.

ஆசிரியர் விடுமுறைக் கழகமொன்று எட்டு ஆண்டுகளுக்குமுன் நடைபெற்றது. சுவாமிகள் 'இலக்கியச்சுவை' என்னும் விடயம்பற்றிப் பேசினார்கள். பாரதப்பாக்களின் சுவைகளை அள்ளியள்ளியிறைத்தார்கள், கன்னனது கொடைச்சிறப்பையும், அவனே காப்பியத்தலைவனென்பதையும் பல மேற்கோள்கள் கொண்டு விளக்கிக் காட்டினார்கள். பாரதத்தில் அடிகளாருக்குள்ள அறிவும் ஆராய்ச்சியும் ஒருவாறு பிறருக்கும் புலனாயின. 'உரைநடைச்சிலம்பு' என்னும் நூலிலும் இதே பொருளில் அவர்களின் கட்டுரையொன்று வெளிவந்தது. இக்கட்டுரையும் பாரதத்தில் அவருக்குள்ள பயிற்சியை எடுத்துக் காட்டியது.

நான் பாரதத்தில் சில சருக்கங்களைப் பரீட்சைக்காகப் படிக்க நேரிட்டபோது எனக்கேற்பட்ட ஐயங்களைச் சுவாமிகளிடமே சென்று தீர்த்துக்கொள்ளுவதுண்டு. அக்காலத்து வில்லிபாரதத்தில் விபுலாநந்தர் பெற்றிருந்த அறிவைக் கண்டு வியந்தேன். அது என்னை அவருக்கடிமையாக்கியது. அன்று அவரிடம் படித்த விடயங்கள் இன்னும் என் அகத்தில் தோன்றுகின்றன. 1940-ம் ஆண்டு ஆகஸ்டில் 'வில்லிபாரதமும் விபுலானந்தரும்' என்னும் எனது கட்டுரை எமது 'மாணவர் சஞ்சிகை' மலரில் இடம் பெற்றது. என் முயற்சிக்கு அடிகளாரின் ஆசியும் கிடைத்தது.

சுவாமிகள் பாரத நூலில் செய்துவந்த ஆராய்ச்சிக் குறிப்புகள் இன்று எக்கதியாயினவோ அறியோம். அச்சுப்பிரதியொன்றில் தமது திருத்தங்களை மையினால் குறிப்பிட்டு வந்தார்கள். கையெழுத்துப் பிரதியொன்றிலும் இவற்றைப் பொறித்து வைத்திருந்தார்கள். பாரத ஏட்டுப்பிரதிகள் மூன்று சுவாமிகளின் சொத்தாக மதிக்கப்பட்டு வந்தன. அவற்றுள் ஒன்று மட்டக்களப்பிலிருந்த கவிசிரோன்மணியாகிய ''மன்னம்பாடியார்' அவர்களுடையது. நல்லாப்பிள்ளை பாரதப் பிரதியுடனவற்றை ஒப்பிட்டு ஆராய்

ந்து வந்தார்கள். சென்ற ஆண்டில் சுவாமிகளை நான் மடத்தில் சந்தித்தபோது கூட என்னிடம் இதையிட்டுப் பேசினர்கள். இன்னும் பல ஓலைச் சுவடிகளை ஆராய்ந்து திருத்தமான ஒரு பாரதப் பதிப்பு வெளியிடவேண்டுமென்ற ஆசை நெடுநாளாய் அவரிடமிருந்துவந்ததை நானறிவேன். பாரத ஆராய்ச்சி முற்றுப் பெறமுதலே எம் 'ஈழத்திருமணி'யைப் பறிகொடுத்துப் பரதவிக்கின்றோம். இது தமிழுக்கும் தமிழருக்கும் ஈடுசெய்யமுடியாத நட்டமாகும்.

சுவாமிகள் தம் ஆராய்ச்சியினல் தாம் பெற்ற அனுபவங்களை அடிக்கடி என்னிடம் சொல்லுவதுண்டு. அவற்றுள் என்னறிவிலிருந்த சில முடிபுகளை மட்டும் கீழே கொடுக்கின்றேன்.

"மேருவரையினின் மேதினியுய்யப்
பாரதம் வரைந்தபண்ணவன்
சீரடிக்கமலம் சிரத்தணிவோமே''.

அச்சுநூலாக இன்று வழங்கும் பாரத நூலில் விடப்பட்ட பாட்டுகள் பல உளவென்றும் அவற்றைத் தாம் சேகரித்து வருவதாகவும் ஒருமுறை அடிகளார் என்னிடம் உரைத்தார்கள். சிறிது காலத்தின்பின் மீண்டும் அவரைக் கண்டபோது அத்தகைய பாடல்கள் இருநூற்றுக்கதிகமாகத் தமக்குக் கிட்டியிருப்பதாகவும் கூறினர். அவை வெளிவர முதலே அடிகளார் எம்மைப் பிரிந்துவிட்டாராதலின் அவற்றிற்கு என்ன நேர்ந்ததென்பது தெரியவில்லை.

திரௌபதி மாலையிட்ட சருக்கமென்பது பலபிரதிகளில் திரௌபதி சுயம்வரச் சருக்கமென்று குறிப்பிடப்பட்டிருந்ததாம். திரௌபதிக்காக பாஞ்சாலன் சுயம்வரமேற்படுத்தியதும் சுயம்வர மண்டபத்து நிகழ்ச்சிகளுமே இப்பகுதியில் முக்கிய இடம் பெறுவதால் இப்பெயர் பெற்றிருக்கலாம். வேறு நூல்கள் பல சுயம்வரச் சருக்கம் என்று ஒரு பகுதியுடையனவாயிருத்தலின் ஏடெழுதுவோர் மாற்றியெழுதியிருக்கக்கூடும். இது பூரணமாக ஆராயப்படவேண்டும் என்று சுவாமிகள் கூறினர்கள்.

காண்டவ தகனச் சருக்கத்தில் முதற்பத்தொன்பது பாடல்களையும் பிரித்தெடுத்து 'வசந்தச் சருக்கம்' என்று குறித்திருந்தனர். இக்கவிகள் வசந்த காலத்தையும், வசந்த வர்ணனையையுமே கூறுவனவாதலின் அவற்றைத் தனித்த ஒரு சருக்கமாக எழுதுதல் சாலச்சிறந்ததே. இதுபோன்ற பல சிறு சருக்கங்கள் இந்நூலில் ஏற்கனவே இடம்பெற்றுள. பெருங் காப்பியங்கள் பல வசந்த வர்ணனையைத் தனித்த ஒரு அங்கமாகவே பெற்றிருக்கின்றன. மூல நூலைக் கொண்டே இதனை ஆராய்தல் வேண்டும். சுவாமிகள் இதுபற்றித் திட்டமாக ஒன்றும் சொல்லாவிட்டாலும் ஏட்டுப் பிரதிகளையே பெரும்பாலும் தழுவிப் பேசினர்கள்.

அருச்சுனன் தவநிலைச் சருக்கத்தில் முதல் இருபத்தெட்டுப் பாடல்கள் 'கான்புகு சருக்கம்' என வழங்கப்பட்டிருக்கின்றன. இப்பாடல்களிற் கூறப்படும் செய்திக்கும் தலைப்பெயருக்கும் அதிக பொருத்தமிருப்பதாகவும் இதுவும் யோசிக்கத்தக்கதேயென்றும் வள்ளலார் சொன்னதுண்டு.

சில சுவடிகளில் புட்ப யாத்திரைச் சருக்கமென்பது முண்டகப்பூச் சருக்கமென்றும், மணிமான்வதைச் சருக்கமென்பது மந்தாரபுட்பச் சருக்கமென்றும் மாற்றப்பட்டிருப்பதோடு பாடல்களும் மிக்குக் காணப்பட்டனவென்றும், சருக்கங்களின் பெயர்கள் கதைத்தொடர்புக்கும் கருத்துக்கும் ஏற்க அமையாதபடியால் இதுவரை வழக்கத்திலிருந்து வந்த பெயர்கள் சரியானவைதானென்றும் எம் ஆனந்தப் பெருந்தகை அபிப்பிராயமுரைத்தார்.

பாரதப் பதிப்புகளெல்லாம் போர்ச் சருக்கம் வரையுமேயுள்ளன. பதினெட்டாம் நாட் போரிலே துரியோதனன் மாண்டதும் கதை முடிந்துவிடவில்லை. பிறர் நூல்களிலும் மூலநூலிலும் மிகுதிக் கதை

யும் பாடப்பட்டிருக்கின்றன. நூலாசிரியர் குமாரர் வரந்தருவாரின் பாயிரம் நூல் முற்றும் பாடப்பட்டதெனவே கூறுகின்றது. எனவே மிகுதிக் கதையும் பாடப்பட்டுப் பின்னர் தவறிப்போயிருக்கலாம். சுவாமிகள் தம்மிடமுள்ள ஓலைச்சுவடியொன்றில் பதினெட்டாம் போர்ச் சருக்கம் முடிந்தபின் 'முடிபுனை சருக்கம் என ஒன்று சேர்த்துப் பாடப்பட்டிருப்பதாக என்னிடம் கூறினர். இதில் 45 பாடல்களுள. கதை பூரணமாக இதனுடன் முடிவுறுகிறது. இப்பாடல்களைச் சுவாமிகள் கூறக்கேட்டிருக்கிறேன். பாடல்களின் நடைப்போக்கும் கதைத் தொடர்பும் நோக்கி இச்சருக்கம் பாரத நூலின் இறுதிச் சருக்கமாக அமைதல் பொருத்தமுடையதே. இப்பாடல்கள் இடைச்செருகலா அன்றி மூலம்தானு என்பதைத் தாம் ஆராய்ந்து வருவதாக அடிகளார் சொன்னர்கள். அடுத்தமுறை சந்தித்தபோது 'முடிபுனை சருக்கம்' என்னும் பெயரில் 'சதாசிவன்' என்பவரும் வேறு சில பாடல்கள் பாடியிருப்பதாகக் கூறி அவற்றைப் படித்துக்காட்டினர்கள். இவற்றின் இறுதிச் செய்யுள்

முடிபுனை சருக்கந்தன்னை முன்னவன்
மொழிந்தானேன்ன
வெடிமலர்பங்கயத்தாள் வெள்வரைக்
கோங்கணேசன்
அடிபுகழ் மைந்தனை சதாசிவ
னறைந்தான் வேற்றிப்
படிபுகழ் புலவரேல்லாம் பரிந்தருள்
கூரமாதோ.

என்பது. இந்த ஆராய்ச்சியில் சுவாமிகளின் பெறுபேறு தெரிந்திலது.

பாரதக் கதையுடன் தொடர்புடைய 'மாவிந்தபாரதம்' என்னும் ஒரு நூலுண்டென்றும் அதைத் தனி நூலாகப் பதிப்பிக்க வேண்டுமென்றும் சுவாமிகள் சொன்னர்கள். அந்நூலை நானும் பெற்றுப் படிக்க எண்ணியிருந்தேன். விதி யாரை விட்டது. இந்நூலைப்பற்றி அவர் சொன்ன குறிப்புகளைக் குறித்து வைத்திருக்கின்றேன். இதில்,

| | | |
|---|---|---|
| கடவுள் வாழ்த்து | 22 | பாடல்கள் |
| நாட்டுச்சிறப்பு | 57 | ,, |
| துவாரபதிச் சருக்கம் | 21 | ,, |
| துருவாசச் சருக்கம் | 57 | ,, |
| வழக்குரைத்த சருக்கம் | 81 | ,, |
| திரௌபதி முத்தியடைந்த சரு. | 80 | ,, |
| சிங்கத்தின் கதைச் சருக்: | 178 | ,, |
| கருடனைக் கண்ணுற்ற சரு: | 125 | ,, |
| வைகுந்தச் சருக்கம் | 43 | ,, |

என்பன உள. இப்பாடல்களின் தன்மையினுலும் நயத்தினுலும் இவை ஒரு சிறந்த புலவரின் பாடல்கள் என அறிய முடியுமாயினும் நூலாசிரியர் பெயர் குறிப்பிடப்பட்டிலது.

இவைபோன்ற பல அரிய விடயங்களை அடிகளார் ஆராய்ந்து வந்தார்கள். இடைக்கிடை ஏற்பட்ட தேக சுகக் குறைவும், யாழ் நூலின் ஆராய்ச்சியும் விபுலானந்தரின் வில்லிபாரத ஆராய்ச்சியைத் தடைசெய்துவந்தன. யாழ் நூல் அரங்கேற்றம் முடிந்தபின் சுவாமிகளை இப்பணியில் இறங்கும்படி அன்பர்கள் தூண்டிவந்தார்கள். ஆனல் எவரும் எதிர்பாராத்திராதமுறையில் சுவாமிகள் மண்ணுலகை நீத்ததனல் அன்பர்களின் எண்ணம் மண்ணுயிற்று. அவர்களின் ஆராய்ச்சிக் குறிப்புகளைப் பெறக்கூடியவர்கள் அவற்றை வெளிப்படுத்தி அறிவும் ஆற்றலும் உள்ளவர்களைக் கொண்டு அவ்வாராய்ச்சி தொடர்ந்து நடைபெற்று உண்மைகளை அறியச் செய்தல் வேண்டும். அது ஆனந்தரின் ஆத்ம சாந்திக்கும் தமிழரின் பெருநலனுக்கும் செய்யும் தொண்டாக மதிக்கப்படும்.

பாரதத்தைப் புதுக்கிப் பதிப்பிப்பதோடு அதற்குச் சிறந்த ஒரு உரையும் எழுதி வெளியிடவேண்டுமென்பது அடிகளாருக்கு இருந்த அவா. அவரிடம் கற்ற காலத்தில் நான் குறித்து வைத்திருந்த ஒரு குறிப்பின்மூலம் அவரின் ஆராய்ச்சி அறிவைத் தெளிவாக அறிந்துகொள்ள முடிகிறது. அக்குறிப்பையும் ஈண்டு தருகின்றேன்.

பாரதம் முழுவதும் கற்பனை நூலென்பார் சிலர். அஃது உண்மையுரையன்று. உண்மைச் செய்திகளிடையே புலவரின் கற்பனை விரவியிருக்கிறது. பாரதமென்பது பரதனது வமிசத்தவரின் கதையென்பர். பார் : அதம்=பாரதம் ஆதலும் சாலும் 'நீபாரத அமரில்...........' என்பதும் ஈண்டு நோக்கத்தக்கது. வேதங்களிலும் பாரமுடையது பாரதமெனப் பெயர்பெற்றது என்பதும் பொருந்தும். பாரதம் பெருங்காப்பிய இலக்கணங்கள் பெரிதுமமைந்த ஓர் நூல். இக்காப்பியத் தலைவன் கண்ணனே என்பாரும், அருச்சுனன் என்பாரும், சுயோதனன் என்பாரும் தம்முள் முரண்படுவர். இவர் யாவரையும் அன்பினாற் பிணித்த கன்னனே காப்பியத் தலைவனென்பது என் எண்ணம். "பெண்மைக்கிரதியென வந்த..............." என்னும் கூற்றும் இதனை வலியுறுத்தும்.

பாரதத்தின் உட்பொருள்கள் பல. இவற்றுள் சிறப்புடைய சிலவற்றை மட்டுமே நாம் நோக்கமுடியும். ஏனெனிற் பாரதம் பரந்துபட்டது. (1) கற்பின் மேற்பாடு ("உடுத்த துகி லுணர்விலா னுரிந்திடவும்..............") (2) கொடைத்திறம் (எத்தலங்களிலும் ஈகையால் ஓகை வாகையாலெதிரிலாவீரன்." "ஆவியோநிலையிற்............" (1) பொறுமை. ("மைக்கோதில் கலையுடையன் பொறையுடையன்........." "அருளாருந்தருமபதி............") (4) வனவாசம் ("அத்தனேயடுவலாண்மை.........") (5) நல்லுபதேசம் (பிறர்மனையவரைப்........" "ஒருமொழியன்னை வரம்பிலாஞானம்........." "மூத்தவரிளையோர் வேதமுனிவரர்..........") (6) நன்றியுடைமை ("செஞ்சோற்றுக்கடன்......") (7) கல்வித்திறன் (வீமன் அருச்சுனன் ஏகலைவன்) (8) குருபக்தி (ஏகலைவன் கதை) (9) குரவர்ப்பேணுதல். (10) தமையனருள்வாக்கிய பரிபாலனம் செய்தல், என்பவை முக்கிய உட்பொருட்களாம். ஈண்டுக் கூறாதனவும் பலவுள.

பாரதம் நவரசங்களும் நிறைந்தது. ஒரு சில உதாரணங்கள்: வீரச்சுவை. (தி. மா. சரு. 56, சூ. போ. சரு. 229, கி. தூ. சரு. 12, 119, 120, 121; 13-ம் போர் சரு. 183—184. அச்சச்சுவை. (கி. தூ. சரு. 119. 13-ம் போர் சரு. 187; தீ. யா. சரு. 5 நச். பொ. சரு.) இழிப்புச்சுவை. (தி. மா. சரு. 59.) வியப்புச்சுவை. (கி. தூ. சரு. 35—38.) காமச்சுவை. (பழ. பொ. சரு. 2, தீ. யா. சரு. 31, 32) அவலச்சுவை (கி. தூ. சரு. 17-ம் போர் சரு. குந்திகூறுதல். துகிலுரிந்தபோது திரௌபதி கூறுதல்).

இவைபோன்ற பல ஆராய்ச்சிகள் செய்துவந்தார்கள். அக்குறிப்புகள் வெளிவரும் நாள் தமிழருக்கு ஒரு திருநாளாகும்.

# விபுலாநந்தவடிகள் நினைவுக் கவிகள்

[ புலோலி, வித்துவான், க. முருகேசபிள்ளை ]

---

கொச்சகம்.

1. அயிலாருங் கண்மடவா ளுமைபாக னடிசேர்ந்து
கயிலாயத் துறவுதரும் காருண்யப் பெருமகனே
மயில்வாக னப்பெரியோய் மாண்பமையும் பெருந்துறவோய்
இயலோங்கு விபுலானந் தவடிகளோ வடிகேளோ.

2. உரமிகுந்த தமிழ்மொழியும் உள்ளொளிய வாங்கிலமும்
தரமுவந்த வடமொழியுந் தாண்மையிலா விசைநூலும்
குரவனென நின்றேத்தக் குவலயத்திற் புதுமைவரத்
தரமுயர்த்தாய் தரமுயர்ந்தாய் தாரணியிற் புலவோனே.

3. பூவேத்து மதிமாண்பா புலவோர்கட் காரமுதே
நாவேத்து நலமுடையோய் ஞாலமிசை மிகுபுகழோய்
கோவேத்து பெருந்துறவுக் கோவில்கண்ட மாவரனே
யாவேத்தி யுன்மகிமை யானுரைப்பேன் துறவுடையோய்.

4. பூவுலகோர் பணிகொண்டாய் பொன்னுலகோ ரணிகண்டாய்
யாவர்களும் போற்றிடவே யிணையற்ற தூதுவனுய்த்
தேவுலகு வரவேற்கச் சென்றனையே யவ்வுலகோர்
நாவுலகு தடிப்பேற ஞானமுறை தெளிப்பாயே.

5. நில்லாதன வவற்றை நிலையினவே யென்றுணரும்
புல்லறிவாண் மையது கடையென்ன பொன்மொழிக்கு
எல்லாமா நல்லுலகு மியலுவதை நாங்கண்டோம்
பல்லாரும் பேருட்குப் படைத்திடவே மறைந்தனையோ.

6. பேரறிவு படைத்திட்ட பெரியோனே நின்மறைவு
சீரறியுந் தமிழ்மொழியின் சிறப்பிற்கோ ரிடையூறும்
ஆரறிவார் நின்னருமை யறிந்தவர்க ளறிவார்கள்
நீரறியும் நெருப்பறியும் நீயறிந்த தமிழ்மொழியே.

7. செந்தமிழின் நிறைகுடமே சீரோங்கு மிசைப்படமே
நந்தாத புகழ்மலரே நாவலர்கள் சேரிடமே
அந்தமிலா நல்லிறைவன் பாதமலர் பணியறமே
சந்தாரும் சுந்தரனே சாமிவிபு லானந்தனே.

8. அண்ணுமை லகனிலே யடியேற்குப் பாடமுறை
எண்ணுமை லறிவிக்கு மியற்கந்த சாமியுடன்
பண்ணுருந் தமிழ்மொழிநீ பகர்விக்கும் காலமென்றே
எண்ணுரும் நின்னெல்லா மெண்ணமனம் புண்ணுமே.

9. எல்லாருந் தமிழறிந்தா ராளுலும் நின்போல்
எல்லாரு மறிந்துமில ரிவ்வுலகிற் பலநாளும்
கல்லாருந் தெளிவுபெறக் கட்டுரைகள் கதைமுறைகள்
இல்லாரு முள்ளவரு மேற்றிடவே சொலவல்லாய்.

10. தொல்காப்பிய முதலாம் பல்காப்பிய முணர்ந்தாய்
ஒல்காத பெரும்புகழில் நல்காத சீருடையோய்
அல்காத நின் துறவை யாரினிமேல் மேற்கொள்வார்
செல்லாத மனமுடையோய் தேவர்பணி மாதுறவோய்

11. அறிவுடைய நூலெல்லா மறிந்துள்ளா யதுதொட்டு
மறமெல்லாம் புறங்கண்டாய் மானிலத்து மேன்மைதரு
துறவுடைய வொழுக்கமே தோதென்று மனங்கொண்டாய்
புறமுடைய சொல்லில்லாய் புன்மையெலாந் தவிர்ந்தனையே.

12. மதுரைவளர் தமிழ்ச்சங்க மண்டபத்து மிமாலயத்தும்
சதுரமுறு மண்ணுமலைச் சர்வகலா சங்கத்தும்
புதுமுறைதேர் கொழும்புநகர்ப் புன்மைதவிர் கழகத்தும்
விதிமுறைசேர் தமிழ்மொழியை விதம்விதமாய் மொழிந்ததனல்

13. விண்ணவருந் தம்நாட்டில் விளங்குகல் லூரியமைத்து
மண்ணிலவு தமிழ்கற்பான் மனதினிலே நினைந்தார்கள்
எண்ணினரா சிரியன்தனை யெவ்விடத்து மாருமிலை
பண்ணிதஞ்சேர் விற்பனனைப் பாமுறைதேர்ந் தழைத்தனரே.

14. விபுதர்களும் தமிழ்கற்பான் விபுலானந்தனை யழைத்தார்
தபுதலிலா மாணவர்நாம் தவித்தலைந்து மதிகெட்டோம்
விபுலானந் தாவென்று விழையுமெம் முகம்பார்ப்பாய்
தபுதலிலாத் தமிழழகா தாரணிக்கோர் பொலங்கொடியே.

15. எல்லாரு மோருலகி லிருப்பார்க ளதுவாக
சொல்லாரும் நின்னிருப்பு வெவ்வுலகு மாயிற்று
பல்லாருந் துதிகூறப் பாருலகும் பொன்னுலகும்
வில்லார வீற்றிருப்பாய் வேறுரோ விதுவாவார்.

16. தோன்றினுற் புகழுடனே தோன்றிடுக வென்பதற்கு
ஆன்றபே ரிலக்கியமா யமைந்துள்ள வடிகேளோ
சான்றுடைய நூல்கற்றுய் கற்றபடி நிற்போனுய்
சென்றாலும் நின்றாப்போற் சீர்பலவு மாயினையே.

17. மண்ணுலக மிதினின்று வரவழைத்து நின்துறவு
நண்ணுமுறை யதுகற்க நலமுடனே தாம்நினைந்து
விண்ணவர்க ளழைத்தாரோ விபுலானந்த வடிகாள்
எண்ணரிய நினைக்காண்ப தெந்நாளோ வெந்நாளோ.

18. மண்ணுலகி லுடலெடுத்தால் மாதேவ ராளுலும்
திண்ணமுட னதைவிடுத்தல் தெய்வீக நிலையென்பர்
யண்மையுரு வமலமுத்தி யடையாது போயினையோ
கண்ணுதலார் காட்டாக்கால் காண்பாரார் காசினியில்.

# அடிகளாரும் தமிழ்ப் புலவர்களும்.

[ பண்டிதர், கா. பொ. இரத்தினம் B.A. (HONS.) B. O. L. ]

---

பத்து மாதங்களுக்கு முன் ஒரு நாள். மாலை நேரம். ஐந்து மணிக்கு மேலிருக்கும். கொழும்பு இராமகிருஷ்ண மடத்திலிருந்து அடிகளாரும் யானும் உலாவப் புறப்பட்டோம். வெள்ளவத்தைக் கடற்கரையிலிருந்து தெகிவலைப் பாலம் வரையும் கடற்கரையோரமாக நடந்து சென்றோம். பாலத்தைக் கடந்ததும் வானம் இருளத் தொடங்கிற்று; கருமேகங்கள் நகரத் தொடங்கின; பளிச்சுப் பளிச்சென்று மின்னிற்று. மின்னலைக் கண்டவுடன் அடிகளார் "மின்னுக்கெல்லாம் பின்னுக்கு மழை" என்று தமிழ்க்கிழவி சொல்லியிருக்கிறாள். அவள் சொல்லைத் தலைமேற்கொண்டொழுகல் எங்கடன். ஆதலின் உடனே மடத்திற்குத் திரும்புவோம், என்றார். சிறிது விரைவாக நடந்து மடத்தைச் சேர்ந்தோம். சேர்ந்தவுடனே மழை பொழியத் தொடங்கிற்று. 'தமிழ்க்கிழவியின் அறிவுரையை மதித்து நடந்த படியாற்றான் மழையில் நனையாமல் மடத்தை அடைந்தோம்' என்றார் அடிகளார். ஔவையாரிடத்தில் அவர் வைத்திருந்த பேரன்பையும் நன்மதிப்பையும் நான் நினைத்து நினைத்து வியந்தேன். 'தமிழ்க்கிழவி' என்று அவர் சொல்லும் பொழுதெல்லாம் கேட்பவர்களுடைய உள்ளத்தில் ஒரு தனியின்பமும் பெருமிதமும் உண்டாகும்.

அடிகளார் தம் இளமைப்பருவத்திலே ஆறுமுக நாவலருடைய சரிதத்தைத் படித்தார். நாவலரிடத்தில் தமது உள்ளத்தைப் பதித்தார். அவருடைய வாழ்வை அடியொற்றி வாழவேண்டுமென்றும் எண்ணினார். அடிகளார் துறவு பூண்டு தமிழுக்கும் இந்து சமயத்துக்கும் தொண்டாற்றியதற்கு இளமையில் நாவலரிடத்து அவர் கொண்ட பேரன்புங் காரணமெனலாம். இந்தப் பேரன்பின் அறிகுறியாக "நாவலர் மெய்க்கீர்த்தி மாலை" என்னும் ஒரு நூலையும் இயற்றினார். அந்நூலில், "ஈழ நாட்டின் இணையிலாப் பெருநிதியனையார்" எனவும், "முருகனே என்ன அலந்தவர்க்குதவி, நினைந்தது முடிக்கும் ஆற்றலும் பெற்றுயர்வடைந்தான்" எனவும், இன்னும் பலவாறும் பெருமையினைச் சிறப்பாக விளக்கியுள்ளார்.

முத்தமிழ்ப் புலமையினாலும், துறவொழுக்கத்தாலும் உயர்ந்து விளங்கிய இளங்கோ அடிகளே அடிகளாருடைய உள்ளத்தைக் கொள்ளைகொண்ட புலவர்களுட் டலைசிறந்தவர். தமிழ்ப் புலவர்கள் யாவரும் இயல், இசை, நாடகம் எனும் முத்திறத் தமிழும் ஒருங்கே புலமை பெறவேண்டுமென்பது அடிகளாருடைய கொள்கையாகும். இதனை அவர்கள் இயற்றமிழ் மாத்திரம் வல்ல புலவர்களிடம் அடிக்கடி எடுத்துக் கூறியிருக்கிறார். இக்கொள்கைப்படி தாமும் முத்தமிழும் புலமை பெற்று விளங்குகிறார்; முத்தமிழுக்கும் பணி செய்தார். அவர்கள் எழுதிய "மதங்க சூளாமணி" எனும் நூல், நாடகத்தமிழ் உலகில் ஒப்பற்ற ஓர் இளவள ஞாயிறுபோலத் திகழ்கின்றது. தமிழ் மக்களுடைய இசைக் கருவியாகிய யாழைப்பற்றிய ஆராய்ச்சியினைப் பல வருடங்களாகச் செய்தார். அவ்வாராய்ச்சியின் பயனாக யாழ்நூல் எனுங் கலாநிதி அவருடைய அறிவுக் கடலிலிருந்து எழுந்து இசையரங்குகளிலும் தமிழ் மக்களுடைய உள்ளங்களிலும் பிரகாசித்துக்கொண்டிருக்கிறது. அறிஞர்கள் யாவரும் போற்றும் இந்நூலை அடிகளார் இயற்றுவதற்கு ஆதாரமாயிருந்தது சேரமுனிவருடைய சிலப்பதிகாரமேயாகும். இந்தச் சிலப்பதிகாரத்திலும் இதன் ஆசிரியராகிய இளங்கோவடிகளிடத்தும் கொண்ட பேரன்பும், நயப்புங் காரணமாகவே அடிகளார் யாழ்நூல் ஆராய்ச்சியிலீடுபட்டார் என்பதுமீண்டு குறிப்பிடத்தக்கது.

அடிகளார் இந்த இருபதாம் நூற்றாண்டுக்குரியவரெனினும் பழமையிற் பற்றும், தமிழ்ப் புலவர் மரபிலே அளவிறந்த அபிமானமும் உடையவர். இதனை அவரோடு நன்கு பழகிய அன்பர்கள் யாவரும் அறிவர். யாழ்நூலின் அமைப்பு முறையும், இதனை நன்கு எடுத்துக்காட்டத்தக்கது. இந்நூலின் கடவுள் வாழ்த்து, இயல் வகுப்பு முதலியவற்றை நோக்கின் இது சங்க காலத்திலெழுந்த நூல்களில் ஒன்றோ என்றெண்ணத் தோன்றும். புதுமை புதுமை என்று கூவிக்கொண்டு பழமையை இகழும் மனப்பாங்கு ஓங்கும் இக்காலத்திலும் அடிகளார் தம் யாழ்நூலைப்

# எழுத்துலகத்திலே! — "நக்கீரன்"

## பொன்னி :

திங்கள் வெளியீடு. ஆசிரியர் : முருகு சுப்பிரமணியம். தமிழ் நாட்டில் இப்போது வெளிவந்துகொண்டிருக்கும் பத்திரிகைகளுள் செம்மை மிகுந்து திகழும் இதழ்களுள் இதுவு மொன்று என யாம் கூறவேண்டுவதில்லை : "பொன்னி"யின் பொங்கல் மலரே சான்று பகருவதாகும். அறிஞர்கள் பலரது கவிதை களும், கட்டுரைகளும், கதைகளும் கொண்டு இலக்கியப் பூங்காவின் காட்சிப் படங்களுடன் வெளிவரும் இந்த இதழினைத் தமிழ் மக்கள் மனப்பூர்வமாக ஆதரிக்கவேண்டும்.

விலை : சதம் **50**.

"பொன்னி"

அலுவலகம், கீழராஜவீதி, புதுக்கோட்டை.

---

## கரும்பு :

மாதப் பத்திரிகை. ஆசிரியர் : ந. மெ. தியாகராஜா. தமிழ்மொழியின் ஆக்கம் வேண்டி உழைக்கும் இந்தப் பத்திரிகையின் பெயரே இனிக்கிறது. "தமிழ் இனம்" என வித்துவான் திரு. மா. இராசமாணிக்கனர் அவர்கள் ஒரு சிறந்த கட்டுரை எழுதியுள் ளார்கள். "தவறுடையேன்" என திரு. மெ. சுந்தரம் அவர்கள் எழுதிய விஷயமும் அழ காக இருக்கின்றது. "நாளும் நடப்பும்" என்ற தலையங்கத்தில் எழுதப்பட்டவை ஆசிரியரது நடுநின்ற செம்மையை விளக்கு கின்றன.

தனிப்பிரதி அணு **6**. ஆண்டுக்கட்டணம் ரூ. **4—8—0**

"கரும்பு" செயலகம்,

முருகன் நிலையம், புதுக்கோட்டை.

## மறுமலர்ச்சி :

திங்கள் வெளியீடு. ஆசிரியர்கள் : திரு வாளர்கள் : எஸ். பீ. சர்மா; டீ. எஸ். வரதரா ஜன். ஈழநாட்டிலிருந்து வெளிவருகின்ற இனிய "மறுமலர்ச்சி" இதழ் இது. பிரசித்தி வாய்ந்த எழுத்தாளர்கள் பலர் விஷயதானம் செய்திருக்கிருர்கள். தமிழகத்திலே தலை சிறந்த எழுத்தாளர் எனப் புகழ்பெற்றுத் திகழும் பண்டிதர் திரு. சி. கணபதிப்பிள்ளை அவர்களுடைய "இலக்கிய ஆசிரியன்" என் னும் கட்டுரை போற்றப்படவேண்டியது: பண்டிதரவர்களுடைய எழுத்துகளைப் படிப்ப தற்குத் தமிழுலகம் ஆசைகொண்டிருக்கின்ற மையை ஈண்டும் குறிப்பிட விரும்புகின்ருேம்.

ஆண்டுச் சந்தா ரூ. **3—50**, தனிப் பிரதி **30** சதம்

காரியாலயம் : 288, ஆஸ்பத்திரி ரோட்டு,

யாழ்ப்பாணம்.

---

## மீண்ட இன்பம் :

ஆசிரியர் : திரு. ராம. நாக. முத்தையா "வாழ்வாவது இன்பம்; வளமுறுவது திண் ணம்" என்ற குறிக்கோளுடன் எழுதப்பட்ட செம்மை வாய்ந்த கதை. சமுதாயத்திலுள்ள குற்றங் குறைகளைத் தயக்கமின்றி எடுத்துக் காட்டுகிருர் ஆசிரியர் தனித் தமிழில். இதை வீறுகொண்ட 'கருத்துக் களஞ்சியம்' எனத் திட்டமாகக் கூறலாம்.

விலை ரூபா **1—8—0**.

பதிப்பாளர் : "தமிழக நிலையம்"

சண்முகனுதபுரம்—காரைக்குடி (வழி)

---

பண்டைய புலவர் மரபைத் தழுவியே அரங் கேற்றினர். "மூவர்கட்கரியான் நிற்பத் தாம் வீற்றிருந்த முத்தமிழ்த் தெய்வச் சங்கப் பாவலர்" பெருமையை உள்ளபடி அறிந்தவராத லின் அவர்களிடத்தில் தம் உள்ளத்தைப் பறிகொடுத்தார். தாமியற்றிய அழகிய நாய் ச்சியார் நான்மணி மாலையின் செய்யுளொன் றில் இசைத்தமிழ்ப் புலவர்களுடைய பெயர் கள் யாவற்றையும் இணைத்து, அவர்கள் யாவர்க்கும் அஞ்சலி செய்திருக்கிருர். "கற் றலிற் சிறந்தன்றே கற்ருேரை வழிபடல்" என்பது பண்டைத் தமிழ் மக்கள் கண்ட பே ருண்மை. இந்த உண்மையை 'இக்காலத் தமிழ் மக்களுடைய உள்ளத்திற் பதியுமாறு விளக்கிக் காட்டிய தனிப்பெருமை அடிகளா ருக்கே உரியதாகும். தமிழ்ப் புலவர்கள் வாழ்க! அடிகளார் வாழ்க!!

# அடிகளைப்பற்றிய நினைவுகள்.

[ உயர் திரு. விபுலானந்த அடிகளாரின் மாணவன் சே. வேலாயுத பிள்ளை B. A. (HONS.) ]

---

[ நேரிசைவெண்பா ]

பேரருளின் திருவுருவே பெருந்தகைமைக் கிருப்பிடமே
சீருடைய தமிழகத்தின் செழுநிதியே—ஆரமெனச்
செந்தமிழ்க்கு யாழ்நூலைச் செய்தணிந்தா யுன்னுருவம்
எந்தனுளத் தகலா தினி. (1)

இளங்கோசெய் இலக்கியத்துள் இசைத்தமிழின் இலக்கணங்கள்
விளங்காமல் வறிதிருத்தல் தான்கண்டு—துளங்காத
நுண்மாண் நுழைபுலத்தால் நூல்செய்து நல்கினைக்கென்
கண்மேல் இடந்தந்தேன் யான். (2)

ஆரியமும் ஆங்கிலமும் ஆராய்ந் தவற்றிலுள
சீரியநற் கலைநிதியைச் செந்தமிழிற்—பேரியன்ற
பாவமுதாய்ப் பேருரையாய்ப் பல்வகையி லீந்தோய்நின்
நாவமுதை நனியிழந்தேன் நான். (3)

'எண்குணத்தான்' எனுந்தொடருக் கியன்றவுரை யெட்டுணையும்
ஒண்புலவன் வள்ளுவனுக் கொவ்வாதென்—றெண்குணமும்
பாயிரத்துட் காட்டியெனைப் பரவசமாய்ச் செய்தாய்மேல்
நீயுரைக்கும்-பேரிழந்தேன் நான். (4)

மூவாத் தமிழ்ச்சுவையை முன்னுகர்ந்து பின்னதற்குத்
தேவா முதமிணையென் றறிதற்கோ—நாவால்
மண்ணோர்கள் போற்றிசைப்ப மாயாப் புகழ்நிறுவி
விண்ணாடு சென்றடைந்தாய் நீ. (5)

[ வேறு ]

அன்றொருநா ளடியேனை யாதரவா யருகிருத்தி
இன்றோடு குறைமுடித்தே னிசைத்தமிழுக் கினிமேனான்
நன்றாய நாடகநூல் நனிவிரைவிற் செய்தளிப்பேன்
என்றாயவ் வுரையின்றும் என்செவியி லொலிக்குமதே. (6)


தென்னாட்டின் பெருநெறியாம் சைவத்தின் வரலாறும்
சென்னாப்போ தார்நூலின் மொழிபேர்ப்பு மெழுதுவதாய்ப்
பன்னாளு மென்னோடு பகர்ந்துள்ளாய் பெருமானே
யென்னோநா மினியவற்றைப் பெறுமாறென் றருளுகவே. (7)

# SWAMI VIPULANANDA.

## By K. KANAGARATNAM, Esq., M.P.

IT is nearly thirty years ago, I first met in Colombo young Mylvaganam, who later brought fame and name to his motherland as Swami Vipulananda. Colombo was then in the throes of Western civilization and habits, but the young man, who came from an unspoilt village, 24 miles from Batticaloa town, with a firmly rooted background of Tamil learning and Tamil culture, which he imbibed so early in his life, was unmoved by all the artificial living created by the ill-conceived adoption of Western ways of living and thinking.

He was a pucca Nationalist with all flexibility to absorb only what he tested and found fit to enrich his own treasures. He was then widely read in English literature and Western sciences, much advanced for his age and world contact and the absorption was greatly accelerated by his deep knowledge of his own literature.



K. KANAGARATNAM, Esq., M.P.
(Retired Auditor-General)

He completed his course of training in the Ceylon Technical College as an Instructor in Science and took to teaching. He later obtained the degree of the London University. I lost personal touch with him while he was engaged in educational work in the Jaffna Peninsula until 1924, when I had the pleasure of receiving him at Trincomalee where I was working as an Examiner of the Audit Department when he first came to his country after his ordaining in Madras as a monk of the Ramakrishna Mission.

It was then that he revealed all his hitherto unknown talents and deep learning in Tamil. I do not propose to deal with all his achievements which brought him to the forefront in the field of learning and the recognition he received from the erudite pundits and scholars of the Madura Tamil Sangham and his elevation to the rank of Professor of Tamil of the Annamalai University and the thought-provoking contributions he made as the Editor of the Prabuddha Bharata. Suffice it to say that with all the wealth of Tamil learning and scholarship in South India, with numerous researches in the different departments of Tamil literature and culture, Swami Vipulananda easily obtained a top rank and earned plaudits from first rate scholars of South India.

His last work in his deep researches into the ancient and scientific music of the Tamils will give him an undying name in the future history of the Tamils and their culture.

In my contact with many Tamils of this country, who have displayed a natural aptitude to study their own literature and art, I have seldom come across another who could excel Swami Vipulananda in initiative, deep understanding and high scholarship. He was always synonymous with Tamil thinking and Tamil living, so deeply buried in the richness and wealth of the Tamil language and literature.

Unfortunately, at a time when his mature learning and thinking were expected to produce something tangible in the form of productions for the benefit of posterity, his health broke down, leaving him no opportunity for sustained work. It is a matter for deep regret that he has left us with very little of his erudite learning which would have otherwise enriched our literature. But his passion for Tamil learning has created considerable interest among his students, and I have no doubt that the high example he has set of almost religious devotion to his language and literature will produce a new class among the younger generation who will enlarge on their wealth and beauties by making their own contributions to fit in with the new national life ushered in by the attainment of independence by our country.

# SWAMI VIPULANANDA

**A. M. K. CUMARASWAMY, Esq.**
( Registrar, University of Ceylon )

IT is a very high privilege to be permitted to pay a tribute to the memory of a great man and a good man. I was first attracted to the Swami by the elegance, precision and felicity of diction of his Tamil prose. It is perhaps presumptuous on my part, who am at best but a dilettante in Tamil literature, to pay a tribute to Swamiji's Tamil prose, but the fact of the matter is that a receptive pupil's assessment of a scholar is somewhat nearer to the truth than that of a fellow-pundit, however learned. The pedantic aberrations and pomposities of the average Tamil Pundit found no place in the Swami's speeches and writings, and yet it was invariably the case that rapt attention and patent delectation were discernible in the faces of his hearers whenever Swami Vipulananda made a speech in Tamil.

His wide culture and consideration for others meant much to many persons outside his group. I have often gone to him with literary problems and with theological difficulties, and with the instinct of a true teacher, he approached my difficulty or problem, always from my angle and with my postulates initially. These impacts have left in my mind most happy recollections.

I wish in this note to chronicle a somewhat intimate episode, for which I crave the readers' indulgence. Not many months ago, Swami Vipulananda visited my home, with many other friends, on the occasion of a domestic anniversary, and brought as a present to me and my wife a beautiful Cambridge Bible, " with the words of our Lord while upon earth printed in red "— to quote the legend on the fly-leaf. My wife was deeply touched and said, " Swamiji, you have surrendered too much to *our* feelings." " No, Mrs. Cumaraswamy," came the answer, " on this great day, I am giving you something which *I* value greatly."

Swami Vipulananda had a genius for friendship and a capacity for inspiration, which even failing health and waning faculties could not impair. I thank my God on every remembrance of him, and pray for the repose of his soul.

# SHAHUL HAMEED & SONS

Hardware Merchants, Commission Agents

&

Estate Suppliers

*Dealers in*

Waterworks, Pipe Fittings

**15, Quarry Road : : : COLOMBO**



## ஒரு முறை வந்து பாருங்கள்!

சாரிப் புடவைகளுக்கான சித்திரத் தையல்கள்,
ஆண்களுக்கும் பெண்களுக்கும் தேவையான தையல் வேலைகள்

**பெனரிஸ் — பங்களூர் — புடவைகள்**

தேவையான புடவை வகைகள் யாவற்றுக்கும்
உங்களுக்குத் திருப்தி யளிக்கத் தகுந்தது

**எச். ஏ. நாகின்தாஸ் அன்டு கோ.,**

மொத்த சில்லறை புடவை வியாபாரிகள்,
137, மெயின் ஸ்றீற், புறக்கோட்டை, கொழும்பு.

## H. A. NAGINDAS & Co.,

Wholesale and Retail Dealers in Textiles,

**137, Main Street, Pettah, Colombo.**